


https://t.me/Tamil_Library

# கம்பன் கலை

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்

கங்கை புத்தக நிலையம்
13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை - 600 017

https://t.me/Tamil_Library

முதற் பதிப்பு : நவம்பர், 1996

© உரிமை : ஆசிரியருக்கு

விலை : ரூ. 45.00

Laser Typeset at : LKM Computer Prints, Madras – 17.
Printed at : Elangovan Printers, Madras – 14.

https://t.me/Tamil_Library

# முன்னுரை

கம்பன் கலை என்ற தலைப்பில் வெளிவரும் இந்நூலில் காணப்பெறும் பல கட்டுரைகள் முன்னரே வெளிவந்தவை ஆகும். அவை இப்பொழுது எங்கும் கிடைக்காமையால் இப் புதிய பதிப்பு வெளிவருகிறது. இந்நூலின் முதல் கட்டுரையாகிய "இருபெரும் அவதாரங்கள்", படிப்பவர்கள் மனத்தில் ஒரு வியப்பைத் தோற்றுவிக்கும். என்னுடைய எழுத்து நடையைப் பயின்றவர்களுக்கு இக் கட்டுரை நடைப் புதுமையாக இருக்கும். காரணம், இக்கட்டுரை எழுத்து வடிவில் இடம் பெறாமல் பேச்சு வடிவில் முதன்முதலாகச் செய்யப் பட்டதாகும். கம்பன் விழா ஒன்றில் என் தலைமை உரையைத் தொடங்குவதற்கு ஐந்து மணித்துளிகள் முன்னர் கோவைக் கம்பன் கழகத் தலைவர், கம்பன் அறநெறிச் செம்மல் திரு. ஜி.கே. சுந்தரம் அவர்கள், இராமன், பரசுராமன் என்ற இரண்டு அவதாரங்களும் ஒரே காலத்தில் தோன்றியது ஏன் என்ற வினாவை எழுப்பி இயன்றால் அதற்கு அமைதி கூறுமாறு வேண்டினார். திடீரென்று தோன்றிய அந்த வினாவிற்கு, அத் தலைமை உரையில் உடனடியாகக் கூறிய விடைதான் இக்கட்டுரை. பேச்சு வழக்கில் உள்ள அதனை எழுத்து நடைக்கு மாற்றாமல் ஒலிப்பதிவு நாடாவில் உள்ளதை அப்படியே தந்துள்ளேன். அதிலிலுள்ள குறைகளை நன்கறிவேன் என்றாலும், இதை ஒரு புதுமுயற்சியாகச் செய்துள்ளேன்.

இக்கட்டுரை தவிர, ஏனையவை எழுத்து வடிவிலேயே பிறந்தவை ஆகும். இவற்றுள் சில இதே தலைப்பில் 1990ஆம் ஆண்டு வெளிவந்தபொழுது

https://t.me/Tamil_Library

அந்நூலுக்கு திறனாய்வாக மதுரைப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத்தலைவர், தமிழறிஞர் டாக்டர் தமிழண்ணல் அவர்கள் மிக நீண்ட கட்டுரையாக தினமணி சுடர் இதழில் எழுதியிருந்தது பெருமதிப்புடையதாகும். எனவே, அந்த நீண்ட திறனாய்வின் ஒரு சில பகுதிகளை எடுத்து "கம்பனைக் கற்கும் நெறிமுறைகள்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளேன். இந்த அரிய திறனாய்வை எழுதி உதவிய டாக்டர் தமிழண்ணல் அவர்களுக்கு நான் என்றும் கடப்பாடுடையேன்.

என் 80ம் ஆண்டு நிறைவை ஒட்டி இந்நூலை வெளியிடும் கங்கைப் புத்தக நிலைய உரிமையாளர் திரு. இராமநாதன் அவர்கட்கு என் நன்றி உரியதாகும்.

**சென்னை,**
**நவம்பர் 10, 1996**

**ஆசிரியன்**

https://t.me/Tamil_Library

# கம்பனைக் கற்கும் நெறிமுறைகள்

டாக்டர் தமிழண்ணல்

இன்றைய தமிழ் மக்கள்—மாணவர்கள், கம்பனை எங்ஙனம் நூலிழைபோலக் கருத்தைப் பற்றிக்கொண்டு, தொடர்ந்து கற்கவேண்டும் – துய்க்கவேண்டும் என்பதை, இந்நூல் சொல்லாமல் சொல்லி வழிகாட்டுகிறது. மேலைநாட்டில் 'ஷேக்ஸ்பியர் கிரிட்டிக்' 'மில்ட்டன் கிரிட்டிக்' எனப் பெயரிய இலக்கிய விற்பன்னர்கள் திகழ்ந்ததுபோல **'கம்பன் திறனி'** எனப் போற்றப் பெறுபவர் பேரா. அ.ச.ஞா. அவர்கள். அனுபவமிக்க, பழுத்த பெரும் பேராசிரியரின் துணையோடு கம்பன் என்ற பூஞ்சோலைக்குள் புகுந்து, அவர் வழிகாட்ட, உலாவரும் போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது.

முதல் வரியிலிருந்து முடிவு வரிவரை, சொல்லுக்குச் சொல் தெளிவுபெற எழுதப்பெற்ற இந்நூலை, இதுபோன்ற ஆங்கில நூல்களுடன் வைத்துப் பாராட்டத் தோன்றுகிறது.

தமிழ் நூல்களுடன் வைத்து ஏன் பாராட்டக் கூடாது என்றுதானே கேட்கிறீர்கள்? தமிழில் பிஎச்.டி பட்டம் பெற்ற நூல் ஒன்றைப் படித்துவிட்டு, அதில் அவ் ஆசிரியர் செய்திருந்த கருத்துப் பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை எல்லாவற்றையும் நோக்கி அழத் தோன்றியது. உடனே பக்கத் திலிருந்தவர் சொன்னார். "இதற்கெல்லாம் கவலைப் பட்டால் உங்கள் ஆயுள் நீடிக்காது; இதைவிட மோசமான நூல்கள் இதற்குப் பிறகு நிரம்ப வெளிவந்துவிட்டன" என்று கம்பனைப் படித்து, பயின்று, அனுபவித்து, ஆழமாய் மூழ்கி

https://t.me/Tamil_Library

அழகிய முத்துகளை, "கோசலம் புனை ஆற்றணி" கூறிய கம்பனோடு ஒத்திசைந்து, பேராசிரியர் நம் முன்வைக்கும் போது அவற்றை நம் உள்ளத்தே மகிழவும் ஆடிப் பாடவும் தோன்றுகிறது.

திறனாய்வு நூல்கள் மூல நூல்களைப் படிக்கத் துணையாக வேண்டுமே தவிர, பிறவாறமைதல் கூடாது என்பர். கம்பனின் இராம காதையை மிகத் திட்பநுட்பத் தோடு ஆராயும் இந் நூல் எதிர்காலத்திலும் கம்பனை கற்கச் சிறந்த ஆற்றுப்படையாகும் என்பதில் ஐயமில்லை. பேராசிரியர், இந்நூலுள் பெரிதும் பாத்திரப்படைப்பு ஆராய்ச்சியையே மேற்கொள்கிறார். தசரதன், கைகேயி, குகன், பரதன், ராமன், சீதை எனக் கம்பனின் படைப்புத் திறத்தைக் காட்டுமாறு, பலரையும் அகமும் புறமும் கண்டு அதை ஆராய்கிறார் ஆசிரியர். மூரிய தேர்வலானாகிய சுமந்திரன் முதல், ஒரே பாட்டுடையனாகிய சத்துருக்கன் வரை பேராசிரியர் இனங்கண்டு கொள்ளும்பொழுது, நாம் முன்னர் அறிந்தவர்களேயாயினும். அவர்களைப் புதிய பொலிவோடும் நுட்பத்தோடும் 'அவர் காட்டக் கண்டு' மகிழ்கிறோம். கம்பன் கண்ட அறம், வழக்கறிஞனாகத் திகழும் கம்பன், உவமை நயம், முரணில் முழுமுதல், தீக்குளித்தது ஏன், கவிஞன் கண்ட சமரசம் என இவ்வாறு பாத்திர நோக்கிலன்றிப் பொருள் நோக்கிலான கட்டுரைகளும் உள.

ஆயினும், அவை எல்லாவற்றிலுமே 'பாத்திர விளக்க நோக்கமே' இவ்வாசிரியர்பால் தலைதூக்கி நிற்கிறது. "வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்றதன்றே" என்று இராமனைக் கண்ட சுக்கிரீவன் 'முடிவுக்கு வருகிறான். இவ்வாறு மானுடம் பாடிய கம்பன் எத்துணை அழகாக ஆழமாகப் புதிய பார்வையில் அழுத்தமாக

https://t.me/Tamil_Library

# 1

# இருபெரும் அவதாரங்கள்

பாரத நாட்டைப் பொறுத்தமட்டில் இராமாயணக் கதை, பாரதக் கதை என்ற இரண்டும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வழங்கிவருகின்ற கதைகளாகும். இந்த இரண்டு கதைகளிலுமே ஒரு தனிச்சிறப்பு உண்டு. திருமால் அவதாரம் எடுத்து வந்தார் என்று சொல்லுகின்ற இவ்விரண்டு கதைகளிலும் ஒரு அவதாரமாக இல்லாமல் இரண்டு இரண்டு அவதாரங்கள் பேசப்படுவதைக் காணலாம்.

இராமகாதையைப் பொறுத்தமட்டில் இராமா வதாரம், பரசுராமாவதாரம் என்ற இரண்டும் பேசப்படும். அதுபோலப் பாரதக் கதையைப் பொறுத்தமட்டில் கிருஷ்ணாவதாரம், பலராமாவதாரம் என்ற இரண்டும் பேசப்படும். ஆனால் அந்த இரண்டு அவதாரங்கள் ஏன் என்ற வினாவைப் பழங்காலத்தில் ஒருசிலர் கேட்டிருக்கக்கூடும். எப்படி விடை சொல்லமுடியும் என்கிற ஆராய்ச்சியில் புகுந்து ஒருவகையாக அமைதி கண்டுவிட்டார்கள். பரசுராமாவதாரம், பலராமாவதாரம் என்ற இரண்டுமே திருமாலினுடைய முழு வன்மையும் பெற்ற அவதாரங்கள் அல்ல, அம்சாவதாரங்கள் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். அதாவது திருமாலினுடைய ஒரு பகுதி — குறிப்பிட்ட ஒரு பகுதி — குறிப்பிட்ட



https://t.me/Tamil_Library

காரியத்திற்காக எடுத்த அவதாரம் என்ற முறையிலே முடிவு கூறிவிட்டார்கள். அம்சாவதாரம் என்று கூறினதாலேயே முழு அவதாரமாக வருகின்ற கிருஷ்ணாவதாரத்திற்கும் இராமாவதாரத்திற்கும் கீழான நிலையினர் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

ஆனால் இன்று ஆர அமரச் சிந்திப்போமேயானால், நம்முடைய பெரியவர்கள் மிக ஆழ்ந்த சிந்தனையோடுதான் இந்த இரண்டு அவதாரங்களையும் பேசியிருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வர முடிகின்றது. இராமாவதாரத்தை எடுத்துக்கொள்வோமேயானால், பரசுராமாவதாரம் அதற்கு முற்பட்டது. ஆனால் இராமாவதார காலம் வரை இருந்திருப்பதாகப் பேசப்படுகிறது; பாரத காலத்திலும் தொடர்வதாகக் கூறும் மரபும் உண்டு.

பரசுராமனுடைய வரலாறு ஆராய வேண்டிய ஒன்று. ஜமதக்னியினுடைய மகனாவான் பரசுராமன். ஜமதக்னியினிடத்தில் மாறுபாடு கொண்டு, அவனுடைய பசுவை, ஓமப் பசு என்று சொல்லப்படுகின்ற காமதேனுப் பசுவைக் கவர்ந்து சென்றுவிட்டான் கார்த்த வீரியார்ஜுனன் என்ற மன்னன். கார்த்தவீரியார்ஜுனனை மனிதனாகப் பிறந்தவர்கள் யாரும் வெல்ல முடியாது, எந்த அரசரும் வெல்ல முடியாது என்ற அளவிலே வர பலம் பெற்றவன். அப்படிப்பட்டவன் பசுவினைக் கவர்ந்து சென்றுவிட்டான் என அறிந்த ஜமதக்னி முனிவன் ஒன்றும் செய்யமுடியாமல் இருக்கிறபோது, அவனுடைய மகனாகிய பரசுராமன் தன்னுடைய தவபலம், வரபலம், போராண்மை என்பனவற்றைத் துணையாகக் கொண்டு கார்த்த வீரியார்ஜுனனைக் கொன்று விட்டான். கார்த்த வீரியார்ஜுனன் கொல்லப்பட்டான் என்ற உடனேயே பரசுராமனுடைய அகங்காரம் எல்லை மீறிவிட்டதைக் காண்கின்றோம். இதுபோன்ற வரலாறுகள் தமிழ்நாட்டிலே இன்னமும் இருக்கின்றன.

https://t.me/Tamil_Library

ஒரு குறிப்பிட்ட காரியத்தை, ஏனையோரால் செய்யமுடியாத காரியத்தை ஒருவன் செய்துவிட்டான் என்றால் செய்த பிறகு அவனுடைய ஏனைய பண்பாடுகள் மறைந்து அகங்காரம் தலை தூக்கி நிற்பதைக் காண்கிறோம். கடவுளைத் தவிர வேறு யாராலும் வெல்ல முடியாத கார்த்தவீரியார்ஜுனனைக் கொன்று விட்ட பிறகு பரசுராமனுடைய் அகங்காரம் எல்லை மீறி விட்டது என்பதை அறிகிறோம். ஆனால், இதோடு நின்றுவிட வில்லை. கார்த்தவீரியார்ஜுனனுடைய பிள்ளைகள் பரசுராமனை ஒன்றும் செய்யமுடியாத நிலையில், பழி தீர்க்க வேண்டுமென்ற ஒரே எண்ணத்தால் ஜமதக்னி முனிவருடைய தலையை வெட்டிவிட்டார்கள். தன் தந்தையைக் கொன்றவர்கள் கார்த்தவீரியனுடைய மக்கள் என்று தெரிந்தவுடன் அரசர்களுடைய குலத்தையே வேரறுக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிடுகிறான் பரசுராமன். இருபத்தொரு தலைமுறைகள் எங்கெங்கே க்ஷத்திரிய அரசர்கள் இருக்கிறார்களோ அவர்களையும் அவர்களுடைய சந்ததியினரையும் வேரறக் களைந்து விடுகிறான். இந்த அளவில் இந்த வரலாற்றைப் பார்க்கும் போது மற்றொரு வரலாறு நினைவுக்கு வருகின்றது.

கற்பில் மேம்பட்டவளாகிய கண்ணகி தன்னுடைய கணவன் பொய்யாகப் பழி சூட்டப்பட்டுக் கொல்லப் பட்டான் என்று அறிந்தவுடன் மிக ஆக்ரோஷமாகச் சென்று வழக்காடுகிறாள். வழக்காடிய பிறகு, ஒன்றைச் சிந்திக்க வேண்டும். பாண்டியன் மனைவி தாழ்ந்து பணிந்து கேட்டுக் கொள்கிறாள். “பிழையை உணர்ந்து விட்டான் மன்னன், மன்னிக்க வேண்டும்” என்று. ஆனால், அப்போது கண்ணகி பேசுகின்ற பேச்சை நினைப்போமேயானால்–

மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாகில்

https://t.me/Tamil_Library

ஒட்டே ணரசோடொழிப்பேன் மதுரையும் என்
பட்டிமையுங் காண்குறுவாய் (சிலம்பு)

என்று எல்லை மீறிய அகங்காரத்திலே 'அரசோடு மதுரையையும் அழிப்பேன்' என்று நினைக்கின்ற நினைவு மன்னிக்க முடியாத நினைப்பாகும். தனிப்பட்ட முறையில் அரசன் இவர்களுக்குத் தீங்கிழைத்தான். அந்தத் தீங்கினை உணர்ந்த பிறகு 'அவனைத் தண்டிப்பேன்' என்று சொல்வதே அவ்வளவு சரியானதன்று. ஆனால் ஒரு பாவமும் அறியாத 'மதுரையைப் பழிவாங்குவேன்' என்று நினைப்பது அகங்காரத்தின் எல்லைமீறிய நிலையாகும். இந்த நிலையிலே அகங்காரம் வளர வளர, இறையருள் அவளை ஆட்கொள்ள நினைக்கிறபோது, இந்த அகங்காரத்தைப் போக்க முற்படுகிறது. கண்ணகியின் அகங்காரத்தைப் போக்க முற்பட்ட முறை வேறு; பரசுராமனது அகங்காரத்தைப் போக்க முற்பட்ட முறை வேறு.

கண்ணகியைப் பொறுத்த மட்டில் அவள் வெளியிலே வருகிறாள். 'மதுரையை எரித்து விடுகிறேன்' என்று வெளியே வரும்போது மதுராபுரித் தெய்வம் அவள் பின்னே வந்து மிகப் பொறுமையாக, அமைதியாக

ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்துத்
தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண
உரைசால் மதுரையோ டரைசுகே டுறுமெனும்
உரையு முன்டே நிரைதொடி யோயே
பண்டே ஓர் ஏவலுடையேன் (சிலம்பு)

என்று சொல்கிறாள். 'ஏற்கெனவே எனக்கு இப்படி ஒரு கட்டளை இருக்கிறது' என்று சொன்னவுடனே கண்ணகியின் அகங்காரம் இருந்த இடம் தெரியாமல் போய்விடுகிறது.

https://t.me/Tamil_Library

தான்தான் இந்த மதுரையை அழிக்க வேண்டுமென்று நினைத்தவளுக்கு ‘அப்படி இல்லை; ஏற்கெனவே நடைபெற வேண்டிய ஒன்று’ என்று மதுராபுரித் தெய்வமே கூறிவிட்ட நிலையில், அவளுடைய அகங்காரம் முற்றிலுமாக இறங்கிவிடுவதைக் காண்கின்றோம்.

இனி பரசுராமனைப் பொறுத்த மட்டில், இருபத்தொரு தலைமுறை அரசர்களை வேரோடு களைந்தானே தவிர அவனுடைய அகங்காரம் குறைந்ததாகத் தெரியவில்லை. உலகத்தை எல்லாம் வென்றான். அரசர்கள், க்ஷத்திரியர்கள் என்று சொல்வதற்கு யாருமே இல்லையென்று பூமியைக் காச்யபன் என்ற முனிவனுக்குத் தானமாகக் கொடுத்துவிட்டான். காச்யபனுடைய நாட்டில்தான் தங்கியிருக்கிறான். ‘பரசு ராமனுடைய அகங்காரம் இப்படி நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே செல்கிறதே. இதைத் தட்டவேண்டும்’ என்று காச்யபன் நினைக்கிறான். முனிவன் தனக்கே உரிய முறையில் ஒருநாள் பரசுராமனை அழைத்து, “பரசுராமா, இந்த நாடு முழுவதையும் உலகம் முழுவதையும் எனக்குத் தானமாகக் கொடுத்துவிட்டாய் அல்லவா?”

“ஆமாம்.”

“எனக்குத் தானமாகக் கொடுத்த இடத்தில், தானம் கொடுத்தவனாகிய நீ எப்படித் தங்கியிருக்கிறாய்?” என்று கேட்கிறான். புத்தியுள்ளவனாக இருந்திருப்பானாகில் பரசுராமன் தன் அகங்காரத்திற்குப் பங்கம் என்று நினைத்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் மறுபடியும் அகங்கார சன்னத்தனாகித் தன் மழுவை மேல்கடலிலே எறிய, அங்கே ஒரு பூமிப்பிரதேசம் உண்டாக்கி அங்கே சென்று தங்கி விட்டான் என்பதுதான் வரலாறு. ஆக, பரசுராமனுடைய அகங்காரத்தை அழிப்பதற்குக் காச்யபனாலும் முடியவில்லை என்பதை அறிகின்றோம்.

https://t.me/Tamil_Library

அப்படியானால் வேறு வழி என்ன? வரலாறுகளிலே பார்ப்போமேயானால் மிகப் பெரிய அகங்காரம் இது. இது சாதாரணமாக நாம் ஆணவம் என்று சொல்லுகிறோமே — ஒருவருக்கொருவர் திமிர் பிடித்தவன் — அகங்காரம் பிடித்தவன் — ஆணவம் பிடித்தவன் என்று, அதோடு சேர்ந்தது என்று தயவு செய்து எண்ணிவிட வேண்டாம். உலகம் முழுவதையும் ஒன்றாக ஆக்கி, அது என்னுடையது என்று நினைக்கின்றதாகிய - 'யூனிவர்சல் ஈகோ' என்று சொல்லுகிறோமே-அப்ப்டிப்பட்ட மாபெரும் அகங்காரம்.

இரணியனுடைய அகங்காரம், சூரபத்மனுடைய அகங்காரம், பரசுராமனுடைய அகங்காரம் இவை அனைத்தும் ஒரே வகையைச் சேர்ந்தவை.

அனைத்தும் இறைவன் என்று நினைக்கின்றது மிக உயர்ந்த நிலை. அனைத்தும் நான் என்று நினைப்பது ஏறத்தாழ அந்த நிலைதான். ஒரு சிறு நூலிழை மாறு பட்டது. அனைத்தும் இறைவன் என்று நினைக்கும்போது எல்லையற்ற உயரத்திற்குச் சென்று விடுகின்றோம். அனைத்தும் நான் என்று நினைக்கும்போது அதுவும் அதே உயரம்தான். ஆனால் கீழே நிற்கின்றோம். அடுத்த படிக்குச் செல்ல முடியாது. இந்த "நான்" தடுக்கின்றது.

இந்த நான்கு பேர்களுடைய அகங்காரங்களையும் சிந்திப்போமேயானால் — இரணியன் பேசுகின்றானே "எந்த நிலையிலும் என் தலை பணிவதில்லை; ஊடல் காலத்தில் கூட மகளிரை வணங்கும் பழக்கம் இல்லை. நீ சொல்லுகின்ற நாராயணனைக் கொன்று என்

**"வாளினை வணங்கல் அல்லால்"**

என்று சொல்லுகின்றான். இந்த நான்கு அகங்காரங்களிலும் ஒரு பொதுத்தன்மையினைக் காணலாம். இதனுடைய அகங்காரத்தைப் போக்க ஏனையோரால் முடியாது, முனிவர்களாலும் முடியாது, தேவர்களாலும் முடியாது,

https://t.me/Tamil_Library

யாராலும் முடியாது. ஆகவே பரம்பொருள் ஒன்றுதான் இவர்களுடைய அகங்காரத்தைப் போக்க முடியும். இந்த அகங்காரம் கொண்ட நால்வர்களையும் அழிப்பதற்கு ஆண்டவன் நேரே வருகிறான். சூரபன்மனுடைய அகங்காரத்தைப் போக்க முருகன் வருகிறான். இரணியனுடைய அகங்காரத்தையும் இராவணனுடைய அகங்காரத்தையும் பரசுராமனுடைய அகங்காரத்தையும் போக்க திருமால் நேரிடையாக வருகின்றார்.

ஆகவே இராமாவதாரம் என்பது முழுத்தன்மை பெற்றதாய், சிதப்பிரக்ஞன் என்று சொல்கிறதே கீதை, அதுபோல் முழுப் பண்பாட்டின் வடிவமாய் அகங்காரம் என்பது எள்ளளவும் இல்லாத ஒரு அவதாரம். அவனுடைய பிறப்பு வளர்ப்பைப் பற்றிக் கம்பன் சொல்லிக் கொண்டு வரும்போது, எவ்வளவு உயர்ந்த நிலையில் இருக்கின்ற சக்ரவர்த்தித் திருக்குமாரனாகிய அவன் தெருவில் நடந்து போகும்போதும்கூட சாதாரண மக்களைப் பார்த்து, “நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? நன்றாக இருக்கிறீர்களா? உங்கள் குழந்தை குட்டிகள் நன்றாக இருக்கின்றார்களா?” என்று கேட்கின்ற அளவுக்கு சௌலப்யம் என்று சொல்வார்கள்–எளிவந்த தன்மை உடையவனாக இருக்கின்றான்.

“நடையில் நின்றுயர் நாயகன்”

என்று சொல்வான் கவிச்சக்கரவர்த்தி கம்பன். மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவன் இராமன். ஆகவேதான், ‘வேறுள.... குழுவையெல்லாம் மானுடம் வென்றதம்மா’ என்று சுக்கிரீவன் பேசுகின்ற அளவுக்கு மனிதனுடைய பண்பாட்டின் சிகரத்தை அடைந்தவனாக இராமன் இருக்கின்றான். ஆகவே இந்த இராமன், ‘அகங்காரம் என்பது அழிக்கப்பட வேண்டுமென்று சொல்வதே

https://t.me/Tamil_Library

யல்லாமல் அதை முழுவதுமாக அழித்து ஏறத்தாழ பரம்பொருளோடு ஒன்றிவிட்ட நிலையில் இருக்கின்ற இராமன் — இரணியன் அவதாரத்தை நரசிம்மன் அழிப்பது போல — இராவணனுடைய அகங்காரத்தையும் பரசுராமனுடைய அகங்காரத்தையும் அழிப்பதற்கு இப்போது வருகின்றான்.” பின்னால் இராவணனுடைய வரலாறு வரப்போகின்றது. அதற்குக் கொடியேற்றம் செய்தது போன்றது இது.

அவன் வில்லை முறித்துத் திருமணம் செய்து கொண்டது உலகமறிந்த சமாசாரம். தசரதன் பெருமகிழ்ச்சிக் கடலிலே திளைத்து வருகின்றான். அந்த நிலையிலே தசரதன் எந்த ஒன்றுக்காக இந்த உலகத்திலே அஞ்சுவானோ எந்த ஒருவன் எதிர்ப்படக் கூடாது என்று நினைப்பானோ அந்த ஒருவன், பரசுராமன் நேரே வருகின்றான். அவன் வருகின்ற வரத்தைப் பத்துப் பாடல்களிலே கவிச்சக்கரவர்த்தி எடுத்துக் காட்டுவான்– அதற்கேற்ற சந்தத்தை அமைத்து. மலைகள் தவிடு பொடியாக, கண்களிலே கனல் பறக்க, மழுவிலே தீச்சுடர் தழுவ, சமுத்திரம் அலைபொங்க வருகின்றான். அந்தக் கோபம் என்பது அவன் உடன்பிறந்தது. ஆவேச அவதாரம் என்று பாகவதர்கள் இதனைச் சொல்லுவார்கள். கோபமே வடிவமாக இருக்கின்றான் பரசுராமன். அப்போது அந்தக் கோபம் உச்சநிலையிலே இருக்கின்றது.

தசரதன், இராமன் இரண்டு பேரும் தேரில் இருக்கிறார்கள். இவன் வந்து வாயில் வந்தபடி பேசுகின்றான். “உலகத்தையெல்லாம் வென்றேன். ஒரு முனிவனுக்குத் தானமாகத் தந்தேன். இப்போது ஒரு மலையிலே இருக்கின்றேன். நீண்ட நாட்களாகப் போர் செய்து என் தினவு தீர்த்துக்கொள்ள வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. இப்போது உன்னோடு மலைய வந்துள்ளேன்”.

https://t.me/Tamil_Library

**"வல்லை ஆகின் வாங்குதி தனுவை"**

*"உனக்குச் சக்தி இருந்தால் இந்த வில்லை வாங்கடா" என்று சொன்னான்.*

*அர்த்தமில்லாமல் திடீரென்று ஒருவனை எதிர்ப்பட்டு இந்த மாதிரி தன்னுடைய வரலாற்றைச் சொல்லி, "தைரியம் இருந்தால் என்னோடு சண்டை போட வா" என்று சொல்வது பொருத்தமில்லாத செயல். எனவே அதற்கு ஒரு பொருத்தம் கற்பிக்கின்றான் பின்னே. "நான் எங்கேயோ மலையில் தவம் பண்ணிக் கொண்டிருந்தேன். நீ ஒரு ஓட்டை வில்லை ஒடித்தாயே உன் கல்யாணத்தின் போது, அது என் காதில் விழுந்தது. அப்போதுதான் சிந்தித்தேன். அது ஏற்கெனவே உடைந்துபோன சிவதனுசு என்று. அதை உடைத்து நீ பெரிய வீரன் ஆகிவிட்டாய். உலகமெல்லாம் மிகப்பெரிய வில்லை வளைத்தவன் என்று உன்னைப் பேசுகின்றது. அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அது உடைந்த வில் என்று எனக்குத்தான் தெரியும். ஆகவே இப்போது உன்னைச் சந்திக்க வந்தேன்" என்று பேசுகிறான். இந்த நிலையிலே கவிச்சக்கரவர்த்தி அற்புதமான நாடகமாக இதை ஆக்கிக் காட்டுவான்–மூன்று பாத்திரங்கள் வாயிலாக.*

*உலகத்தையெல்லாம் வென்றதாகச் சொல்லிக் கொண்டு தசரதன் என்று பெயர் வைத்துக்கொண்டு ஒரு பாத்திரம். அமைதியே வடிவான சக்கரவர்த்தித் திருக்குமாரனாகிய இராகவன் ஒரு பாத்திரம். பரசுராமன் ஒரு பாத்திரம். பரசுராமன் வருவது, பேசுவது இரண்டும் எண்ணெயிலே போட்ட அப்பம்போல கொதிக்கின்ற ஒரு நிலை. இத்தனைக் கொதிப்பு, ஆத்திரம், துவேஷம், மாச்சரியம், காழ்ப்புணர்ச்சி, அகங்காரம்! இதன் எதிரே கொஞ்சங்கூட இதனாலே தாக்கப்படாமல் அமைதியாக இருந்து கொண்டு மிக மெள்ளத் தகப்பனாரைப் பார்த்துக் கேட்கின்றான் இராகவன், "இவன் யாரோ?" என்று.*

https://t.me/Tamil_Library

"யாரோ" வில் உள்ள ஓகாரம் இருக்கிறதே இது எள்ளல் குறிப்பு ஆகும். "இவனை நான் பொருள்படுத்த வேண்டியதில்லை. இருந்தாலும் இவன் யார் எனக் கொஞ்சம் அறிமுகம் செய்வாயாக" எனத் தந்தையைத்தான் பார்த்துக் கேட்டான் இராகவன். ஆனால் பதில் சொன்னவன் பரசுராமன்.

இப்படிப் பரசுராமன் பதினொரு பாடல்களிலே ஆத்திரமாக வந்து, இரண்டு பாடல்களிலே தான் வந்து விட்ட கருத்தைத் தெரிவித்துவிட்ட அளவிலே தசரதன் குறுக்கிடுகின்றான். எந்த நிலையிலே குறுக்கிடுகின்றான்? "ஐயா, எளியாரிடம் வலியார் வலி என்னாம்? நாங்கள் அப்பாவி மனிதர்கள். இப்போதுதான் என்மகன் திருமணம் முடித்து வந்திருக்கிறான். உங்கள் வலிமையை எதிர்நோக்கும் வல்லமை எங்களுக்கில்லை. அப்படியிருக்க எளியாரிடை வலியார் வலி என்னே! வலியார் வலி எங்கே பயன்படுத்தப்பட வேண்டும்? தன்னை யொத்த வலியாரிடத்தில். எங்களைப் போன்ற எளியாரிடத்தில் வந்து நீ இதைப் பேசுவது நியாயம் அல்ல" என்று கூறுவதோடு மட்டுமல்லாமல் மிகக் கீழே இறங்கி விடுகின்றான் தசரதன். இராகவனைப் பெற்றவன் என்கிற நினைவுகூட அவன் மனத்தில் இல்லாமல் மிகக் கீழே இறங்கி விடுகின்றான்.

**"என்மகன் அணையான் உயிர் தபுமேல்"**

"உன்னுடைய ஆக்ரோஷம் காரணமாக என் மகனுக்கு ஓர் ஆபத்து வந்தால் அவன்மட்டுமல்ல-நானும், நான் மட்டுமல்ல-என் குடும்பமும், என் குடும்பம் மட்டுமல்ல-நாடு முழுவதும் இறந்துபட நேரிடும்" என்று பேசுகின்றான். ஆக, ஆணவத்தின் முன்னே எவ்வளவு கீழிறங்கிப் போகிறான் தசரதன் என்பதை வேண்டுமென்றே வைத்துக் காட்டுகின்றான் கவிச்சக்கரவர்த்தி.

https://t.me/Tamil_Library

இரண்டு அவதாரங்களையும் வைத்துப் பார்க்கும் போது, மூன்றாவதாக ஒருவன் இருக்கின்றானே தசரதன் — அவன் இந்தக் காட்சியைப் எப்படிப் பார்க்கின்றான்? முழு அவதாரமாகிய தன்னுடைய மகன் இராகவன் இருக்கின்றானே அவனுடைய ஆற்றலை, பெற்றவனாகிய தசரதன் புரிந்து கொள்ளவேயில்லை பெற்றது தவிர. அவன் யார் என்பதை விசுவாமித்திரன் எடுத்துக்காட்டியிருக் கிறான். யாருமே வெல்ல முடியாத தாடகையை வென்று இருக்கிறான் என்பதை அறிந்து இருக்கிறான். யாருமே வளைக்க முடியாத சிவதனுசை வளைத்தான் என்பதைக் கேட்டிருக்கிறான். லோகமாதாவாகிய பிராட்டியை மணம் செய்து கொண்டு வந்திருக்கிறான் மகன். இவ்வளவு தெரிந்திருந்தும் தன்னுடைய மகனின் ஆற்றலை இவன் அறிந்து கொள்ளாததற்கு ஒரே காரணம் பிள்ளைப் பாசம் என்று சொல்லப்படும். அறிவை மறைக்கின்ற பிள்ளைப் பாசத்தினாலே முழுவதுமாக மூடப்பட்டிருக்கின்ற தசரதன் "தன்னுடைய மகன் பரசுராமனையும் வெல்லக்கூடும்" எனச் சிந்திக்கவேயில்லை. சிவதனுசை வளைத்து ஒடித்தவனுக்குப் பரசுராமன் ஒரு பொருட்டன்று என்று நினைத்திருக்கவேண்டும். அறிவாற்றல் மிக்கவனாகிய தசரதனுக்கு இது தெரியாதா? பின்னர் ஏன் அது வெளிப்படவில்லை? அங்கேதான் — அறிவினால் அறிந்து பார்த்திருந்தால் இந்த உண்மை விளங்கியிருக்கும். இங்கு அறிவு வெளிப்படவில்லை என்பதைக் கவிச்சக்கரவர்த்தி வைத்துக் காட்டுவான். "யானும், என் மகனும், என் குடும்பமும் உனக்கு அடைக்கலம்" என்று சொல்லும் அளவுக்குக் கீழே இறங்கி விடுகிறான். ஆக பிள்ளைப் பாசமும்கூட அளவை மீறுமேயானால் அவனுடைய தன்மானத்தையும் சுயமரியாதையையும் கௌரவத்தையும் போக்கிவிடுகிறது என்பதைப் போகிற போக்கிலே வைத்துக் காட்டுவான் கவிச்சக்கரவர்த்தி.

https://t.me/Tamil_Library

இங்கே ஒன்றைச் சிந்திக்க வேண்டும். இவ்வளவு தாழ்வாகப் பேசினால் யாருக்குமே ஓர் இரக்கம் தோன்றத்தான் செய்யும். அவன் பக்கம் திரும்பிப் பார்த்து, "நீ என்னவோ சொல்லுகிறாயே என்ன?'' என்று கேட்டிருக்கலாம் பரசுராமன். ஒரு வார்த்தைகூட அவன் கேட்கவில்லை. தசரதன் பக்கம் திரும்பிப் பார்க்கக்கூட இல்லை என்றால்-ஹாம்லட் என்ற நாடகத்தில் ஷேக்ஸ்பியர் அழகாகச் சொல்லுவார். இரண்டு படங்களை வைத்துக்கொண்டு தாயினிடத்திலே ஹாம்லட் பேசுகின்றான் — இறந்துபோன தந்தையின் படம், தாய் பின் மணந்து கொண்டாளே அந்தச் சிற்றப்பனின் படம் — "லுக் அட் திஸ் பிக்சர் அண்ட் அட் தட்!"

"இந்தப் படத்தையும் பார். அந்தப் படத்தையும் பார்" என்று. அதுபோல் இராகவனைப் பெற்ற தசரதன் ஒரு பக்கம்-பரசுராமன் மற்றொரு பக்கம். பரசுராமனுடைய கோபம் - தசரதன் பிள்ளைப் பாசத்தால் தன்மானமிழந்து பேசுகின்ற நிலை. இந்த இரண்டிற்கும் நடுவிலே இராகவன் அகப்பட்டுக் கொண்டு இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்க்கின்றான். இந்தப் பக்கம் தந்தை இவ்வளவு கீழே இறங்குகிறாரே என வருத்தம் ஏற்பட்டிருக்கலாம் இராகவனுக்கு. பரசுராமனுடைய அகங்காரம் தன்னுடைய சுண்டுவிரலாலே தட்டக்கூடியது என்பதையும் அறிந்திருக்கிறான் இராமன். தந்தை இப்படிப் பேசும்போது ஏனையோரைப் போல சாதாரண மகனாக இருந்திருப்பானேயானால்—இராகவன், "அப்பா நீங்கள் கவலைப்படவேண்டாம். இந்தப் பரசுராமனை இப்போதே இடுப்பை ஒடித்து அனுப்பப் போகிறேன்'' என்று சொல்லியிருக்கலாம். ஆனால், அப்படிச் சொல்லியிருப்பானேயானால், அவன் நம்மைப் போன்ற மனிதன். வாய் பேசாமல் இருந்ததனாலேதான் சக்கரவர்த்தித் திருக்குமாரன் 'நடையில் நின்றுயர் நாயகனாக'

https://t.me/Tamil_Library

மாறிவிடுகிறான். தந்தை இவ்வளவு கீழே போகும்போது அவன் மனத்திலே எவ்வளவு வேதனை ஏற்பட்டிருக்கும்? ஆனால், அந்த வேதனையை வெளிக்காட்டாமல் தந்தை என்ற மரியாதை காரணமாக அவன் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் பொறுமையோடு அதனைக் கேட்க வேண்டுமென்ற மனப்பான்மை உடையவனாகக் காட்சியளிக்கிறான் என்பதை அங்கே எடுத்துக் காட்டுகிறான் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன்.

தசரதன் பேசிய பேச்சுக்குப் பதில் சொல்லவில்லை பரசுராமன். அவனுடைய பேச்செல்லாம் இராகவ னிடத்தில்தான். ஏன் இவ்வளவு தூரம் பேசும்படியாக அனுமதிக்கிறான் என்று சிந்திப்போமேயானால் ஓர் உண்மை விளங்கும்.

பல சமயங்களிலே எதிரிலே இருப்பவர்களுடைய பண்பாட்டை நாம் அளவிட வேண்டுமேயானால், அவர்களைப் பேசுமாறு செய்யவேண்டும். அவர்கள் பேசப்பேச அறிவுள்ளவன் அவர்களுடைய பேச்சிலிருந்தே அவர்களை எடை போட்டுவிட முடியும்.

பரசுராமன் கோபக்காரன் என்பது எல்லோருக்கும் தெரியும். வர பலம் உடையவன் என்பது எல்லோருக்கும் தெரியும். இருபத்தொரு தலைமுறை க்ஷத்திரிய அரசர்களையே கொன்றவன் என்பது எல்லோருக்கும் தெரியும். மலை ஒன்றில் வாழ்ந்து வருகிறான், தவம் இயற்றுகிறான் என்பதும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் இவனுடைய அகங்காரம் இவனை அழிப்பதற்குரிய அந்த அளவை எட்டப்போகின்றது இப்பொழுது. அதுவரையில் விடுகிறான் சக்கரவர்த்தித் திருக்குமாரனாகிய இராகவன். இதற்கு முன்னே இவனை வென்றிருப்பானேயானால் காரணமில்லாமல் பரசுராமனை பங்கம் செய்ததாக ஒரு பழி ஏற்பட்டு விடும். ஆகவே இதுவரையிலே வாயை

https://t.me/Tamil_Library

மூடிக்கொண்டிருக்கிறான் இரண்டாவது அவதாரமாகிய இராகவன் என்றால், தனக்கு முன்னர் வந்தவனாகிய பரசுராமன் தன்னைத்தானே அழித்துக்கொள்ள வேண்டிய அளவுக்குத் தன்னுடைய அகங்காரத்தை வெளிக்காட்ட வேண்டும். ஆகவேதான் 'யாரோ' என்று கேட்டவன் வாயை மூடிக்கொண்டு இருக்கிறான். இப்பொழுது பரசுராமன், "வல்லை ஆகின் வாங்குதி தனுவை" என்கிறான் அலட்சியத்துடனும் அகங்காரத்துடனும். அத்துடன் நில்லாது, "எல்லா உலகத்தையும் வென்று காசியப் முனிவனுக்குத் தானமாகக் கொடுத்து விட்டேன்" என்று கூறுகின்றபோது காசியப முனிவனைக்கூட இவன் தனக்குக் கீழாகத்தான் நினைக்கின்றான் என்கிற அளவில் கொப்புளிக்கின்றது அந்த அகங்காரம். காசியபன் போன்ற மாபெரும் தவசிக்குக் கொடுத்ததைக்கூட 'அவனுக்கு நான் இதைத் தானமாகக் கொடுத்துவிட்டேன்' என்று சொல்லும்போது விசுவரூபம் எடுக்கின்றது அவனுடைய அகங்காரம். அதற்குப் பிறகு "வல்லைஆகின் வாங்குதி தனுவை" 'உனக்கு சாமர்த்தியம் இருந்தால் வாங்குதி' என்றானாம்.

இந்த 'வாங்குதி' என்ற சொல் மிக ஆழமான பொருளை உடையது. வாங்குதல் என்பதற்குக் கையிலே வாங்குவது என்று ஓர் அர்த்தம். வாங்கல் என்றால் வளைத்தல் என்று ஓர் அர்த்தம். பரசுராமன் எந்த அர்த்தத்திலே சொல்லியிருப்பான்?

ஆழ்ந்து சிந்திப்போமேயானால் முதல் அர்த்தத்திலே தான் சொன்னான் என்று கொள்ளலாம். ஏன் என்றால் பரசுராமனுடைய அகங்காரத்திலே 'தன் கையிலே இருக்கிற திருமாலினுடைய வில்லை எவனாலும் வளைக்க முடியாது தன்னைத் தவிர' என்று ஓர் எண்ணம். ஆகவே இராமனிடத்திலே—அவனாலும் வளைக்க முடியாது என்று நம்பியவனாகிய பரசுராமன் இப்போது,

https://t.me/Tamil_Library

**"வாங்குதி தனுவை"—**

*"சாமர்த்தியம் இருந்தால் இதைக் கையிலே வாங்கடா" என்று பேசுகின்றான். அந்த நிலையிலே வில்லை வாங்கினான் இராகவன், வளைத்தான். பரசுராமன் நடுங்கி விட்டான். உடனே இராமன் பேசுகின்றான், "உலகத்திலுள்ள அரசர்களையெல்லாம் கொன்றுவிட்ட பரசுராமா, உனக்குத் தண்டனை கொடுப்பது முற்றிலும் பொருத்தம்.*

*"பூதலத்து அரசையெல்லாம் கொன்றுவித்தனை. ஆனாலும் வேதவித்தாக விளங்கிய ஜமதக்னியின் மகன் நீ. அதுமட்டுமா? தவக்கோலமும் பூண்டிருக்கிறாய்.*

**வேத வித்து ஆய மேலோன் மைந்தன் நீ;**
**விரதம் பூண்டாய் ஆதலின் கொல்லல் ஆகாது.**

*ஆகவே உன்னைக் கொல்வது என்பது அவ்வளவு சரியான காரியம் அல்ல. வேதவித்தானவன் மகனாக இருப்பதனாலே கொல்ல முடியாது; விரதம் பூண்டவன் என்பதனாலேயும் கொல்ல முடியாது. இப்போது என்ன செய்வது?*

*அம்பு இது பிழைப்பது அன்றால் விரும்பியோ விரும்பாமலோ நீ சொன்னாய். நானும் வில்லை வளைத்து விட்டேன். வளைத்த வில்லில் அம்பையும் பூட்டிவிட்டேன். பூட்டின பிற்பாடு அம்பை எடுத்து முதுகிலே செருகிக்கொள்கிற பழக்கம் எனக்குக் கிடையாது."*

**"அம்பு இது பிழைப்பது அன்றால்"**

*பிழைப்பது என்பது பல பொருள்களை உடைய சொல்லாகும். தன்னுடைய குறியை வாங்காமல் அது வராது என்பதும், பிழைப்பது என்றால் தவறு செய்யாது என்கிற பொருளையும் குறிப்பாகத் தருதலும் அதில் அடங்கியிருப்பதைக் காண்கிறோம்.*

https://t.me/Tamil_Library

'அம்பு இது பிழைப்பது அன்றால்' என்று சொன்னவுடனே அப்போதுதான் பரசுராமன் உணர்ந்தான்.

**நீதியாய் முனிந்திடேல் நீ இங்கு யாவர்க்கும்**
**"ஆதியான் அறிந்தனென்"**

"நீ எல்லோருக்கும் மூலம் என்பதை அறிந்தேன். ஐயா, இப்போது என்னுடைய தவம் முழுவதையும் நீ உன் அம்புக்கு இலக்காக ஆக்கிவிடு" என்று சொல்லும்போது அவனது அகங்காரம் முழுவதும் சரியக் காண்கிறோம்.

அகங்காரம் அழியுமானால் அடுத்தது வீடுதான் என்பதைக் குறள் அழகாக எடுத்துக்காட்டுகிறது. ஆகவே பரசுராமாவதாரத்திற்கு இருக்கின்ற மாபெரும் குற்றமாகிய ஆணவத்தை நீக்கி, அதனுடைய இருப்பிடத்திற்கே கேடு வைக்கின்ற காரணத்தினாலேதான் இரண்டு அவதாரங்களையும் ஒன்றுடன் ஒன்று இணைத்துக் கவிச்சக்கரவர்த்தி பேசினான்.

இராமன் பரசுராமன் போல் அல்லாமல் பலராமனும் கிருஷ்ணனும் மக்கள் உலகத்திலே வாழ்ந்தவர்கள். இங்கே அரக்கர் பிரச்சினைகளெல்லாம் இல்லை. ஆகவே மனிதர்களால் ஆக்கப்பட்ட சில சட்டங்களைப் பலராமன் பெரிதுபடுத்துகிறான். முழு அவதாரமாகிய கிருஷ்ணன், சமுதாயம் வளர வளர இந்தச் சட்டங்கள் மாறுபடுகின்றன, இவை தூக்கி எறியப்படவேண்டியவை என்பதை எடுத்துக்காட்டுகிறான். இதுதான் பலராமாவதாரத்திற்கும் கிருஷ்ணாவதாரத்திற்கும் உள்ள ஒற்றுமை என்பதை அறிவோமேயானால் ஒரு மாபெரும் தத்துவத்தைத் தெரிந்து கொண்டவர்களாக ஆவோம்.

பாரதப் போரிலே பல சமயங்களிலே தலையிடுகின்றான் பலராமன். இறுதியாகப் பீமன் துரியோதனனைத்

https://t.me/Tamil_Library

துடையில் அடித்துக் கொன்றதையடுத்துப் பெரும் கோபம் கொள்ளுகிறான்— இது மாபெரும் தவறு, யுத்த தர்மத்திற்கு விரோதம் என்று. ஆனால் துரியோதனன் உயிரோடு இருக்கின்ற வரையில் அறத்தை நிலை நிறுத்த முடியாது; அறத்தை நிலைநிறுத்த வேண்டுமேயானால் சிலவற்றை விட்டுத்தான் கொடுக்கவேண்டும். என்றோ ஒருகாலத்தில் மனிதர்கள் வைத்துக்கொண்ட அறம்

> 'ஒருவனை யொருவன் அடுதலும் தொலைதலும்
> புதுவதன்று உலகத்து இயற்கை'

எனப் புறநானூறு சொல்வதுபோல, இப்படித்தான் சண்டை போட வேண்டுமென்று வகுத்துக் கொண்டார்கள். அந்தச் சட்டம் அணுகுண்டு யுகத்தில் செல்லுபடியாகாது. எங்கே யார் இருக்கிறார்கள் என்று தெரியாமலே குண்டு போடுகிற உலகம் இது.

கிருஷ்ணாவதாரத்திலே உள்ள சிறப்பு என்ன வென்றால் மனித சமுதாயம் வளர்ந்து அறிவு வளர்ச்சி பெறப் பெறப் பழைய சட்டங்கள், பழைய நெறிகள் தூக்கி எறியப்படவேண்டும். 'இன்றைக்கு உலகம் நடைபெற வேண்டுமென்றால் இந்த முறையைத்தான் கையாள வேண்டும்' என்று புதிய புதிய சட்டங்களை வகுத்துக் காட்டுவது கிருஷ்ணாவதாரத்தினுடைய வேலையாகும். இருந்தபோதிலும் பழைமையை நினைவூட்டுவது பரசுராமனுடைய வேலை. இவற்றையெல்லாம் சிந்திப்போமேயானால் இந்த இரண்டு அவதாரங்கள் ஏன் என்ற வினாவுக்கு ஒருவாறு விடை கண்டவர்களாக ஆவோம் என்பதை நினைத்துப் பார்த்து ஓர் அமைதி கொள்ள முடியும்.

அவதாரங்கள் இரண்டு என்று சொன்னவுடனே நம்மையும் அறியாமல் இரண்டும் முரண்பட வேண்டும் என்று நினைக்கிறோம். எப்போதும் பொருள் ஒன்றாக


https://t.me/Tamil_Library

இருக்கிற வரையில் முரண்பாடு இல்லை, பிரச்சினை இல்லை. இரண்டு என்று சொல்லிவிடுவோமேயானால் முரண்பாடும் போராட்டமும் வரத்தான் செய்யும். ஆக இரண்டு அவதாரங்கள் என்று சொன்னவுடனே நம்மையும் அறியாமல் எதிர்பார்க்கின்றோம். ஒரே பொருள் பரம்பொருள். இரண்டு அவதாரம் எடுத்து ஒன்றை ஒன்று மோதிக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன? இது பரம்பொருளிடத்துக் குற்றம் அல்ல. பரம்பொருள் அவதாரம் எடுப்பதே உலகத்து மக்களிடத்துச் சில வழிமுறைகளைக் காட்டவேண்டும் என்பதற்காகத்தான். அதுவே இரண்டாகப் பிரிந்து வந்து ஆணவத்தின் பயன் என்ன, அகங்காரத்தின் பயன் என்ன, எந்த நிலையிலே நீ உயர்ந்து சென்றாலும் இறுதியாக ஆணவம் என்பது அழிக்கப்படவேண்டிய ஒன்று; அகங்காரம் என்பதும் அழிக்கப்படவேண்டிய ஒன்று என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் பரசுராமாவதாரமும் இராமா வதாரமும் காட்சி தருகின்றன. அப்படியானால், இரணியன் இல்லையா, அந்த வரலாறு போதாதா எனலாம்.

இரணியன் போன்று இருக்கக் கூடியவர்கள் பல தவங்களைச் செய்து தங்களைத் தாங்களே உயர்த்திக் கொண்டவர்கள். பரசுராமனைப் பொறுத்தமட்டில் அவனும் தவம் செய்தவன்தான். ஆனால் அந்தணர் குலத்தில் பிறந்தவன்; ஜமதக்னி முனிவருடைய மகன். ஆகவே அவனுக்கு அகங்காரமும் சினமும் நிச்சயமாக இருக்கக் கூடாது.

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்

ஆயிற்றே. ஜமதக்னி முனிவன் அப்படி வாழ்ந்தவன் ஆயிற்றே! அவனுக்கு இப்படி ஒரு பிள்ளையா! இதுவும் ஒரு விந்தைதான்!

https://t.me/Tamil_Library

ஜமதக்னி முனிவன் அவ்வளவு தவம் செய்தவன் தான். ஆனால் தன் மனைவியாகிய ரேணுகை எவ்விதத் தவறும் செய்யாதபோது ஆண்களுக்கே உரிய முறையில் தவறான ஒரு முடிவுக்கு வந்து தன்னுடைய மகனை அழைத்து அவளுடைய கழுத்தை வெட்டிவிடு என்று சொல்லுகிறான். இந்தத் தவற்றை ஜமதக்னி முனிவன் செய்ததனாலேதான் அவன் கழுத்து பின்னர் வெட்டப்படுகிறது கார்த்தவீரியார்ஜுனன் மகன்களாலே. ஆகவே எத்தனையோ நீதிகளைப் போதிப்பதற்காக இந்த இரண்டு அவதாரங்களையும் எடுத்து வைத்து நம் பெரியவர்கள் அற்புதமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

அரக்கர்களுடைய போர் நடைபெறுகிறது இராமாவதாரத்திலே. கிருஷ்ணாவதாரத்திலே மனிதர்களுடைய சட்டம் எப்படி மாறுபடுகிறது என்பது காட்டப்படுகிறது. ஆகவே இரு பெரும் அவதாரங்கள் ஏன் என்பதைச் சிந்திப்போமேயானால், மிகப் பெரிய தத்துவங்களைப் புரிந்துகொள்ள இயலும் என்று முடிவு செய்ய முடிகிறது.

https://t.me/Tamil_Library

2

# தம்பியர் மூவர் ஏன்?

தசரத குமாரன், உடன்பிறந்த தம்பியர் மூவரைப் பெற்றிருந்ததோடு அமைதியடைந்ததாகத் தெரியவில்லை. அயோத்தியிலிருந்து புறப்பட்டு இலங்கைவரை சென்று மீட்டும் அயோத்தி திரும்புவதற்குள் மேலும் மூன்று தம்பியரை விரும்பி ஏற்றுக் கொள்கிறான். மிக நீண்ட காலம் மகப்பேறு இல்லாமல் இருந்த காரணத்தால் தசரதனுக்குப் பிள்ளைகள் வேண்டும் என்ற அவா மிகப் பெரிதாக இருந்திருக்க வேண்டும். எனவே அவனுடைய மூத்த மைந்தன், தந்தையின் விருப்பத்தை நன்கு அறிந்திருந்தமையின் போலும் மேலும் மூன்று சகோதரர்களை ஏற்றுக்கொண்டான். இவ்வாறு செய்வதால், தான் மட்டும் மகிழ்ச்சி அடையவில்லை; இறந்த தன் தந்தையும் சாந்தி பெறுவார் என்ற கருத்தை இராமனைப் பேசும்போது கம்பன் கூறுகிறான்:

**குகனொடும் ஐவரானோம் முன்பு, பின் குன்று சூழ்வான்**
**மகனொடும் அறுவர் ஆனோம், எம்முழை அன்பின் வந்த**
**அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவரானோம்**
**புகல் அரும் கானம் தந்த புதல்வராற் பொலிந்தான் உந்தை.**

**(வீட. அடை. 143)**

'புதல்வரால் பொலிந்தான்' என்ற சொற்களை நோக்கவேண்டும். ஒருவனிடம் எப்பொழுது பொலிவு

https://t.me/Tamil_Library

உண்டாகும்? உண்மையான இன்பம் அனுபவிப்பவனிடம் பொலிவைக் காணலாம். இனி, சமதிருஷ்டி பெற்றுவிட்ட சாந்தமூர்த்தியின் முகத்தினும் பொலிவைக் காண முடியும். புதல்வரால் பொலிந்தான் என்பதற்குப் புதல்வர்கள் காரணமாகப் பொலிவைப் பெற்றான் தசரதன் என்று பொருள் கொண்டால் தவறு இல்லை.

இதனைக் காணும் பொழுது ஓர் ஐயம் தோன்றத்தான் செய்கிறது. அறத்தின் மூர்த்தியாகிய இராமனையும், தருமத்தின் உரைகல் எனப்படுபவனாகிய பரதனையும், தொண்டுக்காகப் பிறப்பெடுத்த இலக்குவனையும், ஒப்பற்ற சத்துருக்கனையும் பெற்ற தசரதனுக்கு இதுவரை தோன்றாத பொலிவு இப்பொழுது தோன்றக் காரணம் அந்நான்கு புதல்வர்களிடமும் காணப்படாத ஏதோ இயல்புகள் இம்மூவரிடமும் இருந்திருக்க வேண்டும். அதனால், ஒருவேளை இவர்களும் உரிமையால் புதல்வர்கள் ஆனபோது பொலிவடைந் தானோ?

ஆழ்ந்து நோக்கினால் இவ்வாறு கூறுவதிலும் ஒரு பொருள் இருக்கக் காணலாம். தசரதனைப் பொறுத்தமட்டில் இராமன் முதலிய நால்வரையும் பெற்றான் என்றாலும் அவர்களில் யாரேனும் ஒருவருடைய இயல்பையோ பண்பையோகூட அவன் அறிந்திருந்தானா என்பது ஐயத்திற்குரியதே! இராமன் பரம்பொருள் என்பதை அவன் அறிய முடியாமல் அவனுடைய பிள்ளைப் பாசம் மறைத்து விட்டது. சிவ தனுசை ஒடித்தவன் என்று அறிந்திருந்தும் பரசுராமன் எதிர்ப்பட்டவுடன் தன் மைந்தனின் பேராற்றலை அறிய இயலாத தசரதன், பெண்களைப் போலப் புலம்புகிறான். இராமனையே அவன் அறிந்து கொள்ளவில்லை எனின், ஏனையோரை அவன் அறிந்து கொள்ளாமல் போனதில்

https://t.me/Tamil_Library

வியப்பு ஒன்றும் இல்லை. 'தள்ள அரிய பெரு நீதித்தனி ஆறு புக மண்டும் பள்ளம்' எனத்தக்க பரதனைத் தசரதன் சரியாகப் புரிந்து கொள்ளாதது மட்டுமன்று; தவறாகவே புரிந்து கொண்டிருந்தான்.

இதன் காரணம் யாதாக இருத்தல் கூடும்? தசரதன் ஒரு சாதாரண சராசரி மனிதனே யாவான். சாதாரண மனிதனுக்கு உரிய விருப்பு வெறுப்புகள், கோப தாபங்கள் ஆகிய அனைத்தும் அவனிடம் நிறைந்திருந்தன. கதை கூறுகிற சமதிருஷ்டி உடையவர்களாகிய இராமன் முதலிய நால்வரை அவன் அறிந்துகொள்ள முடியாமற் போனதில் வியப்பு ஒன்றும் இல்லை. எனவேதான் இந்நால்வரினும் வேறுபட்ட பண்புடைய சகோதரர் சிலரை, தசரதன் புரிந்து கொள்ளக்கூடிய சிலரை, ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை இராமனுக்கு ஏற்பட்டு விடுகிறது.

இராமன் சோதரராக ஏற்றுக்கொண்ட மூவரும் மூன்று துருவங்களில் உள்ளவர்கள். கல்வி வாசனையே இல்லாதவன் குகன் (உணர்ச்சி); 'உம்பரின் ஒரு முழம் உயர்ந்த ஞானத்தை' உடையவன் வீடணன் (அறிவு); இவ்விருவருக்கும் இடைப்பட்டவனாகக் காட்சி தருகிறான் சுக்ரீவன் (இரண்டின் கலப்பு). பரம்பொருளாகிய இராமன் இந்த மூவரை மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டிய காரணம் யாது? இறைவனிடம் அடிமை பூண்ட உயிர்கள் அனைத்தும் இந்த மூன்று வகையினுள் அடங்கும். இந்த மூன்றையல்லாத வேறு ஒரு வகை உண்டு என்று ஆராய்ச்சி அறிவும், மனோதத்துவ விஞ்ஞானமும் மிகுந்துள்ள இக்காலத்தில்கூடக் காட்ட இயலாது.

இம்மூன்று வகையினரையும் பரம்பொருள் ஏற்றுக் கொள்கிறான். இம்மூன்று வகையான மனநிலைகளையும் அவற்றின் அடிப்படையையும், அவை தொழிற்படும் முறையையும் விரித்துக் கூறுவதற்காகவே கவிச்சக்கரவர்த்தி

https://t.me/Tamil_Library

கம்பன் இம்மூன்று பாத்திரங்களையும் படைத்துக் காட்டுகிறான்.

முதலாவது, உள்ளத்து உணர்வு எனப்படும் தூய அன்பு. அன்பின் அடிப்படையில் எதனையும் சாதிக்கலாம் என்று நம்பினர் இந்நாட்டுப் பெரியோர் அன்பை இரண்டு வகையாகப் பயன்படுத்தலாம். இறைவன் மேல் செலுத்துகின்ற அன்பைக்கூட இரண்டு வகையாகப் பிரித்துக் காணமுடியும். முதலாவது வகை, அன்பை ஒரு சாதனமாகக் (வழி) கொள்ளுவதாகும். இறைவன் மேல் அன்பைச் செலுத்துவதன் மூலம் வீடுபேறு (மோட்சம்) என்ற பயனைப் பெற முயல்வதே இம்முறை. இம்முறையில் இறைவன் மேல் செலுத்தப்படும் அன்பு நாளும் நாளும் வளர்ந்து வரும். அது வளர வளர ஏனைய பொருள்களின் மேல் உள்ள பற்றுக் குறையத் தொடங்கும். இறுதி நிலையில் இறையன்பு ஒன்று தவிர ஏனையது ஒன்றும் எஞ்சுவதில்லை. இதனைச் சாதன அன்பு (பக்தி சாதனம்) என்பர்.

இதன் எதிராக உள்ளது அன்பைச் சாதனமாகக் கொள்ளாமல் அதனையே சாத்தியமாகக் (பயன்) கொள்வது. அன்பை வழியாகக் கொண்டு வீடுபேறு போன்ற பயனைப் பெற முடியாமல் அன்பையே பயனாகக் (சாத்தியம்) கொள்வது. இம்முறையில், அன்பு செய்பவன் வேறு எந்தப் பயனையும் விரும்புவதில்லை. மோட்சங்கூட அவனால் விரும்பப்படுவதில்லை. இந்த மன நிலையைத்தான் சேக்கிழார் பெருமான் 'கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்' என்று கூறுகிறார் அன்பினால் கும்பிட்டு அதற்கு ஒரு பயனையும் எதிர்பாராமல் அந்தக் கும்பிடுதலிலேயே இன்பங் காணுகின்றார்களாம் அடியார்கள் இக்கருத்தைத் தான் குலசேகரப் பெருமான் சற்று விரிவாகக் கூறுகிறார்:

https://t.me/Tamil_Library

'ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வான் ஆளும் செல்வமும் மண் அரசும் யான் வேண்டேன்
தேனார் பூம் சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே' (678)

என்ற பாடலில்.

அன்பை வழியாகக் கொள்ளாமல் அதனையே பயனாகக் கொள்கின்றவர்களிடம் சுரக்கின்ற அன்பு முதல் வகையைப் போலச் சிறிதாகத் தோன்றி நாளா வட்டத்தில் வளர்வதில்லை. அதன் எதிராக, தோன்றும் பொழுதே முழுவதுமாகத் தோன்றிவிடுகிறது. இத்தகைய அன்புடையவர்களை, அன்பு செய்கின்ற அவர்கள், அவர்கள் செய்யும் அன்பு என்று பிரித்துக் காண முடியாது. அவர்களே அன்பு வடிவினர். அவர்களிடம் 'தான்' என்ற அகங்காரமும், 'தனது' என்ற மமகாரமும், இவற்றின் பயனாக விளைகின்ற 'இருவினை'களும் (புண்ணிய, பாவம்) இவற்றின் பயனாக விளைகின்ற மூன்று குற்றங்களும் (ஆணவம், கன்மம், மாயை) இருப்பதில்லை. இவர்கள் உடல், பொருள், ஆவி அனைத்தும் அன்பு வடிவாகும். இத்தகைய சாத்திய அன்பு பூண்டவர்கள் என்று கண்ணப்பரையும் குகனையும் நாம் இலக்கியம் மூலம் அறிகிறோம்.

குகன் வேடன்; கல்வி அறிவு சிறிதும் இல்லாதவன்; ஞானிகள், யோகிகள் என்ற எவருடனும் பழகாதவன்; பிறவி நோய் என்ற ஒன்று இருப்பதாகவோ அதனைக் கடக்க வேண்டும் என்பதாகவோ அவன் கனவிலும் நினைக்கவில்லை. இராமனைக் காண வந்துள்ள முனிவர் கூட்டம் அவனைத் தரிசிப்பதன் மூலம், அவனைச் சரண் அடைவதன் மூலம் தம் பிறவியைப் போக்கிக் கொள்ளவேண்டும் என்ற கருத்துடனேயே வந்துள்ளது. இவர்களின் எதிராகக் குகன் ஒரு கலயத்தில் தேனையும்

https://t.me/Tamil_Library

மீனையும் கொண்டு வருகிறான். இராமனைக் கண்டு அன்பு கொள்ள வந்துள்ளானே தவிர அவனிடம் எதனையும் எதிர்பார்த்து வரவில்லை. எனவேதான் அவன் வந்துள்ளான் என்று இராமனிடம் விண்ணப்பம் செய்யச் சென்ற இலக்குவன்,

'கொற்றவ, நின்னைக் காணக் குறுகினன், நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும், தானும், உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்'

(குகப்—11)

என்று கூறுகிறான்.

'உள்ளம் தூயவன்; தாயினும் நல்லவன்' என்பன இளைய பெருமாள் குகனுக்குத் தந்த அடைமொழிகள். உள்ளே சென்று இராமனைக் காணுகிறான் குகன். அவன் 'இருக்க' என்று பணித்தபோதும் அமரவில்லை. தான் கொணர்ந்த உணவை இராமன் முன்னே வைத்து "தேனும் மீனும் அமுதினுக்கு இயைவதாகத் திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம்?" (13) என்று பேசுகிறான். மேலும் "இப்பார் குலாம் செல்வ, நின்றனை" இங்ஙனம் பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன் யான், இன்னலின் இருக்கை நோக்கித் தீர்கிலேன்" (16) என்றும் பேசுகிறான்.

முன்பின் பார்த்திராத இராமன்மாட்டுக் குகனுக்கு ஏற்பட்ட அன்பு சிறிது சிறிதாகத் தோன்றி, பழகப் பழக முதிர்ந்த அன்பு அன்று, தோன்றும்பொழுதே முழுவதாகத் தோன்றிய அன்பாகும் இது. இந்த அன்பை வழியாகக் கொண்டு குகன் எதனையும் பெற விரும்பவில்லை. இந்த அன்பையே பயனாகக் கொண்டவன். இதனாலேயே பெருமான் இவனை ஏற்றுக்கொண்டான்.

இதற்கு மறுதலையாக, ஞானத்தால் இராமனை இன்னான் என்று தெரிந்துகொண்டு அவனிடம் ஆட்பட்டவன் வீடணன். பெருங் கல்வியாளனும்

https://t.me/Tamil_Library

ஞானியுமாகிய அவன் அனுமன் மூலம் இராமனைப் பற்றி அறிய நேர்ந்தது. இறை அன்பு ஓரளவு அவனிடம் இருந்தது. ஆனால் அந்த அன்பு அவனுடைய ஞானம் வளர்வதற்குத் துணை புரிந்ததோடு சரி. அவன் வளர்ச்சியைக் கவிஞன் நன்கு வெளிப்படுத்துகிறான். 'என் கண் எதிரில் நில்லாது ஒழிக' என இராவணன் கூறியவுடன் துணைவர் நால்வருடன் வீடணன் கடற்கரைக்கு வந்துவிட்டான். தன்னுடன் வந்த துணைவரை மேலே செய்யத்தக்கது யாது என வினவினான். அவர்கள் "இராமனைச் சென்று காண வேண்டும்" என்றனர்.

இவர்கள் கூறியதைக் கேட்ட மாத்திரத்தில் வீடணன் "நல்லது சொல்லினீர்!" என்று கூறிவிட்டுத் தன் மனநிலையை உடன் கூறத் தொடங்குகிறான்:

'முன்புறக் கண்டிலென்; கேள்வி முன்பு இலென்;
அன்புறக் காரணம் அறியகிற்றிலேன்;
என்புறக் குளிரும்; நெஞ்சு உருகுமேல், அவன்
பின்புறப் பிறவியின் பகைஞன் போலுமால்...'

'..........................................................................
எல்லையில் பெருங்குணத்து இராமன் தாளினை
புல்லுதும்; புல்லி இப்பிறவி போக்குதும்.'

(வீட. அடை. 20, 19)

இவ்விரண்டு பாடல்களும் வீடணன் மன நிலையையும் குறிக்கோளையும் நன்கு அறிவுறுத்துகின்றன. முன்பின் பாராவிட்டாலும் இராமன் பெயரைக் கேட்டளவில் எலும்புகள் குளிருகின்றனவாம். நெஞ்சு உருகுகின்றதாம். இவை இரண்டு செயல்களும் இறை அன்பு பூண்டார் மாட்டு உண்டாகின்ற மெய்ப்பாடுகள். அந்த அன்பையும் அதன் விளைவுகளாகிய இந்த மெய்ப் பாடுகளையும் வீடணன் கருவியாகவே பயன்படுத்துகிறான். இத்தகைய உருக்கத்தை ஒருவன் பெயர் உண்டாக்க

https://t.me/Tamil_Library

வேண்டுமெனில் அவன் பிறவியைப் போக்கக் கூடியவனாகத்தான் இருத்தல் வேண்டும் என்பது வீடணன் தன் ஞானத்தால் கண்ட உண்மை. இனி இராமனிடம் அழைத்துச் செல்லப்படும் நேரத்தில் கூட அவனுடைய முக, மன பாவங்களைக் கூறும் கவிஞன், 'வழிந்த கண்ணீருடன்' செல்கிறான். என்று மட்டும் கூறாமல், 'அழிந்தது பிறவி என்னும் அகத்து இயல் முகத்துக் காட்ட' (138) என்று கூறுவதால் வீடணன் தன் ஞானத்தால் பரம்பொருளின் இயல்பையும் கருணையையும் அறிந்ததுடன் அதனால் தான் அடையப்போகும் பேற்றையும் நன்கு விளங்கிக் கொண்டிருந்தான் என்பதைக் கவிஞன் சுட்டிச் செல்கிறான். இராமன் மாட்டு வீடணன் கொண்ட அன்பு (பக்தி) தன்னுடைய பிறவியைப் போக்கிக் கொள்ளவும், அப்பரம்பொருளை ஓரளவு அறிந்து கொள்ளவும் வழியாகப் (சாதனமாக) பயன்பட்டதே தவிர அந்த அன்பைக் குகனைப் போலப் பயனாகக் (சாத்தியமாக) கொள்ளவில்லை என்பது தெளிவு. குகனிடம் இத்தகைய பக்தி வளர்வதற்கு இயற்கையாகவே அவனிடம் அமைந்திருந்த ஞானம் உதவி இருக்கலாம். வீடணனிடம் இந்த ஞானம் வளர்வதற்கு இயற்கையாக அவனிடம் அமைந்திருந்த பக்தி உதவி இருக்கலாம். குகன் பக்தியை சாத்தியமாகவும், வீடணன் பக்தியைச் சாதனமாகவும் கொண்டனர். இருவரையும் வள்ளல் தன் மாட்டு எடுத்துக் கொள்வதால், இந்த இரண்டு வழிகளுமே இறைவனுக்கு உகந்தவை என்பது தெளிவு.

ஆனால் இவர்கள் இருவரும் மேற்கொண்ட வழிகள் சாதாரண மனிதர்கள் மேற்கொள்ள முடியாத சர்வ பரித்யாகம் அடிப்படையானது. எனவே அவை சாதாரண மனிதர்கள் எளிதில் கைக்கொள்ளக்கூடியன அல்ல. அப்படியானால் சாதாரண நம் போன்ற சராசரி மனிதன் இறையருளை நாடவே முடியாதா என்று ஐயங் கொள்ளத்

https://t.me/Tamil_Library

*தேவை இல்லை. அதற்கும் ஒரு வழி உண்டு என்று காட்டுதற்காகவே சுக்ரீவன் படைக்கப்பட்டுள்ளான். சாதாரண மனிதன் தன் அறிவாலும் கேள்வி ஞானத்தாலும் பரம்பொருளின் உண்மையை அறிந்துகொண்டாலும் ஓரளவு அப்பரம்பொருளிடத்து பக்தி செய்தாலும் இடை இடையே சந்தேகம் வருவது வாழ்க்கையில் நாம் கண்ட அனுபவமேயாகும். நம்முடைய பக்தியும் ஞானமும் முழுத் தன்மை பெறாமல் உள்ளன. ஒரு சிலருக்கு வாழ்க்கையில் கிடைக்கும் அனுபவம் இந்தப் பக்தியையும் ஞானத்தையும் வளர்க்கப் பயன்படுகின்றது. நல்லவர்கள் தொடர்பும் நல்ல கேள்வி ஞானமும் நாளா வட்டத்தில் நம் பக்தியையும் ஞானத்தையும் வளர்க்க உதவுகின்றன.*

*நம் போன்ற சராசரி மனிதனுடைய நேர் பிரதிநிதியாக சுக்ரீவன் இருக்கிறான். அனுமன் கல்வியுடையவன். "இல்லாத உலகத்து எங்கும், இங்கு இவன் இசைகள் கூறக் கல்லாத கலையும் வேதக் கடலுமே இல்லை" (அனுமன் –18) என்று இராமனே கூறும்படியான அனுமன் சுக்ரீவனின் உற்ற துணைவனாகவும் அமைச்சனாகவும் உள்ளான். அந்த அனுமன்தான் இராம இலக்குவர்களைப் பற்றிச் சுக்ரீவனிடம் விவரமாகக் கூறி அவனை அவர்களிடம் அழைத்துச் சென்றான். சுக்ரீவன் இராமனைக் கண்ட இயல்பையும் அவனுடைய மன நிலையையும் கவிஞன் கூறுகின்றான்:*

"நோக்கினான்; நெடிது நின்றான்; 'நொடிவரும்
கமலத்தண்ணல்
ஆக்கிய உலகம் எல்லாம், அன்று தொட்டு இன்று காறும்
பாக்கியம் புரிந்த எல்லாம் குவிந்து, இரு படிவம் ஆகி
மேக்குயர் தடந்தோள் பெற்று வீரராய் விளைந்த' *என்பான்,*

'தேறினன்—'அமரர்க்கு எல்லாம் தேவர் ஆம் தேவர் அன்றே,
மாறி, இப்பிறப்பில் வந்தார் மானுடர் ஆகி மன்னோ

https://t.me/Tamil_Library

தேவை இல்லை. அதற்கும் ஒரு வழி உண்டு என்று காட்டுதற்காகவே சுக்ரீவன் படைக்கப்பட்டுள்ளான். சாதாரண மனிதன் தன் அறிவாலும் கேள்வி ஞானத்தாலும் பரம்பொருளின் உண்மையை அறிந்துகொண்டாலும் ஓரளவு அப்பரம்பொருளிடத்து பக்தி செய்தாலும் இடை இடையே சந்தேகம் வருவது வாழ்க்கையில் நாம் கண்ட அனுபவமேயாகும். நம்முடைய பக்தியும் ஞானமும் முழுத் தன்மை பெறாமல் உள்ளன. ஒரு சிலருக்கு வாழ்க்கையில் கிடைக்கும் அனுபவம் இந்தப் பக்தியையும் ஞானத்தையும் வளர்க்கப் பயன்படுகின்றது. நல்லவர்கள் தொடர்பும் நல்ல கேள்வி ஞானமும் நாளா வட்டத்தில் நம் பக்தியையும் ஞானத்தையும் வளர்க்க உதவுகின்றன.

நம் போன்ற சராசரி மனிதனுடைய நேர் பிரதிநிதியாக சுக்ரீவன் இருக்கிறான். அனுமன் கல்வியுடையவன். "இல்லாத உலகத்து எங்கும், இங்கு இவன் இசைகள் கூறக் கல்லாத கலையும் வேதக் கடலுமே இல்லை" (அனுமன் -18) என்று இராமனே கூறும்படியான அனுமன் சுக்ரீவனின் உற்ற துணைவனாகவும் அமைச்சனாகவும் உள்ளான். அந்த அனுமன்தான் இராம இலக்குவர்களைப் பற்றிச் சுக்ரீவனிடம் விவரமாகக் கூறி அவனை அவர்களிடம் அழைத்துச் சென்றான். சுக்ரீவன் இராமனைக் கண்ட இயல்பையும் அவனுடைய மன நிலையையும் கவிஞன் கூறுகின்றான்:

"நோக்கினான்; நெடிது நின்றான்; 'நொடிவரும் கமலத்தண்ணல்
ஆக்கிய உலகம் எல்லாம், அன்று தொட்டு இன்று காறும்
பாக்கியம் புரிந்த எல்லாம் குவிந்து, இரு படிவம் ஆகி
மேக்குயர் தடந்தோள் பெற்று வீரராய் விளைந்த' என்பான்,

'தேறினன்—'அமரர்க்கு எல்லாம் தேவர் ஆம் தேவர் அன்றே,
மாறி, இப்பிறப்பில் வந்தார் மானுடர் ஆகி மன்னோ

https://t.me/Tamil_Library

ஆறு கொள் சடிலத்தானும், அயனும், என்று இவர்கள் ஆதி
வேறு உள குழுவை எல்லாம், மானுடம் வென்ற தன்றே!'

(நட்புக்—18, 19)

'நான்முகன் படைத்த உலகங்கள் அனைத்தும் செய்த தவமெல்லாம் திரண்டு இரண்டு வீரர் வடிவு பெற்று வந்தன போலும்' என்று முதலில் நினைத்தான். பின்னர் ஆராய்ந்து 'கடவுளர் அனைவரும் உருமாறி மானுட வடிவு பெற்று வந்தனர் போலும்' என்றும் நினைந்தான். பின்னர் இராமனை நெருங்கிப் பேசும்பொழுது: 'ஆர் உயிர் துறக்கல் ஆற்றேன்; சரண் உன்னைப் புகுந்தேன்; என்னைத் தாங்குதல் தருமம் என்றால்' (நட்புக்—23). ஏனைய குகனும் வீடணனும் இவ்வாறு இராமனிடம் இரந்து தம் துன்பத்தைத் துடைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளவில்லை. ஆனால் சுக்ரீவன் தன் துன்பத்தைப் (பிறவித் துன்பத்தை அன்று) போக்க வேண்டும் என்று இராமனிடம் சரணம் புகுகின்றான்.

ஞானியாகிய வீடணன் இராமனிடம் சரணம் புகுவதற்கும் கர்மியாகிய சுக்ரீவன் 'சரண் உனைப் புகுந்தேன்' என்று கூறுவதற்கும் வேறுபாடு நிரம்ப உண்டு. இறைவனின் அளப்பரிய பெருமையையும், உயிர்களினுடைய சிறுமையையும், அவனன்றி வேறு புகலிடம் இல்லாமையையும் அறிந்துகொண்ட ஞானி தன்னை முழுவதுமாக இறைவனிடம் சரணமாகத் தந்துவிடுகிறான். அவ்வாறு தந்துவிட்ட பிறகு அவனுக்கென்று தனிப்பட்ட வாழ்க்கையே இல்லை. அதன் பிறகு வாழும் வாழ்க்கை முழுவதும் இறைவன் பணியை நிறைவேற்றும் ஒரு கருவியாகவே ஞானி வாழ்கிறான். ஆனால் சுக்ரீவன் போன்றவர்கள் சரணம் என்று தன்னைத் தந்தாலும் அது சர்வபரித்யாகம் அன்று. தங்களுடைய துன்பத்தைத் துடைக்கவேண்டும் என்பதற்காகவே தம்மை அடைக்கலமாகத் தருகின்ற சாதாரண இயல்பு.

https://t.me/Tamil_Library

*வீடணன் சரணத்துக்கும் சுக்ரீவன் சரணத்துக்கும் உள்ள வேறுபாட்டை எளிதில் அறிய முடியும். பரம்பொருள் என்று தன் ஞானத்தால் அறிந்த பிறகே வீடணன் அடைக்கலம் புகுந்தான். பரம்பொருளையன்றி வேறு யாரிடமும் அவன் தன்னை ஒப்படைக்க இசைய மாட்டான். ஆனால் சுக்ரீவன் சாதாரண மனித இயல்பு படைத்தவனாகலின் தன்னுடைய அப்போதையத் தேவையை யார் பூர்த்தி பண்ண முன் வருகிறார்களோ அவர்களிடம் அப்போதைக்குச் சரணம் புகுந்துவிடுவான். வாலியைக் கொல்லக்கூடியவன் இராமன் ஒருவனே என்று அவன் அறிவு கூறியதால் மட்டுமே அவன் இராமனிடம் சரணம் புகுந்தான்.*

*இந்த அன்பு முழுத்தன்மை பெற்றது அன்று என்பதை அறிந்துகொள்ள நீண்ட ஆராய்ச்சி தேவை இல்லை. வாலி இறந்த பிறகு தன் படைகளைத் திரட்டி வரக் கொஞ்ச காலம் ஆகும். அதுவரைப் பொறுத்திருக்க வேண்டும் என்று இராமனிடம் கேட்டுக்கொண்டு தன் அரண்மனை சென்ற சுக்ரீவன், வாழ்க்கையை அனுபவிக்கத் தொடங்கிவிட்டான். இராமனை அறவே மறந்துவிட்டு, அவனுக்குத் தான் தந்த வாக்குறுதியையும் காற்றில் பறக்கவிட்டுப் பெருங்குடியனாக வாழத் தொடங்கிவிட்டான். அனுமனாலும், வாலியின் மனைவியாகிய தாரையாலுங்கூட அவனைத் திருத்த முடியவில்லை. இன்பங் கண்டவிடத்து இறைவனை மறந்து இன்பவேட்கையில் ஈடுபடும் சராசரி மனிதனாகவே சுக்ரீவன் உள்ளான். அவன் நிலையை இராமனே,*

> **'பெறல் அருந் திருப்பெற்று, உதவிப் பெரும்**
> **திறம் நினைத்திலன்; சீர்மையின் தீர்ந்தனன்,**
> **அறம் மறந்தனன்; அன்பு கிடக்க, நம்**
> **மறம் அறிந்திலன்; வாழ்வின் மயங்கினான்.'[1]**

https://t.me/Tamil_Library

'நன்றி கொன்று, அரு நட்பினை நார் அறுத்து
ஒன்றும் மெய்ம்மை சிதைத்து, உரை பொய்த்துளார்க்
கொன்று நீக்குதல் குற்றத்தில் தங்குமோ?'

(கிட்கி. படலம்–2, 3)

என்று பேசுகிறான்.

இவ்வளவு இழிநிலையைச் சுக்ரீவன் அடைந்தாலும், இராமனிடம் வந்து தன் பிழைக்கு இரங்கி மன்னிப்புக் கேட்டவுடன் இராகவன் இவனை மன்னித்து ஏற்றுக் கொள்கிறான்.

இதே சுக்ரீவன் இராமனுடன் தங்கி நெருங்கிப் பழகத் தொடங்கியபின் தன் உயிரையும் கொடுத்து இராகவனுக்கு உதவ முன் வருதலை இராம–இராவணன் போரின்போது காண்கிறோம். அவனுடைய அறிவும் உணர்வும் (ஞானமும், பக்தியும்) சமயத்தில் அவனைக் கைவிட்டாலும் இறுதியில் அவன் செயல்கள் மூலமாக இராமனின் தம்பியாக ஆவதற்குரிய தகுதியைப் பெற்றுவிடுகிறான். சராசரி மனிதனுடைய குற்றங்கள் எத்துணைப் பெரிய மலையளவு இருப்பினும் அவையும் மன்னிக்கப்படும் என்பதற்கும், அவனும் திருவருளுக்குப் பாத்திரமாகலாம் என்பதற்கும் எடுத்துக்காட்டாக சுக்ரீவன் நிற்கிறான்.

சுக்ரீவன் மனத் தளர்ச்சியும், பின்னர் இராமனுடன் வாழத் தொடங்கியபின் அவன் பெற்ற மன வளர்ச்சியும் சராசரி மனிதனைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைகின்றன. எனவே அவனையும் இராமன் தம்பியாக ஏற்றுக்கொள்கிறான் எனில் சராசரி மனிதனுக்கும் இறையருள் என்றும் கிடைக்கும் என்பதற்கு அது சான்றாகிறது.

மூன்று தம்பியரை இராமன் வனத்தில் ஏற்றுக்கொண்டாலும் மூவரும் மூன்று வேறுபட்ட பண்பினை உடையவர்கள். இறைவன் திருவருளுக்கு

https://t.me/Tamil_Library

எத்தகையவர்களும் பாத்திரராக முடியும் என்ற பேருண்மையை வெளிக்காட்டவே இம்மூவரும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர். அன்பே வடிவான குகன் பக்தி மார்க்கத்தின் பிரதிநிதியாகவும், அறிவே வடிவான வீடணன் ஞானமார்க்கத்தின் பிரதிநிதியாகவும் இருக்கின்றனர். இரண்டு வழிகளிலும் முற்றிலும் ஈடுபடாமல் இதிற் கொஞ்சமும் அதிற் கொஞ்சமும் ஏற்றுக் கொண்டு ஆனால் அதே நேரத்தில் சாதாரண மனிதர்கட்குரிய குறைபாடுகளையும் பெற்று, கடமையைச் செய்து வாழும் எந்த மனிதனுங்கூட இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படும் தகுதி பெற்றவனாகிறான் என்பதற்கு எடுத்துக்காட்டாக சுக்ரீவனும் அமைகின்றான். இராகவன் மூன்று தம்பியரை ஏற்றதாகக் கூறுவது, இந்த மூன்று வழிகளில் — பக்தி, ஞானம், கர்மம் — எதனைப் பின்பற்றினாலும் இறையருள் பெறுவது திண்ணம் என்ற அடிப்படையை அறிவுறுத்தவேயாம்.

https://t.me/Tamil_Library

# 3

# மனிதனின் பிரதிநிதி

இராமன் உடன்பிறவாத் தம்பியராக ஏற்றுக் கொண்டவர்களுள் நடுவில் நிற்பவன் சுக்கிரீவன். அன்பே வடிவாக இருக்கும் குகனுக்கும் அறிவே வடிவாக இருக்கும் வீடணனுக்கும் இடையில் இருப்பவன் சுக்கிரீவன். இராமனுடைய வன வாழ்க்கை தொடங்கி முடிவுதற்குள் இம்மூவரும் ஒருவர் பின் ஒருவராக இராமனை அடைகின்றனர். வந்து சேர்ந்த முறையிலும் சுக்கிரீவன் இடைப்பட்டவனாக இருப்பது எல்லா வகையிலும் பொருத்தம் உடையதாகவே அமைந்துள்ளது.

மனிதன் அறிவு, உணர்ச்சி என்ற இரண்டின் கூட்டுச் சேர்க்கையில் வாழ்பவனாவான். இவை இரண்டும் தம்முள் ஒத்த அளவுடன் இருத்தல் வேண்டுமா, ஓரளவு ஏற்றத்தாழ்வுடன் இருத்தல் வேண்டுமா என்ற வினாவிற்கு விடை இறுத்தல் கடினமானது. சில சமயங்களில் அறிவு தலைதூக்கியும், இன்னுஞ்சில சமயங்களில் உணர்வு தலை தூக்கியும் இருப்பவனே சராசரி மனிதன் எனப்படுவான். அறிவின் விளக்கம் இல்லாமல் உணர்வுமட்டும் உடையவனை நாகரிகமற்றவன் என்றும், உணர்ச்சியே இல்லாமல் அறிவுக்கூர்மை மட்டும் உடையவனை சமுதாய வாழ்க்கைக்கு ஏலாதவன் என்றுங் கூறுகிறோம். "அரம்போலும் கூர்மையரேனும், மரம்போல்வர்



https://t.me/Tamil_Library

மக்கட்பண்பில்லா தவர்" (997) என்று அறநூல் பேசுகிறது. திருவள்ளுவர் மக்கட்பண்பு என்று கூறுவது அறிவும் உணர்வும் கலந்த ஒரு நிலையையேயாகும். இத்தகைய அறிவு, உணர்வுக் கூட்டில் பல சமயங்களில் விநோதமான சூழ்நிலை ஏற்படுவதும் உண்டு. அறிவு சரி என்று கூறுவதை உணர்வு ஏற்றுக்கொள்ள மறுப்பதும், உணர்வு ஒப்புவதை அறிவு ஏற்க மறுப்பதும் விநோதமான சூழ்நிலையை உருவாக்கும். சராசரி மனிதனுக்கு அறிவைவிட உணர்ச்சியே தலைதூக்கி நிற்கும.

சுக்கிரீவன் இதற்குச் சிறந்ததவோர் எடுத்துக் காட்டாவான். புதியவர்கள் யாரையேனுங் கண்டால் வாலியால் அனுப்பப் பெற்ற பகைவர்கள் என்று கருதி அஞ்சுவது அவனது இயல்பு. மலையின் மேல் இராம இலக்குவர் ஏறி வருவதைக் கண்டவுடன், "செய்வது ஓர்கிலன்; அனையர் தெவ்வர் ஆம்என வெருவி, 'உய்தும் நாம், என விரைவின் ஓடினான், மலை முழையின்". (அனும-1) என்கிறார் கவிச்சக்கரவர்த்தி. இந்நிலையில், அறிவின் எல்லை கண்ட மாருதி, மறைந்து நின்று வருகின்றவர்களின் உடலமைப்பு, கண்கள் முதலிய வற்றையும் அவர்கள் உள்ளப் பாங்கையும் நன்கு அறிந்து, அவர்கள் எதிரே சென்றான். இராமனிடம் சில சொற்களே அவன் பேசினாலும் இராமன் மாருதியையும், மாருதி இராமனையும் மிக நன்றாக அறிந்து கொண்டனர். தன் தலைவனாகிய சுக்கிரீவனுக்கு ஈடு இணையற்ற துணையைச் சம்பாதித்து விட்டான் மாருதி.

மீட்டு வந்து, சுக்கிரீவன் முதலியவர்களை ஒருங்கு சேர்த்து, வந்தவர்கள் யாவர், அவர்களால் சுக்கிரீவனுக்கு என்ன நலம் ஏற்படும் என்பதை மிக விரிவாக 15 பாடல்களில் (நட்புக் கோள் 1 முதல் 15) கூறுகின்றான் அஞ்சனை சிங்கம். மாருதி தன் தலைவனாகிய சுக்கிரீவனை நன்கு எடைபோட்டு வைத்திருந்தான் என்பதை விளக்க

https://t.me/Tamil_Library

*இப்பதினைந்து பாடல்களே போதுமானவை. தூரத்திலிருந்து இராம இலக்குவர்களைக் கண்டவுடன் மாருதி மனத்தில் முதன் முதலாகத் தோன்றிய எண்ணம்,*

**"தேவருக்கு ஒரு தலைவராம் முதல் தேவர் எனின்**
**மூவர்; மற்றும், இவர் இருவர்.........**
**..................................................................**
**கேவலத்து இவர் நிலைமை தேர்வது எக்கிழமை கொடு"**

**(அனும – 5)**

*என்பதாகும். இந்த எண்ணம் வலுப்பெற்ற நிலையில் இறுதியாக அவன்,*

"மாயத் தொல்வினைதன்னை நீக்கி
...மீளா நெறி உய்க்கும் தேவரோதாம்?
என்ற எனக்கு உருகுகின்றது;
இவர்கின்றது அளவில் காதல்." (அனு – 13)

*என்ற முடிவுக்கு வந்து, இராமனைக் காணச் செல்கிறான்.*

*இராமனைப் பற்றி இத்துணை உயர்வான எண்ணத்துடன் அவனை நெருங்கிச் சென்று, அவன் முழுமுதற் பொருள் என்று துணிந்து கொண்டான். என்றாலும், சுக்கிரீவனிடம் பேசும் பொழுது அறிவாற்றலில் மேம்பட்ட மாருதி, இராமன் முழுமுதற் பொருள் என்ற கருத்தை முதலிற் கூறாதது ஆராய்தற்குரியது. தன் தலைவனாகிய சுக்கிரீவனுடைய அறிவையும், கல்வியையும் மாருதி நன்கு அறிந்திருந்தமையின் பரம்பொருள் பற்றிய பேச்சை முதலில் எடுக்கவே இல்லை. அதற்குப் பதிலாக இராமனைப் பற்றிச் சுக்கிரீவனிடம் கூறத் தொடங்கிய அனுமன்,*

**"..........................விரைசெய்தார்**
**வாலி என்ற அளவுஇலா வலியினான் உயிர்தெறக்**
**காலன் வந்தனன்; இடர்க்கடல் கடந்தனம்..." (நட்புக்–2)**

https://t.me/Tamil_Library

என்றுதான் தொடங்குகிறான் என்றாலும், சுக்கிரீவன் வாலியைக் கொல்லக்கூடியவன் என்று யாரையும் நினைத்து நம்பிவிட மாட்டான் என்பதையும் அனுமன் நன்கு அறிந்திருந்தான். எனவே, தாடகையையும் சுவாகுவையும் கொன்றவன் (6), சிவனுடைய திரியம்பகம் என்னும் வில்லை முரித்தவன் (7), பரசுராமனை வென்றவன் (8), கரனையும் அவன் படையையும் ஒருவனாகவே நின்று அழித்தவன் (10), கவந்தனைக் கொன்றவன் (13) என்றெல்லாம் காரணத்துடன் இராமன் வல்லமையை விளக்குகிறான்.

இதில் ஒருவேளை சுக்கிரீவனுக்குத் தெளிவு பிறந்தாலும் மற்றோர் ஐயம் உடனே தோன்றிவிடும். இராமன் வாலியை வென்றால் அவனுடைய அரசைத் தான் கைப்பற்றிக் கொள்வானே தவிர, வாலி தம்பியாகிய தனக்கு அதனால் என்ன பயன் விளையும் என்று ஐயுறுவான்; இராமனுடைய நட்பால் தனக்கு எவ்விதப் பயனும் ஏற்படாது என்ற முடிவுக்கும் வந்துவிடுவான். இந்த ஐயத்தை அவன் உறுதியாகப் பெறுவான் என்பதைச் சொல்லின் செல்வனாகிய மாருதி நன்கு அறிந்துள்ளான். ஆதலின் ஒரு பாடலில், வாய்விட்டுக் கேட்கப்படாத ஐயத்திற்கு விடை கூறுகிறான். இராமன் பிறர் மண்ணைக் கவரும் இயல்புடையவன் அல்லன்; ஏன் எனில், தனக்கு உரிமையாக இருந்த மண்ணையே தன் தம்பிக்கு அன்புடன் உதவிவிட்டுச் சிற்றவையின் பணியைத் தலைமேற்கொண்டு கானகம் வந்துள்ளான் என்பதையும் விரிவாகக் கூறுகிறான் மாருதி:

**"உளைவயப் புரவியான் உதவஉற்று, ஒரு சொலால்**
**அளவுஇல் கற்புடைய சிற்றவை பணித்தருளலால்**
**வளையுடைப் புணரிசூழ் மகிதலத் திருஎலாம்**
**இளையவற்கு உதவி, இத் தலைஎழுந் தருளினான்"** **(நட்பு–8)**

https://t.me/Tamil_Library

என்ற அனுமனின் விளக்கம் சுக்கிரீவனுடைய மனத்தில் ஓர் அமைதியைத் தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அப்படியே இருப்பினும் மனைவியை இழந்து நிற்பவர், அவளை மீட்டுப் பெற வேண்டும் என்று விழைபவர், அம்முயற்சிக்கு உறுதுணையாக வலிமைமிக்க வாலியை நாடுவரே அன்றித் தன்னை ஏன் நாடவேண்டும் என்ற ஐயம் அடுத்துத் தோன்றுவது நியாயமானதேயாகும். சொல்லின் செல்வன் இந்த ஐயத்தையும் எதிர்பார்த்து இதற்கும் விடை கூறுகிறான்:

**"நீ ஐயா! தவம்இழைத் துடைமையால், நெடுமனம்**
**தூயையா உடைமையால் உறவினைத் துணிகுவன்" (நட்பு–14)**

என்ற முறையில் விடை இறுத்துவிட்டு, மறுபடியும் வாலியை ஒழிக்கவல்லவர்கள் என்ற கருத்தை இறுதியாகவும் கூறி முடிக்கிறான் மாருதி.

**"தந்திருந்தனர் அருள்; தகைநெடும் பகைஞன் ஆம்**
**இந்திரன் சிறுவனுக்கு இறுதிஇன்று, இசைதரும்" (நட்பு–15)**

என்று கூறிவிட்டுப் "புந்தியின் பெருமையாய் போதரு" (15) என்று முடித்தான். சுக்கிரீவன் வாய்திறந்து ஒரு வினாவைக்கூடக் கேட்காத நிலையில் அவன் மனத்தில் எழக்கூடிய ஐயங்கள், வினாக்கள் ஆகிய அனைத்தையும் எதிர்பார்த்து அவை அனைத்துக்கும் விடையும் விளக்கமும் தருகிறான் மாருதியாகலின், அவனைச் 'சொல்லின் செல்வன்' என்று எதிரது அறியும் இராமன் கூறியதில் வியப்பொன்றும் இல்லை.

இத்துணை அளவு மாருதியால் தேற்றப்பட்டு, இராமனைக் காணப் புறப்படுகிறான் சுக்கிரீவன். என்றாலும், அவனுடைய மனத்தில் இருந்த ஐயங்கள் மாருதி சொற்களால் முழுவதும் தீர்ந்துவிட்டன என்று கூறுவதற்கில்லை. இந்நிலையில் அவனுடைய அறிவு,

https://t.me/Tamil_Library

தனக்கு விடிவு காலம் வந்துவிட்டது என்று கூறவும், உணர்வு அச்சத்தையும் சந்தேகத்தையும் கிளறிவிடவும் இருதலைக்கொள்ளி எறும்பாக உள்ளான் அவன். இம்மாதிரியான மனநிலையுடன்தான் இராமனைக் காணச் சென்றான்.

கமலக்கண்ணனைச் சென்று கண்டான்: நோக்கினான், நெடிது நின்றான். உலகங்கள் அனைத்தும் செய்த புண்ணியம், வீரர் இருவர் வடிவு பெற்று வந்தது என்ற முடிவுக்கு வந்தான், இன்னும் ஒரு படி மேலே சென்று,

**"ஆறுகொள் சடிலத்தானும் அயனும் என்று இவர்கள் ஆதி**
**வேறுள குருவை எல்லாம், மானுடம் வென்றது அன்றே"**

**(நட்பு–19)**

என்ற முடிவுக்கும் வந்துவிட்டான். இராமனாகிய பரம்பொருளை அடைந்துவிட்டால் தான் பெறவேண்டிய பேறு வேறு இல்லை என்ற நினைவு அவனுக்கு ஏனோ வந்ததாகத் தெரியவில்லை.

இவ்வாறு ஈடுபட்ட சுக்கிரீவனை உடன் இருத்திக் கொண்ட இராகவன், தான் அவனை நாடிவந்த காரணத்தை அழகாகக் கூறுகிறான்.

**"..............................யாங்கள் உற்ற**
**கையறு துயரம் நின்னால் கடப்பது கருதி வந்தேம்**
**ஐய! நின் தீரும் என்ன, அரிக்குலத் தரசன் சொல்வான்"**

**(நட்பு–24)**

தான் இருக்கும் இடம் தேடி வந்த விருந்தினர்கள் இப்பொழுது தங்கள் துயரத்தைப் போக்க வேண்டும் என்று வாய் திறந்து கேட்கிறார்கள். கேட்பவர்கள் சாதாரண மனிதர் அல்லர். சுக்கிரீவனே அவர்கள் எத்தகையவர்கள் என்பதை நன்கு அறிந்துள்ளான். அவ்வளவு பெருமை

https://t.me/Tamil_Library

வாய்ந்தவர்கள். தன் போன்ற சாதாரணக் குரங்கை நாடி என்றுமே வராதவர்கள் இப்பொழுது வந்ததுடன் அல்லாமல் தன்னிடம் உதவியும் கேட்கிறார்கள். "கையறு துயரம் நின்னால் கடப்பது கருதி வந்தேம்" (24) என்று அவர்கள் வாய்விட்டுக் கேட்ட பிறகு மிகச் சாதாரணமான ஒருவன் கூட, "ஐயா! என்னால் ஆன உதவியைச் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றுதானே கூறல் வேண்டும்.

ஆனால், 'உன் உதவியை நாடி வந்துள்ளேன்' என்று குறை இரந்து நிற்கும் இராமனுக்குச் சுக்கிரீவன் கூறிய விடை, அவனது மனநிலையையும் பண்பாட்டையும் நன்கு விளக்குவதாக உள்ளது. இராமனை நோக்கி, "என் அண்ணன் செய்யும் கொடுமைக்கு அஞ்சி இம்மலையில் வாழ்ந்து வருகிறேன். இப்பொழுது உன்னைச் சரண் அடைகின்றேன். என்னைத் தாங்குதல் நினது கடன்" என்ற பொருளில்,

"முரணுடைத் தடக்கை ஓச்சி, முன்னவன்; பின்வந் தேனை
இருள்நிலைப் புறத்தின் காறும், உலகு எங்கும் தொடர
இக்குன்று
அரண்உடைத் தாகி உய்ந்தேன்; ஆருயிர் துறக்க லாற்றேன்
சரண் உனைப் புகுந்தேன்! என்னைத் தாங்குதல்
தருமம் என்றான்" (நட்பு–25)

தன் வேண்டுதலுக்கு ஒரு விடையுங் கூறாமல், தன் குறையைக் காதில்கூட வாங்கிக் கொள்ளாமல் அவனுடைய துயரைப்பற்றிப் பேசி, 'நின்னைச் சரண் அடைந்தேன்' என்று கூறும் ஒருவனை இராகவன் இதற்குமுன் சந்தித்ததில்லை. முதன்முறையாகப் பார்த்தவுடனேயே "நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன் யான்" (குகப்படலம் 17) என்று கூறிய குகனும் ஒரு தம்பியாக ஏற்றுக்கொள்ளப் பெறுகிறான்

https://t.me/Tamil_Library

எதிரே உள்ளவன், 'உன் உதவியை நாடி வந்தேன்' என்று கூறுவதைக் காதிற்கூட வாங்கிக்கொள்ளாமல் தன் குறையை ஒப்பாரி வைக்கும் இந்தச் சுக்கிரீவனும் ஒரு தம்பியாக ஏற்றுக்கொள்ளப் பெறுகிறான். இராகவனின் பெருமைக்கும் சுக்கிரீவனுடைய சிறுமைக்கும் இது ஓர் எடுத்துக் காட்டாகும்.

சுக்கிரீவனுடைய இந்த வார்த்தைகளைக் கேட்ட இராகவன் இரக்கத்துடன் அவனைப் பார்த்து, 'உன் தனக்கு உரியஇன்ப துன்பங்கள் உள்ள, முன்னாள் சென்றன போக, மேல்வந்து உறுவன தீர்ப்பல்; அன்ன நின்றன, எனக்கும் நிற்கும் நேர்' (26) என்று கூறிவிட்டான். பின்னர்ச் சுக்கிரீவன் இருக்கும் இடம் சென்று, அவனும் மனைவியை இழந்து வாடுபவன் என்பதை அறிந்தவுடன் தசரத குமாரன் தன்னையே மறந்துவிடுகிறான். தன் நண்பனாகிய சுக்கிரீவன் மனைவியை இழக்கக் காரணமாக இருந்தவன் அவன் தமையனாகிய வாலி என்பதை அறிகிறான் இராகவன். தம்பியின் பொருட்டாக அரசைத் துறந்து வரும் ஒருவன், தம்பியின் மனைவியைக் கவர்ந்தான் ஓர் அண்ணன் என்பதை எவ்வாறு சீரணிக்க முடியும்? உடனே பொங்கி எழுந்து,

**"உலகம் ஏழினோடு ஏழும்வந்து அவன் உயிர்க்கு உதவி**
**விலகும் என்னினும், வில்லிடை வாளியின் வீட்டித்**
**தலைமை யோடுநின் தாரமும், உனக்குஇன்று தருவென்"**

**(நட்பு-70)**

என்று பேசுகிறான்.

இப்பொழுதுதான் சுக்கிரீவன் மனிதர்களாகிய நம்முடைய பிரதிநிதியாக நடந்து கொள்கிறான். அவன் உடன்பிறந்த சந்தேகம் மறுபடியும் அவனைப் பற்றிக்கொள்கிறது. தன் தமையனாகிய வாலியை எதிர்ப்பேன் என்று முன்வந்து வாய் விட்டுக் கூறும்

https://t.me/Tamil_Library

யாரையும் சுக்கிரீவன் கண்டதில்லை. அவ்வாறு இருக்க, வாலியை மட்டும் அல்லாமல் பதினான்கு உலகங்களும் அவனுக்கு உதவியாக வரினும் அனைவரையும் வென்று சுக்கிரீவனுக்குப் பட்டமும் மனைவியும் தருவென் என்று இராமன் கூறிவிட்டானே. அப்படி இருக்க, இப்பொழுது இராமன் கூறுவதை ஏற்றுக்கொள்வது தவிரச் சுக்கிரீவனுக்கு வேறு வழி யாது? இருந்தும், இராமன் கூறியவுடன் மந்திராலோசனை சபையைக் கூட்டுகிறான்.

இந்த சபையைக் கூட்டினாலும் சுக்கிரீவன் பிறர் அறியத் தன் மனத்தில் உள்ள சந்தேகங்களை வெளிப்படுத்தவில்லை. இத்துணைச் சிறப்புவாய்ந்த இராமனைத் தான் ஐயப்படுவதாக அமைச்சர் முன்னர் எவ்வாறு வெளிப்படுத்த முடியும்? எனவே, அவன் சபையைக் கூட்டிவிட்டாலும் வெளிப்படையாக ஒன்றுங் கூறவில்லை. குறிப்பில் குறிப்புணரும் ஆற்றல் பெற்ற அனுமன்,

**"உன்னினேன் உன்தன் உள்ளத்தின் உள்ளதை, உரவோய்!**
**'அன்ன வாலியைக் காலனுக்கு அளிப்பதுஓர் ஆற்றல்**
**இன்ன வீரர்பால் இல்லை' என்று அயிர்த்தனை; இனியான்**
**சொன்ன கேட்டு, அவை கடைப்பிடிப்பாய்! எனச்**
**சொன்னான்"** (நட்பு–73)

என்று கூறத் தொடங்குகிறான். இப்பொழுது அனுமனுடைய பேச்சு முன்போல் இல்லை. இராமனைப் பற்றிய ஐயங்கள் நீங்கி விட்டன. வாலியை வெல்ல முடியுமா என்ற ஒரே ஒரு ஐயம் மட்டுமே உள்ளது. எனவே அதனைப் போக்கக்கூடிய வாதங்களை மட்டுமே அனுமன் பேசுகிறான். கரன், தாடகை முதலியோரை வென்றதை மட்டும் வைத்துக்கொண்டு ஒருவன் வாலியை வென்று விடுவான் என்று கூற முடியாது. முன்னர்கூறிய அனைவரும் இராவணனுக்குக் கீழ்ப்பட்டவர்கள்.

https://t.me/Tamil_Library

வாலியோ அந்த இராவணனை வாலினாற் கட்டுகிறவன்; எனவே கரன், கவந்தன் முதலானோரை வென்றவன் வாலியை வெல்ல முடியும் என்ற வாதம் எடுபடாது. மேலும், "கிட்டுவார் பொரக்கிடைக்கின், பட்ட நல்வலம் பாகம் எய்துவான்" வாலி (நட்பு-40). இதுவரை இராமனால் வெல்லப்பட்ட யாருக்கும் இத்தகைய வரபலம் இருந்ததில்லை. எனவே, சுக்கிரீவனுடைய சந்தேகம் முழுதும் ஆதாரமற்றது என்று கூறிவிட முடியாது.

வரபலமுடைய வாலியை வெல்ல வேறு வரபலம் உடையவர்களால் இயலாது. ஆனால் வரங்களையே தந்த இறைவனால் உறுதியாக அவனை வெல்லமுடியுமன்றோ? எனவேதான், நான்கு பாடல்களில், இராமன் மூவர்க்கும் மேம்பட்ட மூலப்பொருள் என்பதை விரிவாகச் சான்று காட்டி விளக்குகிறான் அஞ்சனை சிறுவன். இதிலும் ஓர் இடையூறு ஏற்படுகிறது. பரம் பொருளை அறிவின் துணை கொண்டு ஆராய்ந்து அறிதல் இயலாத காரியம். ஆனால், உணர்வின் உதவிகொண்டு உணரலாம். மாபெரும் அறிஞனாகிய அனுமன் இதை அறியாதவனா? எனவேதான், வந்தவன் மூலப் பரம் பொருள் என்பதைத் தன் உணர்வுமூலம் உணர்ந்ததைக் கூறுகிறான்.

**"சங்கு சக்கரக் குறிஉள, தடக்கையில் தாளில்**
**எங்கும் இத்தனை இலக்கணம் யாவர்க்கும் இல்லை"**

**(நட்பு–74)**

என்ற இப்பாடலால் இராமன் மூலப் பரம் பொருள் என்பதை காட்சிப் பிரமாணத்தால் அனுவதிக்கத் தொடங்குகிறான். இராமன் சிவதனுசை ஒடித்ததைக் கேள்விப்பட்டிருந்தான் ஆதலின், அதை எடுத்துக் கூறுகிறான். சிவதனுசை ஒடிப்பவன் மூலப் பரம் பொருளாகத்தான் இருக்க முடியும் என்பது அனுமானப் பிரமாணமாகும். இனி, அடுத்துத் தன் தந்தையாகிய

https://t.me/Tamil_Library

*வாயுதேவன் கூறிய சுருதிப் பிரமாணத்தையும் எடுத்துக் கூறுகிறான்:*

**"என்னை ஈன்றவன், 'இவ்வுலகு யாவையும் ஈன்றான்
தன்னை ஈன்றவற்கு அடிமை செய்; தவம் உனக்கு அஃதே
உன்னை ஈன்றஎற்கு உறுபதம் உளது' என உரைத்தான்"**

**(நட்பு–76)**

*இவ்வாறு தன் தந்தை கூறியவுடன், பரம் பொருளை அறிந்து கொண்டல்லவா அடிமை செய்ய முடியும்? அவனை எவ்வாறு அறிவது? என்று வினவினானாம். அதற்கு வாயுதேவன், "மகனே! அப்பொருளை அறிய முடியாது. ஆனால் யாரைக் கண்டவுடன் எலும்பு உருகும் அன்பு தோன்றுகிறதோ அவனே பரம்பொருள் என அறிந்து கொள்வாயாக" என்ற கருத்தில் கூறுகிறான்:*

**"துன்பு தோன்றிய பொழுது, உடன் தோன்றுவன்; எவர்க்கும்
முன்பு தோன்றலை அறிதற்கு முடிவுஎன் ? என்றியம்ப
'அன்புசான்று' என உரைத்தனன், ஐய ! என் யாக்கை
என்பு தோன்றல, உருகின எனின்பிறிது எவனோ ?"** **(நட்பு–77)**

*தன் தலைவனாகிய சுக்கிரீவன் மனம் தேறுதல் அடைதற்காக சுருதி, காட்சி, அனுமானம் என்ற மூன்று பிரமாணங்களைக் காட்டிவந்தவன், பரம்பொருள் என்று நிறுவிவிட்டு இறுதியாகத் தன்னுடைய அனுபவத்தையும் எடுத்துக் கூறுகிறான் மாருதி. மேலே கூறப் பெற்றுள்ள மூன்று பிரமாணங்களைக் காட்டிலும் அனுபவம் சிறந்தது என்பது வெளிப்படை. மூன்று பிரமாணங்களும் அறிவின் அடிப்படையில் எழுவன. அனுபவம், உணர்வில் கலந்து வெளிப்படுவது. இத்துணை எடுத்துக் கூறியும் சான்று காட்டியும் ஒருவன் தெளிவடையவில்லை. அந்த ஒருவன்தான் சுக்கிரீவன். எனவேதான்,* **'எத்துணை ஆயிரக்கணக்கான நூல்களைக் கற்றும் பிறர் சொல்லக்**

https://t.me/Tamil_Library

கேட்டும் தெளிவடையாத மனித இனத்தின் பிரதிநிதியாவான் சுக்கிரீவன்' என்று கூறப்பெற்றது.

அறிஞர்கள் எவ்வளவு எடுத்துக் கூறினாலும், எத்துணை நூல்களைக் கற்றாலும் மனத்தில் தெளிவடையாத சிலர், ஏதோ ஒரு நிகழ்ச்சியில் முற்றிலும் மாறிவிடுவதுண்டு. இது உலக அனுபவம். அதேபோல், இராமன் வன்மையில் ஐயங்கொண்டிருந்த சுக்கிரீவன், அவன் மராமரத்தில் அம்பு ஓட்டியதைக் கண்டவுடன் மனம் திருந்திவிட்டான். அறிவின்மிக்க மாருதி கூறியபொழுது ஓரளவு மனம் மாறுபட்டான் சுக்கிரீவன். அடுத்து, இராமனைக் கண்டவுடன் மேலும் சிறிது மாற்றம் பெற்றான். என்றாலும், சராசரி மனிதனுக்குரிய நம்பிக்கை, நம்பிக்கை இன்மை என்ற இரண்டும் சுக்கிரீவனிடம் நிறைந்திருந்திருந்தன. எனவே, ஒவ்வொரு மாற்றமும் நிகழ்ந்து, நம்பிக்கை ஏற்பட்ட விரைவில் அது இழக்கப்பட்டு நம்பிக்கை இன்மை தோன்றிவிடுகிறது. இறுதியாக, ஊசலாடும் மனமும் தெளிந்து, "வையம் நீ; வானும் நீ... நாயினேன் உய்யவந்து உதவினாய்; உலகம் முந்து உதவினாய்" (மராமர-19) என்று பேசுகிறான். இறுதி அடியில், "நாயினேன் உய்யவந்து உதவினாய், உலகம்முந்து உதவினாய்" என்ற பகுதி சிந்திப்பதற்குரியது. தன்னை வாழ வைத்தான் பரம் பொருள் என்பதுடன், 'உலகம் முந்து உதவினாய்' என்று ஏன் கூற வேண்டும்? முந்து என்ற சொல்லுக்கு முன்னர் எனப் பொருள் கொண்டு, முன்னர் இவ்வுலகத்தைப் படைத்தாய் என்றே பலரும் பொருள் கூறுவர். முந்து என்பதற்கு 'முழுவதும்' எனப் பொருள் கொண்டால் இவ்வடியின் தனிச் சிறப்பு விளங்கும். "ஐயனே! என்போன்ற சந்தேகப் பிராணியின் ஐயங்களைப் போக்கி உய்யக் கொண்டாய்! அது மட்டுமா? உலகம் முழுவதும் என் போன்றவர்களே நிறைந்திருத்தலின் நானே உன்னருளுக்குப் பாத்திரனானேன் என்பதால், என்போன்ற

https://t.me/Tamil_Library

பிறரும் தம் ஐயந் தெளிந்து நின்னைச் சரணடைவர். எனக்கு உதவுவதன் மூலம் உலகம் முழுவதற்கும் உதவினாய்'' என்ற பொருளும் இதில் கிடைக்கக் காண்கிறோம்.

சுக்கிரீவன் வாழ்க்கையிலிருந்து நாம் அறிய வேண்டியதும் ஒன்றுண்டு. எதிலும் தெளிவு ஏற்படாமல் சந்தேகத்திலேயே உழலும் சராசரி மனிதன் தனக்கு என்றேனும் உய்கதி உண்டாகுமா என்று கவலைப்பட வேண்டியதில்லை. நமக்கும் உய்கதி உண்டு என்பதை அறிவிக்க, நம் முன்னோடியாக உள்ளான் சூரியன் மைந்தனாகிய சுக்கிரீவன்.

அடுத்து ஒன்றும் அறியப்படல் வேண்டும். அரைகுறை உறுதியுடனும்,- நீங்காத சந்தேகத்துடனும் இருக்கும் நம் போன்றவர்களையும் இறைவன் ஏற்றுக்கொள்வானா? குகனைப் போன்ற 'அன்பே வடிவானவர்'களையும், வீடணனைப் போன்ற 'அறிவே வடிவானவர்'களையும் மட்டுமே ஏற்றுக்கொள்வானா? என்ற ஐயத்திற்கு இனி இடமில்லை. இந்த இரண்டு பேர் போன்றவர்கட்கு என்ன இடத்தைப் பரம்பொருள் தருகிறானோ அதே இடத்தை இடைநிலையில் உள்ள நம் பிரதிநிதிக்கும் அளிக்கிறான் என்பது தெளிவு.

https://t.me/Tamil_Library

# 4

# சூரிய தேர்வலான்

கம்பநாடன் கட்டிய கலைக் கோவிலில் ஒவ்வொரு பகுதியும் தனிச் சிறப்புடையது. பகுதி சிறிதாயினும் பெரிதாயினும் அது பற்றிக் கவலையில்லை. சிறிய பகுதியையும் மிக நுண்ணிய தன் கலைத் திறமையால் அக் கலைஞன் ஒப்புயர்வற்றதாகவே ஆக்கி விட்டான். பெரியதொரு மாளிகையை அமைக்கும் கலைஞன் அதிலுள்ள ஒவ்வொரு தூணையும் எழில்பெறவே அமைக்கிறான் அல்லனோ? அதேபோன்று இலக்கியக் கலைஞனும் காப்பியத்தில் தோன்றும் சிறிய பாத்திரங்களையும் மிகவும் நுணுக்கமாகப் படைக்கிறான். பெரிய பாத்திரத்தின் படைப்பில் எத்துணைக் கவனம் செலுத்துகிறானோ அத்துணைக் கவனம் சிறிய பாத்திரத்தின் படைப்பிலும் செலுத்தப்படுகிறது. பெருங்காப்பிய ஆசிரியர் அனைவர்க்கும் இந்த இலக்கணம் முற்றிலும் பொருந்தும்.

மிகச் சிறியதும் அல்லாமல் மிகப் பெரியதும் அல்லாமல் இடை நிகர்த்தாய் விளங்கும் ஒரு பாத்திரமாவான் சுமந்திரன். சுமந்திரன் என்று கூறியவுடனேயே தசரதனுக்கு மிக நெருங்கியவன் என்பது விளங்கும். தசரதனின் மிக இன்றியமையாத நண்பன். அரசனுடைய தலைமைத் தேர்ப்பாகனும் அவனே;

https://t.me/Tamil_Library

# 4

# சூரிய தேர்வலான்

கம்பநாடன் கட்டிய கலைக் கோவிலில் ஒவ்வொரு பகுதியும் தனிச் சிறப்புடையது. பகுதி சிறிதாயினும் பெரிதாயினும் அது பற்றிக் கவலையில்லை. சிறிய பகுதியையும் மிக நுண்ணிய தன் கலைத் திறமையால் அக் கலைஞன் ஒப்புயர்வற்றதாகவே ஆக்கி விட்டான். பெரியதொரு மாளிகையை அமைக்கும் கலைஞன் அதிலுள்ள ஒவ்வொரு தூணையும் எழில்பெறவே அமைக்கிறான் அல்லனோ? அதேபோன்று இலக்கியக் கலைஞனும் காப்பியத்தில் தோன்றும் சிறிய பாத்திரங்களையும் மிகவும் நுணுக்கமாகப் படைக்கிறான். பெரிய பாத்திரத்தின் படைப்பில் எத்துணைக் கவனம் செலுத்துகிறானோ அத்துணைக் கவனம் சிறிய பாத்திரத்தின் படைப்பிலும் செலுத்தப்படுகிறது. பெருங்காப்பிய ஆசிரியர் அனைவர்க்கும் இந்த இலக்கணம் முற்றிலும் பொருந்தும்.

மிகச் சிறியதும் அல்லாமல் மிகப் பெரியதும் அல்லாமல் இடை நிகர்த்தாய் விளங்கும் ஒரு பாத்திரமாவான் சுமந்திரன். சுமந்திரன் என்று கூறியவுடனேயே தசரதனுக்கு மிக நெருங்கியவன் என்பது விளங்கும். தசரதனின் மிக இன்றியமையாத நண்பன். அரசனுடைய தலைமைத் தேர்ப்பாகனும் அவனே;

https://t.me/Tamil_Library

அமைச்சர் குழுத் தலைவனும் அவனேயாவான். சுமந்திரன் என்ற வடமொழிப் பெயருக்கு அரசனுடைய இயங்குதிணை, நிலைத்திணைப் பொருள்களைக் கவனித்துக் கொள்ளும் கடப்பாடு உடையவன் என்பதே பொருள். எனவே, தேர்வலானும் முதலமைச்சனுமாய் இருந்த சுமந்திரனை அன்பே வடிவான ஒரு பாத்திரமாகவே படைக்கிறான் கவிஞன்.

முதன்முதலாக நாம் சுமந்திரனைச் சந்திப்பது பால காண்டத்திலாகும். அங்கே சுமந்திரனைப் பெயரளவில் தான் காண்கிறோம். தசரதன் மகப்பேறு குறித்து வேள்வி இயற்ற இருசிய சிருங்க முனிவனை அழைக்கப் புறப்பட்டான். அந் நிலையில்

**'.....சுமந்திரனே முதல்வ ராய**
**வன்திறல் அமைச்சர் தொழ'** **(திருவவதாரப் படலம், 57)**

தசரதன் புறப்பட்டான் என்று கேட்கிறோம். இந்த அடியின்மூலம் சுமந்திரன் அமைச்சன் என்பதும் நமக்கு அறிவிக்கப்பட்டது. இனி அடுத்து நாம் அந்த அமைச்சர் பெருமகனைச் சந்திப்பது அயோத்தியா காண்டத்திலாகும். தசரதன் இராமனுக்கு முடிசூட்டுவிழாச் செய்ய மனத்தில் நினைந்து மந்திரக் கிழவரை வருக எனக் கூறி மந்திர ஆலோசனை தொடங்குகிறான்.

அந்த அவையில் தசரதன் திடீரென்று தன் கருத்தை வெளியிடாமல் சுற்றி வளைத்துப் பேசினது நாமறிந்ததே. அவன் யார் மாட்டு அஞ்சினான் என்று உறுதியாகக் கூற இயலாதாயினும் இராமனுடைய முடிசூட்டுக்குத் தடைகள் பல இருக்கும் என்று கருதினான் என்பதும், அதனை மெள்ள அறிந்து கொள்ளும் நோக்குடனேயே மெள்ள மெள்ளத் தன் கருத்தை வெளியிட்டான் என்பதும் நாம் ஊகிக்கலாம். ஆனால், அவன் எதிர்பார்ப்பதற்கு மாறாக ஒருவரும் அவன் கருத்தை எதிர்க்கவில்லை. அம்மட்

https://t.me/Tamil_Library

டோடும் இல்லை; விரும்பியும் ஏற்றுக்கொண்டனர். முதலில் வசிட்ட முனிவன் தன் கருத்தைக் கூறத் தொடங்கித் தசரதன் முடிவு முற்றிலும் சரி என்றே கூறிவிட்டான். அந்த முனிவனை அடுத்துப் பேச வேண்டியவர்கள் அமைச்சராவர். ஆனால், பெருங் கூட்டமாக உள்ள அவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் பேசுதல் என்பதும் இயலாத காரியம். எனவே, அவர்கள் தம்முடைய சார்பில் முதலமைச்சனாகிய சுமந்திரனைப் பேசுமாறு வேண்டினர். அவ் வேண்டுதல் ஏனையோர் வெளியிடு முறையிலும் வெளியிடப்பெறவில்லை. "செவியிற்கண்டு கண்ணிற் கூறல்" (நீதிநெறி விளக்கம், 28) அமைச்சர், அரசர் ஆகிய இருவருக்கும் உரித்தாகும் அல்லவா? "குறிப்பிற் குறிப்பு உணர்வாரை உறுப்பினுள் யாது கொடுத்தும் கொளல்" (குறள்) என்ற வாக்கை மெய்ப்பிக்கும் அமைச்சர், குழுவன்றோ அது. எனவே, அம் மதியமைச்சர்கள் தம்முடைய கண்களின்மூலமே கருத்தை வெளியிட்டனராம். ஏனையோருக்காயின் அவர்கள் முகக் குறிப்பால் அவர்களுடைய எண்ணத்தை அவ்வளவு எளிதாக அறிந்து கொண்டிருக்க வியலாது. ஆனால், "மும்மையும் உணர வல்லோர்" என்று புகழப்பட்ட அவ்வமைச்சர் குழுவின் தலைவனாய சுமந்திரனுக்கா அறிய இயலாது? அமைச்சர் குழுவை ஒருமுறை பார்த்தவுடன் அவர்கள் கருத்தை எளிதாக அறிந்து விட்டான். அவர்கள் உள்ளக் கருத்து "தம் முகத்தால் எழுதி நீட்டியது' போல் (மந்திரப்படலம், 45) இருந்ததாம். எனவே, ஒரு செய்தியை எழுதி முகத்தின் எதிரே நீட்டினால் அது படிப்பதற்கு எவ்வளவு எளிதாக இருக்குமோ அவ்வளவு எளிதாக இருந்ததாம் அவர்களுடைய எண்ணத்தை அறிந்து கொள்வதற்கு. இவ்வாறு கூறுவதால் சுமந்திரனுடைய நுண்மாண் நுழைபுலத்துக்கும் குறிப்பறிகின்ற வன்மைக்கும் ஓர் எல்லை வகுக்கிறான் கவிஞன். இதுவரை சுமந்திரன்

https://t.me/Tamil_Library

செய்ததைப் பலரும் செய்து விட முடியும். ஆனால், இதனை அடுத்த நிலையைச் சமாளிப்பது எளிதானதன்று.

அமைச்சர் அவையின் சார்பாகச் சுமந்திரன் ஏதேனும் கூறித்தான் ஆகவேண்டும். ஆனால், என்ன கூறுவது? தசரதனுடைய முடிவு சிறந்தது என்று கூறிவிடலாமா? வசிட்டன் அவ்வாறுதான் கூறினான். உலகப்பற்றிலிருந்து விடுபட்ட அம் முனிவன் எது வேண்டுமாயினும் கூறலாம். தன் சொற்களால் யார் வருத்தமடைகிறார்கள், யார் இன்புறுவார்கள் என்பவை பற்றி அவன் கவலைப்படமாட்டான். ஆனால், அமைச்சன் தானும் அவ்வாறு கூறிவிட முடியுமா? தசரதன் கூற்றை விரும்பி ஏற்றுக்கொண்டு தன் மகிழ்ச்சியை அறிவித்ததாக வைத்துக்கொள்வோம். அதனால் தசரதன் மகிழ்ச்சி அடைவான் என்பது என்ன உறுதி? தன்னுடைய அமைச்சர்கள் தன்னைக்காட்டிலும் தன்னுடைய மகனை விரும்புகிறார்கள் என்பதை அறிந்து அவன் வருந்தினால் என்ன செய்வது? அவனுக்கு மகன்மேல் உள்ள அன்பு காரணமாக அவனாக முடியை மகனுக்குத் தர விரும்பலாம். ஆனால், அதைப் பிறர் செய்யத் துணிந்தால் அது அவனால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று கூறல் இயலாது. இத்தனை ஆயிரம் ஆண்டுகள் தன்னுடன் இருந்து வாழ்ந்து தன் உப்பைத் தின்று உடலை வளர்த்த இந்த அமைச்சர்கள் சந்தருப்பம் வந்தவுடன் அரசாட்சி மாற்றத்தை விரும்புகிறார்களே என்று கிழ அரசன் நினைத்துவிட்டால் யாது செய்யலாம்? மனித இனம் வியத்தகு தன்மைகள் நிறைந்தது. எனவே, கிழவன் இவ்வாறு நினைந்து அமைச்சர் மேல் வெறுப்புக் கொள்ளவும் கூடுமன்றோ? நுண்ணறிவு மிக்க தான் கூறும் சொற்கள் இவ்வாறு ஓர் எண்ணத்தை மன்னன் மனத்தில் தோற்றி வைக்கவும் கூடும் என்பது அமைச்சனுக்குத் தெரியாதா? சரி! இதனை விடுத்து மன்னன் சொல்லிய கருத்தை அமைச்சர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக்


https://t.me/Tamil_Library

கூறலாம். அவனைப் பிரிந்து தாங்கள் வாழ இயலாது என்று கூடக் கூறிவிடலாம். ஆனால், இவ்வாறு கூறுவதால் மட்டும் மன்னன் மகிழ்ந்துவிடுவான் என்று எவ்வாறு கூற இயலும்? தன்மாட்டு அவர்கள் கொண்டுள்ள அன்பை நினைந்து மன்னன் ஒரு கணம் மகிழ்ச்சி அடையலாம். ஆனால் மறுகணம் அவனுடைய கலக்கம் பெரிதாகிவிடும். "எப்படி இருந்தாலும் நாளை இல்லாவிடினும் என்றாவது ஒரு நாள் இராமன் முடி சூடிக்கொண்டுதானே ஆகவேண்டும்? இதனை இந்த அமைச்சர்கள் அறியார்களா? இராமன் என்றைக்கு அரசனாக ஆனாலும் இவர்கள் தானே அமைச்சர்களாக இருக்கப்போகிறவர்கள்? தங்கள் எதிர்கால மன்னன் பட்டத்துக்கு வருவதையே விரும்பாத இவர்கள் நாளைக்கு அவனுடன் எவ்வாறு ஒத்துழைக்கப் போகிறார்கள்? 'சூழ்வாரைச் சூழ்ந்து ஒழுகலான், மன்னவன் சூழ்வார் கண்ணாகக் கொளல்', என்பது அறநூலின் விதியாயிற்றே! ஒருவன் பட்டத்துக்கு வருவதைக்கூட விரும்பாத அமைச்சர்களை வைத்துக்கொண்டு அம் மன்னவன் யாது செய்ய இயலும்? அருமை மைந்தன் இராமன் நாளை முடிசூடியவுடன் அமைச்சர் குழாத்தின் ஒத்துழையாமை இயக்கத்தையா முதன் முதலில் எதிர்பார்ப்பது?" தசரதனுக்கு வலக்கை போன்று இருந்தவர்கள் இந்த அமைச்சர்கள். அவனே இதோ அவர்களிடம் பேசுகிறான்:

> **"உம்மையான் உடைமையின் உலகம் யாவையும்**
> **செம்மையின் ஓம்பிநல் அறமும் செய்தனன்**
> **இம்மையின் உதவிநல் இசைந டாயநீர்**
> **அம்மையும் உதவுதற்கு அருள வேண்டுமால்"**

**(மந்திரப் படலம், 24)**

"இந்த அமைச்சர் அவை இருந்ததனால்தானே நான் செம்மையாக ஆட்சி செய்து புகழை ஈட்ட முடிந்தது? இதே அமைச்சர் குழாம் மகனுக்கும் பேருதவியாக இருந்து

https://t.me/Tamil_Library

புகழைத் தேடித் தரும் என்றல்லவா நான் கருதினேன்? என் கருத்துக்கு எதிராக இவர்கள் இராமன் பட்டத்துக்கு வருவதைக் கூட விரும்பவில்லையே! முதியவனுடைய ஆட்சியில் பழகிய இவர்கள் இளமையின் ஆட்சியை விரும்பவில்லையா? இந்த மாற்றத்தை அனுசரித்து நடவாத இவர்கள் எவ்வாறு அமைச்சராக இருக்கத் தகுதியுடையவர்கள்" என்று தசரதன் நினைத்துவிட்டால்?

இவ்வாறு தசரதன் நினைக்கவும் கூடும். இராமன் வருவதைத் தாங்கள் விரும்பவில்லை என்று அமைச்சர் கூறிவிட்டால் தருமசங்கடம் என்று கூறும் நிலையில் இருக்கிறான் சுமந்திரன். தசரதனுடைய கருத்தை ஏற்றுக்கொண்டு பேசினாலும் மறுத்துப் பேசினாலும் அரசன் மனம் உளையுமே என்று கவலைப்பட வேண்டிய சந்தர்ப்பம்.

அரசியல் முறையில் ஏற்படும் இந்த அல்லல் ஒருபுறம் இருக்க உண்மையாகவும் சுமந்திரன் வருந்துகிறான். தசரதனுடைய உற்ற நண்பனாகவும் தேர்வலானாகவும் பல்லாண்டுகள் வாழ்ந்து விட்ட சுமந்திரனுக்குத் தசரதனுடைய பிரிவு பெருவருத்தத்தை உண்டாக்குகிறது. இராமன் மேல் அவன் கொண்டுள்ள காதலும் அளவற்றது. சுமந்திரன் தூக்கி வளர்த்த பிள்ளை இராமன். எசமானனுடைய மூப்புக் காலத்தில் பிறந்தவன் என்பதால் மட்டும் இராமனிடம் சுமந்திரன் அன்பு செலுத்தவில்லை. இராமன் எத்தகையவன் என்பதையும் பிறர் எவ்வாறு அவனை நினைக்கின்றார்கள் என்பதையும் இதோ வசிட்டன் கூறுகின்றான்:

**"கண்ணினும் நல்லன் கற்றவர் கற்றிலா தவரும்**
**உண்ணு நீரினும் உயிரினும் அவனையே உகப்பார்"**
**"மனிதர் வானவர் மற்றுளார் அறங்கள்காத்து அளிப்பார்**
**இனியிம் மன்னுயிர்க்கு இராமன் சிறந்தவர் இல்லை"**

**(மந்திரப் படலம், 40, 41)**

https://t.me/Tamil_Library

வசிட்டன் இராமனைப் பற்றிக் கூறிய இச்சொற்களால் சுட்டப்படுவது அம் முனிவனுடைய கருத்து மட்டுமன்று. அந்த மந்திர அவையில் கூடிய அமைச்சர் குழுவின் கருத்தும் அதுவே. ஏன்? நாட்டில் வாழும் மாந்தர்கள் அனைவருடைய கருத்தும் அதுவேயாம். எனவே, இத்தகைய மைந்தனிடத்துச் சுமந்திரன் தீராக் காதல் கொண்டிருந்ததில் வியப்பின்று.

எனவே, தசரதனிடம் கொண்ட அன்பு, இராமனிடம் கொண்ட காதல் இரண்டின் இடைப்பட்டு ஒரு முடிவுக்கு வர முடியாமல் சுமந்திரன் "தேய்புரிப் பழங்கயிறு" (நற்றிணை, 284) போல அல்லல் உறுகின்றான் என்றாலும் அமைச்சுத் தொழில் பூண்ட அவன் தன் விருப்பு வெறுப்புகட்கு இடம் தந்து கடமையை மறந்துவிட முடியுமா? இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆவை ஒத்து (மந்திரப் படலம், 32) அவன் நிலைமை இருப்பினும், தன் விருப்பத்தை ஒதுக்கிவிட்டு இப்பொழுது மன்னனிடம் பேசுகிறான் சுமந்திரன்: "ஐயனே! உலகம் புகழும் இராமனுக்கு முடிசூட்டு நடைபெறப் போகிறது என்பதனால் ஏற்படும் பெரு மகிழ்ச்சியை நீ எங்களைத் துறக்க முடிவு செய்துவிட்டாய் என்ற சொல் போக்கடித்து விடுகிறது. உன் குலத்து முன்னோர்கள் மறவாமல் செய்த செயலை நீயும் மேற்கொண்டபொழுது யாம் அதனைத் தடுத்தல் வழக்கும் அன்று; அறத்தைக் காட்டிலும் கொடியது ஒன்றும் இல்லை" என்னும் கருத்துப்பட,

**"உறத்தகும் அரசு இராமற்கு என்று உவக்கின்ற மனத்தைத்**
**துறத்தி நீயெனும் சொல்சுடும் உன்குலத் தொல்லோர்**
**மறத்தல் செய்கிலாத் தருமத்தை மறப்பது வழக்கன்று**
**அறத்தின் ஊங்குஇனிக் கொடிதுஎனல் ஆவதுஒன்று யாதே?'**

**(மந்திரப் படலம், 46)**

https://t.me/Tamil_Library

என்று அவன் கூறியதில் ஈற்றடியைக் கவனிக்க வேண்டும். அறத்தைக் காட்டிலும் கொடியது ஒன்றும் இல்லையாம். தசரதன் 'முடிதுறந்து காடு சென்று தவஞ் செய்யப் போகிறேன்' என்றால் அது மனிதனுக்குரிய கடமைகளுள் ஒன்றாகும். எனவே, அவ்வாறு செய்ய வேண்டா என்று தடுப்பது அவனை அறஞ் செய்யவேண்டா என்று தடுப்பது போலாகும். அரசனை அறவழியில் செலுத்த வேண்டிய கடப்பாடு உடைய அமைச்சன், தானே அறவழியில் செல்லத் துணிந்த அரசனைத் தடைசெய்யலாமா? அமைச்சன் என்ற முறையில், தசரதன் செய்யத் துணிந்ததை முறைதான் என்று பாராட்ட விரும்பினான் சுமந்திரன். ஆனால், சுமந்திரன் என்ற மனிதன், தசரதனுடைய நண்பன். அவனுடைய பிரிவை நினைத்துக் கலங்குகிறான். அறத்தின்மேல் சுமந்திரன் கொண்ட பற்றே அவனுக்குத் தீங்கை விளைவிக்கிறது. எனவே, அவன் அறத்தின்மேல் பழியைச் சுமத்துகிறான். என்றாலும் இப்பாடல் மூலம் சுமந்திரன் தன் முடிவை விளக்கமாக வெளியிடவில்லை. எனவே, அடுத்த பாடலில் தெளிவாக்குகிறான்.

"அரசே! யானைப் படையை உடைய மன்னர்களும் ஏனையோர்களும் மந்திரக்கிழவர்களும் முனிவர்களும் உள்ளம் மகிழும்படியாக நின் முதற் புதல்வனுக்கு முடிசூட்டிவிட்டுப் பிறகு மேற்கொள்ளத் தக்க செயல்களைக் கவனிக்கலாம்" என்ற கருத்துப்பட,

**"புரைசை மால்கரி நிருபர்க்கும் புரத்து(உ)றை வோர்க்கும்**
**உரைசெய் மந்திரக் கிழவர்க்கும் முனிவர்க்கும் உள்ளம்**
**முரைசம் ஆர்ப்பநின் முதல்மணிப் புதல்வனை முறையால்**
**அரைசன் ஆக்கிப்பின் அப்புறத்து அடுத்தது புரிவாய்"**

**(மந்திரப் படலம், 47)**

என்று கூறுகிறான். இந்தப் பாடலின் இறுதி அடியும் சுமந்திரன் மன நிலையை நமக்கு விளக்குகிறது. தசரதன்

https://t.me/Tamil_Library

*இரண்டு செயல்களைச் செய்யப் போவதாய் அறிவித்தான் அல்லனோ? அவன் கூறிய இரண்டுள் முதலாவது இராமனுக்கு அரசை நல்குதல்; இரண்டாவது தான் துறவு பூண்டு காடு சென்று தவமியற்றுதல். இவற்றை மிகத் தெளிவாக அம் மன்னவன்,*

**"ஆதலால் இராமனுக்கு அரசை நல்கிஇப்**
**பேதைமைத் தாய்வரும் பிறப்பை நீக்குவான்**
**மாதவம் தொடங்கிய வனத்தை நண்ணுவேன்**
**யாதுநும் கருத்துஎன இனிது கூறினான்"** (மந்திரப் படலம், 31)

*என்ற பாடல்மூலம் வெளியிடுகிறான். எனவே, இந்த இரண்டு கருத்துகள் பற்றியும் தன் முடிவைச் சுமந்திரன் கூறவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டுவிட்டது. முதலாவதாக உள்ள கருத்தை ஏற்றுக்கொண்டு விட்டதாக விரிவாகவே விடை அளித்துவிட்டான்.*

*இரண்டாவதாகத் தசரதன் கூறியது காடுசென்று தவஞ் செய்யவேண்டும் என்பது. இக்கூற்றுச் சுமந்திரனை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது என்றே கூற வேண்டும். வயது முதிர்ந்த இரு நண்பரிடையே இம் மன நிலையைக் காணலாம். இரண்டு கிழவர்கள் ஓய்வு பெற்றவர்கள், நீண்ட நாட்களாய் நட்புடன் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவர்களுள் ஒருவர்க்கு நோய் கண்டு விட்டால் மற்றவர் படும் பாட்டைச் சொல்லித் தீராது. நண்பனுக்கு நோய் வந்து விட்ட வருத்தம் ஒருபுறம்; வயது முதிர்ந்து விட்டபடியால் தனக்கும் அத்தகைய நோய் வரலாம் என்று நினைக்கும்பொழுதே தோன்றும் கவலை மற்றொரு புறம். அதேபோலத் தசரதன், "கிழவனாகி விட்டேன்; வனம் புகுந்து தவம் இயற்றவேண்டும்", என்று கூறும்பொழுதே அமைச்சன் சுமந்திரனுக்குப் பெரியதோர் அதிர்ச்சி ஏற்படுகிறது. நாள்தோறும் அரசனைக் கண்டு பழகினவனாகலின் அவனுடைய கிழத்தனத்தைக்*

https://t.me/Tamil_Library

கவனிக்கவே இல்லை சுமந்திரன். ஆனால், இன்று அரசனே தனக்கு வயதாகிவிட்டது, தான் தவஞ் செய்யச் செல்லவேண்டும் என்று கூறும் பொழுதுதான் சுமந்திரன் இத்தனை நாட்களும் தான் கவனியாமல் விட்டுவிட்டதொன்றைக் கவனிக்கிறான். தசரதனைப் பிரிந்து தனி வாழ்வு வாழ நேரிடும் என்பதை அந்த அமைச்சன் கனவிலும் கருதியது இல்லை. ஆனால், சற்றும் எதிர்பாராத விதமாக இன்று அந்த நிலை வந்துவிட்டது. அதுவும் அறத்தின் வழியாகும் என்று கண்ட பின்னர்த் தனக்கு ஏற்படும் பிரிவுத் துய்ரைப் பெரிதெனக் கருதி அரசனைத் தடைசெய்வதும் தவறு என்பதை உணருகிறான். அமைச்சன். அறுபதினாயிரம் ஆண்டுகள் சுகபோக வாழ்வு வாழ்ந்த மன்னன் காட்டில் சென்று காய்கனிகளை உண்டு வாழப் போகிறான் என்று நினைக்கவும் முடியவில்லை அந்த நட்புரிமை பூண்ட சுமந்திரனுக்கு. எனவே தசரதன் காடு சென்று வாழ்வது அறத்தின்பாலதாயினும் சுமந்திரனைப் பொறுத்தவரை கொடுமையானது தான். ஆதலால் அந்தக் கொடுமையான செயலை, அமங்கலமான செயலைத் தன் வாயாற்கூறவும் அஞ்சுகிறார் அமைச்சர் பெருந்தகை. இராமனை அரசனாக்குக என்று மூன்று அடிகளில் விவரமாகக் கூறிய அமைச்சன் நான்காம் அடியில் தன் வாயால் கூற விரும்பாத ஒன்றைக் குறிப்பாகக் கூறுகிறான். 'நீ விரும்பினால் காடு செல்வாயாக' என்பது மங்கலமற்ற மொழிகளாகப் படுகிறமையின், 'அப்புறத்து அடுத்தது புரிவாய்' (மந்.ப.47) என்று கூறுவது நோக்கற்குரியது. 'முடிசூட்டல் நிகழ்ந்த பின் செய்யப்பட வேண்டியதை நீ செய்வாயாக' என்பதே இதன் பொருள். இவ்வாறு சுமந்திரன் கூறுவதனால் தசரதன்மாட்டு அவன் கொண்டிருந்த அளவிலா ஆர்வம் நன்கு விளங்குகிறது.

இந்நிலையில் தசரதன் இராமனைப் பற்றிக் கைகேயியிடம் கூறிய சொற்கள் நினைவு கூர்தற்குரியன.

https://t.me/Tamil_Library

கையேயி இரண்டு வரங்களில் ஒன்றினால் பரதனுக்கு முடியைப் பெற்றுக்கொண்டு ஏனையது ஒன்றால் இராமனைக் காட்டுக்கனுப்ப வழி தேடி விட்டாள். தசரதன் வேறு வழியின்றி அவளிடம் வாதாடிப் பார்த்து இறுதியாக இரண்டு வரங்களில் ஒன்றைப் பெற்றுக் கொண்டு மற்றொன்றை விட்டுக் கொடுக்குமாறு வேண்டுகிறான்.

**"கண்ணே வேண்டும் என்னினும் ஈயக் கடவேன்என்**
**உள்நேர் ஆவிவேண்டினும் இன்றே உனதுஅன்றோ**
**பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்**
**மண்ணே கொள்நீ மற்றையது ஒன்று மறஎன்றான்"**

**(கைகேயி சூழ்வினைப் படலம், 28)**

இப்பாடலின் நான்காம் அடியில் 'மண்ணே கொள் நீ' என்பதில் ஒரு வரம் விரிவாகக் கூறப்படுகிறது. ஆனால், இரண்டாவது வரத்தைத் தன் வாயாற்கூடத் தசரதன் கூற விரும்பவில்லையாகலின் 'மற்றையது' என்று மட்டும் குறிப்பிட்டு நிறுத்துகிறான். தசரதனுக்கு இராமனையலாது உயிர் வேறு இல்லை. அத்தகைய உயிரனைய மகனைக் காட்டுக்கு அனுப்புகிறேன் என்று தசரதன் வாய் கூசாமல் கூற முற்படுவானா? ஒரு நாளும் இத்தகைய அமங்கல வழக்கைக் கூற அவன் முற்படமாட்டான். ஆனாலும் கூறித் தொலைக்கவேண்டிய கடப்பாடு ஏற்படும் பொழுது எவ்வளவு திறமையுடன் 'மற்றையது' என்றுமட்டும் கூறி நிறுத்துகிறான்! பெருங்காப்பியங்கள் பாடும் கவிஞர்கள் அனைவருமே சந்தர்ப்பம் நேரும்பொழுது இவ்வாறு அமங்கல வழக்கை நீக்கி மங்கல வழக்காலேயே பேசுவார்கள்.

பெரிய புராணம் பாடிய சேக்கிழாரும் இத்தகைய மங்கல வழக்குப் பெய்து பாடுவதை அந்நூல் கற்றார் அறிவர். ஏனாதி நாதரை அவருடைய பகைவன் வஞ்சனையால் அழிக்கக் கருதி திருநீற்றை நெற்றியில்

https://t.me/Tamil_Library

அணிந்துகொண்டு அதனைக் கேடயத்தால் மறைத்துக் கொண்டு எதிரே வந்து ஏனாதி தன்னை அணுகியவுடன் மூடியிருந்த கேடயத்தை எடுத்தான். பகைவனே ஆயினும் அவன் நெற்றியில் நீறு இலங்கக் கண்ட ஏனாதி அவனைக் கொல்லாமல் அவனே தன்னைக் கொல்லட்டும் என்று வாளா இருந்துவிட்டார். வந்த பகைவன் அவரைக் கொன்று விட்டான். ஆனால், ஏனாதி நாதரை வஞ்சகத்தால் கொன்றான் என்று கூற விரும்பாத ஆசிரியர் மங்கலமாக அதனைக் கூறுகிறார்.

**"அந்நின்ற தொண்டர் திருவுள்ளம் யார்அறிவர்**
**முன்நின்ற பாதகனும் தன்கருத்தை முற்றுவித்தான்"**

**(ஏனாதிநாத நாயனார் புராணம், 40)**

தன் கருத்தை அவன் முடித்தான் என்று கூறுவதால் ஆசிரியர் தம் வாயாற் கூற விரும்பாத ஒன்றை மறைமுகமாகக் கூறிவிடுகிறார். மேலும் மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றிலும் இத்தகையதொரு சந்தர்ப்பம் வருகிறது. முத்திநாதன் மெய்ப் பொருளை வஞ்சகத்தால் கொல்ல நினைத்தான். இவ்வாறு நினைத்தான் என்று கூறும்பொழுதும் ஆசிரியர் வெளிப்படையாகக் கூறாமல்,

**"செப்பரும் நிலைமை எண்ணித்**
**திருக்கோவ லூரில் சேர்ந்தான்"**

**(மெய்ப்பொருள் நாயனார் புராணம், 6)**

என்றே கூறுகிறார். திருக்கோவலூரை அடைந்த முத்திநாதன் மெய்ப்பொருளை வஞ்சனையாற் 'குத்தி விட்டான்'. இந்த நிலையிலும் குத்திவிட்டான் என்று தம் வாயாற் கூறத் துணியாத ஆசிரியர்,

**"பத்திரம் வாங்கித் தான்முன்**
**நினைந்தஅப் பரிசே செய்ய"**

**(மெய்ப்பொருள் நாயனார் புராணம், 15)**

https://t.me/Tamil_Library

என்றுதான் கூறுகிறார். எனவே, பெருங்காப்பியங்களில் போற்றப்படும் இந்த மங்கல வழக்கு (Euphemism) கம்பநாடனாலும் முழுதும் போற்றி ஆளப்படுவதைக் காண்கிறோம்.

சுமந்திரனுடைய சொற்களைக் கேட்ட தசரதன் "நன்று சொல்லினை" என்று அவனிடம் தன் மகிழ்ச்சியைக் கூறிவிட்டு அவனையே பார்த்து "நீயே சென்று இராமனை அழைத்து வருக," என்றும் கட்டளை இடுகிறான். தசரதன் கட்டளையைத் தலைமேற்கொண்டு இராமன் இல்லம் நோக்கித் தேரைச் செலுத்துகிறான் சுமந்திரன். அவ்வாறு செல்லும் சுமந்திரனைக் கவிஞன், அவன் (தசரதன்) "மனம் அனையான்" (மந்திரப் படலம், 51) என்று வருணிக்கிறான். தசரதனும் சுமந்திரனும் நண்பர்கள் என்னில் எத்தகைய நண்பர்கள்? பிசிராந்தையும் கோப்பெருஞ் சோழனும் போன்ற உள்ளம் ஒன்றிய நண்பர்களாம். தசரதன் எது நினைத்தாலும் அதுவே சுமந்திரனுடைய நினைவாகவும் இருக்கும் என்றுகூறத் தேவை இல்லை. இவ்வாறு இராகவன் மனைக்குச் செல்லும் நிலையிலும் சுமந்திரனுடைய மனத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி நிறைந்து இருந்ததாம். "தலங்கள் யாவையும் பெற்றனன் தான் எனத் தளிர்ப்பான்" (மந்.ப. 51) — இவ்வுலகங்கள் அனைத்தையும் தனக்கே தசரதன் அளித்தால் எத்தகைய மகிழ்ச்சி கொள்ளக்கூடுமோ அத்தகைய மகிழ்ச்சி கொண்டானாம்.

இராமனிடம் மகன்மேல் கொள்வது போன்ற கழிபெருங் காதலுடன் பக்தியும் கொண்டிருந்தான் சுமந்திரன். எனவே, நேரே இராமனுடைய அரண்மனை சென்ற அவன், அழகனும் அழகியும் அமர்ந்திருக்கும் அக்காட்சியைக் கண்குளிரக் கண்டு மகிழ்ந்தானாம். அழகுடையவர்களைக் கண்கள் களிப்புறக் காணலாம்.

https://t.me/Tamil_Library

*ஆனால், அவர்கள் மாட்டு உண்மை அன்பு இருந்தால் தான் உள்ளம் களிப்புறக் காணமுடியும். இதோ சுமந்திரன் கண்ட நிலையைக் கவிஞன் வருணிக்கிறான்:*

"பெண்ணின் இன் அமுது அன்னவள் தன்னொடும்பிரியா
வண்ண வெஞ்சிலைக் குரிசிலும் மருங்குஇனிது இருப்ப
அண்ணல் ஆண்டுஇருந் தான்அழகு அருநறவு என்னக்
கண்ணும் உள்ளமும் வண்டுஎனக் களிப்புறக் கண்டான்"

(மந்திரப் படலம், 50)

*இராமன்மாட்டுச் சுமந்திரன் கொண்ட தாயன்பு இன்னும் விரிவாகப் பின்னர்ப் பேசப்படுகிறது.*

https://t.me/Tamil_Library

5

# காதலும் கடமையும்

சுமந்திரன் இராமன்மாட்டுக் கொண்டிருந்த அன்பு ஒரு தந்தை மைந்தனிடம் கொண்டிருந்த அன்பை ஒத்ததாகும். தசரதன் இராமன்மேல் கொண்டிருந்த காதலுக்குச் சோதனை வந்தது போலவே சுமந்திரனுடைய அன்புக்கும் சோதனை வந்து விட்டது. இருவரும் கடமையை நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருப்பவர்கள். ஒருவன் மன்னவன், மற்றவன் அவனுடைய அமைச்சன் மன்னவனும் அமைச்சனும் கடமையை மறந்து அன்பின் வழிச் சென்றுவிட்டால் இவ்வுலகம் என்ன ஆவது? தனிப்பட்ட தங்களுடைய அன்பை மறந்து கடமையை நிறைவேற்றக் கூடியவர்கள் மட்டுமே அரசராகவும் அமைச்சராகவும் இருக்கத் தகுதி வாய்ந்தவர்கள். எனினும் அரசனும் அமைச்சனும் மனிதர்கள்தாம். அவர்கட்கும் விருப்பு வெறுப்புகளும் மகிழ்ச்சி துயரங்களும் உண்டு. ஆனால், இந்த விருப்பு வெறுப்புகள் அவர்களுடைய கடமையில் தலையிடுதல் கூடாது. துயரம் வந்த பொழுது அவர்களும் அது தாளாமல் கண்ணீர் விட்டுக் கதற உரிமை உண்டு. துயரத்தைப் போக்கிக் கொள்ள மற்றவர்போல் முயற்சி செய்யவும் உரிமை உண்டு. ஆனால், துயர் போக்கும் முயற்சியில் கடமைக்கு ஊறு நேர்வதாயின் அவர்கள் துயர் போக்கும்

https://t.me/Tamil_Library

முயற்சியில் ஈடுபடக் கூடாது. தனிமனிதன் வேண்டுமானால் இவ்வாறு கடமையை மறந்தும் துயர் துடைக்கும் முயற்சியில் ஈடுபடலாம். அது தவறேயாயினும் மன்னிக்கக்கூடிய தவறாகும். ஆனால், காவற் சாகாடு உகைக்கும் மன்னவர்க்கும் அமைச்சர்க்கும் இப் பொதுச் சட்டம் செல்லுபடி ஆவதில்லை. அவர்கள் தாங்கும் பொறுப்புக் காரணமாக அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைப் பொறுத்துக் கொண்டுதான் கடமையை நிறைவேற்ற வேண்டும். சுமந்திரனாகிய அமைச்சனும் தன் தலைவனாகிய தசரதனைப் போலவே துயரைப் பொறுத்துக் கொண்டு கடமையை நிறைவேற்ற முற்படுகிறான்.

இறைவனின் சோதனை பல சந்தர்ப்பங்களில் மிக வியக்கத் தகுந்த முறையில் வந்து சேரும். மனைவியுடனும் தம்பியுடனும் மிக இன்பமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த இராமனை முதலிற் சென்று கண்டவன் சுமந்திரனாவான். தசரதன் ஏவலால் இராமனை மந்திர சபைக்கு அழைத்துவரச் சென்ற நிலை அது. அங்கே அவர்கள் இருவரும் இருந்த நிலையைக் கண்ணும் மனமும் களிதுளும்பக் கண்டு பேரின்ப முற்றவனும் சுமந்திரனே. இராமனை நோக்கி, "ஐயனே! மன்னவன் ஆணை நின்னை வருமாறு பணித்துளது" என்று கூறினவனும் சுமந்திரனே. மன்னவன் ஏவல் என்ற சொற்களைக் கேட்டவுடன் மறுபேச்சு இன்றி உடனே புறப்பட்டு விட்டான் தந்தை சொல் காக்கும் அத் தனயன். இராமன் ஏறிய தேரைச் சுமந்திரனே செலுத்தினான். இராமன் தெருவில் பொன் தேரில் ஏறி வரும் காட்சியைக் காணப் பெண்களும் ஆண்களும் சூழ்ந்து நிற்கின்றனர்.

**"வாள்அ ரத்தவேல் வண்டொடு கெண்டைகள் மறுகச்**
**சாள ரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்"** (மந்திரப் படலம், 56)

https://t.me/Tamil_Library

என்று கவிஞன் கூறும்பொழுது அயோத்தி மாநகரத்து மாதர்கள் அந்த அழகனைக் காணச் சாளரந்தொறும் எட்டிப் பார்த்து நின்ற காட்சி நம் மனக்கண் முன்னர் வருகிறது. உலகெலாம் புகழும் இராமனைத் தன் தேரில் ஏற்றிக்கொண்டு வருவதால் சுமந்திரனுக்குத்தான் எத்தனை இன்பமும் செருக்கும் இருந்திருக்கும்? முடிசூட்டிக் கொள்ளப் போகும் மன்னனை—தன் மகன் போல் அன்பு பாராட்டும் குமரனை—தன் தேரில் இந்த நல்ல செய்தியை அறிவித்தற்காக ஏற்றிச் செல்லும் எந்தத் தேர்வலான்தான் மகிழாமல் இருக்க முடியும். எனவே, இன்று மகிழ்ச்சிக் கடலில் திளைத்த வண்ணம் தேரை ஓட்டிச் செல்லும் சுமந்திரன், நாளை இதே நேரத்தில் இதே இராமனை இதே தேரில் ஏற்றிக் கொண்டு காட்டுக்கு ஓட்டிச் செல்லப் போகிறோம் என்று நினைத்துத்தான் இருப்பானா? யாரேனும் ஒருவர் அவன் எதிரில் தோன்றி 'இப்பொழுது பெருமகிழ்வுடன் நடைபெறும் இத் தேர் ஓட்டம் இன்னுஞ் சிலபொழுதில் பெருந்துயருடன் காடுநோக்கி நடைபெறப் போகிறது' என்று கூறி இருப்பின் சுமந்திரன் அக்கூற்றை நம்பியிருப்பானா? அவ்வாறு கூறியவனைச் சும்மா விட்டிருப்பானா? ஒருக்காலும் விட்டிருக்கமாட்டான். என்றாலும் என்ன? நினைக்காதது நடப்பதுதானே இவ்வுலக இயற்கை?

மறுநாள் பொழுது விடிந்ததும், மயங்கிக் கிடக்கும் மன்னவன் பெயரால் ஆணை பிறக்கிறது, சுமந்திரனுக்கு! கைகேயியே அந்த ஆணையையும் இட்டிருக்கலாம். என்ன வியப்பான ஆணை? எந்த இராமனை முதல் நாள் எல்லையற்ற மகிழ்ச்சியுடன் தேரில் ஏற்றிவந்தானோ, அந்த இராமனைத்தான் இப்பொழுதும் ஏற்றிச்செல்லவேண்டும். அம்மட்டா? இல்லை, இராமனை மணந்த செயலுக்காகச் சீதையையும், அவனை நிழல்போல் பிரியாது நின்ற செயலுக்காக இலக்குவனையும் அல்லவா சேர்த்து

https://t.me/Tamil_Library

அழைத்துச் செல்லவேண்டும்? என்ன கொடுமையான ஆணை? அயோத்தியிலேயே வேறு தேர் வல்லான் அகப்படவில்லையா? முதல் அமைச்சன்தானா இந்தக் கொடிய செயலை நிறைவேற்ற அகப்பட்டான்! ஆம்! அன்புக்கும் கடமைக்கும் போராட்டம்! எது வெற்றி பெறப் போகிறது? ஏன்? ஐயம் என்ன? கடமைதான்! அறுபதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த கிழவன் தானாகக் காடு போகிறேன் என்று கூறினான். ஆனால் சுமந்திரன் அந்தச் சொற்களைத் தன் வாயாற்கூடக் கூறக்கூடாது என்று அஞ்சி மங்கலமான, மறைமுகமான சொற்களால் பேசினான் அல்லனோ? அதே சுமந்திரனுக்கு-கிழவன் காடு செல்வதை வாயாலும் கூற அஞ்சிய சுமந்திரனுக்கு— இளங்காளைகள் இருவரையும், பேதைப் பெண் ஒருத்தியையும், தானே நேரே கொண்டு சென்று காட்டில் விடவேண்டிய தண்டனை வந்துவிட்டது; என்ன செய்வான்? அன்பை அவித்துக் கடமைமேல் எழவேண்டிய நிலைமையில் சுமந்திரன் முதல் அமைச்சன் என்பதற்கு ஏற்பக் கடமையைச் செய்தே விட்டான்.

இராம இலக்குவர்கள் காட்டிற்குப் புறப்பட்டவுடன் அவர்களுடன் தொடர்ந்து ஒரு மக்கட் கடலும் உடன் சென்றது. இரவில் ஒரு சோலையில் இராமன் தங்கவே அக்கூட்டமும் உடன் தங்கி விட்டது. அவர்களை எவ்வாறேனும் திருப்பி அனுப்பிவிட எண்ணிய இராமன் சூழ்ச்சி ஒன்று செய்தான். சுமந்திரனை இரவோடு இரவாகத் தேரை ஊர் நோக்கிச் செலுத்தச் செய்துவிட்டுத் தானும் அந்தக் காரிருளில் காடுநோக்கிப் புறப்பட்டு விட்டால் என்ன? விடிந்ததும் மக்கட்கூட்டம் இராமனைக் காணாமல் தவிக்கும். ஆனால், தேர்த் தடம் ஊர்நோக்கிச் செல்லுவதால் இராமனும் மீண்டுவிட்டான் என்று கருதி அக்கூட்டமும் அயோத்தி மீண்டுவிடும். இவ்வாறு கருதிய இராமன் அந்தச் சோலையில் சுமந்திரனை ஒரு தனி

https://t.me/Tamil_Library

இடத்தில் அழைத்துத் தன் கருத்தை வெளியிட்டான். இராமனுடைய இந்தச் சூழ்ச்சி முறையானது என்பதைச் சுமந்திரன் நன்கு அறிந்து கொண்டான் எனினும் தான் அந்த இரவு நேரத்தில் அருமை மைந்தனை விட்டுவிட்டு மீள வேண்டும் என்று நினைத்தவுடன் அவன் இதுவரை அடக்கி வைத்திருந்த துயரம் ஆறாகப் பெருகிவிட்டது.

எல்லையற்ற துயரக்கடலில் ஆழ்ந்துவிட்ட சுமந்திரன் தன்னுடைய வெறுக்கத் தகுந்த நிலையை உன்னி நைகிறான். இராமனைக் காடு செல்க என்று கட்டளையிட்ட கைகேயியையும் அக்கட்டளையைச் செயலில் நிறைவேற்றி வைத்த தன்னையும் ஒப்பிட்டுப் பார்க்கிறான். ஒரு கொடுமையான செயலைக் கட்டளை இட்டுவிடுவது எவ்வளவு எளிதானது? உயர்ந்த இடத்தில் இருந்து கொண்டு, "உனக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிறேன்" என்று ஆணையிட்டு விடலாம். ஆனால், அதனைச் செயலளவில் நிறைவேற்றுபவன் எத்தனை மனவேதனை அடைகிறான்! தூக்கில் இடுபவனுக்கும் இடப்படுப வனுக்கும் எவ்விதமான பகைமையும் இல்லை. ஆனால், இடப்படுபவன் இடுபவன் மேல் சினம் கொள்ளக் காரணந்தான் உண்டா? அதுவும் இல்லை. இடுபவன் எதற்காக இத்தண்டனையைத் தருகின்றோம் என்றுகூட அறியாமல்தானே அதை நிறைவேற்றுகின்றான்? அவன் மனத்தில் கருணை நிரம்பி இருக்கலாம். என்றாலும் என்ன? இட்ட கட்டளையைச் செயலளவில் நிறைவேற்றி வைக்கும் அவனைக் கண்டு விரும்புவார் யாருளர்? அவன்மேல் யாதொரு குற்றமும் இல்லை என்று உலகம் அவனைப் புகழ்கிறதா? இல்லையே! அதே போலத்தான் சுமந்திர னுடைய நிலையும் இருக்கிறது. கட்டளை இட்ட கைகேயி இந்தக் கொடிய காட்சியைப் பார்க்கும் தீமை புரியவில்லையே? அதனைக் கண்டும் உயிரை வைத்திருக்கும் கொடுமை சுமந்திரனையன்றோ சென்று

https://t.me/Tamil_Library

சேர்கிறது? 'ஐயனே! உன்னை இக்காட்டிலே விட்டுவிட்டு வெறும் தேரையும் என் உயிரையும் கொண்டு சென்று அயோத்தியை அடைவேனாயின் இக்கொடிய கட்டளையைப் பிறப்பித்த அத் தாயினும், அவனைத் தூண்டிய விதியினும், கொடுமையில் யானே மேம்பட்டவன்' என்ற கருத்துப்பட,

**"செவ்விய குரிசில் கூறத் தேர்வலான் உணர்த்து வான்அவ்
வெவ்விய தாயின் தீய விதியினின் மேலன் போலாம்"**

**(தைலமாட்டு படலம், 20)**

என்று கூறி வருந்துகிறான். கைகேயியைவிடத் தான் கொடியவனாக ஆயின நிலைமையை நினைக்கும் பொழுது சுமந்திரன் பாகாய் உருகுகிறான். தீமையை நினைந்து செய்த கைகேயி எங்கே? நலம் புரியவேண்டும் என்று நினைத்திருந்தும் சந்தர்ப்பங் காரணமாக இக்கொடிய செயலைச் செய்ய நேரிட்ட தான் எங்கே? இதனை நினையுந்தோறும் அவன் மனம் எல்லையற்ற துயரக் கடலில் தவிக்கிறது.

இத்துயரம் நீங்குவதன்முன் மற்றொரு துயரம் அவனைப் பிடித்துக் கொள்கிறது. மீண்டு சென்றவுடன் தன் வரவை எதிர்நோக்கி உயிரை வைத்துக் கொண்டிருக்கும் மன்னனுக்கு யாது விடை கூறுவது?

"பூங்கொடி போன்ற மிதிலைப் பொன்னையும், தம்பியையும், இராமனையும் கானகத்தில் செலுத்தினேன் என்று கூறட்டுமா? உடன் அவர்களையும் அழைத்து வந்துவிட்டேன் என்று கூறட்டுமா? மெல்லிய பாதங்களை உடையவர்களை வலிய பரற்கற்கள் நிறைந்த காட்டில் நடக்குமாறு ஏவிவிட்டு யான் மட்டும் இனிய தேரில் ஏறி நலத்துடன் வந்துற்றேன் என்று கூறட்டுமா?'' என்று அரற்றுகிறான் அத்தேர்வலான்.

https://t.me/Tamil_Library

"தாருடை மலரினும் ஒதுங்கத் தக்கிலா
வாருடை முலையொடு மதுகை மைந்தரைப்
பாரிடைச் செலுத்தினேன் பழைய நண்பினேன்
தேரிடை வந்தனன் தீதிலேன் என்கோ"

(தைலமாட்டு படலம், 22)

*தசரதன்மாட்டும் இராமன்மாட்டும் தான் கொண்ட நட்பையும் அதன் பழமையையும் நினைந்து பார்க்கிறான் சுமந்திரன். இந்த நள்ளிருளில், நடுக்காட்டில், நட்புடையார்கள் இவ்வாறு செய்வார்களா? அதிலும் பழமையான நட்புடையவர்கள் இவ்வாறு நினைக்கவும் துணிவார்களா? "சாவில் சாதல், நோவில் நோதல், ஒண் பொருள் கொடுத்தல், பிரிவு நனி வருந்துதல்" என்பவை அல்லவோ நட்பின் இலக்கணம்? நட்புடையார்கள் தம்மால் அன்பு செய்யப்பட்டவரை நட்ட நடுநிசியில் காட்டில் நடக்குமாறு விட்டு விட்டுத் தாம் மட்டும் தேரில் ஊர்ந்து சென்ற வரலாற்றை இது வரை எங்கேனும் கண்டதுண்டா? கேட்டதுதான் உண்டா? அரண் மனைக்குள் சென்றவுடன் தசரதன் முகத்தில் விழிக்க வேண்டாவா? மைந்தர்கள் எங்கே என்று மன்னவன் கேட்கும் பொழுது என்ன விடை கூறுவது?—என்று வருந்துகிறான் சுமந்திரன்.*

*ஆனால், தசரதனிடம் கூறுவாயாக என்று இராமன் சில சொற்களைக் கூறி விடுக்கிறான். மைந்தன் மீண்டு வந்தான் என்று கூறும் சொற்கள் தவிர வேறு எந்தச் சொற்களையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் மன்னன் இருக்கமாட்டான் என்பதைச் சுமந்திரன் நன்கு அறிவான். அதிலும் இராமன் உறுதியாகக் காட்டில் சென்றுவிட்டான் என்று கூறினால், அச்சொற்களின் விளைவு என்ன என்பது பற்றியும் சுமந்திரன் அறிவான். அறுபதினாயிரம் ஆண்டுகள்*

https://t.me/Tamil_Library

வாழ்ந்த தசரதனை, சம்பராசுரனைப் போர் தொலைத்த தசரதனைக் கொல்வது என்பது எளிதான செயல் அன்று. போரில் அவ் வேந்தனைக் கொல்லல் இயலாதேனும் ஓர் எளிய வழி உண்டு என்பதனை அவனிடம் பழகியவர்கள் அனைவருமே அறிவர். கிழவேந்தனுடைய உயிர் நாடி அவன் மைந்தனாகிய இராமனிடம் அன்றோ இருக்கிறது! எனவே, இராமனைப் பிரித்து விட்டால் தசரதனுடைய உயிர் பிரிவது உறுதி. மற்றொரு வகையாகக் கூறுமிடத்துத் தென்திசைக்கோனாகிய எமன் தசரதனை அணுகும் பொழுது இராமனைப் பிரிப்பதனையே ஒரு சூழ்ச்சியாகக் கொள்வான். இப்பொழுது சுமந்திரன் அரண்மனையுட் சென்று இராமன் காட்டினுள் சென்றுவிட்டான் என்று கூறும் சொற்கள் எமனுடைய தூதாக அமைந்துவிடும் மன்னனுக்கு. இதுவே அமைச்சனின் அச்சம். 'ஐயனே, எமனுடைய தூதுவனாக யான் செல்லட்டுமா?' என்ற கருத்தில்.

**"தென்புலக் கோமகன் தூதிற் செல்கெனோ ?"**

**(தைலமாட்டு படலம், 23)**

என்று பேசத்தொடங்கிய சுமந்திரன் அடுத்த பாடலில் மற்றுமொரு படி மேற்சென்று விடுகிறான்.

'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' (புறம், 195) என்பது பழந்தமிழர் கண்ட அறம். இயலுமாயின் ஒருவருக்கு உதவி செய்யவேண்டும். ஆனால், இயலாக் காலத்து ஒன்றும் செய்யாமல் இருப்பதை யாரும் தவறு என்று கூறமாட்டார்கள். அவ்வாறு உதவி செய்யாமலும், சும்மா இராமலும் தீமை புரிகின்றவர்களை என்னவென்று கூறுவது? பிறருக்குத் தீமை செய்வதனையே தம் வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்ட பெரியோர்களும் உண்டு. இத்தகையவர்களை நோக்கித் தான் பழந்தமிழன் மேற்கூறிய பாடலைப் பாடினான்

https://t.me/Tamil_Library

போலும். தீமை செய்தலினும் பலவகை உண்டு. தமக்குச் செய்யப்பட்ட தீமைக்கு எதிராகத் தீமை செய்பவர் ஒரு சாரார். இத்தகைய நிலையில் தீமை செய்யப்பட்டவர் செய்தாரிடம் அதிகம் வருந்த வேண்டுவதின்று. ஏன் எனில், தாம் செய்ததற்கு எதிராகத்தானே இப்பொழுது தீமை செய்யப்படுகிறது என்று நினைத்து மனத்தில் அமைதி அடையலாம். ஆனால், தனக்கு ஒரு தீமையும் செய்யாத ஒருவனுக்குத் தீமை செய்தல் மிகவும் கொடியது. இதனைக் காட்டிலும் கொடியது தனக்கு நன்மையே புரிந்த ஒருவருக்குத் தான் தீமை செய்தல். இதனைத்தான் மனத்திற் கொண்டு பொதுமறை பாடிய பெரியார்,

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"** **(குறள், 110)**

என்று கூறிச் சென்றார். இந்த மூன்றாவது வகையைச் சார்ந்தவனாகவே தன்னைக் கருதிக் கொள்கிறான் சுமந்திரன். தசரதன் எனக்கு நன்மையே புரிந்தான். இப்பொழுது அவன் இறக்குந் தறுவாயில் இருக்கிறான். நகர மக்கள் அனைவருங்கூடி அவனைத் தேற்றி உயிரைப் பிடித்து வைத்துள்ளனர். இராமனை எவ்வாற்றானும் சுமந்திரன் கொணர்ந்து விடுவான் என்ற நம்பிக்கையால் உயிரை வைத்துக்கொண்டு இருக்கிறான் மன்னவன். அத்தகையவனிடம் சென்று, 'அரசே உன் மகனைக் காட்டில் விட்டு வந்துவிட்டேன்' என்று கூறுதலும், ஒரு வாளால் அவன் கழுத்தை வெட்டிக் கொன்று விடுதலும் ஒன்றுதான்—என்று இவ்வாறு நினைந்து அழுகிறான் அமைச்சர் பெருமகன்.

**"நாற்றிசை மாந்தரும் நகர மாக்களும்**
**தேற்றினர் கொணர்வர்உன் சிறுவன் தன்னைஎன்று**
**ஆற்றின அரசனை ஐய வெய்யஎம்**
**கூற்(று)அன சொல்லினால் கொலைசெய் வேன்கொலோ!"**

**(தைலமாட்டு படலம், 24)**

https://t.me/Tamil_Library

மறுபடியும் எண்ணம் கைகேயியிடம் செல்லுகிறது. அரசனுடைய சீர் அழிவுக்கு அவளே காரணமாவாள். அவள் செய்த தீமையால் தசரதன் பெருந்துன்பம் அடைந்தது உண்மைதான். ஆனால், அவனுடைய உயிரை அவளோ, அவளுடைய சொற்களோ போக்கவும் இல்லை; போக்க முடியவுமில்லை. இப்பொழுது சுமந்திரன் சென்று 'இராமன் போய்விட்டான்' என்ற இரண்டு சொற்களைக் கூறிய மாத்திரையில் அரசன் இறந்துவிடுவான் எனில், சுமந்திரன் கைகேயியைவிடத் தீயவன் என்று கருதப்பட மாட்டானா? பிறர் அவ்வாறு நினைக்காவிடினும் சுமந்திரன் தன்னைப்பற்றி அவ்வாறு நினைத்துக் கொள்ளுகிறான். அவன் நண்பனாக இதுவரை இருந்து இப்பொழுது தன்னுடைய சொற்களால் அரசன் உயிர் குடிக்கப் போகிறான். கைகேயி அரசனுடைய பகையாளியாக இருந்தும் அவன் உயிரைப் போக்கவில்லை. ஆராய்ந்து பார்த்தால் அவளுடைய புறப்பகையைக் காட்டிலும் சுமந்திரனுடைய அகப்பகை மிகவும் கொடுமை உடையதாகக் காட்சியளிக்கிறது அவ்வமைச்சனுக்கு.

"வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு". (குறள், 882)

எனவே, தன்னைத் தசரதனுடைய அகப்பகையாகவே மதித்த அமைச்சன் இதோ பேசுகிறான்:

"அரசே! தீயை மூட்டி நீ வேள்வி செய்து பெற்று வளர்த்த சிங்கக்குட்டியாகிய இராமன் அகன்றான்" என்று கூறட்டுமா? அவ்வாறு கூறினால் தசரதனுக்கு என்னைவிடக் கைகேயியே சிறந்தவள் போலும் என்ற கருத்தில்,

"அங்கிமேல் வேள்விசெய்(து) அரிதில் நீபெற்ற
சிங்கஏ(று) அகன்ற(து) என்(று) உணர்த்தச் செல்கெனோ

https://t.me/Tamil_Library

எங்கள்கோ மகற்(கு)இனி எண்ணில் கேகயன்
நங்கையே கடைமுறை நல்லல் போலுமால்"

(தைலமாட்டு படலம், 25)

*'காட்டிற்குச் செல்க என்று ஆணையிட்ட அவளைக் காட்டிலும் காட்டில் கொண்டு செலுத்திய நான் தீயவனே' என்று நினைக்கிறான் அவன்.*

*இவ்வாறு பலவும் கூறி வருந்திய சுமந்திரனை இராமன் மார்புறப் புல்லிப் பலவாய நீதிகளையும் எடுத்துக்கூறி மனம் தேற்றினான். ஒருவாறு மனந்தேறிய சுமந்திரன் அம்மூவரையும் என்ன செய்தி சொல்லியனுப்புகிறார்கள் என்று வினவினான். இராமன் கூறியவற்றைக் கேட்டுக்கொண்ட பிறகு சீதையை நோக்கி 'நீவிர் யாது கூறுகிறீர்?" என்று கேட்டான்.*

"அன்னவள் கூறுவாள் அரசர்க்(கு) அத்தையர்க்கு
என்னுடை வணக்கமுன் இயம்பி யானுடைப்
பொன்னிறப் பூவையும் கிளியும் போற்று(க) என்று
என்னுடை எங்கையர்க்கு உணர்த்துவாய் என்றாள்"

"தேர்வலான் அவ்வுரை கேட்டுத் தீங்குறா
ஆர்வலார் உயிர்துறப்(பு) எளிதன் றேயெனாப்
போர்வலான் தடுக்கவும் பொருது விம்மினான்
சோர்விலான் அறிவிலாத் துயர்க்குச் சோர்கின்றான்"

(தைலமாட்டு படலம், 40, 41)

*பெரியதொரு தீமை ஏற்பட்டிருக்கும் பொழுது அத் தீமையின் ஆழத்தையும் அகலத்தையும் அறிந்து கொள்ள முடியாத இளங் குழந்தைகள் விளையாட்டு முறையில் ஏதேனும் பேசிவிடுவதைக் காணுகிறோம். அத்தகைய சந்தர்ப்பங்களில் உடன் இருப்பவர்கள் குழந்தையின் பேச்சைக் கேட்டு நகைப்பதற்கு மறுதலையாக அழுவதையும் காண்கிறோம். நடைபெற்றுள்ள தீமையை அறிந்து கொள்ளச் சக்தி அற்ற குழந்தைகளின் எளிய*

https://t.me/Tamil_Library

தன்மையைக் கண்டு இவ்வாறு அவர்கள் வருந்துகிறார்கள். இதேபோலத்தான் இப்பொழுது சீதை பேசுகிறாள். இராமன் காடு வந்ததால் ஏற்பட்ட விளைவைச் சற்றும் ஆராயாதவளாய் 'என்னுடைய மைனாப் பறவையையும் கிளியையும் நன்கு கவனித்துக் கொள்ளுமாறு கூறுக' என்று கூறுகிறாள். தான் காட்டில் வந்ததால் சிறிதும் கவலை கொள்ளாமல் இவ்வாறு பேசுகிறாளே என்று நினைத்தவுடன் சுமந்திரனுடைய துயரம் பீறிட்டுக் கொண்டு வெளிவருகிறது. சீதைக்குத் தந்தைபோல இருக்கின்ற அவன் அவளது பேதைமையையும், இதனால் அவள் அனுபவிக்கப் போகின்ற தீமைகளையும் நினைந்து இவ்வாறு அரற்றுகிறான்.

இவை அனைத்தும் முடிந்த பின்னர் இராமனையும் அவனுடைய துணைவரையும் காட்டில் விட்டு மீள்வது தவிர வேறு வழியில்லை என்பதனை அறிந்த சுமந்திரன் புறப்பட்டு விட்டான்.

**"......................................தன் கல்வி மாட்சியால்**
**ஓட்டினன் ஒருவரும் உணர்வு றாமலே"**

**(தைலமாட்டு படலம், 47)**

என்று கம்பநாடன் கூறும்பொழுது சுமந்திரனுடைய தேரோட்டும் சிறப்பை நன்கு அறிகிறோம்.

இதனை அடுத்து நாம் சுமந்திரனைக் காண்பது தசரதன் இறந்துவிட்ட பின்னர் ஆகும். வசிட்ட முனி தசரதன் இறந்த பின்னர்ப் பரதன் கேகயத்திலிருந்து வருகிறவரை சுமந்திரனே அரசியலை நடத்த வேண்டும் என்று தன் விருப்பத்தை கூறிவிட்டுத் தன் பன்னசாலை சென்றுவிட்டான். எனவே, தேர்வலானாகிய சுமந்திரன் அரசியலாகிய தேரையும் ஓட்டும் வன்மை படைத்தவனாக இப்பொழுது காட்சியளிக்கிறான். ஒரு பெரிய நாட்டின் அரசன் திடீரென்று இறந்துவிட்டான். பட்டத்திற்கு

https://t.me/Tamil_Library

உரியவன் காடு சென்று விட்டான். பட்டத்தைப் பெற்றவன் நாட்டுக்கு வந்துசேர இன்னும் எத்துணை நாட்கள் ஆகுமோ தெரியாது. இந்த நிலையில் யார் ஆட்சியை மேற்கொண்டாலும் அது மிகவும் தொல்லைதருவது என்று கூறத் தேவை இல்லை. எனினும் 'சுமந்திரனே இப்பொழுது ஆட்சி செய்யத் தக்கவன்' என்று முனிவன் அவனிடம் ஆட்சியை ஒப்படைப்பதானால் சுமந்திரனுடைய திறமைக்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு என்ன வேண்டும்?

மரம் எவ்வளவு பெரிதாக வளர்ந்திருக்கிறது என்று வியப்படைகிறோம். சாதாரண காலங்களில் மரத்தைப் பற்றி வியப்படைவதைக் காட்டிலும், பெருங்காற்று அடித்து அப்பொழுதும் அம்மரம் தீங்கடையாமல் இருந்தால் அப்பொழுது மிகவும் வியப்படைகிறோம். ஏன்? பெருங் காற்றிலும் மரம் விழாமல் இருக்கிறது என்றால் அதனுடைய வேர்கள் மிக ஆழமாகவும் அழுத்தமாகவும் உள்ளன என்பதுதானே கருத்து? அதுபோலத் தசரதன் இறந்து இராமன் காடு சென்ற காலத்தும் அயோத்தி அரசியல் குழப்பம் இன்றி இருந்தது என்றால், அதன் பெருமை யாரைச் சேர்ந்தது? கண்காணாத வேர்கள் மரத்தைக் காப்பதுபோலப் பிறர் கண்ணில் மிகுதியும் படாத சுமந்திரனே அயோத்தி அரசைக் காவல் புரிந்தான் என்பதே தேற்றம்.

பரதன் தமையனைக் கொணரவேண்டும் என்ற கருத்துடன் வந்துள்ளான். அவனைத் தொடர்ந்து அயோத்தி மாநகரமே வந்துள்ளது என்றுகூடக் கூறலாம். ஆனால், அனைவரும் கங்கையின் வடகரையில்தான் தங்கியுள்ளனர். குகனுடைய உதவி இல்லாமல் ஆற்றைக் கடத்தல் ஆகாத செயல். ஆனால், குகனோ லக்குவனுடைய சொற்களை நம்பிக்கொண்டு, பரதன்

https://t.me/Tamil_Library

*படையெடுத்து வந்ததாகக் கருதிப் பெருஞ் சீற்றத்துடன் இருக்கிறான் எதிர்க்கரையில். இந்நிலையில் வடகரையில் நிற்கும் பரதனுக்குத் தென்கரையில் இருக்கும் குகனைப் பற்றிச் சில சொற்கள் கூறி அறிமுகம் செய்து வைக்கிறான் அமைச்சர் பெருந்தகை சுமந்திரன். இதோ குகனைப்பற்றிச் சுமந்திரன் பேசுகிறான்:*

> "கங்கையிரு கரையுடையான்
> கணக்கிறந்த நாவாயான்
> உங்கள்குலத் தனிநாதற்(கு)
> உயிர்த்துணைவன் உயர்தோளான்
> வெங்கரியின் ஏறனையான்
> வில்பிடித்த வேலையினான்
> கொங்(கு) அலரும் நறும்தண்தார்க்
> குகன்என்னும் பெயருடையான்"

> "கல்காணும் திண்மையான்
> கரைகாணாக் காதலான்
> அல்காணில் கண்டனைய
> அழகமைந்த மேனியான்
> மல்காணும் திருநெடுந்தோள்
> மழைகாணும் மணிநிறத்தாய்
> நின்காணும் உள்ளத்தான்
> நெறிஎதிர்நின் றனன்என்றான்."

(குகப்படலம், 25, 26)

*நாம் அறிந்தவரையில் இராமனை நடு இரவில் சோலையில் விட்டுப்போன சுமந்திரன் மீண்டும் இப்பக்கம் இப்பொழுதுதான் வந்துள்ளான். குகன் இராமனுடன் பழகியதை அவன் கண்டிருக்க நியாயம் இல்லை. அவ்வாறு இருந்தும் இராமன்மாட்டுக் குகன் கொண்டிருந்த காதலைச் சுமந்திரன் இவ்வளவு விரிவாக எவ்வாறு எடுத்துக் கூற முடிந்தது? இராமனும் குகனும் சந்தித்ததைச் சுமந்திரன்*

https://t.me/Tamil_Library

தன்னுடைய கண்களாற் காணவில்லை என்பது மெய்ம்மைதான். ஆனாற் அமைச்சனாகிய அவன் ஏனையோர் போலக் கண்களால் மட்டுமா காண்கிறான்? 'செவியிற் காணும்' திறம் படைத்தவனல்லனோ அமைச்சன் என்று கூறப்படுவான்? எனவே, சிறந்த அமைச்சனாகிய சுமந்திரன் இராமனைக் காட்டில் விட்டுவிட்டு வந்துவிட்டாலும், அவ்விராமனுடைய நலம் தீங்குகளில் பெருங் கருத்துடையவனாய் இராமனும் அறியாமல் தான் மட்டும் ஒற்றர் மூலம் அவனைக் கவனித்து வந்துள்ளான் என்றுதான் கருதவேண்டியுள்ளது. இங்ஙனம் குகனைப்பற்றிச் சுமந்திரன் அறிந்திருப்பதில் இரண்டுவகை நன்மை உண்டு. ஒன்று அருமை மன்னனாகிய இராமனுடைய நண்பர்கள் எத்தகையவர் என்று அறிவது, இரண்டாவது அயோத்தி நகரின் எல்லையில் வாழும் குகன் அயோத்தி மன்னனிடத்தில் எந்த மனப்பான்மையுடன் பழகுகிறான் என்பதை அறிவது. எனவே, தலையாய அமைச்சன் கடமையை நிறைவேற்றுமுகமாகவே உளது சுமந்திரன் குகனைப் பற்றி அறிந்திருப்பது.

சூரிய தேர்வலானாகிய சுமந்திரன் தசரதனுக்குச் செல்வக் காலத்தும் அல்லற்காலத்தும் சிறந்த நண்பனாயும், இராமனிடம் கழிபெரும் காதல் கொண்ட நண்பினனாயும், பரதனுடைய பெருந்தன்மையை அறிந்து பழகும் பண்பினனாகவும், அயோத்தி அரசை நன்கு காத்துக் கடமை புரியும் அமைச்சனாகவும் இருந்தான் என்பது வெளிப்படை. சுமந்திரனைப் பற்றிப் பேசும் முகமாகக் கம்பநாடன் தன்னுடைய அரசியல் அறிவின் ஒரு பகுதியை நமக்கு எடுத்துக் காட்டுகிறான்.

https://t.me/Tamil_Library

## 6

# முறுவலித்தது ஏன்?

கங்கை வேடனாகிய குகனுடைய அதிகார எல்லைக்குள் சக்கரவர்த்தித் திருமகனாம் இராமன், மனைவி, தம்பி ஆகிய இருவரோடும் வந்து தங்கியுள்ளான். அழகிய பர்ணசாலையினுள் இராமன் வீற்றிருக்க அவனைச் சுற்றிப் பேரறிஞர்களும், முனிவர்களும், தவசிகளும் அமர்ந்துள்ளனர். வெளியே தம்பி எனும்படிக்கு அல்லாமல், அடியரின் ஏவல் செய்ய வந்தவனாகிய இலக்குவன் காவல் காத்து நிற்கின்றான். உள்ளே இருக்கின்ற முனிவர்கள் இராமனைக் காண வந்துள்ளார்கள். ஆனால், என்ன கருத்தோடு அவனைக் காண வந்தார்கள்? சக்கரவர்த்தித் திருமகன், முடி சூட வேண்டியவன், முடியைத் துறந்து காட்டிற்கு வந்துள்ளானே என்றோ, அன்னத்தின் தூவியை ஒத்த மெல்லிய பாதங்களையுடைய சீதை, இட்ட அடி நோவ, எடுத்த அடி கொப்புளிக்கக் காட்டில் நடந்து வந்துள்ளாளே, அவள் என்ன பாடுபட்டாளோ என்றோ அவர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை! ஆனால், 'தாங்கள் செல்கதிக்கு நாயகனா'கிய இராமனைக் காண வந்துள்ளார்கள். பிறவிப் பெருங்கடலை நீந்தியதால் உண்டாகிய மிக்க மகிழ்ச்சியோடு வந்தார்கள் என்று கம்பன் கூறுகிறான். எனவே, தம்முடைய பிறவிப் பயனை எதிரே

https://t.me/Tamil_Library

கண்டதுபோல மகிழ்ச்சியடைகின்றார்கள். இராமனைக் கண்டு பேசி வழிபட நேர்ந்தமையால், இனித் தங்கட்குப் பிறவி இல்லை என்று அவர்கள் மகிழ்கிறார்கள். ஆகவே, அவனைக் கண்டபோது சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் தங்கள் வினையைத் தீர்த்துப் பயன் பெற்றுவிடவேண்டும் என்று முனைந்து நிற்கின்றனர். இப் பெருமக்கள் அனைவரும், கல்வி, கேள்வி, ஞானத்தால் மிகமிக உயர்ந்தவர்கள் ஆவர். ஆதலால்தான் இராமனை வெறும் தசரத குமாரனாகக் கருதாமல் தங்கள் பிறவியின் பயன் என்றே கருதினார்கள் என்று அறிகிறோம்.

அறிவால் மேம்பட்ட இம் மக்கள் தங்களுடைய கூர்த்த மதியினால் ஆராய்ந்து, எதிரேயுள்ள மானிட உருவம், தம்மைப் போலச் சாதாரண மானிட வடிவமன்று என்பதையும், தங்களையெல்லாம் காத்தற் பொருட்டுக் கருணைக் கடலான முழுமுதல் பொருளே இம்மானிட வடிவைத் தாங்கி வந்துள்ளது என்பதையும் நன்கு அறிந்துள்ளனர். என்றாலும் என்ன? இராமனை முழுமுதல் பொருள் என்று அறிந்துகொள்வதற்குத் துணைசெய்த அவர்களுடைய பேரறிவு, அவன்மாட்டு ஒருமுகப்பட்ட சித்தத்தோடு ஐக்கியம் செய்துகொள்ளச் செய்ததே தவிர ஓரளவு அவனிடம் அன்பு கொள்ளச் செய்ததே தவிர, தங்களை முழு அன்பில் கரைத்துக் கொள்ளச் செய்யவில்லை. முழுமுதல் பொருளை அறிந்து கொண்டதனால் அதனிடம் மதிப்பும், ஓரளவு அன்பும் அவர்கள்மாட்டுக் காணப்பட்டிருக்கலாமே தவிர, அந்த முழுமுதல் பொருளோடு இரண்டறக் கலந்து ஒன்றிப்போகின்ற இயல்பு (அநந்ய பாவம்) அவர்களிடம் இருந்ததா என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை. அறிவின் துணைகொண்டு முழுமுதல் பொருளை அறிவது வேறு. உணர்வின் துணைகொண்டு அப்பொருளினிடம் ஈடுபடுவது அல்லது கலந்துவிடுவது வேறு.

https://t.me/Tamil_Library

அறிவாற்றல் மிக்க இப் பெருமக்களின் எதிரே மற்றொரு காட்சியும் தோன்றுகிறது. இப்பிறப்பில் இன்றேனும், பழைய பிறவிகளிற்கூடக் கல்வி, அறிவு என்பவற்றோடு உறவு கொள்ளாதவனாகிய வேடுவன் ஒருவன் இராமனைக் காண வந்துள்ளான். அவனுடைய வடிவத்தைக் கண்டவர் யாவரும் அருவருப்புக் கொள்வரே தவிர, விரும்பத் தகுந்த தகுதி ஏதும் அவன்மாட்டு இருப்பதாகவே தெரியவில்லை. என்றாலும் இலக்குவன் அந்த வேடுவன் பேசிய இரண்டொரு வார்த்தைகளிலேயே அவனுடைய பண்பாட்டை நன்கு அறிந்து கொள்கிறான். அறிவதோடுமட்டுமன்றி உள்ளே இராமனிடம் சென்று, "தாயினும் நல்லவனாகிய ஒருவன் உன்னைக் காண வந்திருக்கிறான்" என்றும் கூறுகின்றான்.

அச்சத்தையும் அருவருப்பையும் தருகின்ற வடிவுடைய குகன் பேசிய இரண்டொரு வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்திலேயே இலக்குவன் அவனைப் 'பெற்ற தாயினும் நல்லவன்' என்ற முடிவுக்கு வந்துவிட்டான். இஃது எவ்வாறு முடிந்தது? இலக்குவனுடைய வாழ்க்கையில், ஏன் இராமனுடைய வாழ்க்கையிலுங்கூட இதுவரை நடைபெற்ற துன்பங்கள் அனைத்தும், அறிவின் துணை கொண்டு நடைபெற்றவைதாமே. கைகேயியின் சூழ்ச்சியும், கூனியின் சூழ்ச்சியும், கொடுத்த வாக்கை மீற முடியாமல் மன்னன் தத்தளித்ததும் அறிவின் துணைகொண்டு நடைபெற்றவை அல்லவா? உணர்வின் வழிநின்று பார்க்கும்பொழுது அவை யாவும் பயனற்ற செயல்களாகும். உணர்வின் வழிநின்று கைகேயியே சிந்தித்திருப்பாளேயானால் அவ்வளவு போராடி அரசைத் தன் மகனுக்குப் பெற்றிருக்க வேண்டியதில்லை. அறிவினால் ஆராய்ந்து பார்த்த அவள்தான், தன்மகன், மாற்றாள் மகன் என்ற வேறுபாட்டைக் கண்டாள். உணர்வை முக்கியமாக அவள் கொண்டிருப்பின் தான்,

https://t.me/Tamil_Library

மாற்றாள், அவள் மகன் என்ற வேறுபாடு தோன்றி இராது. எனவே, அறிவின் துணை கொண்டு நடைபெற்ற இச்சூழ்ச்சியில் அகப்பட்டு, அல்லல்பட்டு நாட்டை விட்டுக் காட்டிற்கு வந்தபொழுதும் கூட, முன் பின் பழக்கமில்லாத காட்டு வாழ்க்கையில் அகப்பட்டுக் கொண்டனரே என்று யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக அந்த அரச குமாரனின் மூலம் தம்முடைய பிறவிப் பயனைப் பெற விரும்புகிறார்களே தவிர, மானிடவடிவம் தாங்கிய அக்குமாரர்கட்குப் பசி, தாகம் முதலியன இருக்குமே, உடல் சோர்வுற்று இருக்குமே என்று யாரும் கவலையுற்றதாகத் தெரியவில்லை. அறிவின் துணை கொண்டு இராமனின் அவதார காரணத்தை அறிந்தமையால்போலும் முனிவர்கள் அவன் நாடுவிட்டுக் காடு போந்தமைக்குப் பெரிதும் கலங்கிவிடவில்லை. இந்நிலையில் அறிவால் பெற்ற பயனைக் கண்டு போதும் போதும் என்று ஆகி விட்டது இலக்குவனுக்கு. இந்த இக்கட்டான நிலையில், அறிவுலகத்திற்குப் பலகாத தூரம் எட்டியவனாகிய குகன் எதிரே தோன்றுகின்றான். வந்துள்ளவர்கள் யார்? முழுமுதல் பொருளா? அல்லது பரமனின் அம்சங்களைப் பெற்றவர்களா? பிறவி நோய்க்கு அவர்கள் மருந்து ஆவார்களா? என்றெல்லாம் அந்தக் குகன் ஒரு சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு ஆராய அவனுக்குப் போதுமான அறிவும் இல்லை.

அரசகுமாரன், அறியாமையின் காரணமாக, காட்டு வாழ்க்கையின் கடுமையைச் சிந்தித்துப் பாராமல் ஒரு பெண்ணையும் அழைத்துக்கொண்டு வந்துவிட்டான். இதை அறிந்தவுடன் தாய்மனம் படைத்த அந்தக் குகனுக்கு உள்ளம் உருகுகின்றது. எப்படியாவது அவர்கள் துயரைத் துடைக்க வேண்டும் என்று எண்ணுகிறான். முதன் முதலாக அவனுடைய உள்ளத்தில் தோன்றக்கூடிய ஒரே எண்ணம்

https://t.me/Tamil_Library

வந்தவர்களுடைய பசியைப் போக்கவேண்டும் என்பதே ஆகும். அரண்மனையில் வாழ்ந்திருப்பவர்களுக்கு வேளாவேளைக்கு இருப்பிடம் தேடி உணவு வரும். ஆனால், காட்டில் புகுந்துவிட்ட அவர்களுக்கு இருக்கும் இடம் தேடி வேளைக்கு உணவு கொடுக்கக்கூடியவர்கள் யார்? எங்கிருந்தாலும் குழந்தைகளின் வலிமை, ஆற்றல் முதலியவை பற்றிக் கவலைப்படாமல் அவர்களின் பசி ஒன்றையே பெரிதாகக் கருதி உணவு கொடுத்துக் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கக் கூடியவர் இவ்வுலகில் யாராக இருக்க முடியும்? பால் நினைந்து ஊட்டும் தாய் அல்லாமல் வேறு யார் இதனைச் சிந்திக்க முடியும்? எனவே, முனிவர்களெல்லாம் கையை வீசிக்கொண்டு இராமனைக் காண வந்ததையும், குகன் மட்டும் ஒரு கலயத்தில் தனக்குக் கிடைப்பவையாகிய தேனையும் மீனையும் சமைத்துக் கொண்டு வந்ததையும் கண்ட இலக்குவன் மனம் பாகாக உருகிவிடுகின்றது. தாய் ஒருத்தி மட்டுமே நினைத்துச் செய்யக்கூடிய அக்காரியத்தை ஆண் மகனாக இருந்தும் கூட குகன் செய்துவிட்டான். எனவே, அவனை எடைபோட வந்த இளையபெருமாள் 'தாயினும் நல்லான்' என்று கூறுகிறான்.

இனி, இலக்குவனுடைய அன்பைப் பெற்ற குகன் உள்ளே செல்கிறான். இராமனைக் கண்டு அக் குகன் பேசுகின்ற பேச்சு மிகப் புதுமையான முறையில் அமைந்து இருக்கின்றது. தனக்கு வணக்கம் செலுத்திய குகனை 'இருத்தி ஈண்டு' என்று உபசரிக்கின்றான் இராமன். குகன் கற்றறிவுடையவனாக இருந்திருப்பின், உடனே இராமனுடைய யோக க்ஷேமங்களையும், அவன் காட்டுக்கு வரவேண்டி நேர்ந்த காரணத்தையும் விசாரித்திருப்பான். நாகரிகம் என்ற போலிப் பெயர் பூண்டோரும் அறிவால் மேம்பட்டோரும் ஒருவரைக் கண்டவுடன் பேசுவது இவ்வாறுதானே இருத்தல் கூடும்? அவ்வாறு செய்யாமல்,

https://t.me/Tamil_Library

'நீ நலமாக இருக்கிறாயா' என்றுகூட ஒரு வார்த்தையும் கேளாமல், 'ஐயனே, தேனையும் மீனையும் உண்பதற்கேற்ற முறையில் பக்குவப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறேன். இப்பொழுது உண்கின்றாயா. சிறிதுநேரம் கழித்து உண்கிறாயா' என்ற கருத்தில் 'தேனும் மீனும் திருத்திய கொணர்ந்தேன், திருவுளம் என்கொல்?' என்று பேசுகிறான் எல்லை நீத்த அன்புடையவனாகிய குகன். இவ் வார்த்தைகளைக் குகன் கூறி முடித்தவுடன் இராமபிரான், 'விருத்த மாதவரை நோக்கி முறுவலன் விளம்பலுற்றான்' என்று கம்பன் பாடிச் செல்கின்றான். முனிவர்களை நோக்கி இராமன் முறுவலிப்பதற்கு இங்கே என்ன நிகழ்ந்தது? முறுவலித்தல் என்ற தமிழ்ச் சொல்லுக்குப் புன்சிரிப்பு என்பது இன்றைய நாளில் நாம் கொள்ளுகின்ற பொருளாயினும், அதனுடைய உண்மையான பொருள் கேலி செய்து புன்முறுவல் செய்வது அல்லது எள்ளி நகையாடல் என்பதாகும். முனிவர்களை நோக்கி இராகவன் எள்ளற்குறிப்புடன் புன்சிரிப்புச் செய்த காரணம் யாதோ? ஆழ்ந்து சிந்தித்தால் இப் புன்சிரிப்பின் காரணம் விளங்காமல் போகாது.

அறிவின் துணைகொண்டு முழுமுதற் பொருளைத் தேடித் திரிகின்ற இம் முனிவர்கள், தம்மால் தேடப் பெற்ற பரம்பொருளை நேரே கண்டுவிட்ட காரணத்தால் ஓரளவு இறுமாந்து நிற்கின்றார்கள். அவ்விறுமாப்பிற்குக் காரணம், 'கற்பனை கடந்த பொருளைக் கண்ணெதிரே கண்டு விட்டோம்' என்பதேயாகும். அங்ஙனம் எண்ணிய வுடனேயே ஓரளவு இறுமாப்பு அல்லது அகங்காரத்தைப் பெற்றுவிடுகிறார்கள். அகங்காரம் முழுமுதற் பொருளைக் கண்டுவிட்ட காரணத்தால் ஏற்பட்டதுதான். ஆதலின், இக்குறை மன்னிப்பதற்குரியதுதான். நம் போன்றவர்களின் நிலைமையிலிருந்து ஆராயும்போது இந்த இறுமாப்பை அல்லது அகங்காரத்தைத் தவறாக எடுத்துக்கொள்ள

https://t.me/Tamil_Library

வேண்டியதில்லை. ஆனால், இராமனுடைய நிலையில் நின்று பார்க்கும் போது, அவர்களிடம் காணப்பெற்ற இந்த அகங்காரம் தடை விதிக்கப்பட வேண்டியதாகக் காட்சியளிக்கிறது. இறைவனைக் காணும் பேறு பெற்றோம் என்ற சிறந்த அடிப்படையில் தோன்றியதாயினும் அகங்காரம் அகங்காரந்தானே! எனவே, அதனைக் களையவேண்டிய கடப்பாடு இராகவனுடைய பொறுப்பாக ஆகிவிடுகிறது. ஆகவே, முனிவர்களைப் பார்த்து அவன் முறுவலிக்கும்போது 'உங்களுடைய அன்பையும் இதோ எதிரே நிற்கின்ற குகனுடைய அன்பையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எது உயர்ந்தது என்பதை நான் அறிகின்றேன். அறிவின் துணை கொண்டு என்னைக் காண முயன்று கண்டுவிட்டதாகக் கருதி ஓரளவு இறுமாந்து நிற்கின்ற உங்களைக் காட்டிலும், என்னுடைய தன்மையை ஒரு சிறிதும் அறிந்து கொள்ளாமலும் அறிய முயலாமலும், இக்குகன் தன்னுடைய அன்பு, பரிவு என்ற இரண்டாலும் தான் வேறு, யான் வேறு என்ற வேறுபாட்டைப் போக்கித் தன்னையே என்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டான்' என்று கூறுவதுபோல் அமைந்து இருக்கிறது இப்புன்முறுவல்!

வேத முதற் காரணனாகிய இராமன் அனைத்தையும் கடந்தவன். வேண்டுதல்-வேண்டாமை இல்லாதவன் என்பதைக் குகன் அறிந்திருப்பின் ஒருவேளை இராமனுக்கு உணவு தேவையில்லை என்று கருதி இருக்கலாம்; அல்லது கனி கிழங்குகளை மட்டுமே புசிக்கக் கூடியவன் இராமன் என்பதையேனும் அறிந்திருக்கலாம். ஆனால், அந்தப் பேத உணர்ச்சி குகனிடம் இல்லை. தன்னை நோக்க இராமன் இளையவன் ஆவான்; தனக்கு ஏற்படுகின்ற பசி தாகங்கள் இராமனுக்கும் கண்டிப்பாக உண்டாகும்; எனவே, தன்னுடைய பசி தாகத்தைப் போக்கத் தான் முயற்சி செய்வது போலவே, இளையவனாகிய இராமனுடைய பசி

https://t.me/Tamil_Library

தாகத்தைப் போக்கவும் முயற்சி எடுக்கவேண்டுமென்ற எல்லையற்ற அன்பினால் தூண்டப்பெற்றுத் தேனும் மீனும் கொண்டு வந்துள்ளான். 'தான்' என்ற அகங்காரத்தைத் தம்மால் அன்பு செய்யப்பெற்ற பொருளிடம் முற்றிலும் கரைத்துக்கொள்ளுகின்ற அநந்யபாவம் நிறைந்த பக்தி அல்லது அன்பாகும் குகனுடைய அன்பு. சர்வ வல்லமை யுள்ளவனாகிய கடவுளைக்கூடக் குழந்தையாகப் பாவித்து நம்முடைய பெருமக்கள் பாடிய (பிள்ளைத்தமிழ், பெரியாழ்வார் பாடல்கள்) பாடல்களில் இத்தகைய ஓர் ஒப்பற்ற அன்பைக் காணலாம.

முற்றிலும் தூய்மை உடையவர்களாயினும், முனிவர்கள், ஓரளவு அகங்காரத்தால் உந்தப்பெற்று, தாம் வேறு, தம்மால் அறியப்பெற்றுத் தம் எதிரேயுள்ள பரம்பொருள் வேறு என்ற இரட்டை பாவத்துடனும், இப் பரம்பொருளைத் தாம் அறிகின்ற அறிவு வேறு என்ற மூன்றாவது பாவத்துடனும் மூன்றாகக் காட்சி யளிக்கின்றனர். அதாவது, கண்ட தாம், காணப்பெற்ற இராமன், காட்சி ஆக மூன்று அங்கே காணக்கிடக்கின்றன. ஆனால், குகனைப் பொறுத்தமட்டில் தான், இராமன், காட்சி என்ற வேறுபாடில்லாமல் இராமன், அவனுடைய பசி என்ற அளவிலேயே குகனுடைய அன்பு பரிணமிக்கின்றது. அறிவின் துணைகொண்டு காணும் பொழுது மூன்றாகக் காட்சியளித்த ஒன்று (காண்பான், காட்சி, காணப்படுபொருள்) உணர்வின் துணைகொண்டு காணும்பொழுது ஒன்றாகவே (காணப்படுபொருள்) காட்சி நல்குகிறது. எல்லையற்ற பக்தி அல்லது அன்பு செய்யும் இரசவாதமாகும் இது. இந்த வேறுபாட்டை நன்கு எடுத்துக் காட்டுவதற்காகவே பரம்பொருள் ஆகிய இராமன் 'விருத்த மாதவரை நோக்கி முறுவலித்தான்' என்று அறிகிறோம்.

முனிவர், யோகியர் ஒருபுறமிருக்க, இலக்குவன், சீதை ஆகிய இருவருமேகூட ஓரளவு இந்தக் குறைபாட்டைப்

https://t.me/Tamil_Library

பெற்றுள்ளனர் போலும்! தம்பியாகப் பிறந்தும் அடியானைப் போல் ஏவல் செய்கின்ற பேறு தனக்கே உரியது என்று தம்பி ஓரளவு இறுமாந்து நிற்க, இராமனுடைய முழுத் தன்மையையும் அறிந்து அனுபவிக்கின்ற இயல்பு தன்மாட்டே உள்ளது என்று சீதை நினைக்க, இருவரும் குருடர் கண்ட யானைபோல் தத்தம்முடைய அன்பையே பெரிது என மதித்தவர் போலும்! இலக்குவன் இவ்வாறு தன்னைப் பற்றி நினைத்துள்ளான் என்பதைப் பின்னரும் காணுகின்றோம். மாயமான் இலக்குவன் பெயரையிட்டு அழைத்ததைக் கேட்ட சீதை, இராமனுக்குத் துணையாக இலக்குவன் செல்லவேண்டுமென்று கட்டளையிட, இலக்குவன்

> "கார்எனக் கரியஅக் கமலக் கண்ணனை
> யார்எனக் கருதிஇவ் இடரின் ஆழ்கின்றீர்?"

என்று பேசுகிறான். இதனால், கமலக்கண்ணனைப் பற்றிச் சீதையைக் காட்டிலும் தான் நன்கு அறிந்துள்ளதாக இலக்குவன் கருதுகிறான் என்பது நன்கு வெளிப்படுகிறது. ஆகவே, இந்த இருவருடைய அறியாமையையும் ஓரளவு போக்கவேண்டுமென்று கருதிப் போலும் இராகவன் வேறு ஒரு வழியை மேற்கொள்ளுகிறான். தன் எல்லையற்ற அன்பை வெளிப்படுத்து முறையில் குகன், "ஐய நின்னை இன்னணம் பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன் யான்" என்று பேசுகிறான். இராமனிடம் பழகிய சில நிமிடங்களுக்குள் குகன் இங்ஙனம் பேசுகிறானாகலின், அவன் அன்பின் ஆழத்தை நன்கு அறிந்த இராகவன் சீதை, இலக்குவன் ஆகிய இருவரும் இதனை அறியவேண்டும் என்று கருதுகிறான். அதனால், இராமன் சீதையை நோக்கினான்; தம்பி திருமுகம் நோக்கினான்; ஒரு வினாடி தாமதித்தான்; பின்னர் 'யாதினும் இனிய நண்ப, இருத்தி எம்மோடு' என்று கூறுகிறான். இந்தச் சந்தர்ப்பத்தில் குகன்

https://t.me/Tamil_Library

கூறியவற்றை அனைவருமே கேட்டுக்கொண்டுதானே இருக்கிறார்கள். அப்படியிருக்க, இராகவன் சீதையையும் தம்பியையும் ஒரு முறை ஏறிட்டுப் பார்த்து, ஒரு வினாடி தாமதித்து, பிறகு குகனுக்கு விடை கூறுவதன் நோக்கம் யாது? தங்கள் தங்களுடைய் அன்பையே பெரிது என்று கருதிக் கொண்டிருக்கும் இவ்விருவரும் (சீதை, இலக்குவன்) குகனுடைய அன்பை ஒருவேளை சரிவரக் கணிக்காமல் இருந்து விடுவார்களோ என்கின்ற கருத்துப்போலும்! அவர்கள் இருவருடைய கவனத்தையும் ஈர்க்கின்ற முறையில் சீதை, தம்பி இருவரின் திருமுகம் நோக்கினானாம் அனைவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டவனாகிய கமலக்கண்ணன். மனைவி, தம்பி ஆகிய இருவருக்கும் 'நோக்கு' ஒன்றினாலேயே அறிவுறுத்திவிட்டான்.

https://t.me/Tamil_Library

7

# கம்பன் கண்ட அறம்

இத் தமிழ் மொழியில் பெரிய நூல்கள் இயற்றிய அனைவரும் அறத்தை அடிப்படையில் கொண்டே இயற்றினர். அடிப்படையான பயன் ஒன்றையும் கருதாமல் ஓர் இலக்கியத்தை இயற்றுவதைப் பெருந்தவறு என்றே கருதினார். 'பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல், மக்கட் பதடி எனல்' என்ற அறவுரை தோன்றிய ஒரு நாட்டில், அடிப்படையான பயன் ஒன்றும் இல்லாமல் ஓர் இலக்கியம் தோன்றுதல் என்பதே இயலாத காரியம். அவ்வாறு தோன்றினாலும் அது நிலைத்து வாழாது. படித்து இன்பம் அடைவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட இலக்கியங்கள் ஏனைய மொழிகளில் தோன்றின; தோன்றுகின்றன. அந்நாட்டு இலக்கியத் திறனாய்வாளர், அதனால் தவறு ஒன்றும் இல்லையென்றே கருதுகின்றனர்.

என்றாலும் தமிழ் நாட்டில் இந்நிலை அன்று இல்லை. அதிலும் கம்பனைப்போல் பெருங்காப்பியம் பாடியவர்கள நினைத்தும் பார்க்க முடியாத ஒரு காரியம் இது. தான் இயற்றிய பெருங் காப்பியத்திலே வேறு ஒரு பயனையும் கருதாமல் ஒரு சிலர் அதனைப் படிக்கும் பொழுது உண்டாகும் இன்பம் ஒன்றையே கருதிக் கற்பர் என்பதை அவன் கனவிலும் கருதியிருக்க மாட்டான். 'இழந்த சுவர்க்கம்' பாடிய மில்ட்டன், 'உலகம் உள்ளளவும் மக்கள்

https://t.me/Tamil_Library

மறக்க விரும்பாத ஒரு பெரு நூலைப் பாடப்போகிறேன்' என்று கூறினானாம். மில்டன் அவ்வாறு வாய்விட்டுக் கூறியதையே கம்பநாடன் போன்ற பெரிய காப்பியக் கலைஞர்கள் அன்றே இந்நாட்டில் செய்து காட்டியுள்ளனர்.

எனவே, கம்பநாடன் காப்பியத்தில் பல்வகை அறங்களும் பேசப் பெற்றிருக்கும் என்று கருதிவதில் தவறு இல்லை. அறம் இரண்டு வகைப்படும். முதலாவது வகை காலத்துக்கு ஏற்ப மாறுபடும் இயல்புடையது. சத்திரம் கட்டுதல் ஒரு காலத்தில் அறமாகக் கருதப்பட்டிருக்கலாம். போக்குவரத்து வசதி என்பதே இல்லாத அப் பழங் காலத்தில் சத்திரம் கட்டுதல் என்பது அறம்தான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால், காலம் மாறி விட்டது. காலையில் கங்கையில் மூழ்கிவிட்டு மாலையில் இராமேச்சுரத்தில் புனலாடக்கூடிய வேகத்தில் பயணம் நடைபெறும் இக்காலத்தில் சத்திரம் கட்டிவைப்பது அறமன்று என்று கூறினால் தவறு ஒன்றுமில்லை. இதுபோன்ற பல அறங்கள் காலாந்தரத்தில் மாறுபடும் இயல்புடையன.

இரண்டாவது வகை எக்காலத்தும் யாவர்க்கும் பொதுவான அறங்கள். அவை என்றும் மாறுபடுவதில்லை. இவற்றை அடிப்படையான அறங்கள் என்று கூறலாம். பெருங் காப்பியம் செய்யப் புகுகின்ற கவிஞன் மாறாத இந்த அடிப்படை அறங்களிலேயே தன் கருத்தைச் செலுத்து கின்றான். அதனால்தான் அந்த நூல் தோன்றி ஆயிரம் ஆண்டுகள் கழித்துங்கூட அவை தம் மதிப்பில் குறையாமல் சமுதாயத்தில் உலவி வருகின்றன.

நிலைபெற்ற இவ்விரண்டாவது வகை அறங்கள் பலப்பல வகைப்படும். தனிப்பட்ட மனிதன் மேற்கொள்ள வேண்டிய அறங்கள் சில. அதே மனிதன் சமுதாயத்தில் வாழும்பொழுது மேற்கொள்ள வேண்டியவை சில.

https://t.me/Tamil_Library

தனிப்பட்டவன் அறங்கள், சமுதாய அறங்கள் என்று இவற்றைக் கூறலாம். இவை இரண்டையுமே கம்பநாடன் தன்னுடைய பெருங்காப்பியத்தில் பரக்கப் பேசுகின்றான்.

தனிப்பட்டவன் மேற்கொள்ள வேண்டிய அறங்கள் அவனவன் நிலைக்கும், மேற்கொண்ட வாழ்க்கைக்கும் ஏற்ப ஒவ்வொருவனுக்கும் அமைந்திருக்கும். உதாரண மாகப் பரதனை எடுத்துக் கொள்ளலாம்.

"தள்ளரிய பெருநீதித்
தனியாறு புகமண்டும் பள்ளம்"

என்று விசுவாமித்திர முனிவன் பரதனைக் குறிப்பிடுகின்றான். 'நீக்க முடியாத அறங்கள் அனைத்தும் சென்று விழும் கடல் போன்றவன்' என்ற பொருளில் பேசுகின்றான். எனவே, தனிப்பட்டவன் மேற்கொள்ள வேண்டிய அறங்கள் அனைத்தையும் பரதன் தாங்கி நிற்கின்றான்.

பரதனைப் பொறுத்தமட்டும் சில இடர்ப்பாடுகளை அடைகின்றான். அவனுடைய வாழ்க்கையில் அவன் மேற்கொண்டுள்ள தனி மனிதன் அறமும், அரச குமாரனாகப் பிறந்து விட்டமையின் மேற்கொள்ள வேண்டிய அரச அறமும் முரண்படுகின்றன. இந்நிலையில் எது சிறந்தது என்பதை அவனே ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருகின்றான். அரசன் கொடுத்த வரங் காரணமாக அயோத்தி அரசை அவனுடைய தாய் அவனுக்காகப் பெற்று வைத்தாள். வசிட்டன் முதலிய முனிவருங்கூட அவன் அரசை மேற்கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை என்றே கருதுகின்றனர்.

அரசன் இல்லாத நாடு கண் இல்லாத மனிதனையே ஒக்கும். எனவே, தசரதன் இறந்து, இராமன் காடு சென்றுவிட்டமையின் ஆட்சியைப் பரதன் மேற்கொள்வது முறைதான் என்று அரச அறம் கூறுகின்றது. இதனை

https://t.me/Tamil_Library

அறியாதவனல்லன் பரதன். அரச நீதி அதுதான் என்றாலும் தனி மனிதனுடைய அறத்தோடு அது மாறுபடுகின்றதை உணர்கின்றான் அப்பெருமகன். பரதன் என்ற மனிதன், இராமனைத் 'தாயும், தந்தையும், குருவும் ஆகவும், ஏன் வழிபடு தெய்வமாகவும் வைத்துப் போற்றுகின்றான். எனவே, தன்னுடைய வழிபடு தெய்வமாகிய இராமன் இருந்து ஆட்சி செய்ய வேண்டிய இடத்தில் தான் அமர்ந்து ஆட்சி செய்வது அவன் மனத்தாலும் நினைக்க முடியாத ஒன்று.

தனி மனிதன் ஒவ்வொருவனுக்கும் குறிக்கோள் ஒன்று உண்டு. குறிக்கோள் இல்லாத வாழ்க்கை மனித வாழ்க்கை என்ற பெயருக்கே பொருத்தமற்ற ஒன்றாகும். அத்தகைய குறிக்கோளுக்கு என்றேனும் ஒரு நாள் தீங்கு வருமாயின் அன்று உயிரை விட்டேனும் குறிக்கோளை நிலை நிறுத்த வேண்டியது தனி மனிதனுடைய கடமையாகும். எதனை இழப்பதாயினும் குறிக்கோளை இழப்பது மனிதனுக்கு அடுக்காத செயல். இராமனுக்குத் தீமை நினைத்தல், செய்தல் என்பவை பரதன் என்னும் தனி மனிதன் கனவிலும் கருதமுடியாத கொடிய செயல்கள். எனவே, தனி மனிதனாகத் தன்னைக் கருதிக் கொண்ட பரதன் தனக்கு உரிய அறம் எது என்று ஆய்கின்றான். உடனே தாயும், தந்தையும், வசிட்டனும் தந்த முடியை ஏற்றுக்கொள்ள மறுத்து விடுகின்றான்.

அரச குமாரனாகிய பரதன், மன்னன் இல்லாமல் தனக்காகக் காத்திருக்கும் நாட்டை ஆள மறுப்பது அரச அறத்திற்கு மாறுபட்டதுதான். எனினும், அந்த அறத்தைப் புறக்கணித்துத் தன்னுடைய தனி அறத்தை நிலை நாட்டுகின்றான் அறத்தின் ஆணியாகிய பரதன்.

இவைபோன்ற பலவகைத் தனி மனிதர்களுடைய அறங்களையும் விரிவாகப் பேசுகின்றான் கவிஞன்.

https://t.me/Tamil_Library

இதே போன்று சமுதாய அறங்களையும் விரிவாகப் பேசுகின்றான். சமுதாயத்தில் தனி மனிதன் பல உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது. சமுதாயத்தில் வாழும் எந்த மனிதனும் பிறன் ஒருவனுடைய மனைவியை விரும்புவது அறத்திற்கு முரண்பட்ட ஒன்றாகும். பிறன் மனைவியை விரும்புவது தனி மனிதனுடைய பண்பாட்டிற்கு விரோதமானது என்பது ஒருபுறம் இருக்க, இச்செயல் நடைபெறுவதானால் சமுதாயம் நன்கு நிலைபெற முடியாது.

பிறன் மனைவியை விரும்புகின்றவன் அரசனாயினும் ஆண்டியாயினும் ஒன்றுதான். 'மன்னர்க்கு நீதி ஒருவகை, ஏனை மாந்தர்க்கு நீதி ஒருவகை' என்ற வியாழ முனிவன் சட்டம் இங்குச் செல்லாது. இப்பெரிய அறத்தை நன்கு வலியுறுத்தவே இராம காதை எழுந்தது. இந்த அறத்திற்கு மாறாக மற்றோர் உதாரணம் இராமகாதையில் இடம் பெறுவது பொருத்தமற்ற ஒன்று. என்றாலும், வான்மீகி இராமாயணத்தில் இவ்வாறு ஓர் இடம் வரத்தான் செய்கிறது. வாலியின் மனைவியாகிய தாரை அவன் இறந்தபிறகு ஆட்சிக்குவந்த சுக்கிரீவனுடன் 'சென்று' வாழ்க்கை நடத்துகின்றாள்.

குரங்குகளின் வாழ்க்கையில் மனிதர்களுடைய அறங்களை வைத்துப் பார்க்க வேண்டிய இன்றியமை யாமை இல்லை என்று இதற்கு அமைதி கூறிவிடலாம். ஆனாலும், அந்தக் குரங்குடன் காப்பியத்தலைவன் நட்புக் கொள்கின்றான்; தம்பி முறையும் கொண்டாடுகின்றான். எனவே, அறத்தின் ஆணிவேராக உள்ள இராமனுடன் தம்பி முறை ஏற்கின்ற சுக்கிரீவன் இத்தகைய பெருந் தவற்றைச் செய்கின்றான் என்று கூறுதல் பெருந்தவறு. ஒரே வரலாற்றில் இத்துணை முரண்பட்ட நிகழ்ச்சிகள் வருவது எவ்வளவு பொருத்தமற்றது! பிறன் மனைவியை விரும்பிய காரணத்தால் இராவணன் உயிரையே இழந்தான். ஆனால்,

https://t.me/Tamil_Library

அதே பிழையைச் செய்த சுக்கிரீவன் உயிரை இழக்காததுடன் அந்த இராமனுடன் தம்பி முறையுங் கொண்டாடினான் என்பது எவ்வளவு பொருத்தமற்றது.

எனவே, கம்பநாடன் தான் காட்டும் சமுதாய அறத்தில் இத்தகைய ஒரு முரண்பாடு தோன்றுவதை விரும்பவில்லை. மூலநூலில் இஃது இவ்வாறே இருப்பினும் தாம் இதனை மேற்கொள்ள இயலாது என்ற முடிவுக்கு வருகின்றான் கவிஞன். தனி மனிதன் தன் அறத்தினின்று வழுவினால் அதனால் துன்பமடைபவன் அவன் ஒருவன் மட்டுமே யாவன். ஆனால், சமுதாய அறத்தில் ஒருவன் வழுவினால் அதனால் சமுதாயம் முழுவதற்குமன்றோ தீங்கு நேரும்! ஆதலால், இப்பெரிய தவற்றை அதாவது ஒரு தவற்றை இராவணன் செய்து உயிரை இழந்தான்; ஆனால், அதே தவற்றைச் சுக்கிரீவன் செய்து துன்பம் அடைய வில்லை. இப்படி ஒரு பெரிய தவற்றை, அறம் போதிக்கும் தன்னுடைய நூலுள் நுழையவிடவில்லை கம்பநாடன்.

மூல நூலுடன் மாறுபடவேண்டுமே என்றுகூடக் கவலைப்படாமல் கதையையே மாற்றிவிடுகின்றான் கவிஞன். கம்பநாடனுடைய தாரை, வாலி இறந்தவுடன் விதவைக் கோலம் பூண்டு வாழ்கின்றாள். சுக்கிரீவன் குடித்துக் கும்மாளம் அடித்துக் கொண்டு வாழ்பவனாக இருந்துங்கூடத் தாரையை விரும்பும் இழிகுணம் படைத்தவனாக இருக்கவில்லை. பிறன் மனைவியை நயத்தல் பெரும் பிழை என்ற பெரிய அறம் இராமாயணம் முழுவதும் இலங்கக் காண்கிறோம். இந்த அறத்தை மேற்கொள்ளாமல் மாறுபட்டவன் இராவணன் ஒருவனே. அவனும் அதற்குத் தண்டனையை அனுபவித்து விடுகின்றான்.

கம்பநாடன் தன்னுடைய பெரிய நூலுள் பல்வேறு வகைப்பட்ட அறங்களைப் பேசுகின்றான் என்பதும், அவை தம்முள் மாறுபடாமல் யாவர்க்கும் ஒப்பவே பேசப்படுகின்றன என்பதும் நன்கு விளங்கும்.

https://t.me/Tamil_Library

# 8

# கம்பன் கண்ட புலன் அடக்கம்

புலன் அடக்கம் என்ற சொல் திருவள்ளுவருடைய காலத்திற்கு முன்னர்த் தொட்டு, இத்தமிழ் நாட்டிலே வழங்கிவந்த ஒன்று. மனிதனுடைய சிறப்பைப் பறைசாற்றுகின்ற சிலவற்றுள் புலன்களும் ஒன்று. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று தமிழிலேயும், சப்த, ஸ்பரிஸ, ரூப, ரஸ, கந்தம் என்று வடமொழியிலேயும் பேசப்படுகின்றன இவை. இறைவனுடைய படைப்பின் இரகசியத்தை ஆராய்ந்து பார்த்தால், மனிதன் அனுபவிக்க வேண்டும் என்ற பெருங் கருணையினாலே ஐந்து புலன்களையும் மனிதன் அனுபவிப்பதற்கு, ஐந்து பொறிகள் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. மெய், வாய், கண், மூக்கு, செவி என்று சொல்லப்படுகின்ற இந்த ஐந்து பொறிகளும், ஐந்து புலன்களை அனுபவித்து நம்முடைய வாழ்வை முழு வாழ்வாக மாற்றுகின்ற கடப்பாடுடையன. இந்தப் பொறி புலன்களோடு கூடி வாழாத காலத்து மனிதனுடைய வாழ்வு, கேவலம் விலங்கு வாழ்வாகக்கூட இல்லாமற் போதலை அறிகின்றோம். ஒன்று தெரியலாம். எல்லா அறிவும் படைத்த மனிதன் சில நேரங்களிலே மயக்கமுற்றுக் கிடப்பானேயானால், அவனுடைய எந்தப் பொறி புலனும் வேலை செய்யாதிருத்தலைக் காண்கின்றோம். அப்படி மயக்கமுற்ற நிலையிலே, எதிரே இருக்கின்ற தூணுக்கும்,

https://t.me/Tamil_Library

பக்கத்திலே இருக்கின்ற சுவருக்கும், அவனுக்கும் வேறுபாடு இல்லை என்பதாக முடிந்துவிடுகிறது. அப்படிப்பட்ட வேறுபாட்டை உண்டாக்கக்கூடிய புலன்களைப் பெற்றுள்ள மனித வாழ்வில் ஏன் புலன் அடக்கம் செய்தல் வேண்டும் என்பது நல்ல கேள்விதான்.

படைப்பின் உண்மை அதுவானால், பொறி புலன்களை வைத்துக்கொண்டுதான் மனிதன் வாழ வேண்டும் என்பது உண்மையானால் மெய், வாய், கண், மூக்கு, செவி இறைவனுடைய கருணையினாலே நமக்குத் தரப்பட்டிருக்குமானால், அந்த மெய், வாய், கண், மூக்கு, செவிகளினாலே சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றத்தை நாம் அனுபவிக்கவேண்டும் என்பது உண்மையானால், ஏன் அவற்றை அடக்கவேண்டும்? இந்த வினாவை இன்றல்ல, நேற்றல்ல, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நம்முடைய பெரியோர்கள் கேட்டார்கள். பொறி புலன்களை ஆண்டவன் தந்திருப்பதன் நோக்கமே அவற்றை அனுபவிக்க வேண்டுமென்பதுதானே? அப்படி யிருக்க அவற்றை அடக்க வேண்டுமென்று ஏன் கூறுகிறோம் என்று கேட்டார்கள். திருமூலர் பாடினார்: "ஐந்தும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார், ஐந்தும் அடக்கும் அமரரும் அங்கில்லை" என்று. மேலும், ஐந்து பொறி புலன்களையும் அடக்க வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் அறிவில்லாதவர்கள் என்று ஒரு படி மேலேயே போய் விட்டார் திருமூலர். தம்முடைய கொள்கைக்கு ஆதாரமாக 'ஐந்தும் அடக்கும் அமரரும் அங்கில்லை', என்று கூறிய பிறகு, அவ்வாறாயின் இந்த உலகத்திலே இருக்கின்ற மக்களைப்பற்றி நீ பேசவேண்டிய இன்றியமையாமை யாது என்று கூடக் கேட்டுவிட்டார். அப்படியானால் எந்தவிதமான புலன் அடக்கமும் தேவையில்லையோ என்று நினைத்துவிடவேண்டா.

https://t.me/Tamil_Library

அடக்கம் என்ற சொல்லின் பொருளைக் கொஞ்சம் நன்கு ஆராயவேண்டும். அடக்கம் வேறு, இன்மை வேறு, பொருள் உள்ளே அடங்கியிருக்கிறதென்றால் அது இருக்கவேண்டிய எல்லையிலே இருக்கிறது என்பதுதான் பொருளே தவிர, தன்னுடைய எல்லையை விட்டு வெளிவரவில்லை என்பதுதானே பொருளே தவிர, இல்லாமற் போய்விட்டது என்ற கருத்தே அன்று. இந்த உண்மையை விளங்கிக்கொண்டாலொழிய இந்தத் தமிழன் கண்ட புலன் அடக்கத்தைப்பற்றி அறிந்துகொள்ளுதல் இயலாத காரியம். புலன் அடக்கம் என்றால் பொறி புலன்கள் தாங்கள் இருக்க வேண்டிய எல்லையைவிட்டு அப்பாற் செல்லக் கூடாது என்பதுதான் கருத்து. உதாரணமாகக் காணவேண்டுமேயானால், கண்கள் காணப் படைக்கப்பட்டன. காட்சியாகிய புலன் கண்ணாகிய பொறிக்கு உரியது. அப்படியானால், பார்ப்பதற்கென்று படைக்கப்பட்ட கண்ணை வைத்துக்கொண்டு பார்க்காதே என்று சொல்லுவது பொருத்தமுடையதா? நிச்சயமாக இல்லை. பின்னர் என்ன செய்யவேண்டும்? பார்த்தல் நன்றாக வேண்டும்; அவசியம் பார்த்தல் வேண்டும். கண்ணாகிய பொறியை மூடிக்கொண்டு பயன்படுத்தாமல் இருக்கவேண்டா. திறந்தே இருக்கட்டும். திறந்து இருக்கட்டும் என்று சொன்னவுடனே, அடுத்து வரும் கேள்வி என்ன பயனைக் கருதி என்பதாகும். பார்ப்பதாகிய பயனைக் கருதி என்ற விடையும் உடன் கிடைத்துவிடும். கண்ணைத் திறந்துபார் என்பதில் எந்தவிதமான கருத்து வேற்றுமையும் கொள்ளவில்லை நம்முடைய பெரியவர்கள். ஆனால், கண்ணைத் திறந்து எதனைப் பார்ப்பது எனபதிலேதான் கருத்து வேறுபாடு கொண்டார்கள்.

இராமகிருஷ்ணருடைய அழகான கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. துறவி யொருவன் புதிதாகத் தவம் செய்யவேண்டும் என்று முடிவு செய்துகொண்டான்.

https://t.me/Tamil_Library

எங்கேயோ யாரையோ போய்க் கேட்டான் — தவம் எப்படிச் செய்வதென்று. அவர் இந்தத் திருமூலருடைய கருத்தை நன்கு அறிந்தவர்போல இருக்கிறது. அவர் சொன்னார்: "புலன் அடக்கம் தேவையே தவிர, பொறி புலன்களையெல்லாம் நீ கொன்றுவிடவேண்டாம் அப்பா. எப்படி வேண்டுமானாலும் தவஞ் செய்யலாம்" என்றார். ஆற்றங்கரையில் ஒரு மூலையிலே துறவி அமர்ந்தான். கண்களைத் திறந்து அப்படியே பார்த்துக்கொண்டேயிருந்தான்—ஏகாக்கிரசித்தனாக. யாரோ ஒரு பெண் அந்த வழியிலே போனாள்; மனம் கெட்டது. கண்ணைத் திறந்து கொண்டிருந்ததனாலேதானே இந்தப் பிழை ஏற்பட்டது. இனி கண்ணை மூடிவிடுவோம் என்று மறுநாள் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்தான். அவள் அந்த வழியே வழக்கமாகப் போகிறவள். ஆதலால் மறுநாளும் போனாள். காலிலே போட்டிருக்கின்ற மெட்டி 'கல் கல்' என்று ஒலி எழுப்பியது. தவம் அன்றும் கெட்டுவிட்டது. உடனே துறவி, இதுவும் தவறு. கண்ணை மூடிக் கொண்டிருந்தும் பயன் இல்லை என்று நினைத்தார். காதுக்கும் கொஞ்சம் பஞ்சு அடைத்துக் கொள்ள வேண்டுமென்று நினைந்து அவ்வாறே செய்தார். மூன்றாம் நாள் கண்ணை மூடிக் கொண்டார், காதிலே பஞ்சை வைத்து அடைத்துக் கொண்டார். ஏறத்தாழ அந்த நேரம் வந்தது. நேற்று இந்த நேரத்தில்தானே அந்த அம்மையார் போனார்கள் என்று மனதிலே நினைத்தார். இதற்கு எந்தப் பஞ்சை வைத்து அடைப்பது? பொறி புலன்கள் அடக்கம் வேண்டும் என்றால்—இவற்றையெல்லாம் வைத்து ஆளுகின்றதாகிய மனத்தை அடக்குவது என்பது கருத்தே தவிர, கேவலம் கண்ணை மூடி, காதை மூடிக்கொண்டிருப்பது என்பது கருத்தன்று. காடுகள் சென்று, கனசடை வைத்து, நீ எந்தப் பொருளைத் தேடுகின்றாய் என்று ஓர் அனுபவ ஞானி கேட்கின்றார். ஏன்? அவர் கண்ட பேருண்மை அது!

https://t.me/Tamil_Library

இறைவன் கண்ணைக் கொடுத்தான் பார்ப்பதற்காக. நீ தவறான பொருளைப் பார்த்துவிட்டு கண்ணின் மீது ஏன் குறை கூறுகிறாய்? அதைத்தான் பழுத்த கிழவராகிய திருநாவுக்கரசர் பேசுகிறார்: "கண்காள்! காண்மின்களோ!" பார்க்கத்தான் நீங்கள் இருக்கிறீர்கள். இரட்டையாகப் படைக்கப்பட்டாலும் ஒரே பொருளைப் பார்க்கின் றீர்களே! ஒரு பொருளை ஒரு கண்ணால் பார்த்தால் முழுப் பயனை அடைய முடியாது என்பதற்காக இரண்டு கண்களாலும் பார்ப்பதற்குப் படைக்கப்பட்டிருக்கிறீர்கள். அவ்வாறு இருக்க, ஐயோ பாவம்! ஏன் முடிக்கொள்ள வேண்டும்? நன்றாகப் பாருங்கள். எதனை? கேவலம் இன்றிருந்து நாளை அழிவதாய், நம்முடைய மனநிலையைக் கெடுத்து, அமைதியைக் குலைப்பதாய் உள்ள பொருள் களைக் காணாமல், அழகெலாம் திரண்டு ஒரு வடிவாக இருக்கின்ற பொருளைக் காண்பதுதான் நீங்கள் படைக்கப்பட்டதன் நோக்கமே தவிர, கேவலம் அழிகின்ற பொருளைப் பார்ப்பதற்கன்று. 'காண்மின்களோ' என்று கூறினவர் எதனை என்ற வினாவுக்கு, 'கடல் நஞ்சுண்ட கண்டன்தன்னைக் கண்காள் காண்மின்களோ!' என்று விடை கூறுகிறார். பார்ப்பதற்குரிய பொருள் இருக்கிறது. அதை விட்டுவிட்டுக் கண்டவற்றைப் பார்த்துவிட்டு ஏன் உன்னையே கெடுத்துக் கொள்கிறாய் என்று கண்ணை நோக்கிச் சொல்கிறார். இந்த அடிப்படைதான், நம்மவர்கள் புலன் அடக்கத்திலே கண்ட பேருண்மை. புலன் அடக்கம் என்றால் கண்ணாகிய பொறியை மூடிவிடுவது என்ற கருத்தன்று. கண்ணாகிய பொறியை வைத்துக்கொண்டு அறனறிந்து, பயனறிந்து, திறனறிந்து பயன்படுத்தல் வேண்டும் என்பதுதான் கருத்து.

இந்த அடிப்படையிலே பார்ப்போமேயானால், கம்பநாடன் புலன் அடக்கத்தை அழகாகப் பேசுகின்றான். எதிர்மறையாலும் உடன்பாட்டாலும் பேசுகிறான்.

https://t.me/Tamil_Library

கம்பனுடைய அந்தப் பெருங் காப்பியத்தில் புலன் அடக்கம் செய்தவர்கள் ஒருபுறம் காட்சி அளிக்கின்றார்கள். புலன் அடக்கம் செய்யாதவர்களும் ஒருபுறம் காட்சி அளிக்கின்றார்கள். அதில் ஒரு தனிச் சிறப்பும் இருக்கிறது. அடக்கம் உடையவர்கள், அடக்கம் இல்லாதவர்கள் என்ற இரண்டு பிரிவாகக் கலைஞன் பிரித்தானே தவிர, இரண்டு பேரும் ஒரே தரத்தில் உள்ள மக்கள்தாம். முழுமுதற் பொருளை எடுத்துக்கொண்டு, அவன் புலன் அடக்கம் உடையான் என்றால், அதில் ஒன்றும் வியப்பில்லை. முழுமுதற் பொருள், புலன்களிலிருந்து இயல்பாகவே நீங்கினவன் என்று பரிமேலழகர் அழகாகச் சொல்லுவார். நம்மைப்போல ஐந்தையும் வைத்துக்கொண்டு திண்டாடுகிறவர்களைப் பாத்திரங்களாக்கிக் கவிஞன் அதில் ஒரு சிலரை அடக்கியவர்கள் என்றும், ஒரு சிலரை அடக்காதவர்கள் என்றும் பிரிக்கின்றான். அடக்கியவர்களுக்கும் அடக்காதவர்களுக்கும் உள்ள வேறுபாட்டை மிக அழகாக அடுத்தடுத்து வைத்துக் காட்டுகிறான். அங்கேதான் ஓர் உண்மையை நாம் அறியமுடிகிறது.

ஐந்து பொறிகளையும் ஒருசேர அடக்கிவிட்டால் பயன் ஏற்படுமா? இந்த நாட்டவர்கள் என்ன சொன்னார்கள்? 'ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயன் இன்றே' என்றார் வள்ளுவர். ஐந்து பொறி புலன்களையும் உறுதியாக முற்றிலும் அடக்கிவிட்டாலும் பயனில்லை என்கிறார் பொதுமறை தந்தவர். என்ன? பொறி புலன்களை ஓரளவு அடக்கவேண்டுமென்று சொல்லுகின்ற நாட்டிலே, வள்ளுவரா இப்படிச் சொல்லுகிறார்? ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயன் இன்றே என்று சொல்லிவிட்டாரே யென்றால், அது பெரிய உண்மை. இந்த ஐந்து உணர்வுகளையும் அப்படியே அடக்கிவிட்டால், மோட்சம் போக முடியும் என்று வைத்துக்கொள்ளுவோமேயானால், பல பொருள்கள் மோட்சத்துக்குப் போட்டிபோடும்.

https://t.me/Tamil_Library

முதலாவது கருங்கல், ஏன் என்றால் அதற்குப் பொறி புலன்கள் கிடையாது. ஐந்து பொறி புலன்களுமில்லாமல், கோயிலிலே நிற்கின்ற அந்தக் கருங்கல் மோட்சத்துக்குப் போகவேண்டாவா? போக வில்லையே! ஆண்டவனை ஏந்தி வருகின்ற பல்லக்கிலே இருக்கின்ற மரம் இருக்கிறதே அதுகூட மோட்சம் போகவேண்டும். போகவில்லையே! ஏன்? ஐந்து பொறிபுலன்கள் மரத்துக்கும் கல்லுக்கும் இல்லையே! அப்படியில்லாத அந்த மரமும் கல்லும் ஏன் மோட்சம் போகவில்லை? அந்தக் கேள்வியைத்தான் வள்ளுவர் இக்குறளில் கேட்கிறார். கேவலம் ஐந்து பொறிகளையும் அடக்கிவிட்டதனாலே பயன் இல்லை. பின்னே எது வேண்டும்? மெய்யுணர்வு வேண்டும் என்றார். பொறிபுலன்களை அடக்குவது பெரிதன்று. மயக்கம் போட்டிருக்கிறவர்கள், அபின் கஞ்சா முதலியவற்றைப் பயன்படுத்துபவர்கள் அந்த மோன நிலையிலே இருந்து விட்டார்களானால், ஒரு சிந்தனையும் வராது அவர்களுக்கு. மோட்சம் போகிறதற்கு இதுவா வழி? இந்நிலையில் இவர்கட்கு ஐந்து பொறிபுலன்களும் அடங்கிவிட்டனவே. மோட்சம் போய்விடலாமா? இப்படியெல்லாம் கருதிப் பிழை செய்வார்கள் என்று கருதித்தான், மெய்யுணர்வு வேண்டுமே தவிர, ஐயுணர்வை அடக்குவதனாலேயே பிரமாதமான காரியம் ஒன்றையும் சாதித்துவிட முடியாதென்று வள்ளுவர் கூறுகிறார்.

இந்த அடிப்படை மனத்திலே வைத்துக் கொண்டு கம்பனுடைய படைப்புகளுக்கு வர வேண்டும். புலன் அடக்கம் செய்தவர்கள் புலன் அடக்காது இருந்தவர்கள் என்ற இருவகையினரையும் காண்டல்வேண்டும். புலன் அடக்கம் செய்தவர்கள் இருக்கிறார்களே அவர்களும் புலன்களோடு பிறந்தவர்களே. ஆனால், அந்தப் புலன்களுடைய அளவறிந்து பயன்படுத்துகிறார்கள். இனி, புலன் அடக்காதவர்கள் இருக்கிறார்களே அவர்களும்


https://t.me/Tamil_Library

புலன்களோடு பிறந்தவர்கள்தாம். ஆனால், அதனை அடக்கிப் பழகாததனாலே பெருந்துன்பப்பட்டவர்கள். தாங்கள் மட்டுமின்றித் தங்களோடு சேர்ந்தவர்களையும் பெருந்துன்பத்தில் ஆழ்த்தினார்கள். இந்த வேறுபாட்டை மிக அழகாக வைத்துக் காட்டுகிறான் கவிஞன். அப்படியானால், அவர்களுக்கு முன்னே பொறி புலன்களை அடக்கியவர்கள் எத்தனையோ பேர் உண்டாயிற்றே. அவர்களைப் பார்த்து ஏன் இந்த அடக்காதவர்கள் தெரிந்துகொள்ளக் கூடாது என்று வினவலாம். நியாயமான கேள்விதான். முன்னர் போகிறவன் வழுக்கி விழுந்தால் பின்னர்ப் போகிறவன் கட்டை விரலை ஊன்றி வைத்துப் போவான் அல்லவா? இல்லை நான் போகமாட்டேன் என்று தடித்தனமாகப் போனால் இவனும் கீழே விழுந்துதான் ஆகவேண்டும். ஆகவே பொறிபுலன்களை அடக்கியவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறவர்கள், ஏன் இந்தத் தவறு செய்ய வேண்டும்? அங்கேதான் படைப்பினுடைய இரண்டாவது ரகசியம் இருக்கிறது. பொறிகளை நமக்குத் தந்த இறைவன் அவற்றை அளவறிந்து பயன்படுத்துகின்ற உரிமையையும் நம்மிடத்திலே தந்துவிட்டான். விலங்குகளுக்கும் மனிதனுக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடு இதுவே. இதே பொறிபுலன்கள் பெற்றிருக்கின்ற விலங்குகள் அவற்றை அடக்கியாளும் தன்மை உடையன அல்ல. மாடு இருக்கிறது. அதற்குக் காது உண்டு. இனிய ஓசையாகிய புல்லை அது அனுபவிக்க முடியும். ஆனால், வேண்டா என்றால் கேட்காமல் இருக்க முடியாது மாட்டுக்கு; கேட்டுத்தான் தீரவேண்டும். கண்ணுண்டு மாட்டுக்கு; காணாமல் இருக்க முடியாது.

மனிதனுக்கு அவ்வாறன்று. காது திறந்திருக்கும்; ஆனால், கேளாமலேயே இருக்கமுடியும். ஆழ்ந்த சிந்தனையில் நடக்கும்பொழுது எதிரே வருபவரை, நம்

https://t.me/Tamil_Library

கண்கள் திறந்திருப்பினும் காணுவதில்லை. அவர் அழைத்தாலும் நம் காதுகள் கேட்பதில்லை. காரணம் கண்ணாகிய புலன் மனத்தின்வழியே சேர்ந்த பொழுது தான் தொழிற்படுமே தவிர, தனியாகக் கண்ணுக்கு வேலையில்லை. இது மனிதன் பெற்ற பெருமை. இந்தப் பெருமையின் அடிப்படையை உணர்ந்து கொண்டால், புலன்களினாலே உண்டாகின்ற துன்பத்தின் எல்லையையும் ஒருவாறு உணரமுடியும். எவ்வளவுதான் அதை அடக்கவேண்டுமென்று முயலத் தொடங்கினாலும் இயல்வதில்லை. மிகப் பெரியவர்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய வாழ்விலேகூட அதனைப் பார்க்கின்றோம். தொண்டு கிழவராகிய திருநாவுக்கரசர் பாடுபட்டவர், பாவம்!

'மெய்யுளே விளக்கை ஏற்றி வேண்டளவு உயரத் தூண்டி
உய்வதோர் உபாயம் பற்றி உகக்கின்றேன் உகவாவண்ணம்
ஐவரை அகத்தே வைத்தீர் அவர்களே வலியர் சால
செய்வ தொன்று அறிய மாட்டேன் திருப்புக லூரனீரே'

பொறிகள் ஐந்தையும்பற்றிச் பேசவந்த நாவுக்கரசர், 'சால வலியர்' போலும் என்று வருந்துகிறார். இனி, கிழவராகிய அவர் புலன்களை எதிர்த்துப் போராடச் சக்தியில்லாதவர் என்று நினைக்கலாம். இளமையுடன் இருந்து எதற்கெடுத்தாலும் சண்டை போடக்கூடியவர் இருக்கிறாரே ஞானசம்பந்தர், அவரும் இவ்வாறே பாடுகிறார். 'ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்; மாயமே என்று அஞ்சுகின்றேன் வலிவலம் மேயவனே' என்ற பாடலில் 'என்னுள்ளே ஐந்து பேர் நின்று கொண்டு, என்னை வாழ விட மாட்டேன் என்கிறார்கள் ஐயா! இனி என்ன செய்ய முடியும்?' என்கின்றார். 'மாயமே என்று அஞ்சுகின்றேன் வலிவலம் மேயவனே' என்று பாடுகின்றார். எனவே, இந்தப் பொறி புலன்களை அடக்குவது என்பது அவ்வளவு

https://t.me/Tamil_Library

சுலபமான காரியமன்று என்றும், இன்னும் சொல்லப் போனால் ஓரளவு முடியாது என்றுங் கூடச் சொல்லமுடியும். அப்படி அடக்கமுடியாத இந்தப் பொறி புலன்களை அடக்குபவன் மனிதனுள்ளே உயர்ந்தவ னாகிறான். 'செயற்கரிய செய்வர் பெரியர்' என்றார் வள்ளுவர். அடக்க முடியாத பொருளை வைத்து அடக்குகின்றானே, அவன் செயற்கரிய செய்தவன் ஆகிறான். ஒரு புலனைக்கூட அடக்க முடியாத நம்போன்றல்லாது வாழ்வில் இருந்து கொண்டே ஐந்துபுலன்களையும் அடக்குகின்றானே அவன் செயற்கு அரிய செய்பவன் ஆகின்றான்.

அவ்வாறு செயற்கரிய செய்தவர்கள் பலர் கம்பனின் பெருங் காப்பியத்திலே காட்சி அளிக்கின்றார்கள். அந்த அரிய காரியத்தை, அதாவது, செயற்கரியனவற்றைச் செய்கலாதவர்கள் இருக்கின்றார்களே அவர்களும் இதில் காட்சி அளிக்கிறார்கள். ஒரு பெருங் காப்பியத்தை எடுத்துப் பார்க்கவேண்டுமேயானால், அதனுடைய பிண்டப் பொருள் யாது என்று ஆராயவேண்டும். மரபுபற்றி வருணிக்கப்பெறும் ஆற்றுப்படலங்கூட இக்கருத்தைத் தாங்கி நிற்கின்றது. அதிலும் இவனுடைய முதற் பாட்டே புலனடக்கப் பெருமை பேசுகிறது. ஆறு என்றவுடன் நீர் ஓடுகிற ஆற்றைமட்டும் கருதக்கூடாது. ஆறு என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? வழி என்பது பொருள். நீர் ஓடும் ஆற்றுக்குப் பெயரும் இது வழியாகத்தான் வந்தது. நீர் செல்லுகின்ற வழியாதலாலே இது ஆறு என்று சொல்லப்பட்டது. சொல்லப்போனால் யாறு என்ற சொல்தான் ஆறு என்றாயிற்று. வழி என்ற பொருளை யுடைய ஆறு என்ற சொல்லையே இங்குக் கவிஞன் கையாளுகிறான். இந்தப் பெருங்காப்பியம் எந்த வழியைப் பின்பற்றிச் செல்லுகிறது என்பதைக் கூறுகிறான். கோசல

https://t.me/Tamil_Library

நாட்டிலே ஓடுகின்ற அந்தச் சரையு நதியைமட்டும் வருணிப்பது முக்கியமன்று. அதைக்காட்டிலும் முக்கியமான ஒன்றையும் சொல்லுகிறான் கம்பன். கோசல நாட்டிலே உள்ள சரையு நதி, ஒருவகையாக ஓடிக் கடலிலே கலந்து விடுகிறது. அதே போல, கோசல நாட்டிலே தோன்றிய மக்களும், ஒரு வகையாக வாழ்ந்து வீடுபேற்றை அடைகின்றார்கள். இரண்டுக்கும் பொருத்தம் காட்ட வருகின்றான் புலவன்.

கோசல நாட்டிலே உள்ள சரையு நதி எவ்வாறு கடலைச் சென்று அடைந்தது? அது விருப்பம் போல் ஓடியிருந்தால் கடலை அடைந்திருக்க முடியாது. வரம்பு மீறிச் சென்றிருந்தால் தானும் கெட்டு, பிறருக்கும் அழிவை உண்டாக்கியிருக்கும். ஆனால், ஒரு வரையறைக்குக் கட்டுப்பட்டு, ஓர் ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டு, தன்னுடைய கரையிலிருந்து வழுவிச் செல்லா முறையிலே சரையு நதி சென்றது. அதுபோல, கோசல நாட்டு மக்களும், ஒரு வரையறையுடன்கூடிய எல்லைக்குட்பட்டுத் தங்களுடைய வாழ்விலே முன்னேறிச் சென்றார்கள். தண்ணீர் ஓடுவதால் தன் நெறியைக் கட்டுப்படுத்த இயலவில்லை; எனவே, நீரே இல்லாமல் வறண்டு போய் விடுகிறேன் என்று சரையு சொல்லியிருக்குமேயானால், யாருக்கும் பயன் இல்லாமல் போய்விட்டிருக்கும். அதுபோல, கோசல நாட்டிலே உள்ள மக்கள், பொறி புலனாகிய தொல்லையெல்லாம் வைத்துக்கொண்டு எங்களால் வாழ முடியவில்லை. எனவே, நாங்கள் பொறி புலன்களையெல்லாம் பயன்படுத்தாமல் காட்டிற்குப் போகிறோம் என்று சொல்லியிருந்தார்களேயானால், அவர்கட்கும் பிறர்க்கும் நன்மை பிறந்திருக்க முடியாது. ஆறும் ஓடவேண்டும்; அதில் தண்ணீரும் ஓடவேண்டும்; அதுவும் கரைகடவாமல் ஓடவேண்டும். அப்பொழுதுதான் அது பிறருக்குப் பயன்படும். அதுபோல, கோசல நாட்டிலே

https://t.me/Tamil_Library

மக்களும் வாழவேண்டும்; அவர்கள் பொறி புலன்களோடும் வாழவேண்டும். அந்தப் பொறிபுலன்களோடு வாழ்வதிலே ஓர் எல்லைக்குட்பட்டு, வரம்புக்குட்பட்டு, கட்டுப்பட்டு வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால்தான், சரையு நதி பயன்படுவதுபோல, கோசல நாட்டு மக்களும் பயன்படுவார்கள். சரையு நதி இந்த எல்லைக்குக் கட்டுப்பட்டு இலக்கணம் தவறாமல் ஓடியதால் விளைந்த பயன் யாது? அந்தக் கோசல நாட்டைப் பொன் விளைந்த நாடாக ஆக்கிற்று. கோசல நாட்டிலே பொறி புலன்களைக் கட்டுப்படுத்தி மக்கள் வாழ்ந்ததனாலே என்ன பயனைப் பெற்றார்கள்? இராமனையே தங்களிடத்தில் பெறும் பேற்றைப் பெற்றார்கள். இதைவிட வேறென்ன வேண்டும்? நதி அந்த வரையறைக்குக் கட்டுப்பட்டுச் சென்றதாலே மக்களுக்கு நல்லுணவாயிற்று. மக்கள் கட்டுப்பட்டு வாழ்வு நடத்தியதால் உலகத்திற்கு நல்வழி காட்டுகின்ற ஒரு மகனைப் பெற்றெடுத்தார்கள். இவ்வளவு கருத்தையும் மனத்திலே வாங்கிக் கொண்ட புலவன்,

**'ஆசு அலம்புரி ஐம்பொறி வாளியும்**
**காசு அலம்பு முலையவர் கண்எனும்**
**பூசல் அம்பும் நெறியின் புறம்செலாக்**
**கோச லம்புனை ஆற்(று) அணி கூறுவாம்'**

என்று பாடுகிறான்.

ஐந்து பொறிகளிலும், கண்மட்டும் சென்று பற்றும் பொறி என்றும் ஏனைய நான்கும், நின்று பற்றும் பொறி என்றும் சொல்லுவார் சிவஞான முனிவர். கண் மிகவும் பொல்லாதது. சர்க்கரை எங்கோ இருக்கிறது என்றால் நாவுக்கு ஒன்றும் தொல்லையில்லை. ஆனால், கண் அப்படியன்று, எங்கிருக்கும் பொருளையும் இது போய்ப் பற்றிக் கொண்டுவிடும். பற்றிக்கொண்டு, அது நம்மைப் படுத்துகிற பாடுதான் தெரிந்த விஷயமாயிற்றே! பொறிகளுள் இந்த

https://t.me/Tamil_Library

கண்ணே மிகவும் முக்கியமான பொறியாகலின் 'ஆசு அலம்புரி ஐம்பொறி வாளியும்' என்று ஐந்து பொறிகளாகிய அம்புகள் என்று தொடங்கினாலும் அவற்றுள் முக்கியமான ஒன்றைத் தனியே எடுத்துக் கூறத் தொடங்கிக் 'கண் எனும் பூசல் அம்பும்' எனக் கூறினான். கண், சென்று பற்றும் பொறியாயினும்—இந்தக் கண் என்னும் பூசல் புரியும் அம்பு—கோசல மக்களிடத்தில் தன்னுடைய நெறியை விட்டு நீங்குவதில்லையாம். கண்ணினுடைய பயன் இருக்க வேண்டும்; ஆனால், தவறான வழியிலே செல்லக்கூடாது. கண்ணினுடைய பயன் இருத்தல் என்பது என்ன கருத்து? கை கமலம், வாய் கமலமாகிய ஒருவனைக் காணவேண்டும். கை கமலம் வாய் கமலமாய் உள்ள ஒருவனைக் காண்பதுதான் கண்ணுக்குரிய கடப்பாடு என்றால், தவறான வழியிலே செல்லாமல் அக் கண் இருத்தல் வேண்டும். புலன் அடக்கத்தை அடிப்படையிலே கொண்டதுதான் இந்தப் பெருங்காப்பியம் என்ற கருத்தை முதல் பாடலிலேயே வைத்துக் காட்டுகின்றான் கம்பநாடன். இவ்வாறு இல்லை எனில், ஆற்றைப் பற்றிப் பேசவந்தவன், மகளிருடைய கண்ணைப் பற்றியும் பொறி புலன்களைப்பற்றியும் ஏன் பேசவேண்டும்? எனவே, புலனடக்கமே இக்காப்பியத்தினுடைய அடிப்படை என்பது விளங்கும்.

இராமன் என்ற தசரதன் மைந்தன், மனிதனாகப் பிறந்தும் அந்தப் புலன் அடக்கத்தினாலே தேவனாக உயர்கின்றான். மற்றொருவன் (இராவணன்), அதே புலனடக்கம் இன்மையினாலே புலத்தியன் மரபில் தேவனாகப் பிறந்தும் கீழே சென்று விடுகிறான். எல்லையற்ற தவங்களுக்கெல்லாம் உரியவனாக இருந்த ஒருவன்—ஆயிரம் மறைப் பொருள் உணர்ந்து அறிவு அமைந்தவனாக இருந்த ஒருவன்—'இந்திரப் பெரும் பதத்துக்கு உரியவனாக இருந்த ஒருவன்—முக்கோடி

https://t.me/Tamil_Library

வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும், முதல்வன் முன்னாள் திக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த வரமும்' உடைய ஒருவன்—கேவலம் இந்தப் புலனடக்கம் என்ற ஒன்றின்மையால் இந்த ஒரே காரணத்தால், எவ்வளவுபெரிய வீழ்ச்சியை அடைந்து விடுகின்றான்! மனிதனாகிய தசரத குமாரனாக, அரச குமாரனாகப் பிறக்கின்ற ஒருவன், சாதாரணமாக மக்களுள்ளே ஒருவனாகப் பிறந்த ஒருவன், தான் மட்டுமல்லாமல் தம்பியர், தன்னோடு சேர்ந்த நண்பர் ஆகிய அனைவருமே இந்தப் புலன் அடக்கம் என்ற ஒரு காரியத்தைச் செய்ததற்காக, வானுறையும் தெய்வத்துள் வைத்து எண்ணப்படுகின்ற நிலையை அடைகின்றார்கள். இதனை விளக்கிய கம்பனைவிட, புலன் அடக்கம் உண்மையால் பெற்ற பயனையும், புலன் அடக்கம் இன்மையால் பெற்ற தீமையையும் அழகாக எடுத்துக் காட்டியவர்கள் வேறு யார்?

புலனடக்கம் செய்தவருள் அனுமனுக்கே முதலிடம் தரல் வேண்டும். மானிட வடிவங்கூட அல்லாமல் விலங்கு வடிவம் பெற்றவன். அரச குமாரர்கள், மானிடரிலும் அழகுடையவர்களை மட்டுமே கண்டு பழக்கம் உடைய இராம இலக்குவர்கள் அனுமன் எதிரே காட்சி அளிக்கின்றார்கள். எதிரில் உள்ள குரங்கு வடிவம் இவர்களாலே விரும்பத்தக்கது என்றுகூடச் சொல்லுவதற் கில்லை. ஆனால், அந்த வடிவத்தின் தோற்றத்தில் ஓர் உண்மையைக் காணுகின்றார்கள் என்றுகூடச் சொல்லலாம். 'ஆற்றலும், நிறையும், கல்வியும், அமைதியும், அறிவும் என்னும் வேற்றுமை இவனோடு இல்லை' என்ற முடிவுக்கு வருகிறார்கள். விலங்கு வடிவமாக இருக்கின்ற இவனுடைய முகத்திலே இருக்கின்ற அந்த தேஜஸ் அல்லது ஒளியிருக்கிறதே, அந்த ஒளி காண்பவர் மனத்தில் என்னென்ன எண்ணங்களை உண்டாக்குகின்றது! ஆற்றல்,

https://t.me/Tamil_Library

நிறை, கல்வி, அமைதி, அறிவு இத்தனையும் ஒன்றாகத் திரண்டல்லவா இந்த வடிவமாகி நிற்கின்றது. இஃது எப்படி இயன்றது? ஒரு குரங்கைப் பார்த்தவுடன் தோன்றும் மனோநிலை அன்று இது. ஆனால், அனுமன் என்ற குரங்கு வடிவின் உள்ளே இருக்கின்ற அந்த உள்ளுணர்ச்சிதான் தேஜஸ் என்று சொல்லப் படுகிறது; உள்ளொளி என்றும் சொல்லப்படும். உள்ளொளி முகத்திலே காட்சி அளிக்கின்றது. அதனைப் பார்த்தவர்கள் உடனே இந்த முடிவுக்கு வருகிறார்கள். இது என்ன குரங்கு வடிவா? ஆம்! வடிவம் குரங்குதான். ஆனால் அந்த வடிவத்தின் உள்ளேயிருக்கின்ற ஒப்பற்ற ஆற்றல், ஒப்பற்ற நிறை, கல்வி, அறிவு எல்லாம் வெளிப்படக் காரணமாக அடித்தளத்திலே இருப்பது எது? அதுவே அனுமனின் புலன் அடக்கம். ஏதோ பிரமசாரி என்று சொல்லுகின்ற வடிவம் அன்று இவனுடையது. மற்று இவன் வடிவு என்ன? இவ் வுலகுக்கெல்லாம் அமைந்த ஆணியாம் வடிவம். இந்த உலகத்தின் அடிப்படையில் இருக்கின்ற அந்தப் புலன் அடக்கமே வடிவானான் அனுமன். 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்ற குறளின் இலக்கணத்தை அப்படியே வாங்குகின்றான் கம்பநாடன். அமரருள் அமரனாக ஒருவனை வைப்பதற்குக் காரணமாக அமைவது அடக்கம் அல்லவா? அந்த அடக்கத்தின் உறையுளாக இப்பொழுது திகழ்கின்றான் அனுமன். எனவே, இவனைப் பார்த்த வுடனேயே, 'இவ் வுலகுக்கெல்லாம் அமைந்த ஆணி இவன்' என்று தெரிகிறது.

உருள் பெரும் தேரைக் கண்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்; பெருமிதம் கொள்ளுகின்றோம். ஆனால், அந்தப் பெருந் தேரைக் கொண்டு செலுத்துவது சிறிய கடையாணியன்றோ! உருள் பெருந் தேர்க்குச் சிறிய அச்சாணி போன்றவர்கள் வடிவால் சிறியவர்களாக இருக்கலாம். ஆனால், தன்மையால் மலையினும் மாணப்

https://t.me/Tamil_Library

பெரியவர்களாக உள்ளனர். புலன் அடக்கம் செய்துள்ள காரணத்தால் அனுமன் மலையினும் பெரியவனாகக் காட்சி அளிக்கின்றான். புதியவர்களாகிய இராம இலக்குவர்கள், கண்டவுடனேயே அவனுடைய அந்த அடக்கத்தின் பெருமையை உணர முடிகிறதென்றால் அதன் பெருமையை எவ்வாறு கூறுவது? அடக்கம் அடக்கம் என்று நம்மவர்கள் சொல்லியது எதனை? பொறி புலன்களே இல்லாத வெறும் கற்பாறையா அனுமன்? அப்படியு மில்லை. பொறி புலன்கள் உண்டு அவனிடத்திலே. ஆனால் அவற்றை அடக்கி ஆள்கின்றான். அது எப்படித் தெரிகின்றது? 'நீ ஒப்பற்றவன் என்பதை நான் அறிவேன். ஆனாலும் நின்னுரு ஆணுரு; உன்னுடைய வடிவம், உன்னுடைய பொறி புலன்கள் ஆண் மகனுக்குரியவை என்பதை நான் அறிவேன்' என்று பின்னர் சீதை சொல்லுகிறாள் அல்லவா? 'புலன்களை அடக்கி நீ அவற்றின் மேல் ஆட்சி செலுத்துகின்றாய் என்பது உண்மைதான். என்றாலும், ஆண் என்று கூறுகின்ற உன்னைத் தீண்டவும் ஒல்லுமோ?' என்று பேசுகிறாளே, அப்பொழுதுதான் அனுமன் வெறும் பாறாங்கல்லோ, மரமோ அன்று, பொறி புலன்களுடன் கூடிய மானிடத்தன்மை பெற்றவன் என்பதை அறிகின்றோம். அனுமன் மானிடத்தன்மை பெற்றவன் என்பதை சீதையின் கூற்றாகவும், மானிடத் தன்மையை வென்று, தேவத் தன்மையிலே வாழுகின்றவன் என்பதை இராமன் கூற்றாகவும் வைத்துக் காட்டுகிறான் கவிச் சக்கரவர்த்தி. இராமன் அனுமனைப் பார்க்கும்பொழுது புலனடக்கத்தின் எல்லையிலே நிற்கின்ற ஒருவனாகக் காட்சி தருகிறான் சொல்லின் செல்வன். யார் கொல் இச்சொல்லின் செல்வன் என்று இராமன் கேட்கும் பொழுது, சொல்லின் செல்வனாக மட்டும் அவன் அவனைக் கருதவில்லை. அடக்கத்தின் திருவுருவாகவும், தேவர்களுள் வைத்து

https://t.me/Tamil_Library

எண்ணப்பட வேண்டியவனாகவும் காணுகின்றான். எந்த அடிப்படையிருந்தால் 'இந்த இளம் வயதிலேயே அனுமன் கல்லாத கலையும் வேதக் கடலும் இல்லை' என்று கலைச் செல்வனாம் இராமனே சொல்லமுடியும்! அமரருள் வைக்கும் அடக்கம் அனுமனிடம் உள்ள காரணத்தினால் தான் அடக்கத்தின் பின்னே வருகின்ற அனைத்துப் பண்புகளையும் பெற்றுவிடுகின்றான் அனுமன் என்பதை, குறிப்பில் குறிப்புணர்பவனாகிய இராமனால் காண முடிகின்றது. ஆகவே புலன் அடக்கத்தின் எல்லையற்ற பெருமையை, உருவால் சிறியவனும் மானிட வடிவங்கூட அல்லாமல் விலங்கு வடிவம் கொண்டவனுமாகிய ஒருவன் மாட்டு வைத்து, வெகு அழகாக நமக்குக் காட்டுகின்றான் கம்பநாடன்.

விலங்கு நிலையில் உள்ள அனுமனிடம் புலனடக்கம் கண்ட பிறகு மானிட நிலைமைக்கு வருகின்றோம். கம்பன் கண்ட மானிடருள் புலன் அடக்கம் என்றதும் நினைவுக்கு வருகின்றவன் பரதன். 'இந்திரியங்களை அவித்து இருத்தல் மேயினான்' என்கிறான் கவிஞன். இந்திரியங்களை அவித்தானாம் பரதன். வள்ளுவனுடைய 'அவித்தல்' என்ற இந்த அழகான சொல்லைப் பயன்படுத்தியமைக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறோம் கம்பனுக்கு? நாம்கூட இக்காலத்தில் இச் சொல்லைப் பயன்படுத்துகிறோம். 'நெருப்பில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி அவி' என்று சொல்லுகிறோம். இந்திரியங்கள் இருக்கின்றன. தொழில் படக்கூடிய இந்திரியங்கள். ஆனால், அவற்றை அவித்தானாம் பரதன். அவை தாமே செத்துப் போய்விட்டாலும் புண்ணியமில்லை. அவ்வாறாயின் அது மயக்க மருந்து உட்கொண்டு இருப்பதுபோல ஆகிவிடும். பொறி புலன்கள் உண்டு அவனிடம்; ஆனால், அவற்றை அடக்கி ஆள்கின்றான். அவித்தல் எதன்மூலம்? நெருப்பைத் தண்ணீரால் அவிக்கின்றோம். ஆனால் பொறி புலன்களை

https://t.me/Tamil_Library

மன உறுதி என்ற ஒன்றாலேதான் அவிக்க முடியும். அந்த உறுதியில்லாதவிடத்து, பொறி புலன்களை அவித்தல் இயலாத காரியம். ஆகவே, 'இந்திரியங்களை அவித்து இருத்தல் மேயினான்' என்றால் தன்னுடைய உறுதி என்ற ஒன்றினாலே பரதன் அவித்து விட்டான். பிடிவாதத்துடன் இந்திரியங்களை அவித்தவர்கள் பலர் உண்டு. ஆனால், அவித்த பிறகு அவர்கள் இருக்க மாட்டார்கள். 'பொறுக்க முடியாத இந்தத் துயரத்தைப் போக்கிக் கொள்ள எனது உயிரையே மாய்த்துக் கொள்கிறேன்' என்று கடிதத்தை எழுதிவைத்துவிட்டுப் போவார்கள். இவ்வாறு செய்வதாற் பயன் யாது? அதை நினைந்து பார்க்கின்றான் கம்பன் இங்கே. பொறி புல 'இந்திரியங்களை அவித்து' என்று அதோடு நிறுத்தாமல், 'இருத்தல் மேயினான்' என்று கூறுகின்றான். பொறிபுலன்களை அவித்தவர்கள் நீண்ட காலம் வாழ்வது என்பது கடினம். ஆனால், இதோ பரதனைப் பாருங்கள். இவன் வானுறையும் தெய்வத்துள் போகின்ற சூழ்நிலையில் பொறிபுலன்களை உறுதி என்னும் துணை கொண்டு அவித்தான். அந்த அவித்தலாகிய முயற்சியில் இறந்துவிட்டான் என்று யாரும் கருதிவிட வேண்டா! இருத்தல் மேயினான்! இருத்தலைப் பொருந்தினான் என்று சொல்லும்பொழுது, அவித்தலில் இருக்கின்ற பெருந்தொல்லையும், அவித்தல் முயற்சியில் பலரும் தோற்றுப் போகின்ற உண்மையும், ஆனால் பரதன் அவித்தலாகிய பெருஞ் செயலைச் செய்து பின்னரும் வாழுகின்ற ஒரு பேருண்மையும் ஆகிய எல்லாவற்றையும் எடுத்துக் காட்டிவிடுகின்றான் கவிச்சக்கரவர்த்தி.

'இந்திரியங்களை அவித்து இருத்தல் மேயினான்' யார்? 'அந்தியும் பகலும் நீர் அறாத கண்ணினான்'. இதுவும் நமக்கு ஒரு பேருண்மையை எடுத்துக் காட்டுகின்றது. இந்தப் பொறி புலன்களை அடக்கத் தொடங்குகின்றவர்கள் எத்தகைய வழியை மேற்கொள்ளவேண்டும்? திடீரென்று,

https://t.me/Tamil_Library

இன்று முதல் பொறி புலன்களை அடக்கப் போகின்றேன் என்று ஆரம்பித்தால், அஃது அவ்வளவு எளிதாக இயலுவதன்று. அல்லாமலும் புலன் அடக்கம் செய்யப் போகின்ற நிலையிலே, அப்பொறி புலன்கட்குப் பற்றுக் கோடாக உள்ள உலகப் பொருள்களை வைத்துக்கொண்டு புலன் அடக்கம் செய்தல் என்பது மிகவும் கடினமான காரியம். குடும்பத்தையும் சுக வாழ்வையும் நீக்கிக் காட்டில் வாழ்ந்த இலக்குவனுடைய அடக்கத்தைப் பெரிதாகப் பாராட்ட முடியாது. அனுபவப் பொருள் இல்லாத பொழுது புலன் அடக்கத்தில் என்ன புதுமை? ஆனால், பரதனுடைய புலன் அடக்கம் தனிச் சிறப்பு வாய்ந்தது. ஏன்? மனைவியோடு அரண்மனையில் வாழ்ந்தும் புலன் அடக்கம் செய்கின்ற சிறப்பு எல்லையில்லாத பெருமையுடையது. இல்லாத பொருளிடத்துத் தனக்குப் பற்றில்லை என்று ஒருவன் கூறுவதில் பெருமை இல்லை. 'வறுமை' என்ற சொல்லுக்குப் பொருள் எழுத வந்த பேராசிரியர் 'செல்வம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம்' என்று கூறினார். வறுமை என்பதற்குச் செல்வம் இன்மை என்று பொருள் கூறினால் தவறு நேர்ந்துவிடும். செல்வம் இல்லாதவன் இருக்கின்றானே அவன் வறியவன் அல்லன். அப்படியானால், உலகத்திலே ஒன்றும் வேண்டா என்று துறந்து போகின்றவனை வறியவன் என்று சொல்ல முடியுமா? அவன் வறுமை உடையவனாக இல்லை. ஆனால், பொருள் இல்லாத இடத்து ஓயாது அது இருந்தால் நலம் என்ற பற்றுள்ளம் கொண்டவன்தான் வறியவன். உலகப் பொருள்களை வைத்துக்கொண்டே புலனடக்கம் செய்கின்றேன் என்று சொல்கிறார் ஒருவர். 'உங்களுக்கு வேண்டியது துறவுதானே? நான் வீட்டிலேயே இருக்கிறேன். இருந்துகொண்டே புலனடக்கம் செய்கிறேன். நீங்கள் எதற்கு என்னைத் துறந்து போ என்று சொல்கிறீர்கள்' என்று கேட்கிறான் ஒரு சீடன். 'அப்பா, அதில் ஒரே ஒரு சின்னத்

https://t.me/Tamil_Library

தொல்லைதான் இருக்கிறது. பொருளை வைத்துக்கொண்டு புலனடக்கம் செய்கிறேன் என்று ஆரம்பித்தாயேயானால், கொல்லாவிரதி ஒருவன் 'நான் கையிலே மட்டும் ஒரு கூர்மையான கத்தியை வைத்துக்கொண்டு இருக்கிறேன்' என்று சொல்வதுபோல என்று கூறுகிறார் 'கொலை மறுத்தல்' ஆசிரியராகிய சாந்தலிங்க அடிகளார். அந்த வாளை வைத்துக் கொண்டிருந்தால், 'இரும்பு பிடித்தவன் கையும் சிரங்கு பிடித்தவன் கையும் சும்மா இராது' என்ற முதுமொழிப்படி ஏதாவது தொல்லை விளையும். கத்தி எடுத்தவன் சும்மா இருப்பதில்லை. அது போலப் பொருளை வைத்துக்கொண்டு இருப்பவன் புலனடக்கம் செய்யமுடியாது என்று கருதினார்கள்.

அதுவும் ஒருவகையில் உண்மைதான். ஆனால், எவனொருவன் பொருளையும் வைத்துக்கொண்டு அதன் மேலும் புலன் அடக்கம் செய்துவிட்டானோ அவன் மாந்தருள் தலைவனாக விளங்குகின்றான். பரதன் எதிரே அரசியல் செல்வம் இருக்கின்றது; மனைவி எதிரே இருக்கின்றாள்; எல்லாவிதமான போக போக்கியங்களும் இருக்கின்றன. 'என்னுடைய அண்ணன் அங்கே அடகு, கனி முதலியவற்றை உண்டு காட்டில் வாழ, யான்மட்டும் வெண்சோறு உண்பேனா' என்று பரதன் கருதுகிறான். அதுதான் உண்மையான புலனடக்கம். ஒன்றும் கிடைக்காத காட்டில் வாழ்ந்த இலக்குவனுடைய புலனடக்கத்தைக் காட்டிலும் அனைத்தையும் எதிரே வைத்துக்கொண்டு தொடமாட்டேன் என்று வாழ்கின்ற அந்தப் பரதனுடைய புலனடக்கத்தை நினைக்கும் பொழுது கம்பனுடைய சொல்நயம் தெரிகிறது. இந்திரியங்களை அவித்து வாழ்வது இதுதான் என அறிகிறோம். 'வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை. யாண்டும் அஃது ஒப்பது இல்' என்று வள்ளுவன் கூறிய பேருண்மையை நமக்கு எடுத்துக் காட்டுகின்றதாக அமைகின்றது பரதனுடைய

https://t.me/Tamil_Library

புலனடக்கம். அப்படிப் புலனடக்கம் செய்வதற்கு அடிப்படை எது என்பதைக் கம்பன் இரண்டாவது வரியிலே வைத்துக் காட்டுகின்றான். புலனடக்கம் செய்யப் போகின்றவன் எப்படித் தொடங்குவது? கண்ணை, காதை மூடிக்கொண்டு இருக்கிறேன் என்பது நடவாத காரியம். அப்படியானால், என்ன செய்யவேண்டும்? இந்தப் பொறி புலன்களை அவற்றின் விருப்பப்படி ஓடவிடாமல் நாமே ஒரு வழியில் செலுத்த வேண்டும். சும்மா இரு என்றால், இந்த மனம் ஒரு பேய்க் குரங்கு ஆகலின் அது தாவிக் கொண்டேதான் இருக்கும். எதை நினைக்க வேண்டா என்று சொல்கிறோமே அதை நினைத்துக் கொண்டேதான் இருக்கும். ஏன்? மனத்தின் வேலை நினைத்தல்; கண்ணின் வேலை பார்த்தல்; காதின் வேலை கேட்டல்; பாராமல், கேளாமல் இரு என்றால் அவை இரா. வேறு வழி என்ன? மறுபக்கம் செலுத்துவதுதான் அந்த வழி.

'ஐந்தும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்' என்று திருமூலரில் தொடங்கினோமே, அவரும் இக் கருத்தைத்தான் கூறுகிறார். 'ஐந்தும் அடக்கும் அமரரும் அங்கில்லை!' கண்ணை வைத்துக்கொண்டு காணாமல் இருக்க முடியாது. அப்படியானால் அழியும் பொருளைக் கண்டு வாழ்வைக் கெடுத்துக் கொள்ளாமல் கடல் நஞ்சு உண்ட கண்டன்தன்னைக் காண் என்றார்கள். அதுபோல, புலனடக்கம் செய்யப் போகின்றவன் எந்த வழியை மேற்கொள்ள வேண்டும்? பரதன் மேற்கொண்ட வழியைக் கவிஞன் சொல்கின்றான். 'அந்தியும் பகலும் நீர் அறாத கண்ணனாக' வாழ்ந்தான் அவன். இரவு பகல் வேறுபாடற்று, கண்ணீர் அருவியாகப் பாய்கின்ற ஒரு சூழ்நிலையிலே அவன் மனம் போய்விட்டது. ஆகவே, எதிரே இருந்த பொருள் எதனையும் அவன் அனுபவிக்க வில்லை. உள்ளம் உறுதிப்பாட்டிலே நின்றது; இராமனை நினைந்து நின்றது; அவனிடத்திலேயே ஈடுபட்டது. ஆகவே,

https://t.me/Tamil_Library

அவனுடைய மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐந்தும் இராம பக்தியிலே ஈடுபட்ட காரணத்தால்தான் பொறி புலன்களை அடக்க முடிந்தது. அந்தியும் பகலும் நீர் அறாத கண்ணனாக இருந்தான். ஆகையால், அந்தக் கண்ணினால் எதையும் பார்க்க இயலாது; வாய் இராமனுடைய பெயரையே சொல்லிக்கொண்டிருந்தது. ஆகலின், அந்த வாயில் வேறு அவச் சொல் எவ்வாறு வரமுடியும்? இராமனுடைய புகழை ஓயாது காது கேட்டுக்கொண் டிருந்தது. ஆகலின், அந்தக் காதில் வேறு அவச் சொல்லை எவ்வாறு கேட்கமுடியும்?

இது கருதித்தான்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு"

என்ற குறளும் தோன்றிற்று.

இவ்வாறு அந்தப் பொறி புலன்களுக்கு ஒப்பற்ற ஒரு திருப்பம் கொடுக்கையில்தான் கம்பனுடைய அறிவு நுணுக்கத்தையும் காண்கின்றோம். ஆகவே, புலனடக்கம் வேண்டும் என்பதுடன் அந்தப் புலனடக்கத்தை எவ்வாறு செய்தல் வேண்டும் என்பதையும், அழகாக, குறிப்பாக வைத்துக் காட்டுகிறான்.

இத்தகைய பரதனுக்கும் ஒரு சமயத்தில் புலனடக்கம் செய்ய இயலாமல் போய்விடுகின்றது. அதை நினைத்துப் பார்க்கின்றோம். பொறி புலன்களை எல்லாம் அவித்து வாழ்கின்றவனாகிய பரதன் தாயைக் கொலை செய்வேன் என்று பேசுகிறான். அப்படிக் கண் மூடிக் கண் திறப்பதற்குள் உன்னைப் பொடி சூர்ணம் ஆக்கி விடுவேன். தாயெனும் பெயர் எனைத் தடுக்கமுடியாது என்ற கருத்தில்,

**"ஏ எனும் மாத்திரத்து எற்று கின்றிலேன்
தாய் எனும் பெயர் எனைத் தடுக்க லாவதோ?"**

https://t.me/Tamil_Library

என்று பேசுகிறான். கோபத்தை அடக்குதல் என்பதும் புலனடக்கத்தில் ஒன்று. புலனடக்கத்தின் உச்சியிலே நிற்கின்ற பரதனுக்கு இவ்வளவு கோபம் வரலாமா? முறையல்லவே! அதுவும் தாயைப் பார்த்தா இவ்வாறு கோபம் கொள்வது? அங்கேதான் ஒரு பேருண்மையை அறியவேண்டும். புலனடக்கம் தேவை. சினம் அடங்கிவிட வேண்டும். அது கடினம்தான். 'சினம் அடங்கக் கற்றாலும் சித்தியெலாம் பெற்றாலும்' என்று சொல்லும் பொழுது சினம் அடங்கக் கற்றல் அவ்வளவு எளிதன்று என்று தாயுமான அடிகள் கூறுகிறார். அப்படியானால் அந்த அடிப்படைத் தத்துவத்திலேயே தவறிவிட்டானா பரதன்? இல்லை. சினம் அடங்கக் கற்றவன்தான். ஆனாலும், அதற்கும் ஓர் எல்லை உண்டு. தனக்கு ஊறு நேர்ந்துவிடத்துச் சினத்தைத் தவிர்த்துவிட வேண்டும். ஆனால், கொள்கைக்கு ஊறு நேர்ந்த இடத்துச் சினம் வந்தே தீரல்வேண்டும். இதற்கு விளக்கம் சொன்னவர் நம்முடைய மகாத்மா காந்தி ஒருவர்தான். 'பிற பெண்களுக்குத் துன்பம் செய்கின்றவர்களை நாங்கள் பார்த்துக் கொண்டு அஹிம்சையைக் கடைப்பிடித்துச் சும்மா இருந்துவிடலாமா?' என்ற வினாவிற்கு கை இரண்டையும் சும்மா வைத்துக்கொண்டு பிறர் துயரத்தைப் பார்த்துக்கொண்டு அஹிம்சை என்று கூறிக்கொண்டு சும்மா இருப்பவன் முட்டாள் என்றார். ஏன்? உனக்கு வருகின்ற துன்பத்தைப் பொறுப்பது அஹிம்சையின் பாற்படுமே தவிர கண்ணுக்கு எதிரே ஒருவர் படும் துன்பத்திலிருந்து அவரைக் காப்பாற்ற வில்லையானால், உன்னுடைய கை இருந்தும் பயன் என்ன? இந்த விளக்கம்தான் கம்பனால் பேசப்படுகின்றது. பரதனாகிய தனக்குக் கைகேயி தீங்கு செய்திருந்தால், அதைப்பற்றி அவன் கவலையுற மாட்டான். ஆனால், 'எம் முன் நீ, தம் முன் நீ, என் வழிபடு தெய்வமும் நீ' என்று பரதனால்



https://t.me/Tamil_Library

அவனுடைய மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐந்தும் இராம பக்தியிலே ஈடுபட்ட காரணத்தால்தான் பொறி புலன்களை அடக்க முடிந்தது. அந்தியும் பகலும் நீர் அறாத கண்ணனாக இருந்தான். ஆகையால், அந்தக் கண்ணினால் எதையும் பார்க்க இயலாது; வாய் இராமனுடைய பெயரையே சொல்லிக்கொண்டிருந்தது. ஆகலின், அந்த வாயில் வேறு அவச் சொல் எவ்வாறு வரமுடியும்? இராமனுடைய புகழை ஓயாது காது கேட்டுக்கொண் டிருந்தது. ஆகலின், அந்தக் காதில் வேறு அவச் சொல்லை எவ்வாறு கேட்கமுடியும்?

இது கருதித்தான்,

**"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை**
**பற்றுக பற்று விடற்கு"**

என்ற குறளும் தோன்றிற்று.

இவ்வாறு அந்தப் பொறி புலன்களுக்கு ஒப்பற்ற ஒரு திருப்பம் கொடுக்கையில்தான் கம்பனுடைய அறிவு ணுக்கத்தையும் காண்கின்றோம். ஆகவே, புலனடக்கம் வண்டும் என்பதுடன் அந்தப் புலனடக்கத்தை எவ்வாறு சய்தல் வேண்டும் என்பதையும், அழகாக, குறிப்பாக வைத்துக் காட்டுகிறான்.

இத்தகைய பரதனுக்கும் ஒரு சமயத்தில் புலனடக்கம் இயலாமல் போய்விடுகின்றது. அதை நினைத்துப் ின்றோம். பொறி புலன்களை எல்லாம் அவித்து ின்றவனாகிய பரதன் தாயைக் கொலை செய்வேன் பேசுகிறான். அப்படிக் கண் மூடிக் கண் தற்குள் உன்னைப் பொடி சூர்ணம் ஆக்கி விடுவேன். னும் பெயர் எனைத் தடுக்கமுடியாது என்ற கருத்தில்,

**"ஏ எனும் மாத்திரத்து எற்று கின்றிலேன்**
**தாய் எனும் பெயர் எனைத் தடுக்க லாவதோ ?"**

https://t.me/Tamil_Library

போற்றப்படுகின்ற இராமனுக்கு, தன்னுடைய வாழ்வின் குறிக்கோள் என்று பரதன் கருதிய இராமனுக்கு அல்லவோ கைகேயி தீங்கு செய்ய நினைத்து விட்டாள். தன் கொள்கை அழிந்தபொழுது பரதன் சீறி எழுகின்றான். பரதன், அவன் தாய் என்ற அந்த உரிமை அப்பொழுது அற்றுவிடுகிறது. கொள்கையும், கொள்கைக்கு அடியிலே நிற்கின்ற மானிடர்களும் என்ற அடிப்படைதான் அங்கு விளங்குகின்றது. ஆகையால், கொள்கைக்கு எப்பொழுது ஊறு நேர்ந்தாலும் அங்கே கோபம் வருகின்றது. எனவே, புலனடக்கம் என்று பேசிக்கொண்டு கொள்கையை விட்டுவிடுதல் புலனடக்கம் இல்லை. அந்தப் புலன்களை வைத்துக்கொண்டு ஆள்கிறதுதான் புலனடக்கம் என்பதைப் பரதனுடைய வாழ்வில் காண்கின்றோம். புலனடக்கம் செய்தான் எனினும், அஃது எங்கே தேவையில்லையோ அங்கே இந்தப் புலனடக்கத்தை உதறி விடுகின்றான்.

இதன் எதிரே இராவணனுடைய புலனடங்காத நிலையையும் காண்கின்றோம். இராமன் சீதையை மேன்மாடத்தில் கண்டு உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டு உறக்கம் இன்றி வருந்துகிறான். இராவணனும் சீதைபாற் கொண்ட தகாத காமத்தால் பெரிதும் வருந்துகிறான். எனவே, இரண்டும் ஒன்றுதான் என்று கூறிவிட முடியுமா? புலனடக்கம் என்றால் புலனை அவித்து விடுவது என்று பொருள் இல்லை! எல்லை கட்டி வாழ்வது என்பதே பொருள். இராமனுடைய காதல் வரம்பிலே நின்றது; இராவணனுடைய காமம் வரம்பு கடந்தது. அடுப்பிலே நெருப்பிருக்குமேயானால் அருமையான சோறு கிடைக்கும். கூரையிலே நெருப்பு பற்றுமேயானால் என்ன நிகழும்? தையலும் தானுமாய் இரவிலே இராமன் நிற்கும்பொழுது, அஃது ஒப்பற்ற காதலாக மிளிர்கின்றது. ஆனால், மற்றொருவன் இல்லுறை தவத்தியிடத்து இரக்கங் காட்டாமல் தவறான வழியிலே இராவணன் செல்கின்ற

https://t.me/Tamil_Library

பொழுது அதே காதல் வரம்பு கடந்ததாய், புலனடக்கத்தின் அப்பாற் பட்டதாய், புலன்களையே கொல்லுவதாய், புலனுக்கு அடிப்படையாய் இருக்கின்ற மனத்தைச் சரிப்பதாய், அந்த மனத்தின் தலைவனாய் இருக்கின்ற இராவணனையும் அழிப்பதாய் அமைந்துவிட்டது. ஆதலின், புலன் அடக்கம் என்பது நெருப்புப் போன்றது. புலன்களை வைத்துத்தான் வாழவேண்டும். நெருப் பில்லாமல் வாழ முடியாது. ஆனால், நெருப்பிற்கு உரிய இடம் எங்கே? அதனுடைய எல்லை எது? அதனுடைய பயன் யாது என்பதை ஆராய்ந்து, வேண்டிய இடத்தில் பற்ற வைத்து, வேண்டிய அளவு பற்றவைத்து, எவ்வாறு அதனால் பயனடைவது அறிவுடைமையோ அவ்வாறு ஐந்து பொறி புலன்களையும் வைத்துக்கொண்டு எல்லையிலே நின்று, அதனால் ஏற்படுகின்ற பயனையும் பெற்று, ஐந்தையும் அடக்கக் காட்டுக்கு ஓடாமல் வீட்டிலேயே இருந்து பயனடைவது இந்தத் தமிழனுடைய பண்பு. இந்த அறத்தைத்தான் பரதனுடைய வாழ்வாக— இராமனுடைய வாழ்வாக—சீதையினுடைய வாழ்வாக வைத்துக் காட்டுகின்றான் கம்பநாடன்.

ஆனால், நெருப்பைக் கூரையிலே பற்ற வைத்தது போல, புலனடக்கத்தை விட்டுவிட்டு ஒருவன் பெருந் தவறிழைக்கின்றான். அதுமட்டுமா! புலனடக்கத் தேவையை தசரதனிடத்திலேயும் வைத்துக் காட்டுகின்றான் கவிஞன். அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆண்ட அவனுக்கு இன்னுங்கூட ஆசையை அடக்கத் தெரியவில்லை. 'மைந்தனை அலாது உயிர் வேறு இல்லாத மன்னன்' என்று நினைக்கும் பொழுது, அது போற்றத்குந்த பண்பாடுதான் என்கின்றோம். ஆனால், மைந்தரின்மேல் ஆசையாக இருப்பினும், ஆசை எல்லை மீறுமேயானால், மைந்தன் கடவுளாகவே இருப்பினும் அவன் மாட்டு அளவு கடந்து ஆசை வைத்தமையின் தசரதன் உயிரையே இழக்கின்றான்.

https://t.me/Tamil_Library

இது கருதியே போலும் “ஆசை அறுமின்கள்; ஆசை அறுமின்கள்; ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்” என்று திருமூலர் எச்சரிக்கின்றார். இறைவன் தந்த பொறி புலன்களை அடக்கி ஆளத் தெரிந்துகொண்டால், மனிதன் தெய்வமாகிறான். எடுத்துக்காட்டு: பரதன், அனுமன், இராமன் ஆகியோர். வரத்தால் மிக்கிருப்பினும் புலனடக்கம் இல்லையெனில் மனிதன் விலங்காகி மடிகின்றான். எடுத்துக்காட்டு: சூர்ப்பணகை, இராவணன் முதலியோர். இதுவே கம்பன் கண்ட புலனடக்கம்.

https://t.me/Tamil_Library

# 9

## வாலி—ஒரு புதிய கண்ணோட்டம்

இராம காதையில் மிகச் சிறந்து விளங்கும் பாத்திரங்களுள் வாலியும் ஒருவன். வான்மீகத்தில் ஒரு குரங்காகவே அவன் காட்சியளிக்கிறான். அங்கு நடைபெறும் இராம—வாலி சொற்போரும் இருவர் தரத்தையும் உயர்த்துவதாக இல்லை. ஆனால் கம்பநாடன் படைத்த வாலி ஒப்புயர்வற்றவனாக விளங்குகிறான். கம்பநாடன் காப்பியத்தில் ஈடு இணையற்ற வீரர்களாய், பரம் பொருளே நேரே வந்து தம்மை அழிக்கவேண்டிய சிறப்பும் பெற்று விளங்கும் மாவீரர் மூவராவர். இரணியன், வாலி, இராவணன் என்ற மூவருள் இறுதிவரை விட்டுக் கொடாமல் இறந்தவர் இரணியனும், இராவணனுமாவர். வாலியைப் பொறுத்த மட்டில் ஒரு புதிய உத்தியைக் கையாள்கிறான் கவிச் சக்கரவர்த்தி.

இப்புதிய உத்திக்கு அவன் வாலியின் மூலம் வடிவு கொடுக்க முடிவு செய்தான். அதன் பயனாக வீரம் எது? அறவீரம் எது? எந்த ஒரு செயலையும் அறவீரம் என்று கூற முடியுமா? அல்லது காண்பான் காட்சி அளவில் இவை முடிவு செய்யப்படுகின்றனவா? என்பவை போன்ற அடிப்படை வினாக்களையும் ஆராயும் நிலை ஏற்பட்டு விட்டது. குற்றமற்ற வீரம் என்றால் என்ன? என்ற வினாவும் தோன்றிவிட்டது.

https://t.me/Tamil_Library

இவ்வகையான வினாக்களுக்கும் விடைகாண வேண்டிய சூழ்நிலையில் இப்பாத்திரத்தைக் கவிஞன் படைத்து விட்டமையின் ஏனைய பாத்திரங்கள் போலல்லாமல் வாலி தனித்து விளங்குகிறான். காப்பியத் தலைவனாகிய இராமனை வாலி ஏசுகின்ற ஏச்சுக்கு அளவே இல்லை. அளவாலும் தரத்தாலும் அவை வலிமையான வினாக் கணைகள் என்பதை அவற்றை ஒரு முறை படிப்பாரும் உணராமல் இருக்க முடியாது. இறுதி வரை இராமனோ அன்றி நாமோ விடை கூற முடியாத வினாக்கள் பலவற்றைத் தொடுக்குமாறு செய்கிறான் கவிஞன். அவ்வாறு ஏசிய பிறகு திடீரென்று வாலி மனம் மாறி இராமனை நோக்கித் 'தீயன பொறுத்தி என்றான்— சிறியன சிந்தியா தான்' (125) என்று வாலி கூறுவதாகப் பாடல் செல்கிறது. இத்துணைத் தூரம் இராமனை ஏசிய ஒருவனைச் சிறியன சிந்தியாதான் என்று கவிஞன் கூறுவது வியப்புத்தான்!

இன்று ஆயிரக்கணக்கான பேர்களால் வாலி வரலாறு பேசப் பெறுகின்றது. ஆனால் யாரும் வாலியின் இந்த மாற்றத்திற்குக் காரணத்தை ஆய்ந்து அமைதி தரும் விடை கூறினதாகத் தெரியவில்லை. முன்வாலி, இடைவாலி, பின்வாலி என்று பிரித்துக் கூறுகிறார்களேனும் இம்மூன்று மனமாற்றம் வாலியின்பால் ஏன் எவ்வாறு உண்டாயிற்று எனக் கூறவில்லை. அன்றியும் 'வாலிவதம்' என்றும், 'வாலி மோட்சம்' என்றும் இரு வேறு கருத்துக்கள் பரவலாகப் பேசப்படுகின்றன. வாலிவதம் என்பார் அவன் ஓரம்பினால் உயிர் விட்டதைக்கூட மறந்து ஏதோ பல நாள் அவன் வதைக்கப்பட்டது போலக் கருதிக்கொண்டு இப்பெயர் சூட்டுகின்றனர். இவ்வாறு கூறும் பொழுது வதைக்கப்பட வேண்டிய அளவு அவன் பெருங்குற்றம் இழைத்தான் போலும் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

https://t.me/Tamil_Library

*வாலிமோட்சம் என்பார் கூற்றில், பரம்பொருள் கையால் இறக்கும் பேறு பெற்றவன் என்பது குறிப்பாகத் தொனிக்கிறது. வாலியின் சாவு வதமானாலும், மோட்ச மானாலும் கம்பநாடன் காட்டிய முறையில் ஒரு புதிர் இருக்கத்தான் செய்கிறது. இப்புதிரை அவிழ்க்க முடியுமா என்ற முயற்சியே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.*

*கம்பநாடன் கூற்றை ஆதாரமாகக் கொண்டே இவ்வாராய்ச்சி நடைபெற வேண்டும். கவிஞன் பாடலை யொட்டி இந்நிகழ்ச்சி நடைபெறும் முறையைக் காணலாம்:*

*இராமனிடம் நட்புப் பூண்டான் சுக்கிரீவன். அவன் மனைவியை இழந்தவன் என்று அறிந்தவுடன் இராமன் 'உலகம் ஏழினோடு ஏழும் வந்து அவன் உயிர்க்கு உதவி விலகும் என்னினும் வில்லிடை வாளியின் வீட்டி, தலைமையோடு நின் தாரமும் உனக்கு இன்று தருவன் புலமையோய்! அவன் உறைவிடம் காட்டு, (நட்பு—72) என்று கூறிவிட்டான். இவ்வாறு கூறும் பொழுது வாலியின் இயல்பை இராமன் அறியவில்லை என்று கூற முடியாது. இதற்கு முன்னரே மாருதியாகிய சொல்லின் செல்வன் வாலியைப் பற்றி 13 பாடல்களில் விவரமாகக் கூறிவிட்டான். இவ்வியல்புகள் பின்னர் விரிவாக ஆராயப்படும். இங்ஙனம் கூறும் பொழுதே பொருதற்கு எதிர்ப்பட்டவர் யாவராயினும் அவருடைய வலியிற் பாதி வாலிக்குச் சென்றுவிடும் என்ற தனிச் சிறப்பையும் அனுமன் கூறிவிட்டான்.*

"கிட்டுவார் பொரக்
கிடைக்கின், அன்னவர்
பட்ட நல்வலம்
பாகம் எய்துவான்
எட்டு மாதிரத்து
இறுதி, நாளும் உற்று

https://t.me/Tamil_Library

அட்ட மூர்த்தி தாள்
பணியும் ஆற்றலான்"

எனவே வாலியையும், அவன் பெற்றிருந்த வரத்தின் வன்மையையும் நன்கு அறிந்த பின்னரே இராமன் சுக்ரீவனிடம் 'தலைமையோடு தாரமும் தருவன்' என்று பேசுகிறான் என்றால் வாலியை எவ்வாறு கொல்ல வேண்டும் என்பதை இராமன் அப்பொழுது முடிவு செய்துவிட்டான் என்றுதான் கொள்ள வேண்டும். இந்த ஊகம் சரியானதே என்பதைக் கம்பன் பாடலும் சான்றாக நின்று அறிவுறுத்துகின்றது. சுக்ரீவனைப் பார்த்து 'நீ வாலியை அழைத்து அவனுடன் போரிடுக' என்று கூறவந்த இராகவன்,

'அவ்விடத்து, இராமன், 'நீ
அழைத்து வாலி ஆனது ஓர்
வெவ்விடத்தின் வந்து போர்
விளைக்கும் ஏல்வை, வேறு நின்று,
எவ்விடத் துணிந்து அமைந்தது;
என் கருத்து இது' என்றனன்
தெவ் அடக்கும் வென்றியானும்
'நன்று இது' என்று சிந்தியா' (வா.வ.ப.)

'வேறு நின்று (மறைந்து நின்று) எவ்விடத் துணிந்து அமைந்தது; என் கருத்து இது' என்று கூறினான். இதனைக் கேட்ட சுக்கிரீவன் இராமனுடைய இச்செயலைச் சிந்தித்தான் என்பதால் இது சீரிய செயலன்று என்பதைச் சுக்கிரீவன் உணர்ந்தாலும் இராமன் தக்க காரணமின்றி இம் முடிவுக்கு வரமாட்டான் எனக் கருதி வாளா இருந்து விட்டான்.

சுக்கிரீவன், வாலி இருவர் போரிடை, சுக்ரீவனை இரு கைகளாலும் தூக்கி நிலத்தில் எறிவதற்கு வாலி முற்படுகையில் இராமன் அம்பு அவன் மார்பில் பாய்ந்தது.

https://t.me/Tamil_Library

இராமனுடைய அம்பைக் கூட மார்பைத் துளைத்து அப்புறம் போகாமல் தடுத்து நிறுத்தும் ஆற்றல் பெற்ற ஒருவன் இராமகாதையில் உளன் எனின் அவன் வாலியே யாவான்.

இத்தகைய முறையில் தன் மார்பையும் பிளக்கும் ஆற்றலுடன் அம்பு எய்தவன் யாராக இருக்கும் என்று ஆராய்ந்த வாலி தேவர் முதலியோர்க்கு இவ்வாற்றல் இல்லை என்பதால், 'ஒருவனே! இறைவர் மூவரோடும் ஒப்பான், செயல் ஆம்!' (69) என்ற முடிவுக்கு வந்துவிட்டான். அனுமானத்தின் மூலம் வந்த இம் முடிவைச் சரிபார்ப்பதற்காகப் போலும், மார்பைப் பிளந்து செல்ல முயலும் அம்பைத் தன் கைகள், கால்கள், வால் ஆகியவற்றால் பற்றி ஓரளவு வெளியே இழுத்து, எய்தவன் பெயரை அறிந்து கொள்ள முயன்றான்.

பூர்வ புண்ணியங் காரணமாக ஒரு சிலருக்கு ஞானம் வரச் சில எதிர்பாராச் செயல்கள் காரணமாகின்றன. திருப்பெருந்துறையில் ஞானம் பெறத் திருவாதவூரருக்குக் குதிரை வாங்க வேண்டும் என்ற செயல் காரணமாக அமைந்தது. அதேபோல, வாலி ஞானம் பெற வேண்டிய நேரம் வந்தவுடன் அந்த ஞானத்தைத் தரும் பெயரைக் கண்களால் காண வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. எனவேதான் அம்பில் யார் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது என்பதை அறியும் விருப்பால் அம்பை இழுத்துப் பார்க்கும் ஆவல் அவனுக்குத் தோன்றிற்று. அப்பெயரைக் கண்டவுடன் தன் வாழ்வில் ஒரு மாற்றம் உண்டாகப் போகிறது என்பதை வாலி அறியான். எப்படியாவது அப்பெயரை அறிந்து கொள்ள வேண்டும் என்ற அவாவால் (Curiosity) மட்டுமே அம்பை அவன் இழுத்தான்.

https://t.me/Tamil_Library

இரண்டு எழுத்துகளாலாகிய ஒரு பெயர்தான் அதில் காணப்பெற்றது. ஆனால், அப்பெயரை வாலி கண்ட விதத்தைக் கவிஞன் மிக நுணுக்கமாக விளக்குகிறான்:

**'இம்மையே எழுமை நோய்க்கும்**
**மருந்தினை 'இராமன்' என்னும்**
**செம்மைசேர் நாமந் தன்னைக்**
**கண்களில்—தெரியக்கண்டான்'** (77)

இப்பாடலில் வரும் 'செம்மைசேர் நாமம்' 'கண்களில் தெரியக் கண்டான்' என்ற சொற்களை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். செம்மைசேர் நாமம் என்பது தன்னை நம்பியவர்களைச் செம்மையில் சேர்ப்பிக்கும் நாமம் என்ற ஆழமான பொருளையுடையது. எனவே, அது வீடு நல்கும் மந்திரம் என்ற கருத்தைக் கவிஞன் மறைமுகமாகக் கூறிவிட்டான். இனிக் 'கண்டான்' என்று கூறி இருந்தாலே போதுமானது. காண்டல் கண்ணின் செயல் என்பதை யாவரும் அறிவர். அவ்வாறு இருக்கக் 'கண்களில் கண்டான்' என்பது வேண்டா கூறியதாகும். இதனுடன் நில்லாமல் 'கண்களில் தெரியக் கண்டான்' என்பது மேலும் ஒருபடி செல்வதாகும். கம்பனா இவ்வாறு தேவையற்ற இரு வார்த்தைகளைப் பெய்து பாடுகிறான்? ஆம்! மிக ஆழமானதும், பரம மறைபொருளானதுமாகிய ஒரு கருத்தைத் தனக்கே உரிய முறையில், இரண்டு சொற்களைத் தேவை இல்லாமல் பெய்வதன் மூலம் கூறிவிடுகிறான்.

கருத்தளவால் மட்டுமே காணக்கூடிய மந்திரத்தைக் கண்களாலும் காணும் பேறு பெற்றவன் வாலி என்பதையும், ஏனையோர் போல ஊனக் கண்ணால் மட்டும் கண்டான் போலும் என்று நினைந்துவிட வேண்டா என்பதையும், அதன் சிறப்பை உடன் அறிந்து கொண்டான் என்பதையும் 'தெரிய' என்ற சொல்லால் விளக்குகிறான் கவிஞன். இதனைக் காணுமுன்பே 'மூவர்க்கும் முதல்வன்' நினைவு

https://t.me/Tamil_Library

அவனுடைய புறமனத்தில் தோன்றிவிட்டது. அந்த நினைவை வலுவூட்டும் முறையில் நயன 'தீட்சை' நடைபெற்று விட்டது என்பதை அறிவுறுத்தவே 'கண்களில் தெரியக் கண்டான்' என்று கூறுகிறான் கவிஞன்.

புறமனத்தில் ஓர் எண்ணம் தோன்றிய பிறகு, நயன தீட்சையால் அது வலுப்பெற்று அகமனத்தில் புகுந்து விட்டாலும், அது வேலை செய்யத் தொடங்கி அவனை முழுவதுமாக ஆட்கொள்ளச் சிறிது காலதாமதம் ஆகத்தான் செய்யும். இந்த இடைக்காலத்தில் புறமனம் (மேல்மனம்) தன் வேலையைச் செய்கிறது. விருப்பு, வெறுப்பு, சினம், ஆத்திரம் முதலியவற்றால் பாதிக்கப் படுகின்றதும், இவற்றின் உறைவிடமாக உள்ளதுமான அவனுடைய மேல்மனம் இப்பொழுது வாலியிடம் வேலைசெய்யத் தொடங்குகிறது.

மேல்மனத்தில் மேலாக நிற்பது மான உணர்ச்சியும் அதனுடன் தொடர்புடைய அகங்காரமுமாகும். தான் சுத்த வீரன் என்ற நினைவில் பெரிதும் அகங்காரம் கொண்டிருக்கும் வாலியால் இராமன் செயலை ஏற்க முடியவில்லை. 'வில் அறம் துறந்த வீரன்' (71) என்று இராமனைக் கூறுவதன் மூலம், தான் அதனைத் துறவாதவன் என்று குறிப்பிடுகிறான். 'சூரியன் மரபும் இராமன் தோன்றலால் தொல்லை நல்அறம் துறந்தது' (78) என்று நினைத்தவுடன் எல்லையற்ற நாணத்தால் நகைப்பு உண்டாயிற்றாம் அவனுக்கு! இந்த நாணம் காரணமாக 'வெள்கிட மகுடம் சாய்க்கும்; வெடிபடச் சிரிக்கும்; மீட்டும் உள்கிடும்; 'இதுவும் தான் ஓர் ஓங்கு அறமோ?' (79) என்று தனக்குத் தானே கேட்டுக்கொண்டான்.

இந்த வினாடிவரை அவன் மனத்தில் வெறுப்பு முதலிய உணர்ச்சி எதுவும் தோன்றவில்லை. உண்மை வீரத்தின் அடிப்படையில் பிறந்த நாணமே தோன்றிற்று.

https://t.me/Tamil_Library

எனவேதான் இராமன் அவன் எதிரில் தோன்றுகிறான். இராமனை எதிரே கண்டவுடன் வாலியின் அகமனத்தில் தூய அறிவும் ஞானமும் தோன்றுகின்றன. புறமனத்தில் இராமன் என்ற தசரதன் புதல்வனின் செயல் சினத்தை உண்டாக்குகிறது. எதிரே நிற்பவன் சாதாரண மனிதன் அல்லன் என்று கூறுகிறது அகமனம். எதிரே நிற்கும் இராமனை வாலி 'கண்களில் தெரியக் காண்கிறான்' —புறக்கண்களில் மட்டும் காணும்பொழுது எதிரே தசரதகுமாரன் என்ற மனிதன், பரதனின் முன் தோன்றியவன் நிற்கின்றான். இக்காட்சி உடன் மறைகிறது. அடுத்து 'நீலக் கார்முகில் கமலம் பூத்து, மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதே போலும் மாலை'யான ஒரு காட்சி தோன்றுகிறது. கண்களினால் மட்டும் கண்டபோது தசரத குமாரனும், கண்களில் தெரியக் கண்டபோது கார்முகில் கமலம் பூத்து நிற்கும் காட்சியும் தோன்றுகின்றன.

இவ்விரு காட்சிகளும் மாறி மாறி வருவதால் குழம்புகிறான் வாலி. இக்குழப்பம் காரணமாக அவனுடைய மனத்தில் ஒரு பெரும் போராட்டம் நிகழ்கிறது. புறமனத்தில் தோன்றும் இகழ்ச்சி காரணமாக இராமனைப் பலவாறாக ஏசுகிறான்:

**'வீரம் அன்று, விதி அன்று;**
**மெய்ம்மையின்**
**வாரம் அன்று, நின் மண்ணினுக்கு**
**என் உடல்**
**பாரம் அன்று பகை; அன்று;**
**பண்பு அழிந்து**
**ஈரம் இன்றி இது என்**
**செய்தவாறு அரோ ?'** **(90)**

என்று கூறும்பொழுது அவன் மனப்போராட்டம் உச்ச கட்டத்தை அடைகிறது. பகை இல்லாத ஒருவன் பண்பு

https://t.me/Tamil_Library

மறந்து ஏன் தன்னைக் கொல்ல வேண்டும்? என்று கேட்கிறது புறமனம். தன் சிற்றறிவுக்குப் புலப்படாவிடினும் 'எங்கோ ஒரு காரணம் இருக்க வேண்டும்; அதனால்தான் பகை இன்றியும் இராமன் கொன்றான்' என்று கூறுகிறது அவனுடைய அகமனம்.

முற்பகுதியில் புறமனத்தினால் ஆட்கொள்ளப்பெற்ற வாலி இராமனை ஏசுவது உண்மைதான். ஆனால் அவ்வாறு ஏசும் பொழுதேகூடத் தான் நினைப்பது சரிதானா என்ற வினாவை அவனுடைய அக மனம் கேட்டுக் கொண்டே இருக்கிறது. தன் சிற்றறிவுக்கும் உலகியல் அறத்துக்கும் கட்டுப்பட்டு நின்று கண்டால் இராமன் செயல் தவறுடையதுதான். ஐயமே இல்லை! ஆனால் சிற்றறிவுக்கு மேற்பட்ட பேரறிவு ஒன்றும், உலகியல் என்பதற்கு மாறான உலகியல் கடந்த நிலை ஒன்றும் உண்டல்லவா? சிற்றறிவினால் மெய்ம்மை என்று ஏற்றுக்கொள்ளப் பெற்ற ஒன்று அவ்வறிவு வளர்ச்சி யடையும் பொழுது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகிவிடலாம். அதேபோல உலகியலில் இன்று தவறானது எனப்படும் ஒன்று நாளை நியாயமானது என ஏற்கப்படலாம். ஆனால், பேரறிவு காணும் நியாய அநியாயங்கள் அவ்வாறு மாறுபடக் காரணமில்லை. தான் காணும் உண்மை, சாதாரண உலகியல் நிலையில் ஏற்கப்படுகிறதா இல்லையா என்பது பற்றிப் பேரறிவு கவலைப்படுவதில்லை.

வாலி, தான் பெற்ற நயன தீட்சையால் பேரறிவு விளங்கப் பெறுகிறான். அதன் பயனாக எதிரே நிற்பவனைக் 'கார்முகில் கமலம் பூத்த பரம்பொருளா'கக் காண்கிறான். எனவே, அப்பரம்பொருள் செய்யும், செய்கின்ற, செய்த செயல்களைத் தன் சிற்றறிவு கொண்டு ஆய்வது தவறு என்றும் உணர்கிறான். பேரறிவில் இவ்விளக்கம் தோன்று

https://t.me/Tamil_Library

முன்னர்தான் இராமனை ஏசிய நிலை வருகிறது. ஏசும் பொழுதுகூட அகமனம் அவனை விழிப்படையச் செய்கிறது. அவ்விழிப்பு ஏற்பட்டவுடன் அவன் காணும் காட்சி முற்றிலும் மாறுபட்டதாக அமைந்துவிடுகிறது.

அவ்விழிப்பு ஏற்படுமுன் சிறப்புடையன, இன்றியமையாதன என்று அவனால் கருதிப் போற்றப் பெற்ற அறவீரம், உயிர் ஆகிய இரண்டும் விழிப்பு ஏற்பட்டவுடன் பொருளற்றவையாக ஆகிவிடுகின்றன. தரையில் நின்று பார்க்கும்பொழுது கண்ணுக்கெட்டாத உயரமுடைய எவரெஸ்ட் சிகரம் 45,000 அடி உயரத்தில் பறக்கும் பொழுது பக்கத்தில் உள்ள சிறு குன்றுடன் வேற்றுமை காண முடியாதபடிச் சிறுத்து விடுகிறது. இவ் வேறுபாடு மலையைப் பொறுத்ததன்று; காண்பான் நிலையைப் பொறுத்து அமைவதாகும். அதேபோல உலகியல் நிலையில் நின்று காணும்பொழுது மிகப் பெரியவை, உயர்ந்தவை என்று கருதப் பெறும் உயிர், பகை, நட்பு, சாவு, வாழ்வு என்பவை பார்வை மாறியவுடன் சிறியவையாகிவிடுகின்றன. 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்ற பழமொழியே இதற்குச் சான்று. வேந்தன் துரும்பாகி விடுவதில்லை. ஆனால் துறவியின் பார்வை மாறி விட்டதால் அரசன் துரும்புக்குச் சமமாகி விடுகிறான்.

பகை இல்லாதவனைக் கொல்லுதல், நேர் நின்று அறப்போர் செய்தல் என்பன நம் போன்ற மன நிலையுடையார்க்கு மிக மிக உயர்ந்தவை. ஆனால் பேரறிவு விளக்கமும், அக மன விழிப்பும் பெற்ற நிலையில் இவை பொருளற்றவை. காரணம், கொல்வானும் இல்லை; கொல்லப்படுவானும் இல்லை. (கீதை. அத்–2. சுலோ–19) இந்த நிலையை அடைந்து விட்ட வாலி இதோ பேசுகிறான்:

**தாய்என உயிர்க்கு நல்கி,**
**தருமமும், தகவும், சால்பும்**

https://t.me/Tamil_Library

நீஎன நின்ற நம்பீ!
நெறியினில் நோக்கும் நேர்மை
நாய்என நின்ற எம்பால்
நவை அற உணரலாமே?
தீயன பொறுத்தி!
என்றான்—சிறியன சிந்தியாதான்! (125)

தாய் குழந்தைக்குத் தரும் மருந்து கசப்புடையதாய் இருக்கலாம்; குழந்தையின் கையையும் காலையும் இறுகப் பிடித்துக் கொண்டு தாய் மருந்தைப் புகட்டலாம். செயலளவில் இவை கொடுமை என்பதால் தாய் அன்பிலள் எனக் கூற முடியுமா? அதேபோலச் செயலளவில் இராமன் செயல்கள் உலகத்தாரால் ஏற்றுக் கொள்ளக்கூடியவை அல்ல. இதில் ஐயமே இல்லை. நாம் ஒழுங்கு, நேர்மை என்று கருதிப் போற்றும் கொள்கைகள் வேறு. ஆனால் பேரறிவும் இதனை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. அர்ச்சுனனுக்குக் கண்ணன் செய்த உபதேசமும் இதுதான். ஆனால், அவை தாயின் கொடுமை போன்றவை என்பதைப் பிறர் அறியமுடியா விடினும் வாலி உணர்ந்து விட்டானாகலின், 'தாய் என உயிர்க்கு நல்கி' என்று கூறுகிறான். மேலும், 'நெறியினில் நோக்கும் நேர்மை' என்றமையின் நீண்ட பார்வையால் அறியப்பட வேண்டியதைக் கிட்டப் பார்வையுடையார் அறியமுடியாது என்றுங் கூறுகிறான்.

பேரறிவுடையாரும் அகமன விழிப்புடையாரும் மட்டுமே காணக்கூடிய ஒன்றை 'நாய் என நின்ற எம்பால் நவையற உணரலாமே' என்று கேட்டு, அது இயலாத காரியம் என்பதை 'உணரலாமே' என்பதில் வரும் வினா ஏகாரத்தால் பெற வைத்துவிட்டான் வாலி. இத்தகைய அறிவு விளக்கம் பெற்றபொழுது அதுவரை மிகப்

https://t.me/Tamil_Library

பெரியனவாக இருந்த அகங்காரம் மமகாரம், சாவு-வாழ்வு, பகை, நட்பு என்பவை பொருளற்ற சிறியனவாக ஆகிவிடுகின்றன. இப்பொழுது முழு விளக்கம் பெற்று விட்டமையாலும், தன் சிற்றறிவினால் ஆராய்ந்து இராமன் 'வில் அறம் துறந்துவிட்டான்' என்று கூறியது தவறு என்று உணர்ந்துவிட்டமையாலும், 'தீயன பொறுத்தி' என்று கூறி விட்டதாலும் அவனுடைய விளக்கம் பெற்ற மன நிலையைக் கவிஞன் 'சிறியன சிந்தியாதான்' என்ற இரண்டு சொற்களால் விளக்கி விட்டான்.

இத்தகைய அறிவு விளக்கம் பெறும் நல்லூழ் உடையவர்கள் விளக்கம் பெறும் வழிகளை ஆராய்ந்து பார்த்தால் பல உண்மைகள் வெளிப்படும். ஒரு சிலருக்குக் குருவின் மூலமாக விளக்கம் வரலாம். ஒரு வினாடி நேரத்தில் ஒரு விளக்கம் பெறுகிறவர்களும் உண்டு. 'சும்மா இரு, சொல் அற' என்ற சொற்களே அருணகிரியாருக்கு விளக்கம் தந்தன. 'ஓர் வார்த்தையுட் படுத்தாய்' என்று மணி வாசகர் கூறுவது அவர் திருப்பெருந்துறையில் விளக்கம் பெற்ற முறையை வெளிப்படுத்துகிறது. இதன் எதிராக நயன தீட்சை, ஸ்பரிச தீட்சை, திருவடி தீட்சை என்ற முறைகளும் உண்டு. ஆனால் வாலி பெற்ற தீட்சை தனித்தன்மை வாய்ந்தது. அம்பின் மூலம் தீட்சை பெற்றதாகப் பிற வரலாறு எங்கும் இல்லை. ஆம்! வாலி போன்ற வீரரும் எங்கும் இல்லையன்றோ?

இராமனுடைய அம்பு தன் உயிரைக் குடிக்கும் என்று முதலிற் கூறிய அதே வாலி, இப்பொழுது தன் கருத்தை மாற்றிக்கொண்டு பேசுகிறான். 'என்னுடைய உயிர் போகும் இந்த நேரத்தில் நின் கூர்மையான அம்பு ஒன்றால் அடியேனுடைய அறிவு விளக்கம் பெறும் வழியைச் செய்தாய்' என்ற கருத்தில், 'ஏவுகூர் வாளியால் எய்து, நாய் அடியனேன் ஆவிபோம் வேலைவாய், அறிவு தந்து

https://t.me/Tamil_Library

அருளினாய்' (127) என்று பேசுகிறான். 'நாய் அடியனேன் ஆவிபோம் வேலைவாய் ஏவுகூர் வாளியால் எய்து அறிவுதந்து அருளினாய்' என்பதால் தன் உயிர் போதலுக்கும் அம்புக்கும் தொடர்பில்லை என்று உண்மையைக் கூறியதுடன், அந்த அம்பு பேரறிவை விளங்கச் செய்தது என்றும் கூறுகிறான். இராமன் அம்பு வாலியின் உயிர் குடித்ததாகக் கூறுதல் 'காக்கை ஏறப் பனம் பழம் விழுந்தது' என்பது போலாகும். இக்கருத்தை வலியுறுத்தவே கவிஞன் 'எய்து ஆவிபோக்கும் வேலைவாய்' என்று கூறாமல் 'ஆவிபோம் வேலைவாய்' என்று தன்வினையாகக் கூறுகிறான்.

கண்ணில் நோய் உடையவன் பொருள்களைக் காண முடிந்தாலும் செம்மையாகக் காண முடிவதில்லை. பொருளின் இயல்பையும் நிறத்தையும் உள்ளவாறு அறிய முடிவதில்லை. காரணம், அவனுடைய பார்வைக் கோளாறேயாம். ஆனால் அதே மனிதன் நோய் நீங்கப் பெற்றவுடன் முன்னர்க் கண்ட அதே பொருள்களைக் கண்டாலும் இப்புதிய பார்வையில் அவற்றின் நிறம், வடிவம் முதலியன மாறி இருக்கக் காண்கிறான். அறிவுடையவனாக இருப்பின் பொருள்கள் என்றும் உள்ளபடியேதான் உள்ளன என்பதையும் தன்பார்வைக் கோளாறு காரணமாக அவற்றின் வடிவையும், நிறத்தையும் பிறழ உணர்ந்த நிலைமையையும் அறிந்து கொள்கிறான்.

அதேபோல, தசரதகுமாரன் மறைந்திருந்து அம்பு எய்தல், தன் எதிரில் தன்மாட்டுப் பகை கொண்டு சுக்ரீவன் போரிடுதல், இராமனுக்கும் தனக்கும் பகை இன்மை, இருப்பினும் இராமன் தன் மார்பில் அம்பு எய்தல் முதலிய செயல்கள் விளக்கம் பெறாத வாலிக்கு ஒருவிதமாகக் காட்சியளித்தன. ஆனால் விளக்கம் பெற்ற பிறகு, பகை, நட்பு, அம்பு எய்தல், மறைந்து நிற்றல், அறம் பிறழ்தல்,


https://t.me/Tamil_Library

வில்லறம் துறத்தல் முதலியவை பொருளற்றவையாகக் காட்சி தருகின்றன. பகை-நட்பு, சாவு-வாழ்வு என்பவை சிறியனவாக ஆகிவிட்டமையின் அவற்றை விட்டுவிட்டுத் தன் அகமுகப் பார்வையை எதிரே நிற்பவன் மேல் செலுத்துகிறான். அவ்வகமுகப் பார்வையில் தசரத குமாரன் என்ற மனிதன் தெரியவில்லை. அவன் கண்டதை இதோ கூறுகிறான்:

அறிவு தந்தமையால் இக்காட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டதை உணர்ந்த வாலி இப்புதிய காட்சியில் கண்டவற்றையும் உடன் கூறுகிறான்: 'மூவர் நீ! முதல்வன் நீ! மற்றும் நீ! பாவம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீ! (127) பாவமும்-தருமமும் ஒருவனேயாகக் காட்சி யளிப்பதை விளக்கம் பெற்ற வாலி உணர்கிறான். விளக்கம் பெறாதபொழுது பகை என்றும் உறவு என்றும் இருவேறு தனிப் பண்புகளாக இருந்தவை இப்பொழுது ஒன்றாகக் காட்சியளிக்கின்றன. ஒன்றாக உள்ள பொருளைப் பிரித்துப் பகை என்றும் உறவு என்றும் கூறுவது அறிவுடைமை யாகாது. எனவே, பொருளில் பகையோ உறவோ இல்லை. அவை அதனை உணர்கின்றவன் உணர்ச்சி அளவில் மாறுபடுகின்றனவே தவிர வேறு இல்லை. ஒரு சிலர் தொடக்கூட முடியாத சூடு என்பதை ஒரு சிலர் சாதாரணமாகக் குடிக்கக் காண்கிறோம்.

ஒரே பொருளினிடத்துப் பகை நட்பு என்ற இரு பண்புகள் எவ்வாறு உறையமுடியும் என்று ஐயுறுவார்க்கு அது இயலும் என்பதை அறிவுறுத்த வாலி ஓர் உவமை கூறுகிறான் அடுத்த பாடலில்:

'யாவரும் எவையுமாய்,
இருதுவும் பயனும் ஆய்
பூவும் நல்வெறியும் ஒத்து,
ஒருவ அரும் பொதுமையாய்

https://t.me/Tamil_Library

ஆவ நீ ஆவது' என்று
அறிவினோர் அருளினார்' (129)

யாவரும் எவையுமாக உள்ளவன் ஒருவனே என்ற விளக்கம் தோன்றிய பிறகு கொல்வான் கொல்லப்பட்டவன் என்ற இரண்டை நினைப்பது அறிவுடைமையாகாது. பூவும் அதன் மணமும் போல் ஒன்றே இரண்டாய் விளங்கும் சிறப்பினை அறிவதே இவ்வறிவு விளக்கமாகும். விளக்கம் பெறாத பொழுது தம்பி பகைவனாகவும், அவனுக்கு ஏற்றுக் கொண்டு தன்மேல் அம்பு எய்த இராமன் பண்பற்றவ னாகவும், தவறிழைத்துச் சூரிய குலத்தை இழிவு படுத்தியவனாகவும் வாலியின் அறிவுக்குட்பட்டது.

விளக்கம் பெற்றுவிட்ட பிறகு பகை-நட்பு போன்ற இருமையைக் கடந்து நிற்கும் ஒன்றை 'முற்றும் நீ' என்கிறான். இவ்வொரு சொல்லில் அனைத்தும் அடங்கிவிடுகின்றன. ஒருவேளை இதில் விடுபட்டது ஏதேனும் இருக்குமோ என்ற ஐயம் தோன்றுதல் முறைதான். தவறு, பாவம், நேர்மை இன்மை, குற்றம் முதலியவற்றை இப்பொருளினிடத்துச் சேர்க்க முடியுமா என்ற ஐயம் உடையார்க்கு விடை கூறுபவன் போல அந்த ஸ்திதப் பிரஞ்ஞன் 'மற்றும் நீ' என்று கூறிவிடுகிறான். இன்னும் ஒரு படி மேற்சென்று நன்கு விளங்கும் முறையில் பாவம்-தருமம், பகை-உறவு அனைத்தும் நீயே என்று விளக்கமாகவும் கூறுகிறான். பாவமும் தருமமும் ஒன்றாக முடியுமா? பகையும் உறவும் ஒன்றாக முடியுமா? இருளும் ஒளியும் ஒன்றாக முடியுமா? யாருக்கு இவை ஒன்றாகி விட்டனவோ அவனே அகமன விளக்கம் பெற்றவன். வாலிக்கு இவ்விளக்கம் வந்தமையால்தான் இவ்வாறு கூறுகின்றான். அந்த விளக்கம் பெற்ற அவன் அகமனம் பகை உணர்ச்சி, காழ்ப்பு உணர்ச்சி, விருப்பு, வெறுப்பு ஆகிய எதுவும் இல்லாமல் நிர்மலமாக உள்ளது. எனவே

https://t.me/Tamil_Library

அதில் வேறுபாடு எதுவும் தோன்றவோ தெரியவோ இல்லை.

வாலியினுடைய இந்த மனமாற்றமும் (அவன் இறுதியாகப் பேசிய பேச்சும்) இராமனைத் திடுக்கிடச் செய்கிறது. அவன் இதனைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அனுமன் கூற்று, சுக்கிரீவன் சொற்கள், வாலி தம்பி மனைவியைக் கவர்ந்த செயல் ஆகியவற்றைக் கொண்டே இராமன் வாலியை இதுவரை எடைபோட்டு அவன் தண்டிக்கப்பட வேண்டியவன் என்ற முடிவுக்கு வந்து விட்டிருந்தான். வாலியின் ஏசலில் 'குரங்குகளாகிய எங்கட்குத் தம்பி மனைவி தாய்க்குச் சமம் என்ற நியதி இல்லை; அது மனிதர்களாகிய உங்களுடைய சட்டம்' என்று கூறியபொழுது இராமன் தன் மனத்தில் கொண்டிருந்த உறுதி ஆட்டங் கண்டது. இந்த ஒரு செயலை விட்டுவிட்டால், வாலியைப் பற்றி அவன் அறிந்திருந்த பண்புகள் அனைத்தும் வாலியின் பகைவர்களாகிய அனுமனும் சுக்ரீவனும் கூறியவையேயாகும்.

வாலியினுடைய மனமாற்றம் இராமனை வியப்படையச் செய்கிறது. மனம் மாறிய வாலி பேசிய சொற்கள் இராமன் மனத்தில் பச்சாதாபத்தை உண்டாக்குகின்றன. இதனை அடுத்து வாலி தம்பியையும், தனயன் அங்கதனையும் விளித்துப் பேசிய சொற்களைக் கேட்ட இராமன் அசந்து போய்விட்டான்! இறுதியாகத் தம்பியாகிய சுக்ரீவனைப் பற்றி இராமனிடம் வாலி கூறும் சொற்கள் இராமன் மனநிலையை முற்றிலும் மாற்றி விடுகின்றன.

'ஓவியஉருவ ! நாயேன் உளது
    ஒன்று பெறுவது உன்பால்
பூஇயல் நறவம் மாந்தி,
    புந்திவேறு உற்றபோழ்தில்

https://t.me/Tamil_Library

தீவினை இயற்றுமேனும்;
எம்பிமேல் சிறி, என்மேல்
ஏவிய பகழி என்னும்
கூற்றினை ஏவல்'

என்றான்.

"நல்வாழ்வு வாழ்ந்து, அறியாமல் குடிப்பதிலேயே பொழுதைக் கழிப்பவன் என் தம்பி. அத்தகைய மன நிலையில் அவன் தீமை புரிவான் (இது உண்மை என்பது அடுத்த கார்காலப் படலத்திலேயே விளக்கப்படுகிறது) என்றாலும் அந்நிலையினும் நீ மனம் வெறுத்து என்மேல் ஏவிய அம்பாகிய கூற்றை அவன் மேல் ஏவிவிடாதே! இதனை ஒரு வரமாக எனக்கு அருள்க" என்று தன்னைக் கொன்ற இராமனிடம் தன்னைக் கொல்வித்த சுக்ரீவனைக் காக்க வேண்டும் என்று வரம் வேண்டும் வாலி ஸ்திதப் பிரஞ்ஞ மனநிலை பெற்றுவிட்ட மகாத்மாவாக ஆகி விட்டான் என்பதை இராமன் அறிய முடிகிறது.

ஒருவேளை வாலியின் இப்பண்பாட்டை இராமன் முன்னரே அறிய நேரிட்டிருப்பின் வேறுவிதமாக நடந்து கொண்டிருக்கவும் கூடும். ஆனால் இப்பொழுது காரியம் மிஞ்சிவிட்டது. வாலியை ஒருவேளை பிழைக்கச் செய்ய இராமனுக்கு முடியும். எனினும் அதனால் விளையும் பயன் ஒன்றும் இல்லை. சாவு, வாழ்வு என்ற இரண்டின் வேறுபாட்டைச் சட்டை செய்யும் மன நிலை வாலியிடம் இல்லை. வாழவேண்டும் என்று அவன் விரும்பவுமில்லை. எனவே இராமன் செய்யத்தக்கது ஒன்றும் இல்லை. பச்சாதாபத்துடன் என்ன செய்யலாம் என்று இராமன் குழப்பமடைந்துள்ள நிலையில் அவன் சற்றும் எதிர்பாராத செயல் ஒன்றை வாலி செய்து விடுகிறான். இராமனை நோக்கிப் "பொய் உடை நெஞ்சினார்க்குப் புலப்படாத பொருளே! என் மைந்தன் உன் அடைக்கலம்" என்று கூறும்

https://t.me/Tamil_Library

முறையில் அங்கதனை இராமனிடம் அடைக்கலமாகத் தந்துவிடுகிறான்.

'பொய் அடை உள்ளத்தார்க்குப்
புலப்படாப் புலவ!
மற்று உன் கையடை ஆகும்' என்ன... (156)

இச்செயலைச் சற்றும் எதிர்பாராத இராகவன் விதிர்விதிர்ப் பெய்தி இருக்க வேண்டும். அவன் செய்த செயல் இவ்வாறு தான் நடந்திருக்க வேண்டும் என்று எண்ணத் தூண்டுகிறது. வாலி, 'என் மைந்தன் உன் அடைக்கலம்' என்று கூறியவுடன் அங்கதன் இராமன் திருவடிகளில் வீழ்ந்தான். தாமரைத் தடங்கண்களை யுடையவனாகிய இராகவன் உடனே தன் உடைவாளை அங்கதனிடம் நீட்டினான். வாய் பேசாமல் நீட்டி இருந்தாலே 'நீ இதனை வாங்கிக் கொள்' என்ற கருத்தை அனைவரும் அறிய முடியும். ஆனால் இராமன் வாளை நீட்டியதுடன் 'நீ இது பொறுத்தி' என்று கூறினானாம்.

'தன் அடி தாழ்தலோடும்,
தாமரைத் தடங்கண்ணானும்
பொன் உடைவாளை நீட்டி
நீ இது பொறுத்தி' என்றான்
என்னவும், உலகம் ஏழும்
ஏத்தின; இறந்த வாலி
அந்நிலை துறந்து வானுக்கு
அப்புறத்து உலகன் ஆனான்' (157)

'நீ இது பொறுத்தி' என்பதற்கு 'வாளை வாங்கிக் கொள்' என்று பலரும் பொருள் கூறுவர். ஆனால் முன்னரே 'தீயன பொறுத்தி' (125) என்று வாலி கூறுவதால் 'பொறுத்தி' என்ற சொல்லை மன்னித்துக்கொள் என்ற பொருளில்தான் கவிஞன் பயன்படுத்துகிறான் என்பதை அறிய முடிகின்றது. வாலியைத் தான் கொன்றது சரியா என்ற வினாவில்

https://t.me/Tamil_Library

குழம்பிக் கொண்டிருந்த கருணை வள்ளலாகியவனும் அறத்தின் நாயகனுமாகிய இராகவன் அது சரியன்று என்ற முடிவுக்கு வந்துவிட்டான் என்றே தோன்றுகிறது. என்றாலும், நடைபெற்றுவிட்ட ஒன்றுக்கு வேறு என்ன செய்ய முடியும்? எனவே தனக்கு மகன் முறை கொள்ளக் கூடியவனும், தன் அடைக்கலப் பொருளுமாகிய வாலியின் மைந்தனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதன் மூலம் தன் மனத்தில் ஒரு நிறைவை ஏற்படுத்திக் கொள்கிறான்.

கம்பன் காட்டிய வாலியின் பண்பாட்டை முற்றிலும் அறிந்து கொள்ளும் இயல்புடையவனாகவே கம்பன் கண்ட இராகவனும் காட்டப் பெறுகிறான். இங்குக் கூறிய கருத்துக்கள் கம்பனுடைய வாலிக்கும் இராகவனுக்கும் மட்டுமே செல்லுபடியாகக்கூடிய கருத்துக்களாகும். இவ்வாறு வாலியின் மன வளர்ச்சியைக் காட்டாவிடின் அவனுடைய மனமாற்றத்திற்குத் தக்க சமாதானம் கூற முடியாது. அது முடியாமற் போனால் கம்பனுடைய பாத்திரப் படைப்புக்கு இழுக்கு ஏற்படும். எனவேதான் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் இந்தப் பாத்திரத்தைப் புது முறையில் படைத்துக் காட்டுகிறான் கவிஞன்.

https://t.me/Tamil_Library

# 10

## 'கம்பன்'—வழக்கறிஞன்

ஒரு புகழ் பெற்ற வழக்கறிஞரைப் பற்றி ஒரு கதை சொல்வதுண்டு. ஒரு சமயம் அவ்வழக்கறிஞர் தாம் மேற்கொண்ட கட்சி எது என்பதை மறந்து எதிர்க்கட்சியாளருக்குப் பயன்படக்கூடிய வாதங்களை மிக விரிவாகவும் அழகாகவும் எடுத்துப் பேசினாராம். நீதிபதி உட்பட அனைவரும் அப்படியே அசந்து விட்டனர். ஒரு கணம் தம் உதவியாளரிடம் அவ்வழக்கறிஞர் திரும்பிய பொழுது, உதவியாளர் அவருடைய பெருந் தவற்றை எடுத்துக் கூறினாராம். ஒரு சிறிதும் மனந்தளராத அவ் வழக்கறிஞர் நீதிபதியிடம் திரும்பிப் "பிரபுவே! இப்படியெல்லாம் எதிர்க்கட்சி வக்கீல் கூறக்கூடும். இவை அனைத்திற்கும் இதோ விடை அளிக்கின்றேன்" என்று தொடங்கி அழகாகத் தம் கட்சிக்கு வெற்றி பெற்றுத் தந்தாராம்.

சிறந்த வழக்கறிஞனுக்கு வேண்டிய அனைத்து வன்மைகளும் கம்பனிடம் நிறைந்து காணப்படுகின்றன. தன் கட்சிக்கு வேண்டிய எல்லாச் சாதனங்களும் நிறைந்துள்ள பொழுது வழக்கை வெல்வது அனைவருக்கும் எளிமையாக முடியும். ஆனால் எதிரியின் வாதங்களைத் தனக்குச் சாதகமாகத் திருப்பக் கூடியவனே சிறந்த வழக்கறிஞன். கலைஞருள் சிறந்தவனாகிய கம்பனிடம்

https://t.me/Tamil_Library

இத்தகைய வாதத்திறமையும் அளவற்று இருத்தலைக் காணலாம். இங்கு வழக்கில் புலவன் நேரடியாக ஈடுபடவில்லை. அதைவிடச் சிறந்த முறை அவன் படைத்த பாத்திரங்களைச் சாட விடுவதாகும். அவை பேசும் பேச்சுக்கள் அனைத்தும் அவனுடைய பேச்சுக்களே யல்லவா? அவனது காப்பியத் தலைவனாகிய இராமனைப் பல கோணங்களில் காட்சி தருமாறு செய்கிறான் புலவன். நாம் இங்குக் காணப்போவதும், அரசியல் தந்திரியாகிய இராமனை யாகும். அரசியல் தந்திரம் என்று கேட்டவுடன் நம்மில் பலருக்குக் கசப்புத் தட்டுதல் கூடும். இன்றைய சூழ்நிலையில் இவ்விரண்டு சொற்களும் தவறான எண்ணங்களை நம் மனத்தில் தூண்டுவதை அடிப்படை யாகக் கொண்டு கம்பனைக் குறை கூறுதல் கூடாது. இன்றுள்ள சூழ்நிலையையும் அரசியலையும் மறந்து சற்றுக் காப்பியத்தில் உலாவ வேண்டும்.

இராவணன்மேல் போர் தொடுக்கும் கருத்துடன், தன் வானரப் படையுடன் ஒரு சோலையில் வந்து தங்கியுள்ளான் இராகவன். போர் என்று தொடங்கி விட்டால், பிறகு அதற்கு உதவியான அனைத்துச் சாதனங்களையும் தேடுவதுதானே அறிவுடைமை. இந்நிலையில் வீடணன் "இராகவா சரணம்" என்று கூவிக்கொண்டு வந்து, பாசறையின் புறக்காவல் உள்ள இடத்து நிற்கிறான். வானர வீரர் அனைவரும் அவனைக் கொன்றுவிட வேண்டுமென்று ஆர்ப்பரிக்கின்றனர். ஆனால், ஒற்றர் படையினரான 'மயிந்தன்', 'துமிந்தன்' என்ற இருவரும் அவன் யாரென வினவிப் பின்னர் உள்ளே சென்று இராமனிடம் அவன் வரவைத் தெரிவிக்கின்றனர்.

பெரியதொரு முடிபைச் செய்ய வேண்டிய இடமாகும் இது. இராகவன் தானாக இதில் ஒரு முடிபுக்கு வர விரும்பவில்லை. உற்ற துணைவர்களைச் சூழ்ந்துதான்

https://t.me/Tamil_Library

இத்தகைய செயல்களில் இறங்க வேண்டும் என்பது சாதாரண அரசியல் அறிவு பெற்ற ஒவ்வொருவனும் அறிந்ததேயாகும். எனவே, இராகவன் தன் தோழர்களாகிய சுக்கிரீவன், நீலன், சாம்பன் என்பவர்களை நோக்கி, அவர்கள் கருத்தை அறியும் விருப்புடையவனாகி 'இப்பொருள் கேட்டநீர் இயம்புவீர் இவன் கைப்புகற் பாலனோ கழியற் பாலனோ ஒப்புற நோக்கி நும் உணர்வினால் உரையுங்கள்' என்று கேட்கிறான். மிக அழகிய முறையில் வினாவை நன்கு விளங்கும் வண்ணம் கேட்கிறான் இராமன். வந்தவனைப் பற்றிய வரலாற்றை ஒற்றர்களாகிய துமிந்தனும் மயிந்தனும் இவ்வனைவர் எதிரேதான் கூறினார்கள். அனைத்தையும் கேட்ட சுக்கிரீவன் முதலானோரைப் பார்த்து இராமன், "வீடணன் அடைக்கலம் தருதற்கு உரியவனா? அன்றி விரட்டுதற்கு உரியவனா? நடுநிலையில் நின்று ஆராய்ந்து கூறுங்கள்" என்கின்றான். இனி ஒவ்வொருவரும் தத்தம் கருத்தை விரிவாக எடுத்துக் கூறுகின்றனர்.

ஒத்த மதிப்புடைய அரசன் என்ற முறையில் முதலில் சுக்கிரீவன் பேசுகிறான். பதினான்கு பாடல்களில் அவனுடைய வாதம் நடைபெறுகிறது. அவன் எடுத்துக் கூறும் காரணங்கள் பலவற்றுள் சிலவற்றைக் காணலாம்: 'தனது அண்ணனை இவ்வாபத்துக் காலத்தில் துறந்தது நீதியா? செம்மையற்ற அரக்கரில் யார் நல்லவர் இருக்க இயலும்? அண்ணனின் அறவழி தவறி நடக்கிறான் என்று இவன் கருதினால் அவனை விட்டு நீங்கி விடுதல் சரியே. ஆனால், அண்ணனின் பகைவராகிய நம்மிடம் வருதல் பழியல்லவா? அண்ணன் நன்கு வாழும் நாட்களில் அவனுடன் இருந்து, அவனுக்கு எதிராகப் போர் மூண்ட நாளில் நம்மிடம் வரும் இவன் நமக்கு மட்டும் எவ்வாறு உறவாய் இருத்தல்கூடும்? அரக்கர் குலத்தைக் கருவறுக்கக் கடமை பூண்டுள்ள நாம் அவ்வரக்கருள் ஒருவனைத்

https://t.me/Tamil_Library

துணையாகக். கோடல் நம் வலிமையில் பிறரை ஐயங் கொள்ளவன்றோ செய்யும்!'

இவனை அடுத்துப் பேசிய பெருமை மிக்கவன், 'அலகில் கேள்வியால் தன்னிகர் பிறிதிலாத் தகைய சாம்பன்' என்பவனாவான். சுக்கிரீவனைவிடக் கல்வியிற் பெரிய சாம்பன் வாதம் அழகாக உள்ளது: 'சிற்றினத்(து) அவரொடும் செறிதல் சீரிதோ? சரணம் என்று நாம் ஏற்றுக் கொண்ட பின்னர், இவன் சாதித் தொழிலைக் காட்டினால் என் செய்வது? அப்பொழுது இவனை விட்டு வைப்பதும் தவறு, கொன்றாலும் அடைக்கலத்தைக் கொன்ற பழி நம்பால் சாரும்.' இதற்கடுத்துப் பேசுபவன் 'பால்வரும் பனுவலின் துணிபுபற்றிய சால்பெருங் கேள்வி மிக்க' நீலன் எனும் சேனைக் காவலனாவான். எத்தகைய பகைவரைச் சேர்த்துக் கொள்ளலாம் என்பதைப்பற்றி விரிவாகக் கூறிய நீலன் இறுதியில்,

'காலமே நோக்கினும் கற்ற நூல்களின்
மூலமே நோக்கினும் முனிந்து போந்தவன்
சீலமே நோக்கியாம் தெளிந்து தேறுதற்(கு)
ஏலுமே என்றெடுத் (து) இனைய கூறினான்.'

(வீடணன் அடைக்கலப் படலம், 84)

மேலும், 'மற்றுள மந்திரிக் கிழவர், வாய்மையால் குற்றமில் கேள்வியர் அன்பு கூர்ந்தவர்' அனைவரும் கூடி, பற்றுதல் 'பழுது எனப் பழுதுறா' ஒரு பெற்றியின் உணர்வினார் முடியப் பேசினார்.

இவ்வனைவர் வாதங்களையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால் மூன்று சிறந்த கருத்துக்களை மூவரும் பேசி இருத்தல் புலனாகும். முதலாவது, வீடணன் புறப்பட்டு வந்த காலம் சரியானது அன்று என்பது; இரண்டாவது, அரக்கர்களில் ஒருவன்மட்டும் நல்லவன் என்று கூறுவது பொருத்தமில்லை என்பது; மூன்றாவது, வந்தவன்

https://t.me/Tamil_Library

மனநிலை அறியாமல் உள்விடுவது தவறு என்பது. இம்மூவரில் ஒருவரும் 'அடைக்கலம்' என்று வீடணன் கூவிக்கொண்டு வந்ததைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. சிறப்பாகச் சுக்கிரீவன் 'அடைக்கலம்' என்ற சொல்லைக் கூடப் பயன்படுத்தவில்லை அவன் வாதம் முழுவதிலும். இதுவரை ஒருவராவது அவனைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று கூறவில்லை என்பதும் மறக்கக் கூடாது.

இராமன் கேட்ட வினாவை மீண்டும் ஒருமுறை நினைந்து பார்த்தல் வேண்டும். 'இவனுக்கு அடைக்கலம் தரலாமா?' என்று கேட்டானே தவிர, 'இவனைச் சேர்த்துக் கொள்வதால் நமக்குப் பயன் உண்டா?' என்று கேட்கவில்லை. வீடணனைச் சேர்த்துக் கொள்வதால் தனக்கு ஒரு பெரிய உதவி கிடைக்கும் என்று இராமன் கருதினானா என்றுகூட நமக்குத் தெரியாது. அப்படி இருக்கவும் சுக்கிரீவன் 'இரக்கமில் அவரையே துணைக்கொ(டு) ஏற்லால், சுருக்கமுண்(டு) அவர் வலிக்கு என்று தோன்றுமால்' என்று கூறக் காரணம் என்னை? இராகவன் கூறிய அடைக்கலம் என்ற சொல்லை ஒருமுறைகூடக் கூறாத சுக்கிரீவன். இங்ஙனம் இராமன் கூறாத ஒன்றை இட்டுக் கட்டிக் கூறக் காரணம் என்ன? வாய்விட்டுக் கூறாவிட்டாலும், அடைக்கலம் என்று சொல்லில் மட்டுமே இராகவன் பயன்படுத்தினாலும் அவன் அகமனத்தில் கிடக்கும் எண்ணத்தைச் சுக்கிரீவன் நன்கு அறிந்து கொண்டான் என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது. மேலும், இராகவன் வெற்றிக்கு 'நான் ஒருவனே துணை செய்தேன்' என்ற பெருமையை அடையவேண்டும் என்று சுக்கிரீவன் நினைக்கிறான். அந்நிலையில் அப்பெருமையில் பங்கு போட ஒருவன் வருவதை அவன் விரும்பவில்லை என்பதும் அறியவேண்டும். அங்ஙனம் அவன் நினைப்பதில் தவறும்

https://t.me/Tamil_Library

*இல்லை என்பது பின்னர் விளங்குகிறது, இந்திரசித்தனை அழித்து மீண்ட இலக்குவனைத் தழுவிக் கொண்டு இராகவன் கூறும் சொற்கள்,*

**'ஆடவர் திலக நின்னால் அன்று, இகல் அனுமன் என்னும்**
**சேடலனால் அன்று, வேறோர் தெய்வத்தின் சிறப்பும் அன்று,**
**வீடணன் தந்தவெற்றி ஈது...'** **(இந்திரசித்து வதைப்படலம், 71)**

*என்பவை ஆதலின் சுக்கிரீவன் எவ்வளவு ஆழச் சிந்திக்கிறவன் என்பதும் புலனாகிறது.*

*இங்ஙனம் எல்லோரும் சேர்ந்து வீடணன் வேண்டா என்று கூக்குரல் கிளப்பியதை இராமன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இனி, அவனுக்கு உள்ளது ஒரே ஒரு நபர்தான். மற்றையோரை யெல்லாம் 'கருத்தென்ன கூறுங்கள்' என்று வாயால் கேட்ட இராமன், 'நெறிதரு மாருதி என்னும் நேரிலா அறிவனைக் கருத்து என் செப்பு என நோக்கினானாம்' அனுமன் என்ற அச்சொல்லின் செல்வன் அழகான முகவுரையுடன் இராமனுடைய உதவிக்கு வந்து சேர்கிறான். வீடணன் தவறான கருத்துடன் வரவில்லை என்று கூறுகிறான் மாருதி. எவ்வாறு?*

**'உள்ளத்தின் உள்ளதை உரையின் முந்துற**
**மெள்ளத்தம் முகங்களே விளம்பு மாகலான்'**

*இவன் வஞ்சக எண்ணத்தோடு வரவில்லை என்பதே அவன் வாதம். ஆனால், இவர்களில் ஒருவரும் இன்னும் வீடணன் முகத்தைக் காணவில்லை என்பதும் அறிந்து கொள்ளல் வேண்டும். இலங்கையில் கண்டிருப்பான் மாருதி என்றால், அது இங்கு அவனுடைய வாதத்திற்குப் பொருந்தாமை எளிதின் விளங்கும். மற்றையோர்கள் அனைவரும் கூடி வீடணன் வந்து சேர்ந்த காலம் தவறானது என்று கூறினார்கள் அல்லவா? அது ஒன்றுக்குத்தான் மாருதி மிகுதியாய காரணங்காட்டி விடை*

https://t.me/Tamil_Library

கூறுகிறான். வீடணன், தற்பொழுது வருவதற்குரிய காரணங்களாக அனுமன் கூறியவை வருமாறு: ‘இதுவரை இராவணன் பிடியிலிருந்த வீடணன், அவனை விட்டு நீங்கினால் சேரக்கூடிய இடம் யாதுமில்லை. இராவணனை வென்றவன் வாலி ஒருவனே ஆயினும் வாலி இடம் இவன் சென்று சேர்தற்கில்லை. எனவே,

**‘வாலி விண்பெற அர(சு) இளைய வன்பெறக்**
**கோலிய வரிசிலை வலியுங் கொற்றமும்**
**சீலமும் உணர்ந்துநிற் சேர்ந்து தெள்ளிதின்**
**மேலர(சு) எய்துவான் விரும்பி மேயினான்'**

**(வீடணன் அடைக்கலப் படலம், 92)**

என்று அவன் கூறுவது மிகவும் அழகான வாதமாகும். ‘வாலியை வென்றவன் நீ என்பதால் இவ்வீடணன் நின்பால் வந்தான். மேலும், வாலியை வென்ற நீ அவ்வரசை உனதாக்கிக் கொள்ளாமல், அவன் தம்பிக்கே தந்தனை என்பதும் இவனை நின்பால் வரச் செய்தது. அவ்வாதத்தைத் தொடர்ந்த அனுமன் அரக்கர் அழிவு உறுதி என அறிந்த வீடணன், அவ்வரசைத் தனதாக்கிக் கொள்ள முனைந்துவிட்டான். உனக்குரிமையான ‘எறிகடல் உலகெலாம் இளவற்கு ஈந்ததோர் பிரிவருங் கருணையைக் கண்டு இவன் வந்துள்ளான்' என்றும் கூறி முடித்தான். இவ்வனுமனுடைய வாதத்தில் சுக்கிரீவன் முதலியோர் கேட்ட கேள்விகளில் ஒன்று தவிர, ஏனையவற்றிற்கு விடை ஒன்றுமில்லை. வீடணன் வந்த காலம் சரியானதன்று என்ற அவர்களுடைய ஐயத்திற்கு அனுமன் இக்காலமே சரியானது என்ற முறையில் விடை இறுத்துள்ளான். இது தவிர ஏனைய அவனுடைய சொற்கள் அனைத்தும் அவசியமில்லாமல் இருப்பது போல் தோன்றுகின்றன. ஆனால், கம்பநாடனா இங்ஙனம் கவிதை புனைபவன்?

https://t.me/Tamil_Library

அன்று! அன்று! வேறு ஏதோ ஒரு காரணமும் இருத்தல் வேண்டும். சுக்கிரீவன் கூறியதன் உட்கருத்து எதுவாக இருக்கும் என்பதை முன்னர்க் கண்டோம். அதேபோல அனுமனும் ஒரு கருத்தைக் கொண்டுள்ளான்.

சுக்கிரீவன் வீடணன் வேண்டா என்ற தன் முடிபுக்கு அரண் தேடினான். ஆனால், அனுமன் அவன் வேண்டும் என்பதற்கு அரண் தேடுகிறான். வந்த வீடணன் அண்ணனுடைய அரசின் மேல் காதல்கொண்டு வந்துள்ளான் என்ற கருத்தை முதன்முதல் தெரிவிப்பவன் இவ்வனுமனே யாவன். இது பற்றி ஒருவரும் நினைக்கக்கூட இல்லை. அவ்வாறு இருக்க அனுமன் இப்புதுக் கரடியை இங்கு விடுவதன் கருத்து என்னவாக இருத்தல் கூடும்? எடுத்துக் கொண்ட கேள்வி என்ன? அதற்கும், வந்தவன் அரசின் மேல் பற்றுக்கொண்டு தான், அதற்கேற்ற சமயம் பார்த்து வந்திருக்கிறான் என்று கூறுவதற்கும் என்ன பொருத்தம் உளது? இங்கேதான் கம்பனின் வழக்குரைக்கும் திறம் நன்கு வெளிப்படுகிறது.

சுக்கிரீவன் முதலிய மூவருக்கும் உள்ள ஒத்த கருத்து, வீடணனைச் சேர்த்துக் கொள்ளலாகாது என்பதே. இதை அறிந்த அனுமன் திடீரென்று அவர்கட்கு விரோதமாக ஒன்றுங்கூற முடியாது. மேலும் இராமனுடைய கருத்து என்ன என்பதையும் இன்னும் நன்கு உணர முடியவில்லை. இந்நிலையில் ஒரு வழக்கறிஞன் என்ன செய்வான்? நேரடியாகத் தன் கருத்து இன்னது என்று கூறாமல் வேறு பொருள்களைப்பற்றிக் கூறுகிறான். மேலும், வீடணன் வரவு தங்களுக்குத் தீங்கு விளைக்குமா என்று இராமன் ஐயங்கொள்ளமாட்டான். சுத்தவீரனாகலின், மக்கள் மனநிலையை நன்குணர்ந்தவனாகலானும்,நல்லார் யாண்டும் பிறப்பர் என்ற பேருண்மையை நன்குணர்ந்த வனாகலானும், இராமன் வீடணனைப் பற்றிச் 'செம்மையில் அரக்கரில் யாவர் சீரியோர்' என்ற சுக்கிரீவன்

https://t.me/Tamil_Library

வாதத்தை நம்பமாட்டான். எனவே, இராமனை மனமாற்றம் அடையச் செய்வது ஒன்றிருக்குமாயின் அது வீடணன் வந்தடைந்த காலமே யாகுமல்லவா? அதைப்பற்றியே அனுமன் பலபடப் பன்னிப் பன்னிப் பேசுகிறான்.

இனி மறுபடியும் அனுமன் வாதம் மாறுதல் அடைகிறது. அதிகம் பேசுபவன் அவனேயாகிலும் அவன் வாதங்கள் மாறிக் கொண்டே செல்கின்றன. நான்கு பாடல்களில் வீடணன் தனக்கு உதவி செய்ததைக் குறிக்கிறான். இதனால் வீடணனிடத்து இரக்கம் தோன்றச் செய்வதே அனுமனின் கருத்தாகும். இதன் இறுதியில் 'சீதைக்கு உயிர் நிலைத்து இன்னும் இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் வீடணன் மகள் திரிசடைதான்' என்பதையும் குறிக்கிறான். இதனால் இராமன் மனம் முற்றும் வீடணன்பால் திரும்பி இருக்கும் என்பதை நினைந்தான் அனுமன். இதனால் இனி அவன் பேசப்போகும் பேச்சுக்கள் முன்னர்ப் பேசியவற்றோடு மாறுபடுதலைக் காணலாம். தான் இதுவரை கூறியதை அனுமன் சேர்த்து முடிவு கூறுகிறான். 'வீடணனை அயிர்த்து அகலவிடுதியாயின் கூவத்தின் சிறுபுனலைக் கடல் அயிர்த்தது ஆகாதோ' என்றும், 'பகைப்புலத்தோர் துணையல்லன் என்றிவனைப் பற்றேமேல், அறிஞர் பார்க்கின், நகைப் புலத்ததாம் அன்றோ?' என்றும் கூறும் இவன்தானோ அனுமன் என்று ஐயுறுகிறோம். ஆம்! சிறந்த வழக்கறிஞன் போலப் பேசுகிறான் அனுமன். 'சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து' என்ற பொய்யா மொழியைப் பொய்யாத மொழி ஆக்குகிறான் அனுமன் வாயிலாகக் கம்பன்.

இவை அனைத்தினும் பிறகுதான் இராகவன் வாய் திறந்து பேசுகிறான்; அறிஞர்க்கெல்லாம் சிறந்த அறிஞனான இராகவன் பேசுகிறான். ஆதியிலிருந்தே

https://t.me/Tamil_Library

இராகவன் நிலை இக்கட்டாக இருக்கிறது. ஒருவர்பின் ஒருவராக அவன் விரும்பாத முடிபுக்குக் கட்டடம் கட்டுகின்றனர். ஒவ்வொருவருடைய ஒவ்வொரு பேச்சும் அக்கட்டடம் பலப்பட வைக்கும் ஒவ்வொரு கல் போன்று உளது. இந்நிலையை நீடிக்க விடுவதாலோ மீண்டும் அவர்கள் கருத்தை அறிய முற்படுவதாலோ பயனில்லை. என்ன செய்வது என்று அறியாமல் இராமன் அனுமனை நோக்குகிறான். அவர்களில் ஒருவராவது, அடைக்கல மாவது! வீடணனுக்காவது கொடுப்பதாவது! பைத்தியக் காரத்தனமல்லவா? என்று கூறி இருப்பார்களாயின், இராகவன் மகிழ்வு உற்றிருப்பான். ஆனால், துரதிருஷ்ட வசமாக அவர்கள் ஒருவரும் அவ்வாறு கூறவில்லை. கூறாதது மட்டுமன்று. அடைக்கலம் என்ற சொல்லைக்கூட அல்லவா அந்தச் சுக்கிரீவனும் நீலனும் கூற மறுத்துவிட்டனர். மாருதி ஒருவனே துணை என்று நம்பி நிற்கும் இராமன் மனங்குளிர அனுமன் பேசிவிட்டான். சொல்லின் செல்வன், சொல்லின் செல்வனாகவே பேசிவிட்டான். என்றாலும் இராமன் குறை முற்றிலும் நீங்க வில்லை. அடைக்கலம், கையடை என்ற சொற்களில் ஒன்றுகூட அந்தப் பொல்லாத அனுமன் பயன்படுத்தாதது விந்தையே!

இதற்காக விட்டுக்கொடுப்பதும் தவறு. என்ன செய்கிறான் அவ்வறிஞன்? மாருதி சொற்களைக் கேட்டவுடன் அமிழ்து உண்டவனைப் போல மகிழ்ந்தானாம்.

'மாருதி வினைய வார்த்தை செவிமடுத்(து) அமிழ்தின் மாந்திப்
பேர்அறிவாள நன்று நன்றெனந் பிறரை நோக்கிச்
சீரிது மேல்இம் மாற்றம் தெளிவுறத் தேர்மின் என்னா'

(வீடணன் அடைக்கலப் படலம், 106)



https://t.me/Tamil_Library

என்றமையால், தன் மகிழ்ச்சியின் எல்லையின் நின்று 'பேர் அறிவாள! நன்று, நன்று!' என்று கூறினான் என்றும் அறிகிறோம். இனி இம்மட்டோடு இராமன் நின்று விடுவானேயாகில் பயன் ஒன்றுமில்லை. மாருதி வார்த்தையில் இராமன் மகிழ்ந்ததுபோல் ஏனையோர் மகிழ்ந்ததாகத் தெரியவில்லை. அவர்களை மகிழ்விக்கும் பொறுப்பு அவனைச் சேர்ந்ததாகும். எனவே, ஏனையோரை நோக்கி, 'இவ்வார்த்தைகள் சிறந்தன! தெளியுங்கள்!' என்று கூறினான். தெளிவுற எங்ஙனம் தேறுவது? அதற்குரிய வழி ஒன்றுதான்! அவர்கள் ஐயங்களைப் போக்குவதுதான் அவ்வழி.

ஆனால், அவ்வழியை மேற்கொண்டால் நேரும் இடுக்கண் இராகவன் அறியாததன்று. அவ்வழியை விட்டுவிட்டு வேறு வழி மேற்கொள்கிறான் இராமன். மீண்டும் அவன் வந்து சேர்ந்த காலம் செம்மையானது என்பதை நினைவூட்டுகின்றான். பின்னர் கெட்ட எண்ணத்துடன் வீடணன் வரவில்லை; அண்ணன் அரசின் மேல் வைத்த ஆசையே இவண் வருமாறு அவனைத் தூண்டிற்று என்றும் கூறுகின்றான். சிறியவர் தொடர்பு தீங்கை பயக்கும் என்ற நீலன் தடைக்கு விடையாக, அறிவினுக்கு அவதியில்லை என்றும் கூறுகிறான். ஆனால், ஒரு வியப்பு என்னவெனில், இவ்வளவு பேருக்கும் அவன் விடைதரும் பாடல் ஒன்றுதான் என்பதே. மீதம் உள்ள பன்னிரண்டு பாடல்களிலும் அடைக்கலம் காத்தலின் பெருமை, இன்றியமையாமை முதலியனவும், இறைவன் முதல் ஜடாயுவரை உள்ளவர்கள் அடைக்கலம் என்று வந்தவரைக் காத்த பெருமையுமே பேசப்படுகிறது. இத்துணை நேரம் அவன் பேசும் பொருளிலும் வகையிலும் சுக்கிரீவன் முதலாயினோர் கருத்தைப் பறிகொடுத்து நிற்கின்றனர். இவ்வளவு நீண்ட சொற்பொழிவைச் சிறந்த

https://t.me/Tamil_Library

*வழக்கறிஞனாகிய இராகவன் முடிக்குந்திறம் அறிந்து பாராட்டற்குரியது.*

**"காரியம் ஆக அன்றே ஆகுக கருணை யோர்க்குச்**
**சீரிய தன்மை நோக்கின் இதனின் மேற்சிறந்த(து)**
**உண்டோ ?"**

*என்று கூறினான் அறிஞன். முதலிலிருந்து கவிதைகளைப் படித்துக் கொண்டு வந்தால் இராகவனுடைய அறிவுத்திறன் நன்கு விளங்கும். 'வாரன் ஹேஸ்டிங்ஸின் குற்றவிசாரணை' என்ற அழகிய கட்டுரையில், வாரன் ஹேஸ்டிங்ஸைக் குற்றஞ் சாட்டிய 'பர்க்' என்ற அறிஞர் வழக்கை முடித்த விதத்தை 'மெக்காலே' என்ற பெரியார் எழுதியுள்ளார். அவ்வழக்கறிஞர் முடித்தவுடன் பெண்கள் மயக்கம் உற்று விழுந்தனராம். அதுபோன்ற ஓர் இடமாகும் இது. ஆனால், இக்கவிதையோடு நிறுத்தியிருந்தால் கம்ப நாடனை 'பர்க்' என்ற அறிஞரோடு ஒப்பிடத்தான் கூடுமே தவிர, அவரைவிட உயர்ந்த வழக்கறிஞன் என்று கூறல் இயலாது. ஆனால், உலகிற் சிறந்த இலக்கியம் எழுதின ,கம்பன் இதோடு விடுவானா? இல்லை; ஒரு படி மேலே செல்கிறான். இராகவன் கூறும் இறுதிப் பாடலைப் பாருங்கள்:*

**'ஆதலால் அபயம் என்ற பொழுதத்தே அபய தானம்**
**ஈதலே கடப்பா(டு) என்பது இயம்பினீர் என்பால் வைத்த**
**காதலால் இனிவே(று) எண்ணக் கடவதென் ? கதிரோன்**
**மைந்த !**
**கோதிலா தவனை நீயே என்வயிற் கொணர்தி ? என்றான் !'**

**(வீடணன் அடைக்கலப் படலம், 120)**

*என்ன? மயக்கம் வருகிறதா? ஒருவராவது அபயம் என்ற சொல்லைக்கூடக் குறிக்கவில்லை என்பதைக் கண்டோ மல்லவா? மாருதிகூடச் சொல்லாத ஒரு கருத்தை—சொல்லை—எவ்வளவு அழகாக இந்த வழக்கறிஞன்,*

https://t.me/Tamil_Library

அவர்கள் கூறியதுபோல் கூறி விடுகிறான்! 'அபயதானம் ஈதலே கடப்பாடு என்பது இயம்பினீர்' என்று கூறுவதற்கு எவ்வளவு சாமர்த்தியம் வேண்டும்! ஆனால், இதன் முன்னர் இராகவன் சொற்பொழிவில் தம்மை மறந்து நிற்கும் அவர்கள் தாங்கள் இவ்வாறு கூறவில்லை என்பதையும் மறந்து விட்டார்கள். கூறாததை மறந்தது மட்டுமன்று, கூறியதாகவுங்கூட நினைந்து விட்டனர். இராகவன் சொல்வன்மையால் நடவாதது நடந்ததுபோல் நிலைபெற்று விட்டது. இம்மட்டோடு இராகவன் நிறுத்தவில்லை 'என்பால் வைத்த காதலால்' என்றுங்கூடக் கூறிவிட்டானல்லவா? இனி ஒரு வேளை சுக்கிரீவன் தான் கூறியதை நினைந்து பார்த்து, 'நான் அடைக்கலம் கொடுக்க வேண்டும் என்று கூறவில்லையே?' என்று கூறமுடியுமா? முடியாது. அவ்வாறு கூறினால் இராகவன் மேல் அன்பு இல்லை என்று அல்லவா பொருள் ஆகிவிடும்? எனவே, தன் கருத்துக்கு விரோதமாக ஒருவரும் பேசக்கூடாத நிலையை உண்டாக்கிக் கொண்டான் இராகவன். அதுவும் 'என்பால் வைத்த காதலால்' என்ற மூன்று சொற்களால் வாதத்தை முடித்துவிட்டான். இனியும் அம்முடிவிற்கு அரண்செய்கிறான் அயோத்தி வேந்தன். 'இனி வேறு எண்ணக் கடவது என்? கதிரோன் மைந்த!.......கொணர்தி' என்று கூறி முடிக்கிறான். மேலும் அவ்வாதத்தில் மனஞ் செலுத்தாதவாறு அவர்களைத் தடுத்தும் விட்டான். அவன் வன்மையால் அவர்களை அவ்வாறு செய்துவிட்டான். வேறு வன்மையன்று, சொல்வன்மை ஒன்று கொண்டே இவ்வரும் பெருங் காரியத்தைச் செய்துவிட்டான். மறுத்துப் பேசிய அனைவரிலும் சுக்கிரீவன் ஒரு புது எண்ணத்தை வெளியிட்டதைக் கண்டோமல்லவா? எனவே, அந்தச் சுக்கிரீவனுக்கே வீடணனைக் கொணருமாறு கட்டளை பிறப்பிக்கிறான் இராகவன். இதைவிடச் சிறந்த அரசியல் தந்திரம் வேறு என்ன இயலும்? அமெரிக்க ஜனாதிபதி

https://t.me/Tamil_Library

ரூஸ்வெல்ட், வெண்டல் வில்கியைத் தேர்தல் முடிந்தவுடன் உலகத் தூதராக அனுப்பியது நினைவிற்கு வருகிறதல்லவா? சுக்கிரீவனைவிட்டே வீடணனை அழைத்துவரச் செய்த இராகவன் வன்மை வியத்தற்குரிய ஒன்று அன்றோ?

இத்துணைப் பேர்கள் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்துங்கூட அஞ்சாமல் தனது சொல் திறத்தால் தன் கட்சிக்கு வெற்றி கொண்ட சொல்லின் செல்வன் இராகவனைப் படைத்த கம்பன் புகழ் வாழ்க! வாழ்க!

https://t.me/Tamil_Library

# 11

## விட்டிலன் உலகை அஞ்சி

பெரிய செல்வச் சீமானுடைய வீடு. ஓர் அறையில் பெரிய மேசை போடப்பட்டிருக்கிறது. அந்த மேசையின்மேல் பளபளப்பாகத் தீட்டப்பெற்றுள்ள கத்திகள் இரண்டும், பக்கத்தில் ஒரு தட்டில் பழங்களும் வைத்திருக்கிறார்கள். வீட்டுக்காரரும் அவருடைய சிறிய குழந்தை ஒன்றும் மேசையில் சாப்பிட உட்கார்ந்தார்கள். அப்பெரியவர் மாம்பழத்தை எடுத்துப் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த கத்தியால் அதன் தோலைச் சீவினார். பிறகு பழத்தைத் துண்டுத் துண்டாக நறுக்கினார். குழந்தைக்குக் கொடுத்துவிட்டுத் தாமும் உண்டார். பெரியவர் இத்தனையும் செய்யும்வரையில், அவர் பக்கத்தில் அமர்ந்து, கத்தியையும் நறுக்கும் செயலையும் பார்த்துக் கொண்டே இருந்தது குழந்தை.

சாப்பிட்டு முடித்தவுடன் குழந்தையைப் போகச் சொல்லிவிட்டுப் பெரியவர் தம் வேலையைக் கவனிக்கப் போய்விட்டார். சிறிதுநேரம் சென்றவுடன் குழந்தை வீரிட்டுக் கதறியது. பெரியவர் ஓடிவந்து பார்த்தார். குழந்தை கையை வெட்டிக் கொண்டது. ஆம்! அவர் பழம் நறுக்கிய அதே கத்தி குழந்தையின் கையைப் பதம் பார்த்து விட்டது. கத்தியைப் பழம் நறுக்குவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற அறிவு குழந்தைக்கு இல்லை.

https://t.me/Tamil_Library

தகப்பனாரைப் போலவே தானும் பழத்தை நறுக்கமுயன்று, அதற்குப் பதிலாகக் கையை வெட்டிக் கொண்டது. இஃது அறிவுக் குறைவால் நேர்ந்த துன்பம்.

கத்தியின் உபயோகம் என்ன என்பதை அறிவின் உதவியால் நன்கு அறிந்தவர்தாம் குழந்தையின் தந்தை. ஆனாலும் என்ன? அன்று மாலை ஒருவருடன் பலத்த சண்டையிட்டுக் கொண்டார் அவர். சண்டையில் எல்லையற்ற கோபம் அறிவை மறைத்து விட்டது. திடீரென்று மேசைமேல் இருந்த கத்தியை எடுத்து அடுத்தவரைக் குத்திவிட்டார். கத்தி அடுத்தவரைக் குத்துவதற்காகச் செய்யப்பட்டதன்று என்ற உண்மை தெரியும் அவருக்கு. ஆனாலும் ஆத்திரத்தில் தம் அறிவை இழந்துவிட்டார்.

கூர்மையான கத்தியைக் கண்டுபிடித்தது அறிவின் வேலை. அக்கத்தியைக் கொண்டு மனிதனைக் குத்தாமல், பழத்தை நறுக்கப் பயன்படுத்துவது பண்பாட்டின் பயன், அணுவைப் பிளப்பது அறிவின் வேலை. பிளந்த அணுவில் வெளிப்படும் சக்தியைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரைப் போக்கப் பயன்படுத்துவது பண்பாடற்ற பேதமையின் செயலாகும்.

ஏன் பெரியவர் அறிவை இழந்து கத்தியை கொண்டு பிறரைக் குத்தினார்? அறிவுமட்டும் இருந்தால் அது சமயத்தில் மழுங்கிவிடும். அறிவுடன் பண்பாடும் இருத்தல் வேண்டும். அறிவு, பண்பாடு என்ற இரண்டும் சேரும் பொழுதுதான் மனிதன் முழுத்தன்மையடைகிறான். பண்பாடற்ற அறிவுமட்டும் உடையவன் கொடிய காட்டு விலங்கை ஒத்தவன். மனிதன் விலங்கிலிருந்து எப்பொழுது வேறுபடுகிறான்? அறிவு, பண்பாடு என்ற இரண்டும் சேர்ந்தபொழுதுதான்.

https://t.me/Tamil_Library

அறிவைப் பற்றி வள்ளுவர் என்ன சொன்னார்? தீமையை ஒதுக்கிவிட்டு நல்லதில் செலுத்துவதே அறிவு என்றார். சிலர் தமக்கு ஏற்படும் தீமைகளிலிருந்து ஒதுங்கிக் கொள்ள முயல்வர்; ஆனால், பிறருக்கு ஏற்படும் தீமைகளைத் தடுக்க முயல மாட்டார்கள். அப்படியானால் இந்த மாதிரி ஆட்களையெல்லாம் அறிவுடையவர் என்று கூறிவிட முடியுமா? மறுபடியும் வள்ளுவர் பேசுகிறார்:

**'அறிவினால் ஆகுவது உண்டோ ? பிறிதின்நோய்**
**தம்நோய்போல் போற்றாக் கடை'**

என்று. உண்மையான அறிவு எது? பிறர் படும் துன்பத்தைக் கண்டு அதைத் தன்னுடைய துன்பமாகக் கருத வேண்டும். அதுவே உண்மையான அறிவு எனப்படும். அப்படிக் கருதுவதனால் சில சமயம் தனக்கே துன்பம் வரலாம். வந்தாலும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்பவனே அறிவுடன் பண்பாடும் கலந்த மனிதனாவான்.

ஒரு காலத்தில் மூலப் பொருள்களைப் பிரித்துக் கொண்டே சென்ற விஞ்ஞானி ஒருவர், பொருளின் மிகச் சிறிய அளவுக்கு அணு என்று பெயரிட்டார். அணு என்ற சொல்லுக்குப் 'பிளக்க முடியாதது' என்பதே பொருள். என்னே மனிதனின் அறியாமை! பிளக்க முடியாதது என்று கருதி, அணு என்று பெயரும் இட்ட பொருளைப் பிளந்தான் பிற்கால விஞ்ஞானி. ஒரு பொருள் என்று கருதிய அணுவினுள் ஓர் உலகமே இருக்கக் கண்டான். நம் நாட்டவர் அணுவினுள் ஓர் உலகமே இருப்பதை மிகப் பழங்காலத்திலேயே கண்டனர். 'அணுவினைச் சத கூறிட்ட கோண்' எனக் கம்பநாடன் கூறும்பொழுது, அணுவினுள் இருக்கும் பல்வேறு உறுப்புகளையும் இவர்கள் அறிந்திருந்தார்களோ என்றுகூட நினைக்க வேண்டி யிருக்கிறது. 'அணுத்தரு தன்மையில் ஐயோன் காண்க' அணுவுக்கும் சிறியவனாக உள்ளான் கடவுள்) என்று

https://t.me/Tamil_Library

மாணிக்கவாசகர் கூறுகிறார். நம்மவர்கள் அன்று அனுமானத்தாலும் அறிவாலும் கண்டு கூறிப்போன உண்மைகளை இன்று மேனாட்டார் விஞ்ஞான அறிவால் வெளியிடுவது போற்றற்குரியது.

அணுவைப் பிளக்கின்றவரை மேனாட்டாருடைய அறிவை உலகம் போற்றியது. ஆனால், இந்த அறிவு பண்பாட்டுடன் கலவாத பொழுது, அதை என்னவென்று கூறுவது? பண்பாட்டுடன் கலவாத அறிவை நம்மவர் என்றைக்குமே பாராட்டினதில்லை. 'அரம் போன்ற கூர்மையான அறிவுடையவராக் இருந்தாலும் மக்கட்பண்பு இல்லாதவர்கள் மரம் போன்றவர்களே' என்று கூறுகிறார் வள்ளுவர். இந்த ஒரு குறளுக்கு விரிவுரை செய்கிறான் கம்பநாடன்:

இலக்குவனும் இந்திரசித்தனும் பகைவர்கள்; சம பலம் உடையவர்கள். தெய்வாம்சமான பல ஆயுதங்களை வைத்திருப்பவர்கள். தெய்வாம்சம் என்றால் என்ன? அழித்தல் தன்மையில் ஒப்புயர்வற்றது என்பதே பொருள். இருவரும் 'பிரமாஸ்திரம்' என்ற ஒன்றைப் பெற்றிருந்தனர். தற்காலத்திய 'ஹைட்ரஜன் குண்டு' போன்றதே பிரமாஸ்திரம் எனப்படும் நான்முகன் படை; அவரவர் அறிவு வன்மையாலும், வர பலத்தாலும் இப் படைக்கலங்களைப் பெற்று வைத்திருந்தனர். ஆனாலும் இருவரிடையேயும் எவ்வளவு வேறுபாடு? அறிவு மட்டும் உடையவனாய்ப் பண்பாடு இலாதவனாய் உள்ள இந்திரசித்தன் அப் படையைப் (பிரமாஸ்திரத்தைப்) பயன்படுத்தச் சிறிதும் பின்வாங்கவில்லை. அதனால் விளையும் கொடிய பயனைப்பற்றி அவன் ஒரு சிறிதும் கவலைப்படவே இல்லை. பிறர் படும் துயரம் கண்டு உள்ளம் வருந்தும் பண்பாட்டைப் பெறாத கசடனாய் விட்டான் இந்திரசித்தன்.

https://t.me/Tamil_Library

அறிவுடன் பண்பாடும் நிறையப் பெற்ற இராம இலக்குவர்களைக் காணலாம். இந்திரசித்தன் நிகும் பலையில் யாகம் செய்கிறான் என்பதை அறிந்தனர் சோதரர் இருவரும். எவ்வாறாயினும் அந்த யாகத்தை நிறுத்த வேண்டும். இலக்குவனைப் போருக்குத் தயார் செய்து அனுப்பும் இராமன், தம்பிக்குக் கூறும் அறிவுரை நமக்கு இப்பொழுது மிகவும் பயன்படும். இராமன் இலக்குவனைத் தழுவிக்கொண்டு, "ஐயனே, தாமரை மலரின்மேல் வாழும் நான்முகன் படையை அந்த இந்திரசித்தன் விட்டாலும் அதனை விலக்குவதற்காகக்கூட நீ நான்முகன் படையை விட்டுவிடாதே. அதை ஏவினால் தேவருலகமும் இந்த மண்ணுலகமும் அழிந்துவிடும்" என்று கூறுகிறான்.

**தம்பியைத் தழுவி ஐயன் 'தாமரைத் தவிசின் மேலான்,**
**வெம்படை தொடுக்கு மாயின், விலக்குவான் பொருட்டால்**
**அந்த**
**அம்புநீ துரப்பாய் அல்லை! அனையது துரந்த காலை**
**உம்பரும் உலகும் எல்லாம் விளியும்; அஃது ஒழிதி' என்றான்.**

பண்பாடும் கருணையும் உடைய இராமனுடைய இச் சொற்களை நாம் மிகுதியும் சிந்திக்க வேண்டும். 'பகைவன்மேல் முதலில் நீ பிரமாஸ்திரத்தைப் போடாதே' என்று கூறுவதே மிகவும் சிறந்த பண்பாடு. ஆனால், இராமன் அதைவிடப் பல படிகள் மேலே சென்றுவிடுகிறான். 'அவன் முதலில் ஏவினாலும் அதனை விலக்குவதற்காகக்கூட நீ அந்த நான்முகன் படையை விடாதே. ஏன் எனின், உன்னைக் காத்துக் கொள்ளவேண்டி நீ அதை விட்டாலும், உலகம் அழிவுறும்' என்று கூறுகிறான் கருணையின் நிலையமானவன்.

ஹைட்ரஜன் குண்டை இன்று தயாரிப்பவர்களும் சோதனை செய்பவர்களும் யார் தெரியுமா? உலகம்

https://t.me/Tamil_Library

முழுவதிலும் போர் இல்லாமற் செய்து அமைதியை நிலைநாட்டப் போகிறோம் என்று மார் தட்டிக் கொள்பவர்கள். 'பின்னர் ஏன் ஐயா இவ்வளவு தயாரித்துச் சோதனையும் செய்கிறீர்கள்?' என்று கேட்டால், அவர்கள் கூறும் விடை விந்தையானது. போர் இல்லாமல் தடுக்கவும் பகைவர்கட்கு அச்சம் ஊட்டவுமே தாங்கள் இப் பரிசோதனையைச் செய்வதாகக் கூறுகின்றார்கள். 'போர் இல்லாமல் செய்ய' என்று அவர்கள் கூறும் காரணம் சரியென்றே தோன்றுகிறது. இன்னும் கொஞ்ச காலம் இப் பரிசோதனை நடத்தினால் போரே இல்லாமல் போய்விடலாம்! ஏனென்றால், அதற்குள் அனைவரும் கதிரியக்கத்தால் அழியவும் நேரிடலாம்!

இன்றைய வல்லரசுகளில் மனிதப் பண்பாடுடையவர்கள் யாரும் இல்லையா? அறிவால் மிகுந்த மேல்நாட்டுக்காரர்கள் பண்பாட்டை மறந்துவிட்டார்கள். உலகத்தை அழிக்க முற்படும் அவர்கள், தம்மைத் தாமே அழித்துக் கொள்வதை அறியவில்லை என்பது வருத்தத்துக்குரியதே.

பண்பாடற்றவனாகிய இந்திரசித்தன்கூட ஓர் உண்மையை அறிந்திருந்தான். தன் பகைவனாக இருப்பினும் இலக்குவனுடைய பண்பாட்டை நன்கு அறிந்திருக்கிறான் என்றே கூற வேண்டும். நிகும்பலையில் யாகம் செய்ய முடியாமல் இலக்குவனிடம் அடிபட்டுத் தந்தையாகிய இராவணனைக் காணப் போகிறான் இந்திரசித்தன். இராவணனைப் பார்த்து இந்திரசித்தனே கூறுகிறான்: "ஐய! இவ்வுலக முழுவதையும் ஆக்கின திருமாலின் படையாகிய நாராயணாஸ்திரத்தையே இலக்குவன் மேல் ஏவினேன். ஆனால், அந்த அஸ்திரம் அவனை ஒன்றும் செய்யாமல் சுற்றி வந்து வணங்கிச் சென்றுவிட்டது". இந்தச் செய்தியைக் கூறும்பொழுது

https://t.me/Tamil_Library

இலக்குவனுடைய பலத்தில் இந்திரசித்தன் கொண்ட மதிப்பு வெளியாகிறது. ஆனால், அடுத்து அவன் கூறும் செய்தி இன்னும் விந்தையானது.

'தந்தையே! அந்த இலக்குவன் அவ்வளவு பலமுடையவனானால் என்னை எவ்வாறு உயிரோடு திரும்பவிட்டான் என்று கேட்கிறாயா? அதையும் சொல்கிறேன் கேள். அவன் என்னைக் கொல்ல நினைத்தான். ஆனால், என்னைக் கொல்கையில் பிறர் துன்பமடைவதை அவன் விரும்பவில்லை. அதனால் போர்க் களத்தில் பிரமாஸ்திரத்தைத் தொடுக்கவே இல்லை. என்மேல் கொண்ட இரக்கத்தால் அவன் தொடுக்காமல் விடவில்லை. அதைத் தொடுத்தால் அதனால் உலகத்துக்கு ஏற்படுகிற தீங்கை நினைத்தே இலக்குவன் பிரமாஸ்திரத்தை விடவில்லை' என்ற பொருளில் கூறுகிறான்:

**'முட்டிய செருவில் முன்னம் முதலவன் படையை என்மேல்**
**விட்டிலன் உலகை அஞ்சி, ஆதலால் வென்று மீண்டேன்'**

'நான் இப்பொழுது உயிருடன் மீண்டு உன்னிடம் பேசிக் கொண்டிருக்கிறேன் என்றால் அதற்கு ஒரே காரணம், இலக்குவன் பிரமாஸ்திரத்தைத் தொடுக்க வில்லை என்பதுதான். ஏன் தொடுக்கவில்லை? என்மேல் ஏற்பட்ட கருணையாலும் அச்சத்தாலும் அவன் தொடுக்கவில்லை'.

'விட்டிலன் உலகை அஞ்சி' என்ற சொற்களுக்கு இரண்டு வகையாகப் பொருள் கூறலாம். 'உலகம் அழிந்துவிடுமே என்று பயந்து' என்பது ஒரு பொருள். 'உலகத்தார் பழி சொல்வார்களே என்பது இரண்டாவது பொருள். இந்திரசித்தன் பேசியது முதலாவது பொருளில்தான் என்றாலும், இன்றைய நிலைமைக்கு இரண்டாவது பொருளையும் ஏற்றுக்கொள்ளலாம். நம்முடைய நாட்டுப் பிரதமரிலிருந்து ஜப்பான் தேச மக்கள்

https://t.me/Tamil_Library

வரை அத்தனை பேரும் பழி தூற்றுகிறார்கள். இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் உள்ள அறிவுடைய பெருமக்களும் பழி தூற்றுகிறார்கள். இருந்தாலும் என்ன? கத்தியைத் தவறாகப் பயன்படுத்தும் குழந்தைகள் போன்றவர்கள் அல்லர் இவர்கள். ஆத்திரத்தில் அறிவை இழந்து கத்தியால் மனிதனைக் குத்தும் தந்தையைப் போன்றவர்கள் இவர்கள். மக்கட்பண்பு இல்லாமல் அரம் போன்ற கூர்மையான அறிவு படைத்தவர்கள்.

ஹைட்ரஜன் குண்டு சோதனை செய்யும் பிரிட்டிஷ், அமெரிக்க, ரஷிய ஆட்சியாளர் மனம் மாறியதாகவே தெரியவில்லையே! உலகை அஞ்சி இனிச் சோதனை நடத்தாமல் இருப்பார்களா?

https://t.me/Tamil_Library

# 12

# ஒரு பாட்டுடையான்

கம்பனுடைய பெருங்காப்பியத்தில் அளவால் பெருமை பெற்றவர்களும் இயல்பால் பெருமை பெற்றவர்களும் பலர் உண்டு. இராமனையே தலைவனாகக் கொண்டு காப்பியம் தோன்றினாலும், இராமனைவிட அதிகப் பாடல்களைப் பெற்று விளங்குகின்றான் அரக்கர் கோமான். எனவே, அதிகமான பாடல்களைப் பெற்றிருக்கின்ற காரணத்தால் ஒரு பாத்திரத்தை அதிகச் சிறப்புடையதென்று கூறுவதற்கும் இல்லை. இன்னும் சில பாத்திரங்கள் அதிகமான பாடல்களைப் பெறவில்லையானாலும் கம்பநாடனுடைய முழுப் பரிவிற்கும் பாத்திரமாகி நிற்கின்றனர். அனுமன், பரதன் போன்றவர்கள் இலக்கிய உலகிலேயே தலைசிறந்த எடுத்துக் காட்டுகளாக விளங்கவேண்டுமென்ற நோக்கத்துடனேயே படைக்கப்பட்டதாகத் தோன்றுகிறது.

அதிகமான பாடல்களைப் பெற்றுள்ளவன் அரக்கர் கோமான் என்றால், இதற்கு நேர் முரணாக ஒரே பாடலைப் பெற்று விளங்குகிறான் தசரதனுடைய கடைசி மைந்தன். பல சமயங்களில் தான் பெற்ற பிள்ளைகள் நால்வர் என்ற எண்ணமும், தனக்கு சத்துருக்கன் என்ற நாலாவது பிள்ளை ஒருவன் உண்டென்ற எண்ணமும் தசரதனுக்கு

https://t.me/Tamil_Library

இருந்ததாகவே அறியமுடியவில்லை. அவன் காதல் மைந்தனாகிய இராமன்தான் வாழ்நாள் முழுவதும் அயோத்தி வேந்தன் மன அரங்கில் விளையாடுகின்றான். இறுதிக் காலத்தில் தசரதன் மனம் முழுவதிலும் பரதன் நிரம்பி இருக்கிறான். ஆனால், இந்த இரண்டிற்கும் பெரிய வேறுபாடு உண்டு. இராமன் நிறைந்திருக்கும் பொழுது தசரதன் மனம் ஆனந்தக் கடலில் துளையமாடுகின்றது. பரதன் நினைவு வந்தவுடனேயே எல்லையற்ற வெறுப்புக்கொண்டு தன்னையும் வருத்திக் கொண்டு, பிறரையும் வருத்துகிறான் கைகேயியின் கணவன். இரண்டு புதல்வர்கள் இப்படியிருக்க, மூன்றாவது புதல்வனாகிய இலக்குவன் இராமனுடைய நிழலாகவே கடைசி வரை இருந்து கற்போர் மனத்தில் நீங்கா இடம் பெற்றுவிடுகிறான். இராமனுடன் செல்லும் அவன், 'தம்பி யென்னும் படிக்கு அல்லாமல் அடியாரின் ஏவல்' செய்கின்றான். அடியனைப் போல ஏவல் செய்பவனேயாயினும், பல சமயங்களில் அவனுடைய கோபம் கட்டுக்கடங்காத நிலையில் செல்லவே நம்மை வியப்பிலாழ்த்தி விடுகின்றான். இராமனே கூறுகின்றபடி, 'உலகம் ஏழினோடு ஏழையும் கலக்குவன்' என்று இலக்குவன் கருதுகிறான். எனவே, இந்த மைந்தனையும் மறத்தல் இயலாத காரியம். மூன்று மைந்தர்கள் நம்மிடையே உழன்று நம் கவனம் முழுவதையும் எடுத்துக் கொள்வதால் நான்காவது மைந்தனைப் பற்றி நாம் கவலை கொள்வது இல்லை. நாம் மட்டுமென்ன? பெற்ற தந்தையே கவலை கொள்வதாகவும் தெரியவில்லை. இந்த இரண்டையும் கருதிப் போலும் கம்பநாடனும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, பத்தாயிரம் பாடல் பாடிய அவனும் நான்காவது தம்பிக்கு ஒரு பாடலே தந்துள்ளான். ஒருவேளை பத்தாயிரத்துள் ஒருவனாக நான்காவது தம்பியைக் கருதவேண்டுமென்று கவிஞன் எண்ணினான் போலும்.

https://t.me/Tamil_Library

காப்பியமே முடிகின்ற தருணத்தில் மீட்சிப் படலத்தில் நான்காவது தம்பியின் உண்மை உள்ளத்தைக் காண்கின்றோம். இராமன் சொன்ன நாட்கள் முடிந்துவிட்டன. கணிதப் புலவர்கள்கூட 'ஆண் தகைக்கு இன்று அவதி'; அதாவது 'இன்றே அவன் வரவேண்டிய நாள்' என்று கூறிவிட்டார்கள். இந்நிலையில் வாய்மை காக்கின்ற பரதன், 'நினைத்து இருந்து நெடும் துயர் மூழ்கிலேன்; மனத்து மாசு என் உயிரொடும் வாங்குவேன்' என்ற முடிவுக்கு வந்து, நாலாவது தம்பியை அழைத்து வருமாறு ஏவுகின்றான்.

கண்ணீர் ஆறாகப் பெருக பரதன் நிற்கின்ற கோலத்தில், பக்கத்தில் சென்று, தொழுது நிற்கின்றான் மூவருக்கும் பின் உள்ளவனாகிய நாலாமவன். உடனே தன்னுடைய மார்போடு சேர்த்து இறுகத் தழுவிக் கொண்டான் பரதன். எதற்காகத் தன்னை அழைத்தான் அண்ணன் என்பதை அறியாமல் தவித்துக் கொண்டு நிற்கின்ற தம்பியிடம் அறத்தின் ஆணி வேராகிய பரதன் பேசத் தொடங்குகிறான். "ஐய, வேண்டுவது உண்டு, அவ்வரம் தரற்பாற்று" என்கின்றான். அதாவது "உன்னிடம் ஒரு வரம் வேண்டி இருக்கிறேன்; அதனைத் தந்தே ஆக வேண்டு"மென்று கூறி, அது என்ன வரம் என்று தம்பி கேட்கும் முன்னரே தானே சொல்லத் தொடங்குகிறான். அவ்வரம் எது என்று கேட்பாயேயானால், "சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்; மின்னு தீயிடை யான் இனி வீடுவன்; மன்னன் ஆதி; என் சொல்லை மறாதி" என்றானாம். அதாவது, "இராகவன் சொன்ன நாளில் வரவில்லையாதலால், யான் நெருப்பில் வீழ்ந்து உயிரை விடப் போகிறேன். ஆனால், மன்னன் இல்லாமல் நாடு இருக்கக்கூடாது; ஆதலால் நீ மன்னனாக ஆவாயாக" என்று கூறி முடித்தான் பரதன். ஆனால் தசரதன் புத்திரர்கள்

https://t.me/Tamil_Library

யாருமே ஒருவர் கூறினார் என்பதற்காகத் தம் கடமையை விட்டுக் கொடுப்பதில்லை. இதை நன்றாக அறிந்த பரதன் இதோடு நிறுத்திவிட்டால் சத்துருக்கன் ஒருநாளும் இதற்கு உட்பட மாட்டான் என்பதை உணர்ந்து, ஓர் அறக்கட்டளையிடுகின்றான். தான் மன்னன் என்ற முறையிலும், அண்ணன் என்ற முறையிலும் சொல்லுகின்றவற்றை இளையவனும், குடிமக்களுள் ஒருவனுமாகிய சத்துருக்கன் தட்டக்கூடாது என்பதை நினைவுறுத்துவது போல "என் சொல்லை மறுக்கக் கூடா"தென ஆணையிடுகின்றான். என்றாலும் என்ன?

இதைக் கேட்டான் நான்காவது தம்பி. காதுகளைப் பொத்திக்கொண்டான். விஷத்தை உண்டவனைப் போலக் கண்ணும் மனமும் நடுங்கின. விம்மி அழுதான். ஆனால், இந்த உணர்ச்சிகள் எல்லாம் ஒருசில வினாடி நேரம்தான் நின்றதாகத் தெரிகிறது. இவற்றையெல்லாம் வென்று, கோபமாகிய ஓர் உணர்ச்சி எல்லை மீறிக் கிளம்புகின்றது. அதனைக் கூறவந்த கவிஞன், 'கொழுந்துவிட்டு நிமிர்கின்ற கோபத்தான்' என்று கூறுகிறான். எனவே, தன்னை மீறி வருகின்ற சினத்தால் ஆட்கொள்ளப்பட்ட இளையவன் அண்ணனை நோக்கி, "அழுந்து துன்பத்தினாய்! நான் உனக்கு என் பிழைத்து உளேன்?" என்று கேட்கிறான். இந்தக் கோப உணர்ச்சி ஓரளவு அதிக நேரம் இருந்து அதனோடு வெறுப்பு, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம் ஆகிய எட்டுச் சுவைகளும் ஒன்றாகக் கலந்து ஒருங்கே காட்சியளிக்கின்ற ஒரே பாட்டில் பேசுகின்றான் அந்த அற்புதமான தம்பி:

'கான்ஆள நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்து, பின்பு
போனானும் ஒருதம்பி; போனவன்தான்
வரும்அவதி போயிற்று என்னா,


https://t.me/Tamil_Library

ஆனாத உயிர்விட என்று அமைவானும்
ஒருதம்பி; அயலே நாணாது,
யானாம்இவ் அரசுஆள்வென்? என்னே, இவ்
அரசாட்சி! இனிதே அம்மா!'

"காட்டை ஆள்வதற்காக—அரச பாரத்தைக் கைவிட்டுச் சென்றவனாகிய இராமனைக் காப்பாற்று வதற்காக—ஒரு தம்பி பின்னேயே போய்விட்டான். அப்படிப் போனவன் வரவேண்டிய நாள் கடந்துவிட்டது என்று சொல்லிக்கொண்டு மிகச் சிறந்த உயிரைவிட முடிவு செய்துவிட்டான் மற்றொரு தம்பி. இவர்கள் இருவரும் ஒருபுறம் நிற்க, ஒரு சிறிதும் வெட்கம் இல்லாது நான் இந்த அரசாட்சியை ஆள வேண்டுமா? எவ்வளவு இனிய அரசாட்சி இது!" என்பதே இப்பாடலின் பொருள்.

நாலாவது தம்பியின் மனநிலை முழுவதையும் இந்த ஒரு பாடல் காட்டி நிற்கின்றது. பரதன் கூறிய இந்தச் செய்தியை நினைக்கவும் முடியாமல் அஞ்சுகிறான் சத்துருக்கன். அந்த 'அச்சத்தின்' பின்னே இத்தகைய ஒரு பைத்தியக்காரத்தனம் நடைபெறுமா என்று நினைத்த வுடன் 'மருட்கை' தோன்றுகிறது. இந்த அரசாட்சியின் நிலையை நினைக்கும்பொழுது 'எள்ளல்' தோன்றுகிறது. தன் மனநிலை தெரியாமல் பேசிய பரதன் உரைகளைக் கேட்டுக் 'கோபம்' ஒருபுறமும், இவ்வளவு தவறாகத் தன்னை நினைந்து விட்டானே என்று நினைக்கும்பொழுது 'அழுகையும்', தான் இராமன் தம்பி அல்லையோ என்று நினைக்கும்பொழுது 'இளிவரலும்' ஒருங்கே தோன்று கின்றன. 'பல சொல்லக் காமுறுவர் மன்ற, மாசற்ற சில சொல்லல் தேற்றாதவர்' என்றும், 'சொல்லுக சொல்லில் பயனுடைய' என்றும், 'பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லும்திறன் இன்மை அறிந்து சொல்க' என்றும் எழுந்த பொதுமறைக்கோர் எடுத்துக்காட்டாய், 'உருள்

https://t.me/Tamil_Library

பெருந்தேர்க்கு அச்சாணியாய்' விளங்குகிறான் ஒரு பாட்டு உடையவனாகிய சத்துருக்கன். எனவே, ஏனைய பாத்திரங்களின் பல்வேறு உணர்ச்சி நிலைகளைப் பற்பல சந்தர்ப்பங்களில் பலப்பல பாடல்கள் மூலம் கவிஞன் நமக்கு அறிவிக்கின்றான் எனினும், நாலாவது தம்பியைப் பற்றி முழுவதும் அறிந்துகொள்ளுமாறு நாலே வரிகளில் கூறியுள்ளான் கம்பநாடன். சிறந்த கலைஞன் மிகச் சிறிய அளவிலும்கூட மிகப் பெரிய படைப்பைப் படைத்துக் காட்டக்கூடும் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு அன்றோ!

https://t.me/Tamil_Library

# 13

## உவமை நயம்

உவமை என்பது பேசத்தெரிந்த குழந்தை முதல் மாபெரும் கவிஞன் ஈறாக அனைவரும் பயன்படுத்துகின்ற ஒன்றாகும். 'அறிந்ததைக்கொண்டு அறியாததை விளக்கல்' என்பது உவமைக்குச் சொல்லப்படும் இலக்கணம். பற்பல சமயங்களில் அறிந்ததையே நன்கு விளக்கக்கூட உவமை, உருவகம் என்பவை பயன்படுகின்றன. மனிதனுடைய அறிவு விரிவதற்கேற்ப உவமையைக் கையாளுகின்ற திறமும் வளர்ச்சியடைகின்றது. ஆதியில், உவமை தோன்றக் காரணமாக இருந்தது மேலே குறிப்பிட்ட இலக்கணமாகும். என்றாலும், காலம் செல்லச் செல்ல அறிவுத் திறத்தையும்,அனுபவத்தின் ஆழத்தையும் வெளியிடும் கருவியாக உவமை அமைந்துவிட்டது. இதனால் தான் போலும் மொழி இலக்கணம் கூறவந்த தொல்காப்பியனார், 'உவம இயல்' என்ற ஒரு தனி இயலையே எழுதிச் சென்றார். நூற்றுக்கணக்கான உவம உருபுகள் தமிழ்மொழியில் நிறைந்து கிடப்பதற்கும் இதுவே காரணமாகும். பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு காரணங்களால் பல்வேறு உவமைகள் செய்ய வேண்டிய தேவை ஏற்படுவதால் இத்துணை அளவுக்கு உவம உருபுகள் தேவைப்பட்டன போலும்.

https://t.me/Tamil_Library

சங்க இலக்கியம் தொடங்கிக் கவிச்சக்கரவர்த்தி பாரதி ஈறாகவுள்ள நூற்றுக்கணக்கான தமிழ் இலக்கியங்களில், தமிழ்க் கவிதைகளில் உவமை பல்வேறு வடிவங்களில் காட்சியளிக்கின்றது. வினை, பயன், மெய், உரு என்ற நான்கும் பற்றி உவமை தோன்றும் என்று தொல்காப்பியனார் குறிப்பிட்டார். இந்த நான்கின் அடிப்படையில் இன்றைக்கு உவமை நாற்பதாக விரிந்து உள்ளது என்றுகூடக் கூறலாம். மேலே கூறிய நான்கு வகை உபமானங்களையும் அவற்றோடு தொடர்புடைய உருவகங்களையும் கம்பநாடன் பெரிதும் பயன்படுத்து கின்றான். எல்லாக் கவிஞர்களுமே உவமை, உருவகம் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறார்கள் என்றால் இதன் தனிப்பட்ட சிறப்பு யாதாக இருத்தல் கூடும் என்று சிந்திக்கத் தோன்றுகிறது அல்லவா? உண்மையைக் கூறுமிடத்து ஒரு புலவனுடைய சிறப்பை அறிவதற்கு அவன் கையாளும் உவமை ஒன்றே போதுமானது எனலாம். அன்றாடம் நூற்றுக்கணக்கான பொருள்களை நம் போன்றவர்கள் காண்கின்றோம். ஆனால், இப்பொருள் களிடையே காணப்பெறும் ஒப்புமை நம் அறிவில் படுவதில்லை; பட்டாலும் அவற்றின் உண்மை விளங்குவதில்லை. இன்னும் பல சமயங்களில் புறத்தே காணப்படும் ஒப்புமை மனத்திற் படுகிறதே தவிர, ஆழ்ந்துள்ள ஒப்புமை நம் கவனத்தை ஈர்ப்பதில்லை. தொடர்பற்ற பொருள்களினிடையேகூடச் சிறந்த கவிஞன் ஒப்புமையைக் காண்கின்றான்; நம்மையும் காணுமாறு செய்கின்றான். நாம் கண்டுங் காணாத பொருள்களை விளக்க உதவுவதுடன், அடிக்கடி காணும் பொருள்களின் தனிச்சிறப்பை விளங்கிக்கொள்ளவும் உவமையைப் புலவன் கையாள்கிறான். ஆகவேதான், அவனுடைய புலமைச் சிறப்பு இதன்மூலம் வெளிப்படுகிறது என்று சொல்கிறோம்.

தருமம் என்ற ஒன்றைப்பற்றி நாம் கேள்விப்பட்டி ருக்கிறோம். என்றாலும், நுண்ணிய கருத்துப் பொருளாகிய

https://t.me/Tamil_Library

அதைப் பற்றி நன்கு மனத்தில் வாங்கிக்கொள்ளுவதும் அதனை விளங்கிக் கொள்வதும் கடினமாகும். சந்திரனை நாம் அனைவரும் கண்டுள்ளோம். நிர்மலமான ஆகாயத்தில் முழுச் சந்திரன் புறப்படும் பொழுது நம்முடைய கவனத்தைப் பற்றி ஈர்க்கின்றது. என்றாலும், இருளைக் கிழித்துக்கொண்டு புறப்படுகின்ற இந்தச் சந்திரன், நம் வாழ்வில் பல முறை கண்ட இச்சந்திரன், நம்முடைய கற்பனையில் மட்டும் காட்சி அளிக்கின்ற தருமத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கவிஞன் செய்கிறான். 'தருமத்தின் வதனம் என்னப் பொலிந்தது தனி வெண் திங்கள்' என்று கம்பநாடன் கூறும்பொழுது, இதுவரையில் நம்முடைய கற்பனையில், அக மனத்தில் மட்டுமே அறியப்பெற்ற தருமம், திடீரென்று முழு வடிவும் ஒளியும் பெற்று நம் கண் எதிரே காட்சி அளிக்கின்றது. இத்தகைய ஒரு பயனை—அதாவது கருத்தில் மட்டும் அறிந்த ஒன்றைக் கட்புலனுக்கும் எளிதாகக் கொண்டுவந்த புதுமையை கவிஞன் உவமையால் செய்துவிடுகிறான். 'சிரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமன்' என்று கவிஞன் குறிப்பிடும்பொழுது தாமரைக்கு இல்லாத ஒரு சிறப்பை அதாவது சிரிக்கின்ற இயல்பை அத் தாமரையினிடம் ஏற்றி, அதனைத் தம்முடைய உள்ளத்திற் புகுத்திய பிறகு சக்கவர்த்தித் திருக்குமாரனின் கண்களை நாம் காணுமாறு செய்கிறான். 'பங்கயக் கண்கள்' அல்லது கமலம் போன்ற கண்கள் என்று கூறினால், அக்கமலம் விரிதல், மலர்தல், கூம்புதல், வாடுதல் ஆகிய பல நிலைகளுக்கும் உட்பட்டதன்றோ? எனவே, இராமபிரானுடைய கண்கள் எந்த நிலையிலுள்ள தாமரையை ஒத்து இருந்தன என்று ஐயப்படுபவர்களுக்கு அவர்கள் ஐயப்பாட்டைப் போக்குபவன் போலச் 'சிரித்த பங்கயம்' என்று கவிஞன் கூறுகிறான். இந்தச் சொற்களைக் கூறிய உடனேயே புதிதாக மலர்ச்சி அடைந்த தாமரை நம் கண்முன் காட்சி

https://t.me/Tamil_Library

அளிக்கின்றது. எனவே, இராமனுடைய கண்களின் மலர்ந்த, மகிழ்ச்சியுடன் கூடிய நிலை நினைவுக்கு வருகிறது.

சிற்சில சந்தர்ப்பங்களில் இவ்வளவு சிறப்புடைய உவமையும் இதனோடு தொடர்புடைய உருவகமும் கவிஞனின் மனத்தில் எண்ணிய கருத்தை முழுவதும் வெளிப்படுத்த முடியாமற் போவதும் உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில், மொழிக்கு இயற்கையாக உள்ள, கருத்தை வெளிப்படுத்த முடியாத குறைபாட்டை எண்ணிக் கவிஞனே வருந்துகின்றான். அவனால் செய்யத்தக்கது ஒன்றுமில்லை என்று கண்டபொழுது கையை விரிப்பது தவிர அவன் செய்யத்தக்கது ஒன்றும் இல்லை. கவிச் சக்கரவர்த்தி கம்பநாடன் கூட இதற்கு இலக்காகி விடுகிறான். இலக்குவனாம் தம்பியோடும், மிதிலைப் பொன்னாகிய சானகியோடும் இராமன் காட்டில் நடந்து செல்கின்ற காட்சியை வருணிக்கத் தொடங்குகின்றான் கவிஞன். மாலை நேர வெய்யில் இராமனுடைய நீல மேனியில் பட்டுத் தெரிக்கின்ற அழகைச் சொல்ல வந்த கவிஞன், அந்த அழகைக் கற்பனையில் கண்டு அதனுடன் அமையாமல் தான் கண்ட காட்சிக்கு வடிவு கொடுக்கவும் விரும்புகிறான். 'மையோ, மரகதமோ, மறிகடலோ, மழை முகிலோ' என்று தொடங்கிய கவிஞன், இத்தனை சொற்களைப் பயன்படுத்தியுங்கூட அந்த அழகை முழுமையும் தான் கூறமுடியவில்லை என்ற உண்மையை உணர்கின்றான். வேறு எத்தனை சொற்களைப் பயன்படுத்திடினும் அந்த அழகை முழுவதும் வருணிக்க முடியாது. அதாவது சொல்லால் வருணிக்க முடியாது என்ற பேருண்மையை உணர்கின்ற கவிஞன், "ஐயோ! இவன் வடிவு என்பதோர் அழியா அழகு உடையான்" என்று கூறுமுகத்தான் தன்னுடைய ஆற்றாமையைத் தெரிவிக்கின்றான். இரக்கக் குறிப்பை உணர்த்தும் 'ஐயோ' என்ற சொல் நான்காவது அடியின் முதலில்

https://t.me/Tamil_Library

பயன்படுத்துவதன் மூலமாக மூன்றாவது அடி முழுவதிலும் பயன்படுத்திய உருவகத்திற்கு ஒப்புமை இல்லாத ஒரு தனிச்சிறப்பைக் கவிஞன் நல்கிவிடுகிறான்.

"உயர்ந்ததன் மேற்றே உள்ளும் காலை" என்பது தொல்காப்பியம். அதாவது, ஒப்புமை சொல்லவேண்டிய காலத்தில் உயர்ந்த பொருள்களோடு ஒன்றை உவமிக்கவேண்டுமே தவிரத் தாழ்ந்த பொருள்களோடு உவமித்தல் ஆகாது என்பதே இதன் கருத்தாகும். ஒருவனுடைய சிறந்த வல்லமைக்கு உவமை கூற வேண்டுமானால், யானையைப் போன்ற வல்லமை யுடையான் என்று கூறவேண்டுமே தவிர, எருமை அல்லது பன்றி போன்ற வல்லமையுடையவன் என்று கூறுதல் ஆகாது. வல்லமை என்பதை மட்டும் எடுத்துக்கொண்டால் பன்றி, எருமை என்ற இரண்டும் உவமைக்குத் தகுந்த பொருள்களாயினும், அவை தாழ்ந்த விலங்குகளாதலின் உவமைக்கு ஏற்றவை அல்ல. இதையும் மீறி எங்காவது ஓரிடத்தில் கவிஞன் தாழ்ந்த உவமையைக் கையாளுவானே யாகில் அதற்கு ஒரு தனிக் கருத்து இருத்தல் வேண்டும். அதுவும் கம்பன், சேக்கிழார் போன்ற கவிச்சக்கரவர்த்திகள் இத்தாழ்ந்த உவமையைப் பயன்படுத்துவார்களேயானால் நிச்சயமாக அதில் ஓர் உட்கருத்து அடங்கி இருக்கும். எனவே, கவிதையைப் படிக்கின்றவர்கள் இக்கருத்தை உணர்ந்து, சிந்திக்க முற்படவேண்டும். கண்ணப்பர் என்று கூறப்பெறும் திண்ணனார், நாணன் என்ற வேடனுடன் காளத்தி மலைமேல் ஏறினார். அங்குக் குடுமித் தேவரைக் (காளத்தி மலைமேலுள்ள இறைவனின் பெயர்) கண்டு அவரை அணைத்துக்கொண்டு மயங்கி நின்று இறங்கி வரவும் மனமில்லாது மலையிலேயே நெடும்பொழுது தங்கி விட்டார். இறுதியில், நாணன் உடன் இருப்பதை அறவே மறந்து, மலையில் இருந்து கீழே இறங்கி வருகிறார். திண்ணனாருடன் வேட்டைக்குச் சென்ற காடன் என்ற

https://t.me/Tamil_Library

மற்றொரு வேடன், திண்ணனார் காலம் தாழ்ந்து வந்ததைக் கண்டு சினந்து, "என் செய்தாய் திண்ணா நீ?" என்று கேட்கின்றான். ஆனால், அவன் கேட்ட கேள்வியைக் காதிற்கூடத் திண்ணனார் வாங்கிக் கொள்ளவில்லை. இதனிடையில் திண்ணனாருடன் மலை ஏறிச் சென்றிருந்த நாணன், காடனுக்கு விடை கூறுபவனாகிக் கீழ்க்கண்டவாறு பேசுகின்றான்:

'அங்(கு) இவன் மலையில் தேவர் தம்மைக்கண்('டு)
அணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போதா வல்லுடும்(பு)
என்ன நீங்கான்'

என்று பேசுகின்றான்.

அதாவது "மலையின்மேல் உள்ள குடுமித்தேவரை அணைத்துப் பிடித்துக் கொண்டு, மரப்பொந்தைப் பற்றிக்கொண்டு விடாத உடும்பைப் போல் விடமாட்டேன் என்று தங்கிவிட்டான்" என்று கூறுகின்றான். திண்ணனார் இறைவனைப் பற்றிக்கொண்டு விடமாட்டேன் என்று இருந்த ஒப்பற்ற செயலை இந்த உவமையினால்தானா விளக்கவேண்டும் என்று நாமே வியப்படைகிறோம்! பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடுகின்ற சேக்கிழார் இந்த உவமையை எவ்வாறு கையாண்டார் என்றும் வியக்கிறோம். ஒரு சிறிது சிந்தித்துப் பார்த்தால் உண்மை புலப்படும். இவ்வேடுவர் இருவரும் கல்வி வாசனையோ பிற பண்போ சிறிதும் இல்லாதவர்கள். எனவே, நாணன் கூற்றாக வருகின்ற உவமை இதைவிட உயர்ந்ததாக இருந்திருப்பின் அது சேக்கிழாருடைய கவித்திறனுக்கு ஏற்றதாகாது. உண்மையைக் கூறவேண்டுமானால் இம் மாதிரி இடங்களில் பாத்திரத்தின் பண்பை விளக்குகின்ற உவமையாக அமையவேண்டுமே தவிர உயர்ந்ததாக மட்டும் அந்த உவமை இருத்தல் தகாது. இந்த உவமையைக்

https://t.me/Tamil_Library

கூறுவதாலேயே சேக்கிழாருடைய கவிதைச் சிறப்பு நன்கு வெளிப்படுகிறது. கல்வி அறிவு இல்லாத வேடன் ஒருவன், தான் அன்றாடம் காண்கின்ற உடும்பை உவமப் பொருளாகக் கூறுவதுதான் பொருத்தமே தவிர வேறு எத்தகைய உயர்ந்த உவமையையும் கையாளுதல் ஆகாது.

இதற்கு மாறாகக் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன் மிக உயர்ந்த பாத்திரமான இலக்குவன் கூற்றில் இத்தகைய தாழ்ந்த ஓர் உவமையைக் கையாளுகின்றான். இந்த இடத்தில் பேசுகிறவன் கல்வி கேள்விகளில் மிக்கவனாம் இராமபிரானின் தம்பியாகிய இலக்குவன் ஆவான். என்றாலும், தமையனுக்குக் கிடைக்க வேண்டிய முடியைச் சிற்றன்னை ஏமாற்றிப் பறித்துவிட்டாள் என்ற எல்லையற்ற கோபம் காரணமாக, "மூட்டாத காலக் கடைத் தீ" என மூண்டு எழுந்து நின்று பேசுகின்றான். அவனுடைய கோபம், மேல் உலகத்தையும் சுட்டெரிக்கக் கூடியதாய் மூண்டு நின்ற நிலையை, இராகவனே கண்டு மனம் வருந்தி, இலக்குவன் கொண்ட கோபம் தவறானது என்று பேசுகின்றான். முறை தவறித் தோன்றுகின்ற இத்தகைய சீற்றம், இலக்குவன் போன்ற பண்புடைய ஒருவனுக்குத் தோன்றக்கூடாது என்ற உண்மையை, இராகவன், "உளையா அறம் வற்றிய, ஊழ் வழுவுற்ற சீற்றம், விளையாத நிலத்து, உனக்கு எங்ஙண் விளைந்தது?" என்று கேட்கும் வினாவிலேயே அடுக்குகிறான். இத்துணை அளவு கோபத்தில் கொதித்து எழுந்த இலக்குவன், பேசுகின்ற பேச்சுகள் மிகத் தாழ்ந்த மனநிலையில் உள்ள ஒருவன் பேசுகின்ற பேச்சுகளாகவே அமைந்துவிட்டன என்பதையும், கமலக்கண்ணன், "வாய் தந்தன பேசுதியோ, மறை தந்த நாவால்"—அதாவது, "வேதத்தை ஓயாது பாராயணம் செய்கின்ற திருவாயால் வழங்கத் தகாத வார்த்தைகளை நீ பேசலாமா" என்ற கருத்துபடக் கேட்கின்றான். இராமனின் இக்கூற்றுகளால்

https://t.me/Tamil_Library

இலக்குவனுடைய மனோநிலை கோபம் காரணமாக எவ்வளவு தாழ்ந்த நிலைக்குச் சென்றுவிட்டது என்பதை நமக்கு நன்கு விளக்குகின்றன. இத்தகைய சீற்றத்துடன், இத்தகைய ஒரு பண்பிழந்த மனோநிலையில் இலக்குவன் ஓர் உவமை கூற நேர்ந்தால் அவன் கல்வி, அறிவு, பண்பாடு ஆகியவற்றிற்கு ஏற்ற உவமை கூறுவான் என்று எதிர் பார்ப்பதும் தவறு. அப்படியே அவன் கூற்றாக உயர்ந்த ஓர் உவமையைக் கவிஞன் கூறியிருப்பின் கம்பன் கவிஞனாக ஆகலாமே தவிர கவிச்சக்கரவர்த்தியாய் ஆகமுடியாது. கவிச்சக்கரவர்த்தி கம்பனா இத்தவற்றைச் செய்வான்? எனவே, மிகமிக விழிப்புடன் இலக்குவன் கூற்றாகக் கீழ்க்கண்ட உவமையைக் கவிஞன் தருகின்றான்:

இராமனுக்குக் கிடைக்கவேண்டிய முடியைப் பரதனுக்குக் கைகேயியே பெற்றுவைத்தது எதைப் போல இருக்கிறதென்றால், சிங்கக் குட்டிக்கு எனத் தயாரித்து வைத்த இன்சுவையோடு கூடிய புலாலை அற்பத்தனம் பொருந்திய சொறிநாய் ஒன்றுக்கு இடுவது போலாகும் என்ற கருத்தில் இலக்குவன் பேசுகின்றான்.

> **"சிங்கக் குருளைக்கு இடுதீம் சுவை ஊனை, நாயின்**
> **வெம்கண் சிறுகுட் டனுக்கு ஊட்ட விரும்பி னளால்!"**

என்ற இலக்குவன் கூற்று ஆய்தற்குரியது.

"அறத்தின் ஆணி" என்று விஸ்வாமித்திரனாலும், "ஆயிரம் இராமர்கட்கும் மேம்பட்டவன்" என்று இராமன் தாயாகிய கோசலையாலும் புகழப்பெற்ற பரதனை— "தள்ளரிய பெருநீதித் தனி ஆறு புக மண்டும் வெள்ளம்" என்றும் புகழப்பெற்ற பரதனை—"வெங்கண் நாயின் சிறு குட்டன்" என்று இலக்குவன் பேசுகிறான் என்றால் அது மன்னிக்க முடியாத பெரும் பிழையாகும். ஆனால், வேண்டுமென்றேதான் கவிச்சக்கரவர்த்தி இந்த உவமையை இலக்குவன் கூற்றாகக் கையாளுகின்றான். இது தவிர வேறு

https://t.me/Tamil_Library

எந்த உவமையையும் இலக்குவன் கையாண்டு இருப்பினும் அவனுடைய தாழ்ந்துவிட்ட மனநிலையை அவ்வுவமை எடுத்துக் காட்டாது. இவ்வாறு இலக்குவன் கூறும் உவமையின் மூலமாகவே அவன் மனநிலையை எடுத்துக் காட்டுவதை விட்டுவிட்டுக் கவிஞன் நூறு பாடல்கள் மூலம் இலக்குவன் மனநிலையை எடுத்துக்கூறி இருப்பினும் இப்பயன் விளையாது. மேலாகப் பார்ப்பவர்கள் உவமை என்று நினைத்து விட்டுவிட, ஆழ்ந்து சிந்திப்பவர்கள் இலக்குவன் மனநிலையை அப்படியே படம்போல் காண வழி வகுத்துவிட்டான் கவிஞன். எனவே, இந்த அற்புதமான உவமையைக் கையாள்வதன்மூலம் கவிச்சக்கரவர்த்தி இலக்குவனுடைய தாழ்ந்துவிட்ட மனோநிலையைக் காட்ட முடிந்ததுடன், தன்னுடைய கவித் திறத்தையும் உலகிற்குக் காட்டிவிடுகின்றான். உவமை ஒன்றால்மட்டும் புலமையை அளந்துவிட முடியும் என்பதற்கு இது ஒன்றே நல்ல எடுத்துக்காட்டாகும்.

https://t.me/Tamil_Library

# 14

## முரணில் முழுமுதல்

ஆதி மனிதன் என்று சிந்திக்கத் தொடங்கினானோ, அன்றே அவனைச் சுற்றிலுமுள்ள முரண்பாடுகளைக் கவனிக்கத் தொடங்கினான். கறுப்பு, வெள்ளை என்ற முரண்பாட்டிலிருந்து உலகம் முழுவதும் முரண்களால் நிறைந்திருக்கக் கண்டான். ஒன்றுக்கொன்று நேர்மாறாக அமைந்திருக்கும் இவ்வுலகின் உட்பொருள் யாது என அவன் நினைக்கத் தொடங்கினான். அன்பே வடிவான பசுமாட்டைக் காட்டிலே கண்டான் ஆதி மனிதன். ஆனால், அதே காட்டில் கொடுமையே வடிவான புலியும் வாழ்வதைக் கண்டான். தத்தம் வாழ்வை நடத்திச் செல்லுகின்ற முறையில் அவை அவை சிறந்தவைதாம். எதனை உயர்ந்தது என்று கூறுவது? எதனைத் தாழ்ந்தது என்று கூறுவது?

வெய்யிலில் கிடந்து அவதியுற்றான் ஆதி மனிதன். ஆனால் அதன் மறுதலையான குளிர் வந்தபொழுதும் துன்புற்றான். பல முறை வெய்யில் சிறந்ததா, குளிர் சிறந்ததா என்ற வினாவை அவனே எழுப்பியிருத்தலுங் கூடும். இரண்டிலும் நன்மையும் உண்டு தீமையும் உண்டு என்பதை அவன் காணப் பல்லாண்டுகள் ஆகியிருத்தல் கூடும். தன்னைச் சூழ்ந்து நிற்கும் இயற்கையில் முரண்பாட்டைக் கண்ட அவ் ஆதி மனிதன் வேறு

https://t.me/Tamil_Library

வழியின்றி இரண்டையும் ஏற்றுக்கொள்ளும் நிலையைக் காலாந்தரத்தில் அடைந்திருப்பான்.

இந்நிலையில் அவனுடைய அறிவு வளரலாயிற்று. உலகையும் அதில் காணப்படும் பொருள்களையும் கண்டு வியப்பில் வாயைப் பிளந்து கொண்டிருந்த நிலை மாறிப் பொருள்களின் இயல்பை ஆயும் அறிவைப் பெற்றான் மனிதன். பொருள்களின் புறத்தோற்றத்தையும், அவற்றின் இயல்புகளையும், நடைமுறையையும் கண்ட மனிதன் அவைபற்றி ஆராயத் தொடங்கினான். அங்கும் அவன் கண்டது முரண்பாடே. தூரக் காட்சிக்குக் கறுப்பாக இருந்த பொருள்கள் நெருங்கிச் சென்று காணும்பொழுது வேறு நிறமுடையவாய்க் காட்சி நல்கின. அன்பே வடிவானவை என்றும் கொடுமையுடையன என்றும் அவனால் கருதப்பெற்ற பசுக்களும் புலிகளும், சில சந்தர்ப்பங்களில் முறையே கொடுமையுடையனவாகவும் அன்புடையன வாகவும் இருந்தன. இம் முரண்பாடுகளால் பொருள்களின் இயல்பு பற்றி அவன் கொண்டிருந்த அடிப்படை ஆட்டங் கண்டுவிட்டது. நல்லவை என்று அவனால் கருதப்பெற்றவை, ஒரோவழித் தீயவையாக இருத்தலும் அவன் சிந்தனையைத் தூண்டி விட்டன.

இந்நிலையில் மனிதன் தன்னைச் சூழ்ந்துள்ள தன் இனத்தைக் கவனிக்கத் தொடங்கினான். இங்கும் இதே முரண்பாட்டைக் கண்டான். நல்லவர்கள் என்று இவன் கருதி நம்பியவர்கள் தீயவர்களாய்ச் சில சந்தர்ப்பங்களில் காணப்பெற்றனர்; அன்புடையவர் என்று கருதப்பெற்றவர் அன்பிலராய்க் காட்சி நல்கினர். நன்மை, தீமை என்ற பண்புகளிலேயே மனிதன் ஐயங் கொள்ளத் தொடங்கினான். ஒருவேளை தன் காட்சிதான் தவறானதோ என்றும் பன்முறை சிந்திக்கத் தொடங்கினான்.

https://t.me/Tamil_Library

உலகம் அமைதியுற்று வாழ்வதால் இன்பத்தை அடையக் கூடும் என்பதை மனிதன் தன் வாழ்விலிருந்தே அறிந்து கொண்டான். அப்படியானால், ஏன் உலகில் அமைதி இல்லை என்ற வினா பிறந்தது. அமைதி கெடுவதற்குக் காரணம் முரண்பாடே என்ற முடிவுக்கு வந்தான் மனிதன். அவ்வாறாயின், முரண்பாட்டை ஒழித்துவிட்டால் அமைதி கிட்டுமே என்ற முடிவுக்கு வந்தான். முரண்பாட்டை அழிக்கவேண்டும் என்று முடிவு செய்து கொண்டான். பாவம், முரண்பாட்டை, இயற்கையில் எங்கும் நிறைந்த முரண்பாட்டை, என்றும் எங்கும் நிலைத்துள்ள முரண்பாட்டை அழிக்கப் புகுவதே ஒரு முரண்பாட்டிற்கு அடிகோலுவதாகும் என்பதை மனிதன் அன்றும் தெரிந்துகொள்ளவில்லை; உலக அமைதியைப் போரிட்டாவது பெற்றுத் தருகிறேன் என்று இற்றைநாள் மனிதன் மார்தட்டும் நிலையிலும் தெரிந்துகொள்ள வில்லை. என்ன செய்வான் மனிதன்? முரண் நீங்கினால் அமைதி கிட்டும். அமைதி கிட்டினாலொழிய முரண் நீங்க வழியில்லை. இவ்வாராய்ச்சியில் ஈடுபட்ட மனிதன், நாய் தன் வாலைப் பிடிக்கச் சுற்றிச்சுற்றி வருவதுபோலச் சுற்றிச்சுற்றி வந்தான்.

இங்ஙனம் பல்லாண்டுகள் கழிந்தன. எவ்வாறாயினும் முரண்பாட்டை அழிக்கவேண்டும் என்ற அவனுடைய கொள்கை உறுதிப்படலாயிற்று. இந்நிலையில் முரண் பாட்டின் அடிப்படையை ஆயத் தொடங்கினான் மனிதன். முரண்பாடுகள் என்பவை உண்மையில் முரண்கள்தாமா? கறுப்பின் நேர் எதிர்தானா வெளுப்பு? தீமையின் நேர் எதிர்தானா நன்மை? தோல்வியின் நேர் எதிர்தானா வெற்றி? இவ்வாறு முரணின் அடிப்படையை ஆயத் தொடங்கிய பொழுதுதான் மனிதனுக்குச் சில உண்மைகள் தெரியலாயின. முரண்பட்ட பொருள்களை எடுத்துக் கொண்டு மேலாக ஆயுமிடத்து அவற்றுள் முரண்பாடு

https://t.me/Tamil_Library

காணப்படினும் ஆழ்ந்து ஆயும்பொழுது அம் முரண்பாடு சிறிதுசிறிதாக விலகத் தொடங்கியது. ஒன்றிலிருந்து மற்றொன்று வெளிப்படுவது போலவும் தோன்றத் தொடங்கியது. நன்மை, தீமை என்பவை ஒரே பொருளின் இரு புறங்கள்தாமோ என்றுகூட நினைக்க வேண்டியதாயிற்று.

முழுவதும் ஒளியென்றும் இருளென்றும், கறுப்பென்றும் வெள்ளையென்றும், நன்மையென்றும் தீமையென்றும் கூறத் தக்கன ஒன்றும் இல்லை என்பதை உணரத் தொடங்கினான் மனிதன். ஒரு நிலையிலிருந்து காணும்பொழுது நன்மையாகப் படுவதே, பிறிதொரு நிலையிலிருந்து காணும் பொழுது தீமையாகப் படுகிறது. புலி கொல்வது கொடுமையுடையதாகப் படினும், அதன் குட்டியின் பசி தணிக்கச் செய்யும் முயற்சியே அது என்று நோக்கும் பொழுது அன்புடைய செயலாகவே தோன்றலாயிற்று.

மேலாகப் பார்க்கும்பொழுது தம்முள் மாறுபட்டவை அல்லது முரண்பட்டவை என்று நாம் கருதும் பொருள்கள், ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது ஓரளவு முரண்பாட்டை இழந்து விடுகின்றன. இளமைக்கு முதுமை முரண்; முதலுக்குக் கடை முரண்; கலத்தலுக்குக் கலவாமல் இருத்தல் முரண் என்று எல்லாம் கருதுகிறோம். இம்முரண்பாடுகளிடையே எவ்விதமான ஒற்றுமையும் இல்லை என்றும், ஒன்றுக்கொன்று நேர்மாறான நிலைகள் இவை என்றும் அனைவரும் கருதுகிறோம். சிந்தித்துப் பார்க்கும்பொழுது இந்த நேர்மாறான நிலைகளிடையே ஓர் ஒற்றுமைத் தன்மை விளங்கக் காண்கிறோம். வருதல் ஆகிய செயலுக்கும், வாராது இருத்தல் ஆகிய செயலுக்குமுள்ள ஒற்றுமையைப் பின்னர் ஓரளவு விரிவாகக் காணலாம். ஒளி என்பதும் இருள் என்பதும் தனித் தனியானவை அல்ல;

https://t.me/Tamil_Library

ஒளியிலே இருளும், இருளிலே ஒளியும் கலந்து நிற்கின்றன என்பதையும் நாம் அறிய முடியும்.

இவ்வாறு ஆழ்ந்து நோக்கினபொழுது முழுத் தீமையென்றும் முழு நன்மையென்றும் கூறத்தக்கது ஒன்றும் இல்லை என்பதை அறிந்தான். எனினும், உலகியல் நிலையில் தீமை என்று கூறத்தக்கது இருக்கத்தானே செய்கிறது. அமைதியைக் கெடுக்கும் தீமை ஏன் இருக்கவேண்டும் என்ற வினாவை எழுப்பினான் மனிதன். அடுத்தது இத்தீமையை யார் உண்டாக்கினார்கள் என்ற வினா எழுந்தது. நன்மையை யார் படைத்தார்களோ அவர்களே தீமையையும் படைத்திருக்க வேண்டும் என்ற முடிவுக்குத்தான் மனிதனுடைய ஆராய்ச்சி கொண்டு செலுத்தியது. இன்னும் அதுபற்றிச் சிந்திக்கும்பொழுது படைப்பின் சிறப்பே அதுதான் என்றுகூட நினைக்க வேண்டி வந்தது. அப்படியானால், படைத்தவன் இயல்பு யாது என்ற வினாத் தோன்றிற்று. முரண்பாட்டைப் படைத்துவிட்ட அவனும் முரண்பாடுடையவன்தானா? ஆம். ஆழ்ந்து ஆராயாமல் மேலாக நின்று நோக்கும்பொழுது படைத்தவனிடமும் முரண்பாட்டைக் காணலாம். மேலாகக் காணும்பொழுது தோன்றும் முரண்பாட்டை முழுமுதலிடமுங்கூடக் காண்கிறவர் காட்சியைக் கம்பநாடர் இதோ கூறுகிறார்:

'தோய்ந்தும், பொருள் அனைத்தும் தோயாது நின்ற
சுடரே'
'மேவாதவர் இல்லை, மேவினரும் இல்லை;
வெளியோடு இருளில்லை; மேல் கீழும் இல்லை;
மூவாதமை இல்லை, மூத்தமையும் இல்லை;
முதல்இடையோடு ஈறு இல்லை; முன்னோடு பின்
இல்லை;
தேவாஇங்கு இவ்வோ நின்தோன்று நிலை என்றால்'

(கம்பராமா: சரபங்கர், 27, 28)

https://t.me/Tamil_Library

'தோய்ந்தும்' என்று தொடங்கும் அடியின் கருத்து யாது? பொருள் அனைத்திலும் கலந்தும் கலவாமலும் இருக்கும் ஒளியே என்பதுதான் இதன் பொருள். ஒன்று, ஒரு பொருள் மற்றதில் கலந்து நிற்கலாம்; அன்றேல், கலவாமல் இருக்கலாம். ஒரே நேரத்தில் ஒரு பொருள் மற்றொன்றில் கலந்தும் கலவாமலும் எவ்வாறு இருக்க முடியும்? 'மேவாதவர் இல்லை; மேவினரும் இல்லை' என்ற அடியில் இத்தகைய ஒரு நிலையைத்தான் கவிஞர் பேசுகிறார். 'முதல், இடை, ஈறு இல்லை' என்று கூறுவதால் ஆதியும் அந்தமும் அற்றது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். மேவாதவர் பகைவர், மேவினர் நண்பர் என்ற இரண்டும் முரண்பட்ட நிலைகள். இவை இரண்டும் இல்லையாம் இறைவனுக்கு. மூவாத நிலை—இளமை; மூத்தமை—முதுமை நிலை. இவ்விரு முரண்களிலும் படாதவன் இறைவன். இவ்விதம் முரண்பட்டவற்றுள் ஒற்றுமையாய் இலங்குபவனே இறைவன்.

ஆழ்ந்து ஆராயாமல் மேலாகப் பார்ப்பவருக்குப் பொருள்களிடம் முரண்பாடு தோன்றுவதுபோல், முழுமுதலிடத்தும் முரண்பாடு தோன்றத்தான் செய்கிறது. எனவே, இம் முரணைக் கடந்து முழுமுதற் பொருளை அறிய மாட்டாதார் அப்பொருளையும் முரண் உடையதாகவே கருதிவிட்டனர்.

இந்த அடிப்படையில் ஆய்ந்தால் ஒளி என்ற பொருளையும் இருள் என்ற பொருளையும் தனி இயல்புடையனவாகக் காணும் காட்சியில்தான் தவறு உண்டாகிறது என்பது தெரியவரும். மேல் என்ற இயல்பும், கீழ் என்ற இயல்பும் தனித்தன்மையுடையன என்று கருதுவதில்தான் பிழை நேர்கிறது. இவற்றுள் எது உண்மை?

இனி, இதே கருத்தை வளர்த்திச் செல்கிறான் கவிச்சக்கரவர்த்தி. 'வேதங்கள் அறைகின்ற உலகு எங்கும்

https://t.me/Tamil_Library

விரிந்துள்ள இறைவனின் திருவடிகள். ஆனால், ஒன்றனோடு ஒன்று முரண்பட்டு நிற்கும் ஐம்பூதங்களாகிய நிலம், நீர், தீ, வளி, விசும்பு என்றவற்றில் உறைந்தால் அப்பொருள்கள் எவ்வாறு அத்திருவடியைப் பொறுத்துக் கொண்டுள்ளன?' (விராதன் வதை—47) என்று பேசுகிறான் கவிஞன்.

முரண் கடந்து நிற்கும் முழுமுதலைப் பற்றி எளிய மானிடன் சிந்திக்கத் தொடங்கினால் என்ன அறிய முடியும்? உலகின் முரண்பாடுகளிற் சிக்கி அவற்றிலிருந்து மீண்டு வரமுடியாமல் தத்தளிக்கும் மனிதன், முரண்பட்ட பொருள்களில் முரண்பாட்டைத் தவிர ஒருமைப்பாட்டை அறியமுடியாத சிற்றறிவு படைத்த மனிதன், என்ன செய்ய முடியும்? முரண்பாட்டின் இடையே நின்று முரணில்லாத முழுமுதலைக் காண்பவன் அதன் தன்மையை அறியமுடியாமல் அதுவும் ஒரு மாயையோ என நினைக்கிறான். ஆனால், ஒரு சிலர் இந்நிலையைக் கடந்து சென்று முரணின் இடையே முரண்பாடற்ற தன்மையை, அதாவது, ஒருமைப்பாட்டைக் காண்கின்றனர். அவ்வாறு ஒருமைப்பாட்டைக் காணக்கூடிய அவர்கட்குக்கூட வியப்புத் தோன்றத்தான் செய்கிறது. இந்த இரண்டு மனநிலைகளையும் கவிஞன் 'மாயை இது என்கொலோ? வாராதே வரவல்லாய்!' (விராதன் வதை—54) என்று பாடுகிறான். வாராமலே வருதல் என்பது ஒரு முரண்பாடுதான். ஆனால், முரண் இல்லாத முழுமுதல் இதனைச் செய்கிறான். எனவே, 'மாயை இது என் கொலோ?" என்று மனிதன் வியக்கிறான்.

ஓரளவு சிந்தனையைச் செலுத்தினால் 'வாராதே வருதலிலும்' முரண்பாடு ஒன்றும் இல்லை என்பது விளங்கும். இதைச் சற்று விரிவாகக் காண்டல் வேண்டும்.

மனிதன் காணும் முரண்பாட்டிற்குப் பெருங் காரணமாய் அமைவது அவன் பேசும் மொழியேயாம்.

https://t.me/Tamil_Library

ஒருவன் மனத்தே தோன்றும் கருத்தைப் பிறர் செம்மையாக அறிய உதவுவதும் மொழியே; அப்பிறரைத் தவறாக அறியச் செய்வதும் மொழியே. வருதல் என்ற சொல்லைச் சற்றுக் காண்போம். இதனை இலக்கண நூலார் 'தல்' என்ற விகுதி பெற்ற தொழிற்பெயர் என்பர். இச்சொல் எதனைக் குறிக்கிறது? ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பெயர்ந்து செல்லும் நிலையை அறிவிப்பதாகும் இச்சொற்பொருள். நாம் காணும் பொருள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பெயர்ந்து வருமாயின் அப்பொருள் வருகிறது என்று கூறுகிறோம். வருதலாகிய இத்தொழிலை அப்பொருள் செய்வதனால் தோன்றும் பயன் யாது? தூரத்தே இருந்த பொருள் நம் அணித்தே வந்ததுதான் பெறும் பயனாகும். இதனையல்லாமல் வேறு பயன் உண்டோ? உண்டு. அப்பொருளை நாம் தொடவும் அனுபவிக்கவும் முடியும். ஆனால், வந்த பொருள் பருப்பொருளாக இல்லாமல் நுண்பொருளாக இருக்குமாயின் தொடுதல் முதலிய புலன்களின்மூலம் பெறும் அனுபவம் இல்லை என்றாகிவிடும். ஆனாலும், மனத்தளவில் அப்பொருள் ஒரு நிறைவைத் தருகிறது. எனவே நாம் விரும்பும் பொருள் நம்மிடையே வந்துவிட்டது என்பதன் கருத்து அல்லது பயன் யாது? அப்பொருளால் நாம் பெறக்கூடிய பயனை (மனநிறைவை) அடைந்துவிட்டால் பொருளே வந்ததாகத்தானே கருத்து.

முழுமுதற் பொருளை ஒருவன் அடைந்துவிட்டால் அதனால் அவன் பெறும் பயன் யாது? மனநிறைவு; ஈடு இணையற்ற மனநிறைவு. இம்மன நிறைவை ஒருவன் பெற்றுவிட்டான் என்றால் அதன் கருத்து யாது? அவன் முழுமுதற் பொருளின் தொடர்பைப் பெற்றுவிட்டான் என்பதேயன்றோ! அப்பொருள் எவ்வாறு வந்தது? எவ் வடிவில் வந்தது? எவ்வழியில் வந்தது? போன்ற வினாக்களை எழுப்பிக்கொண்டு அவன் அவதியுறுவ

https://t.me/Tamil_Library

தில்லை. அப்பொருள் வருமா என்று பல காலம் ஏங்கிக்கொண்டிருந்தான். இரவு பகல் இதுவே நினைவாய், வாழ்வில் வேறு குறிக்கோளின்றி அலைந்தான். திடீரென்று ஒருநாள் அவனுள் அந்த அமைதி வந்து புகுந்து கொண்டது. ஆம்! அப்பொருள் தன்னுள் புகுந்தாலொழிய இவ்வகை அமைதி கிடைக்காதாகலான், அவன் பொருளின் வருகையை உணர்ந்துகொண்டான். ஆனால், வந்ததை அவன் காணவில்லை; காணவும் இயலாது. எனவே, 'வாராதே வர வல்லாய்' என்று பாடுகிறான் கவிஞன்.

பொருள் வந்துவிட்டதுபோல் உணர்ச்சி ஏற்பட்டதற்குக் காரணம் பேரமைதி என்று கூறினோம். ஆனால் இவ்வுலக நியாயங்கட்குக் கட்டுப்பட்டு இவ்வமைதி நிலைபெறாமல் போவதும் வருவதுமாக இருந்தது.

கிடைத்த பேரமைதி ஓரளவு நீங்கியவுடன் ஏற்பட்ட கலக்கத்தில், முன்னர்க் கிடைத்த பேரமைதிதானும் உண்மையோ பொய்யோ என்ற ஐயம் தோன்றிவிடுகிறது. ஒருவேளை தன் மன மயக்கத்தால்தான் அமைதிபோன்ற ஒரு நிலை ஏற்பட்டதோ என்ற ஐயம் தோன்றுகிறது. இந்நிலையில் இந்த அமைதி கிடைத்த காரணம், இறைவன் தன் மனத்துள் வந்து தங்கியமையால் அன்றோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது. அப்படியானால், இப்பொழுது அமைதி இழந்த நிலையின் காரணம் யாது? தன்னுள் வந்த பொருள் போய்விட்டதா? வாராதே வந்த பொருள் மீட்டும் போகாததுபோலப் போக்குக் காட்டிப் போய்விட்டதோ என்றும் ஐயம் வலுப்படுகிறது. இந்த ஐயநிலையில் நின்று நம்மாழ்வார் இதோ பாடுகிறார்: 'மாலாய் மயக்கி அடியேன்பால் வந்தாய் போலே வாராயே. வந்தாய் போலே வாராதாய்'.—(திருவாய்மொழி 6-10-8,9)

கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன் 'வாராதே வர வல்லாய்' என்று பாடியதும், நம்மாழ்வார் 'வந்தாய் போலே

https://t.me/Tamil_Library

வாராதாய்' என்று பாடியதும் முரண்பாட்டில் சிக்கியுள்ள நம் போன்றவர்கள் மனநிலையை எடுத்துக்காட்டுவதே யாகும். 'வாராமலே வருதலும், வந்ததுபோல வாராம லிருத்தலும் முரணில் சிக்கி அவதியுறுபவர் காணும் நிலையாகும்'. முரணற்ற நிலையைச் சிந்திப்பவர்கள் இதில் மயங்குவதில்லை.

எனவே, அனுபவ நிலையிலிருந்து கவிஞன் பாடுவதில் முரண்பாடின்மையை அறியவேண்டும். அவ்வாறாயின் சொற்களில் முரண்பாடு தோன்றும்படி இக் கவிஞர்கள் ஏன் பாடவேண்டும் என்ற ஐயம் தோன்றும்? அது சொல்லின் குறைபாடும் பேசுபவனின் குறைபாடுமேயாம். இரயிலில் செல்லும் இருவருள் ஒருவர் 'கோவை வந்துவிட்டதா?' என்று கேட்கிறார். இது கேட்பவர் ஒருவரும் சிரிப்பதில்லை. 'கோவையாவது, வருவதாவது? அதற்கு என்ன கால்களா முளைத்து விட்டன?' என்று கேட்பதுமில்லை. ஏன்? கோவை வந்துவிட்டதா? என்று கேட்பவர் மனத்தில் இருக்கும் பொருள் 'கோவைக்கு நாம் வந்து விட்டோமா?' என்பதே; அதையே கேட்பவரும் தெரிந்து கொள்கிறார். எனவே, சிரிப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால், நேரே சொற்பொருள் காண்பதாயின் சிரிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

கோவைக்கு நாம் வருவதும் கோவை நம்மிடம் வருவதும் பயனளவில் ஒன்றேயாயினும் சொல்லளவில் வேறு வேறுதான். அன்றியும் வருதலாகிய வினையைச் செய்யும் வினைமுதல் நாமாக இருக்கிறோம். அவ்வினையைச் செய்யும் வாய்ப்பு கோயம்புத்தூர் என்ற அஃறிணைப் பொருளுக்கு இல்லை. எனினும், இவ் வினாவில் தவறு காண்பார் ஒருவரும் இல்லை. இவை முரண்பாடுடையன எனக் கூறுவார் ஒருவருமில்லை.

'வாராதே வரவல்லாய்' என்று கவிஞன் கூறும்பொழுது ஏனைய உயிர்கள் போன்று வருதலாகிய

https://t.me/Tamil_Library

வினையைச் செய்துவந்ததால் ஏற்படும் பயனைத் தருபவனல்லன் முழுமுதலாகிய ஒருவன் என்பதையும் கவிஞன் குறிக்கிறான். ஏனையோர் வருதலாகிய வினையைச் செய்தாலொழிய வந்த பயனைத் தரவியலாது. ஆனால், இறைவன் வினை செய்யாமலே வினையின் பயனைத் தருகிறான் என்ற உயர்ந்த கருத்தும் இதில் அடங்கி நிற்கின்றது. இதனையே மாணிக்கவாசகர் "விச்சது (விதை) இன்றியே விளைவு செய்குவாய்" என்கிறார். முரண்பாட்டில் முழுமுதலைக் கண்ட தமிழன் வாழ்க.

https://t.me/Tamil_Library

# 15

# இராவணன் மனச்சிறையில் வைத்தது யாரை ?

பட்டிமண்டபங்கள் பெருத்துவிட்ட இந்த நாட்களில் எதை வேண்டுமானாலும் 'பட்டிமண்டபத் தலைப்பாகப் போட்டு விடுவது வழக்கமாகிவிட்டது. 'கற்பில் சிறந்தவள் கண்ணகியா? சீதையா?' என்ற தலைப்பில் நடைபெற்ற ஒரு பட்டிமண்டப நிகழ்ச்சியைக் கேட்கும் துர்பாக்கியம் இக்கட்டுரையாளனுக்கு ஏற்பட்டது. கண்ணகி கட்சியைச் சேர்ந்தவர் பேசும்பொழுது ஒரு கருத்தை வெளியிட்டார். தமிழ் மரபையும், பண்பாட்டையும், தமிழர் நாகரிகத்தையும் பாதுகாப்பதற்குத் தாம் ஒருவர் மட்டுமே நியமிக்கப் பெற்றுள்ளதுபோல அவர் பேசினார். அவருடைய வாதங்களில் முக்கியமானதென்று அவரே குறிப்பிட்ட ஒன்று இங்கு ஆராய எடுத்துக்கொள்ளப் பெறுகிறது.

அவருடைய வாதத்தின்படி, 'கற்புடை மகளிர் பிறர் நெஞ்சு புகார்' என்பதுதான் தமிழர்களின் தலையாய கற்பின் இலக்கணமாகும். இதன்படி பார்த்தால் இராவணன் நெஞ்சில் இடம் பெற்றுவிட்ட சீதைக்கு ஓரளவு இழுக்கு நேர்ந்துவிடுகிறதாம். மேலாகப் பார்ப்பவர்கள் பலரும் ஏதோ இது பலமான மறுக்க முடியாத வாதம் என நினைக்கலாம். ஆனால், ஆழ்ந்து நோக்கினால் இது எவ்வளவு பைத்தியக்காரத்தனமானதும்,

https://t.me/Tamil_Library

நொய்மையானதும், நிற்க முடியாததுமான வாதம் என்பது விளங்கும்.

முதலாவது, பலராலும் வாய் கூசாமல் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பெறும் 'கற்புடை மகளிர் பிறர் நெஞ்சு புகார்' என்ற மேல்வரிச் சட்டத்தையே எடுத்துக்கொண்டு ஆராயலாம். இதனை எடுத்துக் கூறுபவர்களில் 99 சதவிகிதத்தினர் இதன் பொருளை நின்று ஆராய்வதில்லை. 'புகார்' என்ற சொல்லுக்குப் 'புகமாட்டார்', 'நுழைய மாட்டார்' என்பது பொருளாகும். 'புகார்' என்ற எதிர்மறை வினைமுற்றுக்கு எழுவாய் எது? 'கற்புடை மகளிர்' என்பதே எழுவாயாகும். அதாவது, உண்மையிலேயே கற்புடைய மகளிர் தம் கணவனைத் தவிரப் பிற ஆடவர் நெஞ்சில் விரும்பிப் புகமாட்டார் என்பதுதானே இதனுடைய பொருள். அம்மகளிரின் செயல்தான் இதில் குறிப்பிடப் பட்டுள்ளதே தவிர பிறரைப்பற்றிய குறிப்பு இதில் எதுவும் இல்லை.

இதன் எதிராக ஓர் ஆண் மகன் தன்னுடைய மனத்தில் பிற மகளிரை நினைத்தாலோ அடையவேண்டு மென்று கருதினாலோ, அது முழுவதும் அவனைப் பற்றியதே தவிர அந்தப் பெண்ணைப் பற்றியதன்று. கடமை உணர்ச்சியும் கட்டுப்பாடும் இல்லாத ஒருவன் ஏதாவது ஒரு பெண்ணைப்பற்றித் தவறான எண்ணங் கொண்டால் ஒரு பாவமும் அறியாத அந்தப் பெண்ணை இதில் சம்பந்தப் படுத்துவது எவ்வாறு பொருந்தும்? இவன் செயல்களுக்கு முழுவதும் இவன்தான் பொறுப்பாளியே தவிர அவள் பற்றிய தொடர்பு இதில் எள்ளளவும் இல்லை. எனவே, கற்புடை மகளிர் தம் கணவனைத் தவிரப் பிற ஆடவரை மனத்தில்கூட நினைக்க மாட்டார்கள் என்ற வரிக்கு உண்மையான பொருளை அறிந்து கொண்டவர்கள் இவ்வரியைக் கூறிச் சீதையைப் பழிப்பது இயலாத காரியம்.

https://t.me/Tamil_Library

அவ்வாறு செய்பவர்களின் தமிழ் அறிவு ஐயத்திற்கிடமானதேயாகும்.

இந்தப் போலித் தமிழன்பர்கள் கருத்துப்படி அந்த வரிக்கும் பொருள் கூறத் தொடங்கினால் கண்ணகியின் பாடே ஆபத்தாகி விடும். கண்ணகி, கவுந்தி அடிகள், கோவலன் ஆகிய மூவரும் தங்கியுள்ள உறையூர்க் காட்டில் இவர்களைக் கண்ட பண்பாட்டிற் குறைந்த சிலர் அடிகளைப் பார்த்து, "மதனும் ரதியும் போல்வார் இவர் யாவர்?" என்று கேட்டனராம். கண்ணகியைப் பார்த்து அவள் அழகில் ஈடுபட்டு 'இவள் யார்?' என்று துறவியைக் கேட்கும் அளவிற்கு அவர்கள் சென்றார்கள். அடிகள் 'இவர்கள் என் மக்கள்' என்று கூறியவுடன் 'உடன் பிறந்தார் தம்முள் மணமுடித்துக் கொள்வது உண்டோ?' என்றும் வாயாடத் தொடங்கினர் என்றால் என்ன பொருள்? கண்ணகியின் அழகு அவர்கள் மனத்தைப் பேதலிக்கச் செய்துவிட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. 'நெறியின் நீங்கிய' அக்கயவர்கள் நீரல கூறினால் இதில் கண்ணகியை எவ்வாறு சம்பந்தப்படுத்த முடியும்? இதனால்தான் அந்த அடியின் உண்மையான பொருளை அறிந்துகொள்ள வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப் பெற்றது.

இனிச் சீதையைப் பற்றியும் ஆராய வேண்டும். சீதையை இராவணன் சிறை எடுத்தது உண்மை. அவள் உடம்பைத் தொடாமல் இளையவன் அமைத்த பர்ண சாலையுடன் இராவணன் எடுத்துச் சென்று அசோக வனத்தில் சிறைவைத்தான் என்று அனுமன் பேசுகிறான்:

**"வேலையுள் இலங்கை என்னும் விரிநகர் ஒருசார்**
**விண்தோய்**
**காலையும் மாலை தானும் இல்லதுஓர் கனகக் கற்பச்**

https://t.me/Tamil_Library

சோலை அங்கு அதனில் உம்பி புல்லினால் தொடுத்த தூய
சாலையில் இருந்தாள் ஐய! தவம் செய்த தவமாம் தையல்."

(திருவடி தொ. படலம். 31)

ஒரு பெண்ணை அவள் கணவன் தவிரப் பிற ஆடவன் தொடுவது தவறு என்று அக்காலத் தமிழர் கருதினர் என்பது உண்மை. இக் கருத்துக்கூட இத் தமிழ் நாட்டின் தட்ப வெப்ப நிலையினால் ஏற்பட்டது என்றுதான் கருதவேண்டும். குளிர்ப் பிரதேசங்களில் ஒருவரை ஒருவர் தொடுவதைத் தவறாக யாரும் கருதுவதில்லை. வெப்பம் மிகுந்த இப்பகுதியில் மட்டும் இவ்வாறு கருதினர். இதனால்தான் இராவணன் சீதையைத் தொடவில்லை என்பதைக் கம்பன் பல இடங்களிலும் குறித்துச் சொல்லுகிறான்.

"தீண்டிலன் என்னும் வாய்மை ............
.................................... உணர்தி மன்னோ?"

(திருவடி, 33)

என்று மறுபடியும் அனுமனைப் பேச வைக்கிறான் தமிழ்க் கம்பன்.

சீதை யாரையும் விரும்பி யாருடைய மனத்திலும் புகவில்லை. அவளை எந்த ஆண்மகனும் தொடவில்லை. அனுமன் தன் தோள் மேல் ஏறிக்கொண்டு வரவேண்டும் என்று கெஞ்சியபோதுகூடப் பிராட்டி,

"வேறும்உண்டு உரை; கேள் அது; மெய்ம்மையோய்!
ஏறுசேவகன் மேனி அல்லால், இடை
ஆறும் ஐம்பொறி நின்னையும் 'ஆண்' எனக்
கூறும்; இவ்வுறுத் தீண்டுதல் கூடுமோ?"

(சூடாமணி, 19)

என்றுதான் பேசுகிறாள். இராவணன் தன்னைத் தொடவில்லை என்பதையும் அதற்குரிய காரணத்தையும் அவளே கூறுகிறாள்:

https://t.me/Tamil_Library

**"தீண்டினான் எனின், இத்தனை சேண்பகல்**
**ஈண்டுமோ உயிர் மெய்யின் இமைப்பின்முன் அனுமனிடம்**
**மாண்டுதீர்வென் என்றே, நிலம் வன்கையால்**
**கீண்டுகொண்டு எழுந்துஏகினான் கீழ்மையான்.** (சூடாமணி, 20)

*இவற்றால் இராவணன் பிராட்டியை மறந்தும் தொடவில்லை என்பது உறுதியாகிறது. அடுத்திருப்பது அவனுடைய மனச் சிறையில் பிராட்டியை வைத்தது பற்றியாகும்.*

*சீதையை மனச் சிறையில் வைத்தான் என்றும், பின்னர் இராமனுடைய அம்பு அவன் மார்பைத் துளைத்த விதம்பற்றிக் கூறும்பொழுது மனச்சிறையில் வைத்ததை நினைவூட்டும் முறையில் அவன் இருதயத்தைத் துளைத்தோடிற்று என்றும் கம்பன் கூறுகிறானே!*

*இவை இரண்டும் சற்று நின்று ஆராய வேண்டிய இடங்கள். ஒரு பெண்ணிடத்து ஒருவன் ஆசை கொள்கிறான் என்றால் அது எப்பொழுது நடைபெறுகிறது? ஒருத்தியைத் தன் கண்களால் கண்ட பிறகுதானே அவள்மேல் ஆசை கொள்ளமுடியும்? தூய காதலைப் பேசவரும் குறள்கூட 'அணங்குகொல் ஆய்மயில் கொல்' என்று தலைவன் மன நிலையைக் கூறி உடனே அவனுக்குக் காதல் பிறந்த கதையைக் கூற வருகிறது. 'அணங்குகொல்' என்று எப்பொழுது கூற முடியும்? ஒருத்தியைப் பாராமலே இவ்வாறு கூற முடியுமா? தமிழர் கூறும் தூய காதலுக்காகட்டும், பரத்தையர்மேல்செல்லும் காமத்திற் காகட்டும் ஒருவரை ஒருவர் கண்ணால் காண்பது மிகமிக இன்றியமையாத ஒரு நிகழ்ச்சியாகும்.*

*இதனை வலியுறுத்தும் முறையில் கோவை நூல்களும் அமைந்துள்ளன. தலைவன் இளைப்பதைக் கண்ட அவன் பாங்கன் காரணம் வினவுகிறான். தலைவன் தன் வருத்தத்திற்குக் காரணமான தலைவியைப் புகழ்ந்து*

https://t.me/Tamil_Library

கூறுகிறான். தலைவன் கூறுகிறான் என்பதால் மட்டும் பாங்கன் இந்தக் கூற்றை ஏற்றுக்கொள்வதில்லை. தானே சென்று தன் கண்களால் தலைவியைக் கண்ட பிறகுதான் தன் தலைவன் அவளைப்பற்றிக் கூறியன உண்மையானவை என்று உணருகிறான். இவற்றால் அறியப்பட வேண்டியது ஒன்று உண்டு.

ஒருவன் ஒருத்தியிடம் மனத்தைப் பறிகொடுக்க வேண்டுமாயின் அதற்கு இன்றியமையாது வேண்டப் படுவது அவளை அவன் தன் கண்களால் ஒருமுறையாவது காணவேண்டும் என்பதுதான். இவ்வாறு ஒருமுறைகூடக் காணாமல் யாரோ ஒருவர் வருணித்துக் கூறியதை மட்டும் வைத்துக்கொண்டு காமவசப்பட்டான் என்றால் அதில் ஏற்கமுடியாத பல இடர்ப்பாடுகள் உண்டு. இப்பொழுது இராவணன் செயல்களைக் காணலாம்.

இராவணன் கொலுமண்டபத்தில் இருக்கும்பொழுது உறுப்பிழந்த அவன் தங்கையாகிய சூர்ப்பணகை வந்து அரற்றினாள். கரன் முதலியோர் இறந்துபட்டனர் என்றவுடன் இராவணனுக்குப் பகைவர் பற்றிய மதிப்பீடு மாறுகிறது. இத்துணை வன்மையுடையவர்கள் சுத்த வீரர்களாகத்தான் இருத்தல் வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறான். சுத்த வீரர்கள் ஒரு பெண்ணைக் காரணம் இன்றி இவ்வாறு செய்யமாட்டார்கள் என்ற முடிவுக்கும் வருகிறான். இந்த முடிவுக்கு அவன் வந்தமையால்தான்,

**'நீஇடை இழைத்த குற்றம் என்னைகொல், நின்னை இன்னே**
**வாயிடைஇதழும் மூக்கும் வலிந்து அவர் கொய்ய என்றான்'**

**(சூர். சூழ்–66)**

இதுவரை காரணம் கேளாமல் இருந்த இலங்கை வேந்தன் இப்பொழுது காரணம் கேட்கிறான். இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்த சூர்ப்பணகை,

https://t.me/Tamil_Library

**'மின்வயின் மருங்குல் கொண்டாள், வேய்வயின் மென்தோள்**
**கொண்டாள்,**
**பொன்வயின் மேனி கொண்டாள் பொருட்டினால் புகுந்தது'**
**என்றாள் (சூர். சூழ். 67)**

*இப்பொழுதுகூட இராவணன் அதிக வியப்பைக் காட்டினதாகத் தெரியவில்லை. 'ஆர் அவள்?' என்றுதான் கேட்கிறான்.*

*இந்த இடத்தில் யார் இருப்பினும் 'ஆர் அவள்?' என்று கேட்கத்தான் செய்வார்கள். எனவே இதில் வியப்பு ஒன்றும் இல்லை. உடனே சூர்ப்பணகை அவள் பெயர் சீதை என்று கூறி விட்டு ஏழு பாடல்களில் பிராட்டியை வருணிக்கின்றாள். இறுதியாகப் பாற்கடலைக் கடைந்த பொழுது இலக்குமி வெளிப்பட்டாள். கடலுடன் முரணிய பூமி இதற்குப் போட்டியாகப் பிராட்டியைத் தான் தந்தது என்றாள். இதற்கு மேல்தான் சூர்ப்பணகை இராவணன் மனநிலையை நன்கு அறிந்துகொண்டு அதற்குத் தூபம் போடுகிறாள். அதிகாமம் உடையவன் இராவணன். 'அரிது பெற்றிடினும் பெற்றதில் விருப்பம் அறம் பெறாதனவற்றை விரும்பும்' இயல்புள்ளவன் அவன். மேலும் எல்லை யில்லாத ஆணவம் உடையவன். இவை இரண்டிற்கும் தீனி போடுகிறாள் அவன் தங்கை.*

**'ஒருபது முகமும், கண்ணும் உருவமும், மார்பும், தோள்கள்,**
**இருபதும் படைத்த செல்வம் எய்துதி இனி நீ எந்தாய்'**
**(சூர். சூழ். 80)**

*என்று கூறுவதால் பிறரைப் போல் அல்லாமல் இருபது கண்கள் இருபது தோள்கள் பெற்ற பயன் சீதையைப் பெறுவதால்தான் நிறைவேறும் என்று தூபம் போடுகிறாள். இதனால் அவனுடைய அதிகாமத்திற்கு இரை வகுத்தாயிற்று. அடுத்து அவனுடைய அகங்காரத்தை உசுப்பி விடுகிறாள் தங்கை. "இத்தகைய பெண்ணை*

https://t.me/Tamil_Library

*உனக்காக எடுக்க முயன்ற போதுதான் அவர்கள் என்னை இவ்வாறு செய்தார்கள்" என்று கூறுமுகத்தால்,*

'அன்னவள் தன்னை நின்பால் உய்ப்பல் என்று எடுக்கலுற்ற
என்னை
அவ்விராமன் தம்பி இடைப் புகுந்து, இலங்கு வாளால்
முன்னை மூக்கு
அரிந்து விட்டான்; முடிந்தது என்வாழ்வும் உன்னின்
சொன்னபின்,
உயிரை நீப்பான் துணிந்தனன் என்னச் சொன்னாள்'

(சூர். சூழ். 81)

*தனக்காக உதவி செய்யப் புகுந்த பொழுது அவள் அவமானப்பட்டாள் என்று கேட்கையில் ஆணவம் உடைய ஒருவன் எப்படியாவது பழிவாங்கவேண்டும் என்றுதானே நினைப்பான்.*

*இதனை அடுத்து இராவணன் மனநிலையில் தோன்றிய மாற்றங்களைக் கவிஞன் மூன்று பாடல்களில் படம் பிடித்துக் காட்டுகின்றான்:*

'கரனையும் மறந்தான்; தங்கை மூக்கினைக் கடிந்து
நின்றான்
வரனையும் மறந்தான், உற்ற பழியையும் மறந்தான்;
முன்னைப் பெற்ற
பரனையும் மறந்தான்; கேட்ட நங்கையை மறந்திலாதான்'

(சூர். சூழ். 83)

*இதனை அடுத்து என்ன நிகழ்கிறது தெரியுமா?*

'மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் நீண்ட
எயிலுடை இலங்கைநாதன், இதயமாம் சிறையில் வைத்தான்'

(சூர். சூழ். 84)

*இதில் உள்ள வேடிக்கையைக் கவிஞன் சுட்டிக் காட்ட விரும்புகிறான்.*

https://t.me/Tamil_Library

'சிற்றிடைச் சீதை என்னும் நாமமும் சிந்தை தானும்
உற்றுஇரண்டு நன்றாய் நின்றால், நன்றுஒழித்து ஒன்றை
உன்ன
மற்றொரு மனமும் உண்டோ ?' (சூர். சூழ். 85)

*இவற்றில் முதல் பாடலிலுள்ள அடிக்கோடிட்ட மூன்று சொற்களையும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். சீதையை வருணிக்க முடியாது என அவன் தங்கையே கூறிவிட்டாள். அப்படி இருக்கப் பிராட்டியைப் பார்க்காமல், அவளைப் பற்றித் தன் தங்கை கூறியவற்றைக்* கேட்ட மாத்திரத்திலேயே மறக்க முடியாமல் அவதிப்பட்டான் *என்கிறது முதற் பாடல்.*

*இரண்டாவது பாடல், சீதை* என்ற பெயரில் *தன் சிந்தையைப் பறிகொடுத்தான் என்று பேசுகிறது.*

*மூன்றாவது பாடல், பிராட்டியைக் கண்ணால் காண்பதற்கு முன்னமேயே அவளை* மனச் சிறையில் *வைத்துவிட்டான் என்கிறது. அப்படியானால் இராவணன் மனச் சிறையில் வைத்தது யாரை என்ற வினா நியாயமானதே.*

*தசரதன் மருகியும், ஜனகன் மகளும், இராகவனின் மனைவியுமாகிய சீதை என்பவளை இராவணன் மனச் சிறையில் வைத்திருக்க முடியாது. காரணம் அவளை அவன் பார்த்ததுமில்லை, அவளுடைய ஓவியத்தையாவது கண்டிருப்பானா எனில் கம்பநாடன் கருத்துப்படி அதுவும் இல்லை. அப்படியிருக்க இதயமாம் சிறையில் யாரை வைத்தான்? தன் தங்கை வருணித்த பெண்ணை என்றாவது கூறலாமா? அந்த வருணனையை எத்தனை முறை படித்தாலும் அது சீதையைக் குறிப்பிடுகின்றது என்று யாரும் கூறமுடியாது. எந்த மிக அழகிய பெண்ணை வருணிக்கவும் சூர்ப்பணகையின் சொற்கள் இடந்தரும். அந்த வருணனையில் இலயித்துப்போன இராவணன் தன்*

https://t.me/Tamil_Library

கற்பனையில் இத்தனை அழகுகளையும் உட்படுத்தி ஒரு பெண்ணைக் கற்பனை செய்து கொண்டான். அந்தக் கற்பனைப் பெண்ணுக்கு அவன் இட்ட பெயர் சீதை என்பது.

கற்பனைக்கு இடங்கொடுக்கும் வகையில் அதனை விரித்தவள் சூர்ப்பணகை. பெயர் கூறியவளும் அவளே. ஆனால் அதனைக் கேட்ட இராவணன் மனத்தில் சீதை இல்லை. அப்பெயர் மட்டும் நிலைத்துவிட்டது. எனவே, அவன் கற்பனையில் உருவாக்கிய அழகெலாந் திரண்ட கற்பனைப் பெண்ணுக்கு சீதை என்ற பெயர் சூட்டி அக் கற்பனைப் பெண்ணைத் தன் இதயமாம் சிறையில் வைத்தான். எனவே அவன் இதயச் சிறையில் குடியிருந்தவள் தசரதன் மருகியாகிய சீதை அல்லள். அவன் கற்பனைப் பெண்ணுக்கும் தசரதன் மருமகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை; பெயர் மட்டும் இருவருக்கும் பொதுவாக நின்றுவிட்டது.

மனித மனத்தத்துவம் அறிந்தவர்கள் இதனை நன்கு விளங்கிக் கொள்ளமுடியும். அழகே இல்லாதவள் என்று யாவராலும் எள்ளி நகையாடப் பெறும் ஒருத்தியை நல்ல அழகனான ஆண்மகன் ஆழ்ந்த காதலுடன் நேசிப்பதை இன்றும் உலகில் காணுகிறோம். இதற்கு நேர்மாறான நிலையும் உண்டு. இது எவ்வாறு முடிகிறது? அழகற்றவள் என்று அனைவரும் கூறும் ஒருத்தி எப்படி அவள் காதலனுக்கு அழகியாக இருக்க முடிகிறது? உண்மை என்னவெனில் அவனவன் மனத்தில் ஒரு கற்பனை உருவை வைத்துக்கொண்டு உண்மைப் பொருளிடம் அதனைச் சார்த்திக் (Projecting) காண்கிறான். அழகற்றவள் என்று நாம் கூறும் ஒருத்தியிடம் தன் கற்பனை அழகை ஏற்றிக் காண்பதால் ஒருவன் அவள்பால் எல்லையற்ற அன்பு செய்ய முடிகிறது. 'Robert Louis Stevenson' என்ற அறிஞர்



https://t.me/Tamil_Library

எழுதிய 'On Falling in Love' என்ற கட்டுரையைப் படித்தால் இதனை விளங்கிக் கொள்ள முடியும்.

தன் கற்பனையில் உருவாக்கிய சீதையை மனச் சிறையில் அடைத்துவிட்ட இராவணன் அவளிடம் மாளாக் காதல் கொண்டுவிட்டான் என்பது உண்மை. இராகவன் மனைவியாகிய உண்மைச் சீதையைக் கண்ணால் காண்பதற்குப் பன்னெடு நாள்கள் முன்னரே இராவணன் மனம் கற்பனைச் சீதையால் நிறைந்துவிட்டது.

இதனால்தான் தவக் கோலத்துடன் சென்று பிராட்டியைக் காணும் இராவணன் அவள் மரவுரி உடுத்துத் தவக் கோலமும், முனிவன் மனைவி கொடுத்த அணிகலன்களைப் பூண்டுள்ளமையால் இல்லறக் கோலமும் கொண்டுள்ளதைப் பார்க்கும்பொழுது அவனுக்கு ஒன்றும் புதுமையாகத் தோன்றவில்லை. 'கற்பினுக்கு அரசியைக் கண்ணின் நோக்கினான்' (இரா. சூழ்-26) என்று கவிஞன் கூறுவது சிந்திக்க வேண்டிய இடமாகும். தவக்கோலமும், கற்பும் நிறைந்த ஒருத்தியைக் காணும்பொழுது எவ்வாறு இராவணன் மனத்தில் வேறுவிதமான எண்ணம் புகுந்தது? இங்கும் பிராட்டியிடம் காணப்பெறும் அழகு அறிவை மயக்கி மனத்தைப் பேதலிக்கச் செய்கின்ற அழகன்று. அமைதியையும், தன்னுணர்வையும் தருகின்ற இந்த அழகு இராவணனை மட்டும் எவ்வாறு மயக்கி இருக்க முடியும்? இதனால்தான் இராகவன் மனைவியைக் காணும்பொழுது இராவணன் அவளைக் காணாமல் தன் கற்பனையில் நிறைந்துள்ள சீதையை இந்த உண்மைச் சீதையின்மேல் ஏற்றிக் காண்கிறான் என்று நினைக்க வேண்டியுள்ளது. (He Projects the form of his own *imaginary* Sita on the *real* Sita.)

இந்தக் கருத்து வலுப்பட மற்றோர் இடத்தையும் கவிஞன் காட்டுகிறான். அசோக வனத்தில் இருக்கும் பிராட்டியின் நிலையினைக் கூறவந்த கவிஞன்,

https://t.me/Tamil_Library

**'கல்மருங்கு, எழுந்து என்றும் ஓர்துளிவரக் காணா
நல் மருந்துபோல், நலன் அற உணங்கிய நங்கை,
மென் மருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்தாள்'**

**(காட்சி—3)**

*இப்படி அழகு கெட்டு வாடித் துயரமே உருவாய் அமர்ந்திருக்கும் ஒரு பெண்ணிடம் சென்று கீழே விழுந்து வணங்கி,*

**'மதிக்கு மேனி தோற்பித்தீர்'**

*என்றும்,*

**'குடிமை மூன்று உலகும் செய்யும் கொற்றத்து என்
அடிமை கோடி; அருளுதியால்' எனா
முடியின் மீது முகிழ்த்து உயர்கையினன்
படியின்மேல் விழுந்தான்...** **(காட்சி–114)**

*என்றும் பேசப்படுகிறது.*

*இவ்வாறு இராவணன் செய்தான் என்றால் அதை மென் மருங்குல் போல் வேறுள அங்கமும் மெலிந்துள்ள ஒரு பெண்ணிடம் செய்ய ஒருப்படுவானா? மெலிந்துள்ள அப்பிராட்டியை அவன் பார்க்கும்பொழுது அவள்மேல் தன் கற்பனையில் நிறைந்துள்ள ஒருத்தியை ஏற்றிக் காண்பதனாலேயே இவ்வாறு அவனால் பேசவும் செய்யவும் முடிகின்றது.*

*இதுவரை கூறியவற்றை ஆழ்ந்து சிந்தித்தால் இரண்டு உண்மைகள் புலனாகும். முதலாவது, 'கற்புடை மகளிர் பிறர் நெஞ்சு புகார்' என்ற அடிப்படையில் பிராட்டியின்மேல் தவறுகள் கூறுவது அறியாமை. இதன் பொருளை உள்ளவாறு உணர்ந்து கொண்டவர்கள் இப்பிழையைச் செய்யமாட்டார்கள். இரண்டாவது, இராவணன் மனச் சிறையில் வைத்தது இராவணன் மனையாட்டியை அன்று. அவனுடைய கற்பனையில்*

https://t.me/Tamil_Library

முகிழ்த்து அவனை ஆட்டிப் படைத்த, சீதை என்று அவனால் பெயர் சூட்டிப் போற்றப்பட்ட ஓர் உருவத்தையேயாகும். உண்மைச் சீதையைச் சிறை எடுத்து வந்து அசோகவனத்தில் வைத்த பொழுதும் அவன் அவளைக் காணும்போதெல்லாம் தன் கற்பனைச் சீதையை அவள் மேல் ஏற்றியே கண்டான் என்பதும் விளங்கும். எனவே இராவணன் மனச் சிறையில் வைத்தது அவனுடைய கற்பனையில் உதித்த சீதையையே ஆகும்.

https://t.me/Tamil_Library

# 16

# தீக்குளித்தது ஏன்?

கம்பன் பாடியுள்ள இராம காதையில் ஆராய்ச்சிக்கும் கருத்து வேறுபாட்டுக்கும் இடம் அளிப்பவை இரண்டு நிகழ்ச்சிகளாகும். வாலி வதை ஒன்று; பிராட்டியை இராகவன் தீப்புக ஏவியது இரண்டு. இவற்றுள் இரண்டாவதைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இராவணன் கொல்லப்பட்ட பிறகு இராமன் வீடணனை நோக்கி, "வீடண! சென்று தா நம தேவியைச் சீரொடும்" (மீட்சி, 37) என ஏவினான். சீரொடும் என்று கூறியதன் உட்பொருளை அறியாத வீடணன், பிராட்டியை அலங்காரம் செய்து சக்கரவர்த்தித் திருமகனின் முன் அழைத்து வந்தான். எதிரே வந்து நிற்கும் 'கற்பினுக்கு அணியினை, வெண்மைக் காப்பினை, பொற்பினுக்கு அழகினை, புகழின் வாழ்க்கையை, தற்பிரிந்து அருள்புரி தருமம் போலிளங் கற்பின் அத்தலைவனும் அமைய நோக்கினான்' (மீட்சி, 60) என்று கவிஞன் நமக்கு எடுத்துக் கூறுகிறான். இதில் கடைசி அடி ஆழ்ந்து நோக்கற்குரியது. 'கற்பின்' என்ற சொல்லுக்கு அன்பினால் என்பது பொருள். 'அமைய' என்ற சொல் இங்கு வருவது சற்று வியப்பைத் தருகிறது. அமைய என்றால் பொருந்த என்று பொருள் தரும். இராமன் பிராட்டியைப் 'பொருந்த நோக்கினான்'

https://t.me/Tamil_Library

என்றால் என்ன பொருள்? இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண உதவும் இச்சொல்லின் ஆழத்தைப் பின்னர் காணலாம்.

ஒரு விநாடி அமைய நோக்கிய பின்னர் 'பணம் கிளர் அரவு என எழுந்து பார்ப்புறா' (மீட்சி, 61) என்கிறான் கவிஞன். அதாவது படமெடுத்த பாம்பைப் போல பார்த்துச் சீறினானாம். அவன் வாய் திறந்து முதன்முதலாகக் கூறிய சொற்கள் கொடுமை நிறைந்தவை. யாரும் தாங்க இயலாதவை:

'ஊண் திறம் உவந்தனை; ஒழுக்கம் பாழ்பட
மாண்டிலை; முறை திறம்பி அரக்கன் மாநகர்
ஆண்டு உறைந்து அடங்கினை !......'

'மருந்தினும் இனிய மன்னுயிரின் வான்தசை
அருந்தினையே; நறவு அமைய உண்டியே;

'பெண்மையும் பெருமையும் பிறப்பும் கற்பு எனும்
திண்மையும், ஒழுக்கமும், தெளிவும் சீர்மையும்
உண்மையும் நீஎனும் ஒருத்தி தோன்றலால்
வண்மைஇல் மன்னவன் புகழின் மாய்ந்தவால்'

(மீட்சி, 62, 64, 66)

பிராட்டியை நோக்கி இராகவன் "நீ புலால் உண்டாய்; ஒழுக்கம் கெட அறமற்ற அரக்கன் நகரில் வாழ்ந்தாய்; உயிர்களைக் கொன்று அவர்கள் தசைகளைத் தின்றாய்; கள்ளைக் குடித்தாய்; நீ பிறந்த காரணத்தால் உலோப குணமுடைய மன்னவன் புகழ் அழிவது போல் பெண்மை, பெருமை, நற்குடிப் பிறப்பு, கற்பு, திண்மை என்பன அழிந்துவிட்டன" என்று கூறியதுடன் அமையாமல், "நான் என்ன கூற முடியும்? என் உள்ளம் துடிக்கிறது. எங்காவது சென்று செத்துப்போ அல்லது நீ சரியென்று நினைக்கும் வழியில் சென்று வாழ்ந்து போ" என்ற கருத்தில்,

https://t.me/Tamil_Library

'யாது யான் இயம்புவது? உணர்வை ஈடு அறச்
சேதியா நின்றது உன் ஒருக்கச் செய்தியால்
சாதியால் அன்று எனின் தக்கது ஓர் நெறி
போதியால் என்றான் புலவர் புந்தியான்' (மீட்சி, 69)

என்றும் கூறினதாகக் கவிஞன் பாடுகிறான். ஆனால் இங்ஙனம் கருணை இன்றிக் கடுஞ் சொல் கூறிய இராகவனைக் கவிஞன் 'புலவர் புந்தியான்' என்ற சொற்களால் குறிப்பதும் நம் நினைவில் இருத்தத் தக்கது.

இராகவன் பிராட்டியை ஏசிய இத்தனையும் கணவனும் மனைவியும் தனி இடத்தில் இருக்கும்பொழுது நடைபெறவில்லை. பலர் முன்னிலையில், அதுவும் சிறப்பாக அனுமன் முன்னிலையில்தான் இவ்வாறு பேசினான். இதிலுள்ள பொருத்தமின்மையையும் கவனிக்க வேண்டும். பிராட்டி இருக்குமிடத்தைக் கண்டவன் அனுமன்; இராகவனிடம் அத்தகவலை வந்து கூறியவனும் அனுமன். இலங்கையில் பகைவனுடைய சிறையில் பிராட்டி எவ்வாறு இருந்தாள் என்பதை நேரில் கண்டவன் மாருதி. தான் கண்டவற்றையும், பிராட்டி அனுப்பிய சூடாமணியையும், அவள் கூறிய செய்திகளையும் இராமனிடம் சேர்ப்பித்தவன் அனுமனேயாவான். அந்த அனுமன் எத்தகையவன்? இராகவனால் நன்கு மதிக்கப்பட்டவன். 'சொல்லின் செல்வன்' என்று அந்த இராமனாலேயே பாராட்டப் பெற்றவன். இந்த அனுமன் 'கல்லாத கலைகளே உலகத்து இல்லை' என்றும் 'அந்த உலகங்கள் அனைத்துமே இந்த அனுமனின் இசையைக் கூறிக்கொண்டிருக்கும்' என்றெல்லாம் புகழ்ந்தவன் இதே இராகவன்தான். எனவே, அனுமனிடத்தும் அவனுடைய அறிவுத்திறம், கல்விப் பெருமை என்பவற்றிலும் இராமனுக்கு அளவற்ற நம்பிக்கையும் மதிப்பும் உண்டு என்பதும் விளங்குகிறது. அத்தகைய அனுமன்

https://t.me/Tamil_Library

*பிராட்டியைப் பார்த்து 'வந்து இராமனிடம் என்ன கூறினான்?*

*இலங்கையிலிருந்து மீண்ட அனுமன் இராமனைக் கண்டவுடன் அவனை வணங்காமல் சீதை இருந்த தென் திசையை நோக்கி வணங்கினான். (திருவடி, 21) செய்கையால் இவ்வாறு செய்து காட்டிய அனுமன் வாய் திறந்து பேசிய சொற்கள் ஒப்புயர்வற்றவை; சொற் செல்வன் அனுமன் என்பதை நிலைநாட்டுபவை:*

'கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்'

(திருவடி, 25)

'அண்டர் நாயக! இனித் துறத்தி ஐயமும்' (25)

'என் பெரும் தெய்வம் ஐயா! இன்னமும் கேட்டி' (26)

'உன் குலம் உன்னதாக்கி உயர்புகழ்க்கு ஒருத்தி ஆய
தன் குலம் தன்னதாக்கி ...வானவர் குலத்தை வாழ்வித்து'

(28)

...நற்பெருந் தவத்தளாய் நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்பு என்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும்
கற்பெனப் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்' (29)

'தவம் செய்த தவமாம் தையல்.....'

*இவ்வாறெல்லாம் மாருதி மூலம் பிராட்டியைப் பற்றிக் கேள்விப்பட்ட இராகவன் அவளை நேரே கண்டபொழுது ஏன் கோபித்துத் தகாத வார்த்தைகளால் அவளை ஏச வேண்டும்? மாருதியின் சொற்களைக் கேட்ட சாதாரண மனிதன்கூடப் பிராட்டியிடம் எல்லையற்ற பக்தி கொள்வானே? அப்படி இருக்க இராகவன் இவ்வாறு இழித்தும் பழித்தும் பேசினதன் நோக்கம் என்ன? மாருதி சொற்களை அவன் நம்பவில்லையா? மனிதத் தன்மையைக் கூட இராகவன் இழந்துவிட்டானா?*

https://t.me/Tamil_Library

இவ்வாறு நினைத்துப் பார்த்தால் ஓர் உண்மை விளங்கியே தீரும். அறத்தின் மூர்த்தியாகிய இராகவன் ஒரு நாடகம் ஆடுகின்றான். வேண்டுமென்றேதான் இந்நாடகம் ஆடப்பெறுகிறது. ஊராருக்காக உலகத்தாருக்காக அன்று இந்த நாடகம். பிராட்டியின் பொருட்டுத்தான் இந்த நாடகம். பிராட்டிக்கு என்ன நேர்ந்து விட்டது என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

அவளுக்கு நேர்ந்த அவலத்தை அவளே அறிய மாட்டாள். இலங்கையில் இருந்த சில தினங்களுக்குள் அப்பெருமாட்டியின் மனத்தின் ஆழத்தில் ஒரு குற்ற உணர்வு (guilty Complex) புகுந்து விட்டது. இராவணன் தன்னைத் தூக்கி வருவதற்குத் தானே காரணமாய் அமைந்து விட்டதை அப்பெருமாட்டி தனியே அசோக வனத்தில் இருந்த காலத்தில் உணரத் தலைப்பட்டாள். இதனை உணரத் தலைப்பட்டவுடன் இருவகை அச்சம் அவளைப் பிடித்துக் கொண்டது.

மாய மானின் குரல் கேட்டு, உடனே இலக்குவனை உதவிக்குச் செல்லுமாறு கட்டளையிட்டாள் பிராட்டி. அது கேட்டு வியப்புற்ற இலக்குவன், இராமனுக்குத் தீங்கு இழைக்க யாராலும் முடியாது என்று கூறிய இலக்குவன்,

“பார் எனப், புனல்என, பவன, வான், கனல்
பேர் எனைத்து. அவை, அவன் முனியின் பேருமால்
கார் எனக் கரிய அக்கமலக் கண்ணனை.
யார் எனக் கருதி இவ் இடரின் ஆழ்கின்றீர்' (இரா. சூழ்ச்சி, 7)

என்று கூறியதுடன் இன்னும் பலபடியாக எடுத்துக் கூறி மாய மானாகிய அரக்கன் உயிர் விடும்போது இவ்வாறு குரல் கொடுத்தான் என்று எடுத்துக் கூறினான். ஆனால் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாத பிராட்டி தன்னை மறந்த கோபத்தில்,

https://t.me/Tamil_Library

**'ஒருபகல் பழகினார் உயிரை ஈவரால்;**
**பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டும்நீ**
**வெருவலை நின்றனை; வேறுஎன் ? யான்இனி,**
**எரியிடைக் கடிது வீழ்ந்து இறப்பென்'** **(இரா. சூழ்ச்சி, 13)**

*என்று கூறிவிட்டுக் காட்டுத் தீயில் விழப் புறப்பட்டு விட்டாள். இக்கொடிய செயலைத் தடுப்பதற்குச் சக்தியற்ற இளையவன், "போகின்றேன் அடியனேன்; புகுந்து வந்து கேடு ஆகின்றது" (16) என்றும் "வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ?" என்றும் கூறிப் போய்விட்டான்.*

*இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட பிராட்டி தன் அவசர புத்தியால் செய்துவிட்ட இப்பிழையை நினைந்து நினைந்து வருந்துகிறாள். இலக்குவன் பிராட்டியைக் காவல் செய்வதை விட்டுவிட்டுத் தன்னிடம் ஏன் வந்தான் என்று இராமன் கேட்டால் தான் பேசியதை இலக்குவன் இராமனிடம் கூறி இருப்பான். தன் தம்பியின் அருமையையும் தன் கணவனின் ஆற்றலையும் இத்துணைக் காலம் அவர்களுடன் வாழ்ந்தும் அறிந்து கொள்ள முடியாத சிற்றறிவு படைத்தவள் என்று இராமன் தன்னைக் கருதி உதறி விட்டுவிடுவானோ என்ற அச்சம் பிராட்டியின் அக மனத்தில் இருந்தது.*

*அவளுடைய அடி மனத்தில் புதைந்துள்ள இந்த அச்சத்தின் அடிப்படை அவள் இழைத்த மாபெரும் தவறு. ஆதலால் அதை அடிக்கடி அசோக வனத்தில் நினைத்து வருந்துகிறாள்.*

**'என்னை, நாயகன், இளவலை எண்ணலா வினையேன்**
**சொன்ன வார்த்தை கேட்டு 'அறிவிலள்' எனத்துறந்தானோ ?'**

**(காட்சிப் படலம், 14)**

**'கண்டிலன் கொலாம் இளவலும்......'** **(12)**

https://t.me/Tamil_Library

**'வஞ்சனை மானின் பின் மன்னைப் போக்கி, என்**
**மஞ்சனை வைது பின்வழிக் கொள்வாய்' எனா**
**நஞ்சனை யான் அகம் புகுந்த நங்கை யான்**
**உய்ஞ்ச னென் இருத்தலும், உலகம் கொள்ளுமோ?'**

**(உருக்காட்டு, 17)**

*இந்த மூன்று எடுத்துக்காட்டுகளுள் முதலாவது பாடலில் 'சொன்ன வார்த்தை' என்றும் மூன்றாவது பாடலில் 'வைது' என்றும் இருக்கின்ற சொற்கள் ஆராயப்பட வேண்டியன. வான்மீகி சீதை கூறியனவாக இவ்விடத்தில் கூறியுள்ள எந்த ஒரு சொல்லையும் கம்பன் பயன்படுத்தவில்லை. அவன் படைத்துக் கொண்ட பாத்திரப் படைப்பின்படி சீதை அத்தகைய சொற்கள் எதையும் தன் வாயால் கூறமாட்டாள்; ஏன்? மனத்தாலும் நினைக்கமாட்டாள். அப்படியானால் 'வைது' என்று பிராட்டி கூறுவது எதைக் குறிக்கும்? இராவணன் சூழ்ச்சிப் படலத்தில் 'ஒரு பகல் பழகினும்' (13) என வந்த பாட்டில் சீதை 'இராமனிடம் ஒரு நாள் பழகினவர்கள்கூட உயிரைக் கொடுக்கத் தயாராக இருப்பர். பெருமகனாகிய இராமன் இறக்கின்றான் என்பதை அவன் குரல் மூலமாகக் கேட்டும்கூடத் துடிதுடித்துப் போகாமல் நிற்கின்றாய். வேறு என்ன நினைப்பது?' என்ற கருத்தில் பேசுகிறாள். இதில் உள்ள இரண்டு சொற்கள் 'வேறு என்?' என்பவையே அவள் வைததாகப் பின்னர் கூறப்பெற்றவை. இந்தச் சொற்களின் பொருள்தான் என்ன? 'இராமனுக்கு இந்த நேரத்தில் நிகழ்ந்ததை அறிந்தும்கூட நீ நடுக்கமில்லாமல் நிற்கின்றாய் என்றால் உன் எண்ணம் தவறான வழியில் போகத் தொடங்கிவிட்டது என்று நான் நினைப்பது தவிர வேறு என்ன நினைக்க முடியும்?' இதற்கு மேல் இதனை விரித்துக் கூறத் தேவையில்லை. இலக்குவனை இவ்வாறு கூறிய பெருந்தவறு அவளுடைய மனத்தில் ஏற்பட்ட குற்ற உணர்வு.*

https://t.me/Tamil_Library

*இந்தக் குற்ற உணர்வு ஆழமாக அப்பிராட்டியின் மனத்தில் பதிந்துவிட்ட காரணத்தால் இராமன் தன்னை மீட்க வராமல் போனாலும் போகலாம் என்ற நினைவும் பதியத் தொடங்கி விட்டது. வலுவில் இராவணன் தூக்கி வந்தது தவிர வேறு ஒரு தவறும் நிகழவில்லையே. அதுவும் இளையவன் தொடுத்த பர்ணசாலையில்தானே இன்னமும் இருக்கின்றாள். அனுமனிடம் பேசும்போது, எத்துணைத் துணிச்சலுடன் இராவணன் தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்று கூறிய அவள் அதற்குச் சான்று காட்டுபவள் போல,*

**'ஆண்டு நின்றும் அரக்கன் அகழ்ந்து கொண்டு**
**ஈண்டு வைத்தது இளவல் இயற்றிய**
**நீண்ட சாலையோடு நிலை நின்றது**
**காண்டிஐய! நின் மெய் உணர் கண்களால்'**
**(சூடாமணி, 24)**

*என்று அனுமனிடம் கூறுகிறாள்.*

*எனவே, தவறு ஒன்றும் நிகழவில்லை என்பது உறுதிப்பட்டு விட்டது. அப்படியானால் பிராட்டியின் ஆழ்ந்த துயரத்துக்குக் காரணம் யாதாக இருக்கும்? எத்தகைய பகைவராயினும் அவர்களை அழித்துத் தன்னை மீட்கும் ஆற்றல் பெற்றவன் தன் கணவன் என்பதிலும் அவளுக்கு ஐயம் இல்லை. பின்னர் ஏன் இந்த வருத்தம்? தன் உயிரை மாய்த்துக்கொள்வதே வழி என்ற முடிவுக்கு வருவதற்கு முன்னர் அவள் கூறும் சொற்கள் சிந்திக்க வேண்டியவை:*

**'நிறை இரும்பல் பகல், நிருதர் நீள்நகர்ச்**
**சிறை இருந்தேனை அப்புனிதன் தீண்டுமோ?'**

**'கற்புடை மடந்தையர், கதையுளோர்கள்தாம்**
**இல் பிரிந்து உய்ந்தவர் யாவர் யான் அலால்?'**

https://t.me/Tamil_Library

'கருந்தனி முகலினைப் பிரிந்து கள்வர் ஊர்
இருந்தவள் இவள்' என ஏச நிற்பனோ ?'

'வில்பணி கொண்டு, அருஞ்சிறை மீட்டநாள்
'இல்புகத் தக்கலை' என்னில் யானுடைக்
கற்பினை, எப்பரிசு இழைத்துக் காட்டுகேன் ?'

**(உருக்காட்டு, 11, 13, 19, 20)**

*இவ்வாறு அஞ்சிப் பேசும் பிராட்டி மற்றொரு குறிப்பையும் பேசுகிறாள்:*

'பிறர் மனை எய்திய பெண்ணைப் பேணுதல்
திறன் அலது' என்று உயிர்க்கு இறைவன் தீர்ந்தனன்;
பிறன் அலர், அவன் உற, போதுபோக்கி, யான்
அறன் அலது இயற்றி, வேறு என் கொண்டு ஆற்றுகேன் ?'

**(14)**

*கடைசி அடியில் 'யான் அறன் அல்லாத காரியத்தைச் செய்து விட்டு இப்பொழுது என்ன செய்ய முடியும்?' என்று பேசுவதுதான் அவள் அக மனத்தைக் காட்டுகிறது. அறன் அல்லாத செயல் யாது? இளையவனை வைததுதான்.*

*இந்த அடிப்படையில்தான் பிறன் மனை புகுந்ததை அப்பிராட்டி நினைக்கிறாள். தான் அப் பெருந் தவற்றைச் செய்யாமல் இருந்திருந்தால் இத்தனை தொல்லைகளும் வந்திரா. எனவேதான் அவள் குற்ற உணர்வு அகமனத்தில் ஆழத்தில் புதைந்து கிடக்கிறது. இனி அவள் கணவனுடன் சென்று வாழத் தொடங்கினாலும் இளையவன் முகத்தில் எவ்வாறு விழிப்பாள்? அவளுடைய இத்தவறு இல்லாமல் வேறு சூழ்நிலையில் இராவணன் அவளைக் கவர்ந்து சென்றிருந்தால் அவள் மனத்தில் துயரம் இருந்திருக்கும்; ஆனால் குற்ற உணர்வு இருந்திராது.*

https://t.me/Tamil_Library

அப்பெருமாட்டியிடம் இது இருந்தது என்பதை இதுவரை யாரும் அறியவில்லை. அறிவிற் சிறந்த அனுமன்கூட இதனை அறிந்துகொள்ள வாய்ப்பில்லை. இத்தகைய குற்ற உணர்வு உடையவர்கள் பண்புடையவர் களாயிருப்பின் இக்குற்றத்துக்குரிய தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும் என்று விரும்புவர். பிறப்பெடுத்தவர் அனைவரும் பாவம் பெரிதும் செய்தவராகலின் அதற்குக் கழுவாயாக இவ்வுடலை வருத்திக் கொள்வது, பட்டினி கிடப்பது போன்ற தண்டனைகளை வழங்கிக் கொள்கிற பழக்கம் என்றுமே இருந்ததுண்டு..

தாம் செய்துவிட்ட குற்றத்துக்காகப் பிறரை விட்டுத் தமக்குக் கசையடி தருமாறு செய்துகொள்கிற, குறிப்பிட்ட சமயவாதிகள் இன்றும் உண்டு. இத்தண்டனையை அனுபவித்துவிட்டால் மறுபிறப்பில் துன்பம் அனுபவிக்க வேண்டியதில்லை என்பது இவர்களுடைய நம்பிக்கை.

பிராட்டியைப் பொறுத்தமட்டில் இக் குற்ற உணர்வு அவளுடைய அகமன ஆழத்தில் இருந்ததை அவளோ பிறரோ அறிய வாய்ப்பில்லை. எனினும், ஒருவன் அவளை ஒரு விநாடி ஆழ்ந்து நோக்கியவுடன் அறிந்துகொண்டான். அறிந்த அப்பெருமகன் அவளுக்குத் தக்க மருத்துவம் செய்தால் ஒழிய அவள் முழு அமைதி பெறமாட்டாள் என்பதையும் நன்கு அறிந்துகொண்டான். ஆழ் உணர்வு (Complexes) எதுவாயினும் அதனை அவ்வளவு விரைவாகத் தீர்த்து வைத்தல் இயலாது. அந்தக் குற்ற ஆழ் உணர்வுக்காரர்கள் மனத்தில் மாற்றம் ஏற்பட்டதாக நினைக்க ஒரே வழிதான் உண்டு. அக்குற்றத்துக்கு ஏற்ற தண்டனையைத் தான் அனுபவித்துவிட்டால் ஓரளவு அமைதி பெறுவர். அதுவும் பிறருக்குத் தெரியாத குற்றம் என்று அவர்கள் நினைத்துவிட்டால் பிறர் அதனை அறிந்து

https://t.me/Tamil_Library

கொண்டதாகக் காட்டிக்கொண்டு தரும் தண்டனையில் முழு அமைதி பெறமாட்டார்கள்.

எனவேதான் இந்த நாடகம். பிராட்டியை முதன் முறையாக இலங்கையில் இராகவன் கண்டான் எனக் கூற வந்த கவிஞன், 'கற்பின் அத்தலைவனும் அமைய நோக்கினான்' (மீட்சி, 60) என்றுதானே கூறினான். இராமன் கொடுமையாகப் பேசியதும் அக்கினிப் பிரவேசத்துக்குத் தடை கூறாமல் இருந்ததும் உண்மையில் அன்பின்மை யாலோ வன்கண்மையாலோ அன்று. 'கற்பின், அத்தலைவன்' அதாவது அன்பால் நிறைந்த இராகவன் என்று கவிஞன் அடைமொழி கொடுத்துப் பேசுவது நம்மை எச்சரிக்கவேயாகும். 'அமைய நோக்கினான்' என்றால் நீண்ட காலம் பிரிந்த காதலன் காதலியைக் காண்பது போல அவன் காணவில்லை. அவளை ஊடுருவி அவளுடைய அக மனத்துட் புகுந்து பார்த்தான் என்பதைத்தான் 'அமைய' என்ற சொல்லால் கவிஞன் நிறுவுகிறான். மருத்துவன் நோயாளியைப் பார்ப்பது போன்ற பார்வை அது.

பிராட்டியின் மன நோயை ஒரு விநாடியில் அறிந்துகொண்டு அவளுக்கு மருத்துவம் செய்யத் தொடங்குகிறான். இவ்வாறு ஏசி வெருட்டாமல் அவளை அன்புடன் அவன் ஏற்றுக் கொண்டிருப்பின் அவளுடைய குற்ற உணர்வு காரணமாக இலக்குவனைப் பார்க்கும் போதெல்லாம் மனத்தில் ஒரு நெருடல் இருக்கும். அன்றியும் தன் கணவன் தன்னைப் பழைய அன்புடன் ஏற்றுக் கொண்டானா இல்லையா என்ற ஐயமும் இருக்கும். இவற்றைப் போக்கவே இராகவன் நாடகமாடுகிறான். 'அவள் தூயவள், கற்பின் கனலி, தவம் செய்த தவமாம் தையல்' என்று நன்றாக அறிந்திருந்தும் 'ஊன் உண்டாய்! கள் குடித்தாய்!' என்றெல்லாம் ஏசினான்.

https://t.me/Tamil_Library

உடனிருந்த இளையவன்கூட இவ் வரவேற்பை எதிர் பார்க்காமையால் அதிர்ந்து போய்விட்டான். இறுதியில், பிராட்டி, இளையவன் கையாலேயே நெருப்பை மூட்டித் தர வேண்டுகிறாள். இளையவன் இந்தக் கொடுமையை ஆற்றாமல் அண்ணனின் முகத்தைப் பார்த்தான். அண்ணன் காட்டிய இரகசிய முகக் குறிப்பில் மனம் அமைதி அடைந்து உடனே நெருப்பை மூட்டித் தருகிறான். இதைக் கவிஞன் அற்புதமாகக் கூறுமுகத்தான் இது ஒரு நாடகம் என்பதை அறிவுறுத்தி விடுகிறான்:

'இளையவன் தனைஅழைத்து 'இடுதிதீ' என
வளையொலி என்கையாள் வாயின் கூறினாள்
உளைவுறு மனத்தவன் உலகம் யாவுக்கும்
களைகணைத் தொழ, அவன் கண்ணின் கூறினான்'

(மீட்சி, 78)

இளைய பெருமாளுக்கு இராகவன் கண்ணின் கூறியதை அவள் உணர்ந்து கொண்டாள். இளையவனுக்குச் செய்த பிழைக்குக் கழுவாய் தேடுமுகமாக அவன் கையாலேயே தீ அமைத்துத் தர வேண்டினாள் பிராட்டி. அது நடைபெற்றவுடன் முழு அமைதியுடன் தீயில் புகுந்தாள். அவள் கற்பால் தீ சுடப்பட்டது. தாமரை மலராள் போல் மீட்டும் வெளி வந்த பிராட்டியின் உள்ளத்தின் ஆழத்திலிருந்த குற்ற உணர்வு சுடப்பட்டு விட்டதால் அவள் முழு அமைதி பெற்று விடுகிறாள். இதுவே பிராட்டியை இராகவன் தீப்புகச் செய்த காரணமாகும்.

https://t.me/Tamil_Library

# கவிஞன் கண்ட சமரசம்

இன்று கிடைக்கும் மிகப் பழைய நூல்களாகிய தொல்காப்பியம், சங்கப் பாடல்கள் ஆகிய அனைத்திலும் தெய்வம், கடவுள் என்பவைபற்றிய குறிப்புகள் ஓரளவு காணப்படுகின்றன.

சிறு தெய்வங்கள்பற்றிப் பேசுவதுடன் கடவுள் என்ற முழுமுதற் பொருள்பற்றியும் இந் நூல்களுள் ஆங்காங்கே காண முடிகிறது. சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ள திருமுருகாற்றுப் படையும், பரிபாடல்களில் சில பாடல் களும் முருகன், திருமால் பற்றி விரிவாகவே பேசுகின்றன.

இனி, இவற்றை அடுத்துத் தோன்றிய சிலம்பு முதல் நேற்று வந்த பாரதி, பாரதிதாசன் வரை இறைபற்றிப் பேசாதவர்களே இல்லை என்று கூறிவிடலாம்.

இத் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இறைபற்றிப் பேசும்பொழுது இருவகையில் பேசப் பெறுவதைக் காண முடியும்.

முதலாவது இறையன்பின் (பக்தி) அடிப்படையில் பேசப்படுவதாகும். இரண்டாவது அறிவுபூர்வமாக இறைவனைப்பற்றி ஆயப்புகுந்து பேசப்படுவதாகும்.

சங்கப் பாடல்களுள் உள்ள பத்துப்பாட்டில் முதற் பாடலாகவுள்ள திருமுருகாற்றுப்படை இந்த இரண்டு



https://t.me/Tamil_Library

முறைக்கும் இடந்தருவதாக அமைந்துள்ளது. திரு வேரகத்தில் வழிபடுபவர்கள் வேதம், உபநிடதம் முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்து இறைவன் எத்தகையவன், தாங்கள் எத்தகையவர்கள், தங்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு யாது என்பதைத் தம் நுண்ணிய அறிவின் துணை கொண்டு ஆய்ந்து, பின்னர் இறைவனிடம் அன்பு செலுத்துபவராவர்.

பழமுதிர் சோலை முதலிய இடங்களில், அறிவின் துணையில்லாத சாதாரண மக்கள் ஆழமான நம்பிக்கை, பக்தி என்பவற்றின் துணை கொண்டு இறைவனை வழிபடுகின்றனர். இக் கூட்டத்தாருக்கு இறைவனுடைய இயல்பு, இலக்கணம் என்பவைபற்றி ஒன்றுந் தெரியாது. அவன் நிர்க்குண நிராமயன் என்று அவர்கள் அறிய வாய்ப்பில்லை. என்றாலும், இறைவன் இருவகைக் கூட்டத்தார்க்கும் 'வேண்டினர் வேண்டியாங்கு, வழிபட ஆண்டாண்டு உறைகின்றான்' என்கிறது திருமுருகாற்றுப் படை.

திருமுருகாற்றுப்படை காட்டிய இந்த இரண்டு வழிகளில் ஒவ்வொரு காலகட்டத்தில் ஒவ்வொரு வழி மிகுதியும் தமிழ் மக்களால் கையாளப்பட்டதை இந்நாட்டு வரலாறு நன்கு காட்டிச் செல்கிறது. கி,பி. 7 ஆம் நூற்றாண்டு முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை, பக்தி இயக்கக் காலம் என்று கூறல்வேண்டும். சைவ சமய நாயன்மார்களும், வைணவ சமய ஆழ்வாராதிகளும், பக்தி மார்க்கத்திற்குப் பெரிதும் இடம் கொடுத்து மக்களைத் தட்டி எழுப்பி இறை உணர்வை ஊட்டினர். 10, 11 ஆம் நூற்றாண்டுகளில் பக்தி இயக்கத்தின் வலுக்குறையலாயிற்று. 8 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய ஆதிசங்கர பகவத்பாதருடைய அத்வைத மார்க்கம், அறிவுவழியைப் பின்பற்றத் தொடங்கியது. 12ஆம் நூற்றாண்டில் இராமனுசர் விசிட்டாத்வைதத்தைத் தோற்றுவித்து வளர்த்தார்.

https://t.me/Tamil_Library

ஆதி சங்கரர் தம் கொள்கைகளைப் பரப்ப எடுத்துக் கொண்ட வேத, வேதாந்த சூத்திர, உபநிடதங்களை இராமானுசரும் எடுத்துக்கொண்டார். 13 ஆம் நூற்றாண்டு வரை வடநாட்டிலும் காஷ்மீரத்திலும் சைவ சமயத்துக்கு இதே முக்கியத்துவம் தரப்பெற்றது. 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்தில் தோன்றிய மெய்கண்டார் போன்றவர்கள் அறிவுவாத அடிப்படையில் சைவ சமயத்தை முனைந்தனர். அதுவரை சைவ சமயத்தில் அதிகம் இடம் பெற்றிருந்த பக்தி வழி மெல்ல விடை பெறலாயிற்று.

இந்தப் பின்னணியில்தான் 9 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய கம்பநாடனுடைய இறை யுணர்வைப்பற்றியும் ஆயவேண்டும். சைவம், வைணவம் இரண்டிலும் பக்தி மார்க்கம் மங்கிவந்த நிலையில் கம்பன் தோன்றுகிறான். வடநூற் கடலையும் தென் தமிழ்க் கடலையும் கரை கண்டவனாகிய அவனைப் பொறுத்த மட்டில் காப்பியந்தான் உயிர்நாடியே தவிர, இறை யுணர்வைப்பற்றி விரிவாகப் பேசவேண்டிய தேவை இல்லை. என்றாலும், மூலப் பரம்பொருளே இராமனாகத் தோன்றினார் என்ற முறையில் அவன் காப்பிய நாயகனைப் படைத்துக் கொண்டது ஒரு புதுமை. நாராயண மூர்த்தி பல அவதாரங்கள் எடுத்தார்; அவற்றுள் ஒன்றுதான் இராமாவதாரம் என்ற கருத்து அவனுடைய காலத்தில் நன்கு பரவிவிட்ட ஒன்றாகும். அதை மீறக் கம்பனாலும் இயலவில்லை. எனவே, திருவவதாரப் படலத்தில் இராமன் கோசலை வயிற்றில் பிறந்தான் என்று கூற வரும்பொழுது நாராயணனே அவ்வாறு வந்தான் என்று கூறிவிடுகிறான். என்றாலும் அந்தப் படலத்தில் இறுதியில் மூவர்க்கும் மேம்பட்ட பரம்பொருளே இராமனாகத் தோன்றினான் என்று பாடிவிடுகிறான்.

https://t.me/Tamil_Library

இது போன்ற இடங்கள் தவிர, கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ள முதற் பாடல், ஒவ்வொரு காண்டத்திலும் வரும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் ஆகிய அனைத்தும் அவனுடைய இறையுணர்வைப் பிரதிபலிப்பவையாகவே உள்ளன. 'கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்' என்ற பாடல், பல்பெரும் சமயங்களும் ஒரே பரம் பொருளைத்தான் வெவ்வேறு சொற்களால் குறிப்பிடு கின்றன என்ற பரந்த உணர்வு அவனிடம் இருந்ததை அறிவிக்கிறது.

குகன், சுக்கிரீவன், அனுமன் முதலிய பாத்திரங்களை அன்பு வழியை மேற்கொள்ளும் பாத்திரங்களாகவே படைப்பதன்மூலம் தனக்கு எந்த வழியில் அதிக ஈடுபாடு என்பதைக் குறிப்பாகக் காட்டிவிடுகிறான். கம்பனுடைய காலத்துக்குச் சற்று முன்னர் 8 ஆம் நூற்றாண்டில் ஆதிசங்கரர் தம்முடைய அத்வைத வழியை நிறுவினார். சங்கரர் மூலமாக உபநிடதங்கள் எல்லாவிடங்களிலும் செல்வாக்குப் பெற்றன. கம்ப நாடனும் இந்தப் புதிய வழியிலும், உபநிடதங்களிலும் ஈடுபாடு கொண்டு பயின்றிருக்கிறான் என்றும் நினைய வேண்டியுள்ளது. ஆழ்வார்கள் பாடல்களில் மிகவும் தோய்ந்து, அங்குக் காணப்பெறும் பல கருத்துகளைத் தன் காப்பியத்திலும் பயன்படுத்திக் கொண்டுள்ளான்.

ஆனால், ஆழ்வார்கள் பாடல்களில் இடம் பெறாத உபநிடதக் கருத்துகள் கம்ப நாடன் கவிதையில் மிகுதியும் காணப் பெறுகின்றன. தனித்தனிப் பாடல்களில் பரம்பொருள் பற்றிய உபநிடதக் கருத்துகளை ஏற்றிக் கூறியதுடன் அக்கருத்துகட்கு மிகுதியும் இடம் தருவதற்காகவே 'இரணியன் வதைப் படலம்' என்ற ஒரு படலத்தையே பயன்படுத்தியுள்ளான். வால்மீகி முதல்,

https://t.me/Tamil_Library

வேறு எந்த இராமாயணத்திலும் இடம் பெறாத இரணியன் வரலாறு, கம்பனிடம் முழுவடிவம் பெற ஒரு காரணம் இருந்திருத்தல் வேண்டும்.

வேதங்கள் பற்றிக் கூறினாலும், வேதம் என்ற பெயர் தவிர வேதக் கருத்துகள் எதையும் அவன் பயன்படுத்த வில்லை. ஆனால், **பிரகதாரண்யகம், முண்டகம், ஸ்வேதாஸ்வதரம்** ஆகிய உபநிடதங்களில் பரம்பொருளுக்குக் கூறப் பெற்ற இலக்கணங்களை இரணியன் வதைப் படலத்தில் அற்புதமான கவிதைகளாகப் படைத்துள்ளான். பக்தி இயக்க காலம் என்பது கி.பி. 7 ஆம் நூற்றாண்டு முதல் 10 ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை இருந்ததாகக் கூறலாம். ஆனால் இந்த இடைக்காலத்தில் அறிவின் அடிப்படையில் தருக்க ரீதியாக இறைவனுக்கு இலக்கணம் கூறும் முயற்சியில் கம்பனைத் தவிர யாரும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

எனவே, காப்பிய அமைப்பில் தனி வழி வகுத்துக் கொண்டது போலவே இறை இலக்கணம் பேசுவதிலும் தனி வழியை வகுத்துக் கொண்டான் கம்பநாடன். எங்கெல்லாம் வாய்ப்பு ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் தன் இறை உணர்வை வெளிப்படுத்த அவன் தவறுவதே இல்லை.

சமயிகள் போராட்டம் (சமயங்களுள் போராட்டம் இல்லை) என்பது, மனிதன் சமுதாயமாக வாழத் தலைப்பட்ட நாளிலிருந்தே இருந்திருக்கும் போலும்! கம்பநாடன் காலத்திலும் சைவ, வைணவ, அத்வைத சமயங்கட்கிடையே போராட்டங்கள் இருந்திருத்தல் வேண்டும். எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆதிசங்கரர், பௌத்தர்கள் அறிவு வாதத்தைச் சாட அரும்பாடு படுவதால் அற்றை நாளில் பௌத்தமும் வாதிடும் நிலையில் இருந்திருக்க வேண்டும். அருக சமயமும் வளர்ந்த நிலையில் சமயச் சண்டைகட்கு அளவே இல்லை

https://t.me/Tamil_Library

எனும்படி போராட்டங்கள் இருந்திருத்தல் வேண்டும். எனவேதான்,

> "காலையில் நறுமலர் ஒன்றைக் கட்டிய
> மாலையின் மலர்புரை சமய வாதியர்
> சூலையின் திருக்கு அலால்" —இரணி. 77.

என்று பாடிச் செல்கிறான்.

மும்மூர்த்திகட்கும் அப்பால் நிற்பவனே முழு முதற் பொருள் என்ற உறுதியான முடிவைக் கம்பநாடன் பெற உதவியவை உபநிடதங்களே யாகும். இரணியன் வதையில் 58 முதல் 78 வரை இருபது பாடல்களில் இறை இலக்கணம் கூறுவது முழுவதும் உபநிடதக் கருத்துகளே யாகும். இதனை,

> 'அளவையால் அளப்ப அரிது அறிவின் அப்புறத்து
> உள! ஐய! உபநிடதங்கள் ஓதுறு
> கிளவி ஆர் பொருள்களான் கிளத்துறாதவன்
> களவை யார் அறிகுவார்? மெய்மை கண்டிலார்' —இரணி. 26

என்ற பாடலின் மூலம் விளக்கமாகவே கூறிவிடுகிறான். தமிழகச் சமய வரலாற்றில் வேதங்கள், வேத அந்தம், ஆறு அங்கம் என்பவை பெயரளவில் குறிக்கப்பெற்றாலும் வேத அந்தமாகிய உபநிடதங்களை யாரும் இவ்வளவு விரிவாகக் கம்பனுக்கு முன்னரும் பாடவில்லை என்பது தெளிவு.

தன் காலத்துக்கேற்ற முறையில் அறிவுவாத அடிப்படையில் இறை இலக்கணம் பேசத் துணிந்தான். ஆனால், தனியே அதனைப் பாடினால் காப்பியத்துடன் ஒட்டாது நின்றுவிடும். எனவே, காப்பியப் போக்கில் இதனைச் செய்யவேண்டும் என்று கருதிய கவிஞன், சரபங்கன், விராதன், இந்திரன், கருடன் என இவர்கள் மூலம் கதையுடன் ஒட்டிய முறையில் இலக்கணம் பேச வைக்கின்றான். இறைவனை உணர்த்த முற்பட்ட உபநிடதம்

https://t.me/Tamil_Library

உடன்பாட்டு முகத்தான் கூற முடியாமல் **'நேதி'** (இது அன்று) என்ற எதிர்மறை வாய்பாட்டால் கூறியதை மனத்துட் கொண்ட கம்பநாடன்

**"தள்ள அருமறைகளும் மருளும் தன்மையான்"**

**—இரணி, 75**

என்று பாடிச் செல்கிறான்.

சங்கரருடைய அத்வைதம் உபநிடதங்கட்குப் புதிய பொருள் வகுக்கும் முறையில் தன் கருத்துக்கும் கொள்கைக்கும் வலுவூட்டியது.. வேதம், பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள் என்பவற்றில் உபநிடதங்கள் அறிவின் துணை கொண்டு இறைப் பொருளையும் அதன் இயல்புகளையும் ஆயத் தொடங்கியது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் வேதம் என்ற சொல்லை ஓரளவு பயன்படுத்தினரே ஒழிய அதன் அந்தமாகிய உபநிடதம் பற்றி ஒன்றுங் கூறவில்லை. உபநிடதக் கருத்துகள் சில நம்மாழ்வார் பாடல்களில் காணப்பெற்றாலும் உப நிடதங்கள் பற்றிய குறிப்பு ஒன்றும் இவர்கள் பாடல்களில் இல்லை. வேதம் என்று அவர்கள் கூறும் பொழுதே அதன் அந்தமாகிய உபநிடதமும் அதில் அடங்கும் என்ற வாதம் ஆயத்தக்கதேயாகும்.

எனவே, நாயன்மார்களும் ஆழ்வார்களும் வலியுறுத்திய பக்தி மார்க்கம், சங்கரருடைய அத்வைத மார்க்கம் என்ற இரண்டும் வலுப்பெற்றிருந்த காலத்தில் தோன்றியவன் கம்ப நாடனாவான். **'கல்வியிற் பெரியவன் கம்பன்'** என்ற முதுமொழி தோன்ற வேண்டிய அளவிற்குக் கல்விக் கடலைக் கரை கண்டவனாவான் கம்ப நாடன். அப்படியானால் இந்த இரண்டு வழிகளையும் அவன் மிக நன்றாக அறிந்திருத்தல் வேண்டும் என்று கருதுவதில் தவறு ஒன்றும் இல்லை. என்றால், இந்த இரண்டு மார்க்கங்களில்

https://t.me/Tamil_Library

எந்த மார்க்கம் அவனை ஈர்த்தது என்ற வினாவை எழுப்பினால் கிடைக்கும் விடை சுவை பயப்பதாகும்.

ஆழ்வார்கள் பாடல்களில் ஆழங்காற்பட்டுத் தோய்ந்திருந்த அவன் உபநிடதங்களின் அறிவு வாதங்களிலும் மிகுதியும் ஈடுபட்டிருந்தான் என்பதை அவனுடைய பாடல்களைப் படிப்போர் எளிதில் அறிந்துகொள்ள முடியும். வான்மீகத்தில் காணப் பெறாத பல கருத்துகளைக் கம்பன் பாடியுள்ளான். எனினும், அவற்றுள் சில ஆழ்வார்களின் பாடல்களில் தோய்ந்த காரணத்தால் தோன்றியவையாகும். இராம இலக்குவர் களையும் பிராட்டியையும் படகில் ஏற்றிக்கொண்டு குகன் தானே படகை வலித்தான் என்று கம்பன் பாடுகிறான். படகில் வரும்பொழுது அவனைத் தன் தோழனாகவும், பிராட்டியை அவன் கொழுந்தியாகவும், இலக்குவனை அவன் தம்பியாகவும் இராகவன் உறவு முறை வைத்துப் பேசினான் எனக் கம்பன் பாடுவது நெஞ்சை உருக்கும் பகுதியாகும்.

**'என் உயிர் அனையாய் நீ! இளவல் உன் இளையான்; இந்**
**நந்நுதல்வள் நின் கேள்...** **(குகப். பட,42)**

என்ற இப்பாடல் சிந்திக்கத் தகுந்ததாகும்.

சாதி வேற்றுமை, உடையார் இல்லார் வேற்றுமை, அரசர் குடிகள் வேற்றுமை முதலியன நிறைந்திருந்த அந்த நாளில் கம்பன் எப்படி இவ்வாறு பாட முடிந்தது?

**'ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது**
**இரங்கி மற்றவற்கு இன்னருள் சுரந்து**
**மாழை மான்மட நோக்கியுள் தோழி**
**உம்பி எம்பி என்றொழிந்திரல் உகந்து**
**தோழன் நீ எனக்கு இங்கு ஒழி'என்ற**
**சொற்கள்..........** **(நாலாயிரம்—1418)**

https://t.me/Tamil_Library

என்ற திருமங்கை மன்னனின் அற்புதப் பாடலில் தன்னைப் பறிகொடுத்த கவிச்சக்கரவர்த்தி தன் அனுபவத்தை நாமும் பெற வேண்டும் என்ற கருணையால் தன் இராமகாதையில் இதை அப்படியே பாடிவிட்டான்.

உணர்ச்சிமயமான இத்தகைய பாடல்களில் கவிஞன் தன்னை மறப்பதிலும் அதைத் தன் பாடல்களில் இடம் பெறுமாறு பாடுவதிலும் வியப்பு ஒன்றும் இல்லை. பக்திமார்க்கத்தின் அடிப்படையிலமைந்த இத்தகைய பாடல்களைக் கவிஞன் கையாள்வதில் வியப்பு இல்லை. இத்துணைத் தூரம் பக்தி வயப்பட்ட கவிஞன் ஆழ்வார் பெருமக்கள் கூறும் இறைவனுடைய எளிவந்த தன்மையிலும் (சௌலப்பியம்) ஈடுபடுவது நியாயமானதே யாகும். பெருமாள் இராமாவதாரம் எடுத்தது அறந்தலை நிறுத்தவும், தீயோரை ஒறுக்கவும், அன்பர்கட்கு அருளவுமேயாகும். எனினும், மானுடச் சட்டை தாங்கி மானுடர் பெறும் துன்பங்களை ஏற்றுக் கொள்வது அவனுடைய எளிவந்த தன்மையைக் காட்டுவதற்கே யாகும் என்ற கருத்து ஆழ்வார்களின் முற்பட்டு, இளங்கோவடிகள் காலத்திலேயே பெரு வழக்காய் இருந்த ஒன்றாகும்.

**"தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான்போந்து**
**சோவரணும் போர் மடியத் தொல் இலங்கை கட்டழித்த**
**சேவகன் சீர் கேளாத செவி என்ன செவியோ ?"**

**(ஆய்ச்சியர் குரவை—35)**

திருமாலின் எளிவந்த தன்மையைச் சிலப்பதிகாரம் பேசுவதைப் போலவே ஆழ்வார்களும் நிரம்பப் பேசியுள்ளனர். இவற்றை எல்லாம் கற்றுத் தேர்ந்த கம்ப நாடன் இறைவனின், இந்தக் குணத்தில் ஈடுபடுகிறான். எனவே, சமயம் வரும்பொழுதெல்லாம் இராமனுடைய அவதாரத்தில் அவனுடைய சௌலப்பியம் வெளிப் படுவதாகப் பேசுகிறான்.

https://t.me/Tamil_Library

'போர் அணங்கு இடங்கர் கவ்வப் பொதுநின்று முதல் என்ன,
வாரணம் காக்க வந்தான் அமரரைக் காக்க வந்தான்'
'அறம் தலைநிறுத்தி, வேதம் அருள்சுரந்து அறைந்த நீதித்
திறம் தெரிந்து, உலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்து உகநூறி, தக்கோர் இடர் துடைத்து, ஏக ஈண்டுப்
பிறந்தனன்—தன்பொற் பாதம் ஏத்துவார் பிறப்பு அறுப்பான்'

(பிணிவீட்டு—79, 81)

*என்ற பாடல்களில் (பரம்பொருள்) உயிர்கள் மாட்டுக் கொண்ட கருணையாலே இம் மண்ணிடைப் பிறக்கிறான் என்று கூறுகிறான்.*

*இந்த முறையால் இறைவன் உலகம், உயிர்கள் இடைத் தொடர்பு என்பவை பற்றிய கவிஞனின் கருத்துகளைக் காணும்பொழுது பின்னர்த் தோன்றப் போகும் விசிட்டாத்வைதக் கொள்கைக்குக் கடைகால் இடுபவனாகவே இக்கவிஞன் காணப்படுகிறான். அன்றியும் நூலின் முதற்பாடலாகிய கடவுள் வாழ்த்துப் பாடலும் இக்கருத்தை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளது:*

'உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்
நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
...அவர் தலைவர்.........

*என்ற பாடல் அத்வைதக் கொள்கைக்கு மாறுபட்டிருப்பதைக் காணலாம். இந்த அடிப்படையில்தான் கவிஞன் உபநிடதங்கட்குப் பொருள் கொள்கிறானே தவிர அத்வைத அடிப்படையில் அன்று என்பதையும் அறிதல் வேண்டும். அவன் காலத்தில் சைவம், வைணவம், சைனம், பௌத்தம் ஆகிய சமயங்களின் கொள்கைகளை இவன் அறிந்திருத்தல் வேண்டும். சைனம், பௌத்தம் என்பவை கடவுள் பொருள்பற்றி ஒன்றுங் கூறவில்லை எனினும் பிற கொள்கைகளில் இந்நாட்டுப் பழஞ் சமயங்களாகிய சைவ வைணவங்களோடு பெரிதும் ஒத்துச் சென்றன. இவை*

https://t.me/Tamil_Library

ஒவ்வொன்றிலும் உண்மை பெருமளவு இருப்பதைத் தன் அறிவாராய்ச்சியின் மூலம் கண்ட கம்ப நாடன்,

'தொல்லையில் ஒன்றேயாகித் துறை தொறும் பரந்த நீத்தம்
சூழ்ச்சி
பல் பெரும் சமயம் சொல்லும், பொருளும் போல் பரந்தது
அன்றே'

என்றும் கூறுகிறான்.

இவனுடைய காலம் வரை இந்நாட்டில் சமயப் பொறை இன்றிக் காழ்ப்புணர்ச்சியுடன் சமயவாதிகள் தம்முள் போரிட்டனர். என்பது வரலாறு கண்ட உண்மையாகும். நாயன்மார்களும் ஆழ்வார்களுங்கூட இதற்கு விலக்கல்லர். இச் சமயவாதிகள் இவ்வாறு மாறுபாடு கொண்டு பேசிய அக்கால கட்டத்தின் இறுதியில் தோன்றிய கம்பநாடன், இச்சமயங்களுள் ஓர் ஒருமைப்பாட்டைக் (Synthesis) காண முயல்கிறான். அதனாலேயே 'பல்பெருஞ் சமயம்...அன்றே' என்று கூறுவதுடன் அமையாமல்,

'அரன் அதிகன் உலகளந்த அரி அதிகன் என்று
உரைக்கும் அறிவிலோர்கள்
பரகதி சென்று அடைவரிய பரிசே போல்' (நாடவிட்ட—24)

என்றுங் கூறுகிறானாகலின் அவனுடைய சமயப் பொறையையும் குறிப்பிட்ட சமயக் கூட்டிற்குள் அடங்க மறுப்பதையும் அறிய முடிகிறது. இந்த உண்மையை அறிய மறுப்பவர்கள் அவனைக் கம்பநாட்டு ஆழ்வாராக்கி மகிழ்கின்றனர்!

இவ்வாறு கூறுவதால் அவனுடைய சமயக் கொள்கை என்று ஒன்றும் இல்லையோ என எண்ணிவிடக்கூடாது. பக்தி மார்க்கத்தார் கூறும் இறைத் தன்மை, எளிவந்த தன்மை, உயிர்கள்மாட்டுக் கருணை, மானுட வடிவெடுத்து

https://t.me/Tamil_Library

*வருதல் முதலிய கருத்துகளையும் அவன் ஏற்றுக் கொள்கிறான் என்று தெரிகிறது. உணர்வு நிலையில் நின்று இறைப்பொருளைப் பற்றிப் பேசுவதாகும்.*

*இதே கம்பநாடன் அறிவுவழி நின்று இறைப்பொருள் பற்றி ஆயவும் தயங்கவில்லை என்பதையும் காணமுடிகிறது. முன்னர்க் குறிப்பிட்டாங்கு ஒவ்வொரு காண்ட முதலிலும் கடவுள் வாழ்த்து என்ற பெயரில் ஒவ்வொரு பாடல் பாடி ஆங்காங்கே அவன் கண்ட இறை இலக்கணத்தைக் கூற முற்படுகிறான்.*

**'ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும்**
**புறத்தும் உளன் என்ப' (அயோ—1)**

**'பேதியாது நிமிர்பேத உருவம் பிறழ்கிலா**
**ஓதிஓதி உணருந்தொறும் உணர்த்தி உதவும்**
**வேதம், வேதியர், விரிஞ்சன் முதலோர் தெரிகிலா**
**ஆதிதேவர்; அவர் எம் அறிவினுக்கு அறிவரோ ?' (ஆரண்ய—1)**

**'தோன்று உரு எவையும் அம்முதலைச் சொல்லுதற்கு**
**ஏன்று உரு அமைந்தவும் இடையில் நின்றவும்**
**சான்று உரு உணர்வினுக்கு உணர்வு' (கிட்கி—1)**

*இவற்றை அல்லாமல் விராதன் வதை, சரபங்கன் பிறப்பு நீங்கு, பிணி வீட்டுப் படலங்களிலும் தத்துவ அடிப்படையில் அறிவுபூர்வமான ஆய்வில் ஈடுபட்டு இறை இலக்கணம் பேச முற்படுகிறான்.*

*இறைப்பொருளை வடிவற்றதாகவும் வடிவுடையதாகவும் உயிர்கள்மாட்டுக் கருணை உடையதாகவும் மேலே கூறியுள்ள முறையில் பாடிய கவிஞன் இவற்றை எல்லாம் விட்டுவிட்டு முழு முதற் பொருளாக உள்ள ஒன்றின் இலக்கணத்தையும் கூற வருகிறான். நாயன்மார்கள், ஆழ்வார்கள் கூறும் இறைப் பொருளிலும் இவன் கூறும் அது மாறுபட்டு விளங்கக் காணலாம். அவர்கள் கூறும்*

https://t.me/Tamil_Library

இறைப் பொருள் நாம ரூபம் உடையதாய், அனைத்து நன்மைகளும் உடையதாய், சத்துவ குணமுடையதாய் விளங்கக் காணலாம். அவர்கள் வழி நின்று அதே முறையில் பேசிய கவிஞன் அவர்களினும் பிரிந்து நாம ரூபமற்ற முழு முதல் பொருளைப்பற்றிப் பேசும் பொழுது அவர்களினும் வேறுபட்டும் தனித்தும் நிற்கின்றான்.

நம்மாழ்வார் பக்தி நிலையில் நின்று அர்ச்சாவதார வடிவில் ஈடுபட்டுப் புராணக் கதைகளையும் ஏற்றுக் கொண்டு நிரம்பப் பாடியிருப்பினும் திருவாய்மொழி முதற்பத்தின் ஒன்பதாம் பாடலாகிய,

'உளன் எனில் உளன் அவன், உருவம் இவ்உருவுகள்
உளன் அலன் எனில், அவன் உருவம் இவ்வருவுகள்
உளன் என இலன்என இனங்குணம் உடைமையில்
உளன் இரு தகைமையொடு ஒழிவிலன் பரந்தே'

(நாலாயிரம்–2090)

என்ற இப்பாடல் கம்பநாடனின் உபநிடதப் படிப்பிற்கு மிகவும் உகந்ததாக இருந்திருத்தல் வேண்டும். எனவே, இக்கருத்தைத் தன்னுடைய இராம காதையில் யுத்த காண்டத்தின் கடவுள் வாழ்த்தாகப் பாடிச் செல்கிறான்.

'ஒன்றே என்னில் ஒன்றேயாம் பலவென்று உரைக்கில்
பலவேயாம்
அன்றே என்னில் அன்றேயாம், ஆமே என்னில் ஆமே யாம்
இன்றே என்னில் இன்றேயாம் உளதுஎன்று ரைக்கில்
உளதேயாம்'

என்ற பாடலில் இந்நாட்டுத் தத்துவ ஞானிகள் கண்ட முடிபைக் கவிஞன் ஏற்று அற்புதமான கவிதையாக வடிப்பதைக் காண முடிகிறது.

இந்த உலகிலும் சரி அண்டம் முழுவதும் சரி அனைத்திலும் முரண்பாடு இருப்பதைக் காண முடிகிறது.

https://t.me/Tamil_Library

நன்மை—தீமை; ஒன்று—பல; உண்டு-இல்லை; ஒளி—இருள்; பகை—நட்பு; விருப்பு—வெறுப்பு; இன்பம்—துன்பம் முதலிய இதற்கு உதாரணமாகும். பிற நாடுகளில் தோன்றிய சமயவாதிகள் இந்த முரண்பாட்டை அறிந்த பிறகு இறை இலக்கணம் பேசும் பொழுது நன்மை, ஒளி, இன்பம் என்பவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு இறை இலக்கணமாகப் பேசினர். அதனால் இவற்றின் மறுதலையான தீமை, இருள், துன்பம் என்பவற்றிற்கு இடந்தரவில்லை. எனவே, இவற்றின் கொள்கலனாகச் சாத்தானைப் படைக்க நேர்ந்தது. இந்நாட்டவர் பொதுவாகவும், தமிழர் சிறப்பாகவும் இதனினும் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தனர்.

இவர்கள் இறையிலக்கணம் பேசும்பொழுது இந்த முரண்பாட்டிலேயே முழுமுதலைக் கண்டனர். நம்மைப் பொறுத்தவரை இந்த முரண்பாடு பெரிதாக்கப்பட்டாலும் இவை இரண்டுமே பொருளற்றவை எனக் கூறினர். இந்த முரண்பாட்டில் முரண்பாட்டைக் காணாமல் இருப்பவர்களே சமநிலை பெற்ற ஸ்திதப் பிரக்ஞர்கள் என்று கூறினர். சமதிருஷ்டி பெற்றவன் எதையும் நன்மை என்றோ தீமை என்றோ, ஒளி என்றோ இருள் என்றோ கருதியதில்லை. அவர்கட்கு ஒன்றன்மாட்டு விருப்பும் இல்லை; வெறுப்பும் இல்லை. மனிதரில் உயர்ந்து நிற்கும் சமதிருஷ்டி உடையவர்கட்கே இது இலக்கணமும் என்றால் இறைவனுடைய இலக்கணமும் அதுவே என்று கூறத் தேவையில்லை.

இந்தக் காலத்தில் கம்பநாடன் மிகுதியும் ஈடுபட்டிருந்தான் என்பதற்கு அவனுடைய காப்பியத்தில் நிரம்பச் சான்றுகள் உள்ளன.

**'மூவர் நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ!**
**பாவம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீ!** **(வாலி—129)**

என்ற பாடலும்,

https://t.me/Tamil_Library

'நீ ஆதி பரம்பரமும்; நின்னவே உலகங்கள்
ஆயாத சமயமும் நின் அடியவே; அயல்இல்லை' (விராதன்–53)

*என்ற பாடலும்,*

'மேவாதவர் இல்லை; மேவினரும் இல்லை
வெளியோடு இருள் இல்லை, மேலும் கீழும் இல்லை;
மூவாதமை இல்லை, மூத்தமையும் இல்லை
முதல் இடையோடு ஈறில்லை' முன்னோடு பின்னில்லை

*என்ற பாடலும் சில உதாரணங்களாம்.*

*இனி, உபநிடதம் என்ற சொல்லை அப்படியே பயன்படுத்தும் தமிழ்க் கவிஞன் கம்பன் ஒருவனேயாம்.*

'அளவையான் அளப்பரிது: அறிவின் அப்புறத்து
உளவை ஆய் உபநிடதங்கள் ஓதுவ;
கிளவி ஆர் பொருள்களால் கிளக்குருதவன்
(இரணியன் —623)

*என்ற பாடல் உள்பட பதினான்கு பாடல்களில் பல உபநிடதக் கருத்துகளைப் பேசுவதைக் காணலாம்.*

'கருமமும், கருமத்தின் பயனும் கண்ணிய
தருமுதல் தலைவனும், தானும் தான்... (64)

'பகுதியின் உட்பயன் பயந்தது, அன்னதின்
விகுதி மிகுதிகள் எவையும், மேலவர்
வகுதியின் வசத்தன; வரவு போக்கது' (69)

'காலமும் கருவியும் இடனும் ஆய், கடைப்
பாலமை பயனும் ஆய், பயன் துய்ப்பானும் ஆய்
சீலமும் அவைதரும் திருவுமாய் உளன்' (74)

'மண்ணினும், வானினும், மற்றை மூன்றினும்
எண்ணினும் நெடியவன் ஒருவன் எண் இலான்' (71)

https://t.me/Tamil_Library

'பேரை ஒரு பொருட்கே பல்வகையால் பேதித்து எண்ணும்
தாரை நிலையை; தமியை; பிறர் இல்லை;
யாரைப் படைக்கின்றது ? யாரை அளிக்கின்றது ?
யாரைத் துடைக்கின்றது ? ஐயா !... (159)

இவற்றை எல்லாம் பார்க்கும்பொழுது இந்நாட்டின் வடமேற்கில் தோன்றிய உபநிடதக் கருத்துகளும் தெற்கில் தோன்றிய பக்திமார்க்கக் கருத்துகளும் அளாய ஓர் ஒருங்கிணைந்த (synthesis of two religions) சமயத்தைத் தமிழகத்தில் முதன்முதலாக நிறுவ முயன்ற பெருமை கம்ப நாடனுக்குரியது என்பதை அறிய முடிகிறது.

□ □ □

https://t.me/Tamil_Library

கங்கை

Printed at Elangovan Printers, Madras - 14

https://t.me/Tamil_Library